gd. No. M. 2569

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 ஜமாதுல் அவ்வல் மீ
1934ஸு செப்டம்பர் மீ

உள்ளடக்கம்

1. அல்குர்ஆன் ... 325
2. அல்ஹதீது ... 327
3. சத்தியப் பிரசாரம் ... 329
4. உலகின் நெகிரற்ற வழிகாட்டி ... 332
5. ஸ்பெயினிலிருந்துவரும் இஸ்லாமிக நாகரீகத்தின் இறுதிச் சின்னங்கள் ... 336
6. ஸமரஸ உடன்படிக்கை ... 338
7. ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் ... 339
8. நாயக சரிதையில் நம்மவரின் தவறு ... 341
9. மிர்ஜாயி பித்னு ... 348
10. திருக்குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்புகள் 350
11. பாதிரியின் பதற் கூற்று ... 353

2-OCT 1934
MADRAS

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4	0	0
தனிப் பிரதி	...	,,	0	4	0
ஸித்தீகி மலர்	...	,,	0	8	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - OCT 1934
MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1353 ஜமாதுல் அவ்வல் மீ 1934 ௵ செப்டம்பர் மீ	இதழ் 9

அல்குர் ஆன்

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு (இதை ஆரம்பிக்கிறேன்)

(முஹம்மதே!) உபதேசம் புரியும். நிச்சயமாக உபதேசமானது ஈமானுயுடையோருக்குப் பிரயோசனமளிக்கும். (அல்குர்ஆன்)

இந்த ஆயத்தில், அல்லாஹ்தஆலா நமது வள்ளல் ரசூல் நாயகம் (ஸல்.) அவர்களை நோக்கிஉபதேசம்புரியும்படியும், அவ்வுபதேசம் மூமினானவர்களுக்குப்பிரயோசனமளிக்குமென்றும் கூறியிருக்கிறான். ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (றஹ்.) அவர்கள் இந்த ஆயத்துக்கு விரித்துரை கூறுங்கால், “மூமினான மனிதனின்று ஏதாகிலும் குற்றங்கள் நிகழ்பெற்று விடுமாகில் அவனது ஹிருதயத்தில் கருநிறமுடைய ஓர் புள்ளி விழுந்து விடுகிறது; அவன் அப் பாவத்தை மன்னிக்கத் தேடுவானாகில் அப்புள்ளி அழிந்து ஹிருதயம் பரிசுத்தமாகி விடுகிறது; அவன் பாவ மன்னிப்பு என்னும் சாணைக் கல்லில் அவ்வழுக்கைப் போக்காதிருப்பானாகில், பிறகும் செய்துவரும் பாவங்களால் அப்புள்ளி அதிகப்பட்டுக்கொண்டே போய் ஹிருதயம் இருளடைந்ததாய் விடுகின்றது” என்னும் ஹதீதை எடுத்து விளக்கி நல்லுபதேசங்களைக் கேட்பது கொண்டு ஹிருதயத்திலேற்படும் அழுக்கு நீங்கி பரிசுத்தமாய் விடுகிறதெனக் கூறியிருக்கிறார்கள்.

மனிதனுடைய ஹிருதயத்தில் இருள் சூழ்ந்து கொண்டவுடன் அவன் மனோவியாதியால் பீடிக்கப்பட்டுப் போகிறான்; அவனது மனோநிலை ஒழுங்கு தவறியதாய்விடுகிறது. ஆதலின் மானிடன் ஒரு பாவமான காரியம் செய்து விடுவானாகில் அதற்குப் பரிகாரஞ் செய்ய முற்படவேண்டியது அவனது முதற்கடமையாகும். ஆனால் பரிகாரஞ் செய்வதற்குள்ள வகைகளில் முதன்மையானதும் மானிடன் எடுத்தாளுவதற்குச் சிறந்ததுமாகிய “உமது நாயனின் பக்கல் சற்குணத்தைக் கொண்டு அழைப்பீராக; அவர்களுடன் அழகான முறையில் விவாதம் புரிவீராக” என்னும் தெய்வக் கட்டளையை சிரமேற்கொண்டு நடப்பதுதான் சிறந்தமார்க்கமாகும்.

இதற்காகத்தான் எம்பெருமானார் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்கள், "உங்களில் யாரும் ஏதாகிலும் கெடுதியான காரியம் புரிவதைக் காண்பார்களாயின் முதலாவதாக அதனைக் கையால் தடுக்க வேண்டுமென்றும், அதற்குச் சக்தியில்லாது போமாயின் வாயால் கூறி அதனை விலக்க வேண்டும்; இதற்குமியலாது போமாயின் தமது மனதிலாகிலும் அதனை வெறுத்திருக்கவேண்டுமென்றும், இது ஈமானின் பலக்குறைவைக் காட்டுகிற"தென்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்நிலைமையில் நாம், இவ்வபாய வியாதிக்கு உபதேசஞ் செய்வதென்னும் அவிழ்தத்தைக் கொண்டு பரிகாரஞ் செய்யாது பாவஞ் செய்து கொண்டிருப்பவர்களை அவ்வாறே விட்டுவிடுவோமாகில் நிச்சயமாய் அல்லாஹ் தஆலா நம் மீது கடிஸான வேதனையை அனுப்பிவிடுவான். அவ் வேதனை பாவஞ் செய்பவனாகிய அந்த வியாதிஸ்தனையும், உபதேசம் புரியாத வைத்தியனாகிய நம்மையும் பீடிக்கும். அதுபொழுது நாம் எவ்வாறும் தப்பித்துக்கொள்ள முடியாது.

அமீருல் மூமினீன் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் ஒருநாளன்று சஹாபாக்களை நோக்கி, "ஈமானுடையவர்களே! உங்களை சீர்த்திருத்திக் கொள்ளுவதுதான் உங்கள் பொறுப்பாகும்; நீங்கள் நேர்வழியிலிருப்பீர்களாயின் யாரும் வழிகெட்டுப் போவது உங்களுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணமாட்டாது" என்னும் திருவாக்கியத்தை ஓதிக்காண்பித்து, வழிகேடர்களை அவ்வழிகேட்டிலே விட்டுவிட வேண்டுமென்பதும், பாவஞ் செய்தவர்களை அதைவிட்டு விலக்குவது உங்கள்மீது கடமையாக்கப்படவில்லையென்பதும் இந்த வாக்கியத்தின் கருத்தென்று கருதிவிடாதீர்கள். "எவர்கள் பாவஞ் செய்பவர்களைப் பார்த்து பராமுகமாயிருந்து அந்தக் கெடுதியை நன்மையைக் கொண்டு மாற்றும்படி செய்யவில்லையோ அவர்கள்மீது அல்லாஹ் தஆலாவின் 'அதாபு' இறங்குவது பெரிய காரியமல்ல" எனப் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருப்பதால், பாவஞ் செய்பவர்களை அதைவிட்டு விலக்கவில்லையானால் நாமும் அதற்கேற்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடுமென்பது நிச்சயம் எனக் கூறினார்கள். மேலும் அல்லாஹ் தஆலாவின் கட்டளையை அலட்சியஞ் செய்து பாவத்தில் சிக்கிக் கொண்டிருப்போருக்கு கீழே குறிப்பிடப்படும் சம்பவமொன்றை உவமானமாகக் கூறலாம். அதாவது, யாத்திரை செல்லும் கருத்துடன் அநேகர் ஓர் கப்பலிலேறி, சிலர் மேல்தட்டிலும் சிலர் கீழ்தட்டிலுமாக அமர்ந்தனர். கீழ்தட்டிலிருப்பவர்கள் தண்ணீருக்காக அடிக்கடி மேலே சென்றுவரும்படி நேர்ந்ததால் அங்குள்ளவர்களுக்குப் பெரும் சங்கடமாகத் தோன்றி வெறுப்புக்கொள்வதைத் தெரிந்துகொண்ட இன்னோர், தங்களுக்குவேண்டிய தண்ணீருக்காக அக்கப்பலின் கீழ்தட்டில் துவாரமொன்று போட ஆரம்பித்தனர். மேல்தட்டிலுள்ளவர்கள் இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்டவுடன் விரைந்து கீழேசென்று, கோபத்தால் யாது செய்கின்றீர்களென வினவினர். அதற்கு அவர்கள், நாங்கள் மேலே வருவது உங்களுக்குக் கஷ்டமாக இருக்கும் நிலைமையில் எங்களுக்குத் தண்ணீரின்றி யாதொரு காரியமும் செய்ய முடியாதிருக்கிறது என பதில் கூறினர் என்பதே.

அதுபொழுது மேலேயுள்ளவர்கள் இனிய மொழிகளைக்கூறி துவாரமிடுவதைத் தடுத்துவிடுவார்களாயின், தாங்களும் தப்பித்துக்கொள்வதுடன் அவர்களையும் காப்பாற்றியவர்களாவார்கள். அவ்வாறு செய்யாது அவர்களை விட்டுவிடுவார்களாயின் அவர்களை நாசப்படுத்தியதுடன் தாங்களும் அழிந்து போவார்கள். இஃதே போன்றுதான், ஈமானுடையவர்கள் தங்களுக்குச் சக்தியிருக்கும் நிலைமையில் கெடுதியான விஷயத்தைக்கண்டு அதனை விலக்காதிருப்பார்களாயின் யாவரும் வேதனையில் அகப்பட்டுக்கொள்வார்களென்பது திண்ணம்.

"அநீதிசெய்தோர், அவர்களுக்கு உபதேசஞ் செய்யாதவர்கள் இவர்களுக்கு ஏற்படும் வேதனையைவிட்டுத் தப்பித்துக் கொள்ளுங்களென" அல்லாஹ்தஆலா அறிவித்திருக்கிறான். "பனூ இஸ்ராயீல்கள் பாவக் காரியங்களைச் செய்துகொண்டிருக்குங்கால் அவர்களிலுள்ள உலமாக்கள் அதனை விலக்கியும் அவர்கள் கேளாமல் மறுபடியும் பாவக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கும் நிலைமையிலும் அவர்களுடன் சேர்ந்து இன்னோர் வாழ்ந்து வந்ததன் பயனாக அவர்கள் யாவரும் அல்லாஹ் தஆலாவின் சாபத்திற்காளாகும்படி நேர்ந்ததென நபிகள் பெருமானார்(ஸல்.) அவர்கள்கூறியிருக்கிறார்கள்.

ஆகவே எவர்கள் இஸ்லாமிய மார்க்கக் கட்டளைகளை நன்கு தெரிந்துகொண்டிருப்பதுடன் கெடுதியான காரியத்தைச் சீர்திருத்தம்

செய்வதற்குள்ள சந்தர்ப்பமளிக்கப்பட்டிருக்கின்றனரோ அவர்கள், தங்கள் கடமையை நிறைவேற்ருதிருந்து விடுவார்களாயின் அல்லாஹ் தஆலாவின் வேதனை இன்னேரையும் பிடித்து நிற்குமென்பது திண்ணம். எனவே கெடுதியான காரியத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அதனை விலக்க வேண்டியது பிரதானமென்பதை நன்குணர்வோமாக!

அல்ஹதீது

"கியாமத் (மறுமை) நாளில் சற்குணத்தைத் தவிர வேறு எந்த வஸ்த்துவும் நன்மைத் தட்டில் கனமுடையதாக இருக்கமாட்டாது" என பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஸஅதிப்னு உப்பாதா (ரலி.) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அல்லாமா ஸாலிஹ் ஜஸாயிரி (ரஹ்.) அவர்கள், இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், முற்காலத்தில் ஏகத்துவ மக்கள் சற்குணத்தை ஆபரணமாகப் பூண்டு உலகமுழுதுக்கும் சுடர் ஒளிப்பிரகாசமாய் விளங்கினர்களென்றும், இதே சற்குணமென்னும் வளாயுதந்தான் வன்னஞ்சம்படைத்த மாபாதகர்களை யெல்லாம் தயாள சிந்தையுடையவர்களாகச் செய்துவிட்டதென்றும், இஸ்லாமிய மக்கள் தாங்கள் செல்லுமிடங்களிலெல்லாம் அங்கு வாசஞ்செய்வோருடன் அன்பு பிரீதியுடன் வார்த்தையாடுபவராயும் அன்னேரின் சுகதுக்கங்களில் கலந்து கொள்ளுகிறவர்களாயுமிருந்தார்களென்றும், அம்மக்கள் இவ்வாறு சற்குண வாதிகளாய்த் திகழ்ந்ததின் பயனுக, ஆயிரக்கணக்கானேர் குபிரென்னும் இருளைவிட்டு நீங்கி இஸ்லாமில் வந்து சேர்ந்துவிட்டனரென்றும், இஃதென்ன? இஸ்லாத்தின் உண்மை, தேசத்தின் நானுபாகங்களிலும் பரவிவிட்டதென்றும், துர் அதிர்ஷ்டவசமாய் அக்காலம் நமது கையைவிட்டு நீங்கி, அரியாமை என்னும் அந்தகாரம் சூழ்ந்த காலத்தில் நாம் வாழும்படி நேர்ந்திருப்பதால், நாம் இதுகாலை இஸ்லாமியப் பிரசாரத்திற்கு உதவியாயுள்ள காலத்திற்கு எதிரிடையான காலத்தில் உயிர்வாழும்படி நேர்ந்திருக்கிறதென்றும், இதுகாலை நம்மவருக்கிடையே சுயநலம் கருதும் தன்மையும், மனே விருப்பப்படி நடக்கும் குணமும் ஏற்பட்டுவிட்டதால், நாம் எத்தேசம் சென்று பார்த்தபோதிலும் அங்குள்ள முஸ்லிம்களின் நிலைமை பரிதபிக்கத் தக்க விதமாயிருக்கிறது, எனவே அவர்களது முயற்சிகளெல்லாம் வீணுக இருப்பதால், அவர்கள் தாங்களே சீர்திருத்த மடையாதிருக்கும் நிலைமையில் இதரர்களுக்கு எவ்வாறு வழிகாட்டியாயிருக்க முடியுமென்றும், இதுபொழுதாகிலும் முஸ்லிம்கள் உணர்ச்சி பெற்று சற்குணமென்னும் ஆபரணம் அணிந்து, தாங்கள் இழந்துவிட்ட மேதை மரியாதைகளைப் பெற்றுக் கொள்ள முன்வருவார்களாயின் தக்க பயன் பெறுவார்களென்றும் கூறியிருக்கின்றார்கள்.

"யாராகிலும் அறுதிமானஞ் செய்து கொடுத்த பின்னும் கஷ்டம் கோடுப்பாளுகில் அவ்வாறு கஷ்டங்கோடுப்பவன் சுவனபதியடைய மாட்டான். எவனிடம், அறுதிமானஞ் செய்துகோடுத்திருக்கிறனே அவனைக் கோல்லுபவன் மீது அல்லாஹ் தஆலா சுவர்க்க உலகை ஹறுமாக்கி விடுகிறன்" என நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் காலிதிப்னுவலீத் (ரலி.) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் ஷேக் அப்துஹூ மிஸ்ரீ அவர்கள், இந்த ஹதீதை விரித்துரைக் குங்கால், அறுதிமானத்தை உறுதியுடன் நிறைவேற்றுவது மானிடர்களது சற்குணத்தின் பிரதானத் தன்மை யாதலால் எவன் அதனை நிறைவேற்றவில்லையோ அவன் 'ஈமான்' என்னும் காருண்யத்திலிருந்து தூரமானவனு யிருக்கிருனென்று கூறியிருக்கிறார்கள்.

மேலும் எவனுக்கு அறுதிமானத்தை நிறைவேற்றும் வழக்கமில்லையோ அவனில் ஈமான் கிடையாதென்றும் சற்குண நாதர் (ஸல்.) அவர்கள் நவின்றிருக்கிறார்கள். எனவே எவன் வார்த்தைப்பாட்டைக் காப்பாற்றவில்லையோ அவன் அல்லாஹ் ரசூல்மீது உறுதிகொண்டவனு யிருக்க மாட்டானென்பது திண்ணம். நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் யாரிடமாகிலும் வாக்குறுதி செய்வார்களாயின் அதனை நிறை

வேற்றுபவர்களாகவே இருந்தார்கள். ஒரு பொழுது ‘பத்ர்’ போர் நிகழ்ந்த காலை யுத்தக் கைதிகளிலொருவர் மற்றொருவரிடம் வாக்குறுதிக்கு மாற்றஞ்செய்த செய்தி எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குத் தெரிந்தவுடன் அம்மனிதனை அழைத்து, அவரது செய்கையைக் கண்டித்தனுப்பினார்கள். இவ்வாறே ‘கைபர்’ போர் நிகழ்ந்த காலையும் ஒருவரைப் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டபொழுது, அவரை அழைத்து நீர் யாரைக் கார்மானத்தில் கொண்டு அவருக்கு வாக்குறுதி செய்திருக்கின்றீரோ அதனை நிறைவேற்றி வையுமெனக்கூறினார்கள்.

இவ்வாறான உத்தம போதனைகளின் பயனாக, சங்கைவான்களான சஹாபாக்கள் அறுதிமானத்தை—வாக்குறுதியை நிறைவேற்றுவதில் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தார்கள். எனவே அம்மகான்களின் சரித்திர சம்மந்தமான வரலாறுகளை நோக்குவோமாயின், அவர்களிலெவரும், யாருடனாகிலும் வாக்குறுதிக்கு மாற்றஞ்செய்ததாகக் காணமுடியாது. மேலும் ஹஸ்ரத்அபூபக்ர் ஸித்தீக், ஹஸ்ரத் உமர்பாரூக், ஹஸ்ரத் உதுமான், ஹஸ்ரத் அலீ (ரலிம்) முதலிய சஹாபாக்களும் தாங்கள் சொற்பெருக்காற்றுங் காலமெல்லாம் வாக்குறுதியை நிறைவேற்றுமாறே கூறியிருக்கிறார்கள். ஆகவே வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கவேண்டியது நமது பிரதானக் கடமையாகுமென்பதை நன்கு தெரிந்துகொள்வோமாக.

“எவன் தன் கையினால் சம்பாத்தியஞ் செய்யப் பட்டதைக் கொண்டு காலக்ஷேபஞ் செய்கிறானோ அவன் அல்லாஹ்வின் பாதையில் முயற்சிக்கிறவன் போலாகிறான். எவன் (தன்கையால் சம்பாத்தியஞ் செய்வதற்கு) பிணையேற்றுக் கொள்கிறானோ அவன் இதரர்களிடம் கேட்கமாட்டான்; யான் அவனை சுவனபதிக்குக் கொண்டு செல்ல பிணை ஏற்றுக்கொள்ளுகிறேன்” என எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஜைதிப்னு ஹாரிது (ரலி) அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரலி) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், தன் சுயப்பிரயாசையைக் கொண்டு சம்பாத்தியஞ் செய்து சாப்பிடவேண்டியது ஒவ்வொருவர் மீதுமுள்ள முக்கியக் கடமையென்றும், எவன் தன் சுயப்பிரயாசையைக்கொண்டு சம்பாதித்து சாப்பிடுகிறானோ அவன் அல்லாஹ்வின் பாதையில் முயற்சிப்பவனென்றும் கூறியிருக்கிறார்கள்.

ஒரு நாளன்று நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் சில சஹாபாக்களுடன் அபூதாலிப் (ரலி) அவர்களது தெருவிற்குச்செல்ல நேர்ந்தகால், வழியில் ஒரு வாலிபன் உருக்குச் சட்டை செய்து கொண்டிருப்பதைப் பார்த்த ஒருவர், “இம் மனிதர் இவ்வாறான பிரயாசையை அல்லாஹ்வின் பாதையில் செலவழிப்பாராயின் எவ்வளவோ பிரயோசனத்தை அடைவார்” எனக்கூறினர். இதனை செவியுற்ற ஹஸ்ரத் அவர்கள், “விஷயம் அவ்வாறன்று” அம்மனிதன் இதரரிடம் கேட்கக்கூடாதென்பதைக் கருதியே இவ்வாறு கஷ்டமெடுத்துக் கொள்ளுகிறார். ஆதலின் அவர் அல்லாஹ்வின் பாதையில் பிரயாசை செய்வதால் அவருடைய பிரயாசை முழுதும் வணக்கமாக இருக்கிறது எனக்கூறினார்கள். நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் இப்போதனையால், பிரயாசையோடு சம்பாத்தியஞ் செய்து சாப்பிடுவது வணக்கத்தில் சேர்ந்ததென்று இனிது புலனாகிறதென்பதை நன்கு தெரிந்து கொள்வோமாக.

“அல்லாஹ்வின்மீது உறுதிகோள்வது, முஸ்லிமானோருக்குப் பிரயோசனமளிப்பது இவ்விரண்டு காரியங்களைவிட மேலானவஸ்து என்னிடமில்லை” என நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹஜ்ரத் ஷேக் அப்துல் அஜீஜ் அவர்கள் இந்த ஹதீதுக்கு விரித்துரை கூறுங்கால், அல்லாஹ்வின்மீது உறுதிகொள்ளுவதென்பது, அவனது தூய்மையையும், அவன் ஏகசக்ரவர்த்தியாயிருப்பதையும் மனதில் உறுதிகொண்டு ஒவ்வொருவிஷயத்திலும் அவனுடைய பொருத்தத்தையே தேடவேண்டுமென்பதாகுமென்றும், முஸ்லிம்களுக்குப் பிரயோசனமளிப்பதென்பது, சீமானாயுள்ளவர்கள் ஏழைகளுக்கு உபகாரம் புரியவேண்டும்; கல்விமான்கள் கல்வி அற்றோருக்கு அதனைக் கற்பித்துக் கொடுக்கவேண்டும்; சக்தியுள்ளவர்கள் சக்தியற்றோருக்கு உபகாரம்செய்யவேண்டும் என்பதாகுமென்றும், முஸ்லிம்மக்களிடம் இவ்வரும் செய்கைகள்மிளிர்ந்து காணப்பட்டு வந்த காலமெல்லாம் அன்னோர் சிறந்து விளங்கினார்களென்றும் ஆனால் இச்செய்கைகள் அன்னோரைவிட்டு நீங்கியபின் உலகில் தாழ்மையாக மதிக்கப்படுகிறார்களென்றும் கூறியிருக்கிறார்கள்.

சத்தியப் பிரசாரம்

சத்திய—சன்மார்க்கத்தை மக்களிடை எடுத்தோதுவதும், அதற்கேற்படும் இன்னல்களைக் களைந்து ஸன்மார்க்கம் தழைத்தோங்கும்படி செய்வதும் சத்தியப்பிரசாரமாகும். இஃதொரு சாதாரணமான வேலையன்று. இத்தொண்டை தக்க முறையிலாற்றுவதற்காகவே நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள். இதுதான் ‘இன்சானேகாமில்’ என்னும் மானிடசிரேஷ்டரின் அரிய தொண்டாகும்.

மானிடர் இயற்கையாகவே இருவகைக் குணங்களைக்கொண்டு படைக்கப்பட்டிருக்கின்றனர். 1-வது ‘‘மலக்கானிய்யா’’வானவர் குணம். இதனால் அவன், தான் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை உணர்ந்து, தன்னை சிருஷ்டித்த பரம்பொருளையும் அறிந்து, அதற்குச் சிரவணக்கம் புரிய முற்பட்டு, அவன் ஒரே நாயன் என்பதை உணர்வதுடன் அவனுக்கு இணைவைப்பது கெடுதலென்று அறிந்து சகல நற்கருமங்களையும் செய்ய முற்படுகிறான்; அவ்வாண்டவனின் சிருஷ்டிகளான இதர சகோதரர்களிடத்து நற்குணங்களோடு நடந்தும் வருகிறான்.

மற்றொரு குணம் ‘‘ஷைத்தானிய்யத்’’ நாரதர் குணம். இதனால் அவனிடத்து கொலை, களவு, சூதாட்டம், சிருஷ்டி கர்த்தாவை மறுத்தல், அவனுக்கு இணை வைத்தல் முதலிய சகல துர்கிருத்தியங்களும் காணப்படுகின்றன. இவ்விரு குணங்களுக்கு மத்தியில் மானிடன் உழல வேண்டியவனாக இருக்கின்றான். எனவே ‘‘மலக்கானிய்யத்’’ அவனுக்கு மேலோக வாழ்க்கையை ஞாபகமூட்டி, அவனை மேன்மையாக்கப் பார்க்கின்றது; ஷைத்தானிய்யத்தோ அவனைக்கீழ்தரப்பட்ட மிருகங்களோடு இணைக்கப் பார்க்கின்றது. இவ்விரு சக்திகளுக்கு மத்தியில் போராட்டம் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றது. இந்நிலைமையில் ‘மலக்கானிய்யத்து’ மிகைத்து, ஜெயம் பெற்றுவிடுமாயின் அவன் நல்லடியார்களில் சேர்ந்துவிடுகிறான். ‘ஷைத்தானிய்யத்’ மிகைத்து அஃது ஜெயம் பெற்று விடுமாகில், அவன் மிருகங்களிலும் தாழ்ந்த கெட்ட அடியார்களில் சேர்ந்துவிடுகின்றான்.

சிருஷ்டிகளை உற்பவித்த நாயன், அவைகளை உபயோகிக்கவேண்டிய முறைகளையும், மானிடன் நல்கி ஒழுகவேண்டிய சட்டதிட்டங்களையும் நபிமார்கள் மூலயம் அறிவித்து, நபிமார்கள் அவைகளை மக்களுக்கு எடுத்து ஓதினார்கள். மேற்கூறப்பட்ட நல்லடியார்களோ அப்போதனைகளை உடன் ஏற்று நடக்கின்றனர். தீயவர்களிற் சிலர், சிறிது உணர்ச்சி பெற்ற பின் அதனை ஒப்புக்கொண்டொழுகின்றனர். மற்றும் சிலரோ அப்பரிசுத்த போதனைகளை ஒப்புக்கொள்ளாமல் நரகத்துக்குப் பாத்தியஸ்தர்களாய் விடுகின்றனர். இக்கடாசி வகுப்பாரிற் சிலர், நபிமார்களுடன் அசத்தியத்திற்காகப் போராடியதின் பயனாக, நபிமார்கள் பற்பல துன்பங்களுக்காளாக வேண்டியுமிருந்தது. இம்மூட மக்கள் சில நபிமார்களை கொலையுஞ் செய்துவிட்டனர். பொதுவாக எல்லா நபிமார்களும், அவர்களைப் பின்பற்றி யொழுகிய நல்லடியார்களும் அஞ்சாநெஞ்சத்தோடு சத்தியப் பிரசாரம் செய்து வந்தார்கள். இதன் காரணத்தால் சத்தியம் எல்லாக்காலத்தும் மேன் பதவி யடைந்துகொண்டே வந்தது. முந்திய நபிமார்கள் செய்த பிரசார வேலையையும், அவர்கள் நிகழ்த்திய போர்களையும், அச்சந்தர்ப்பங்களில் அல்லாஹ்தஆலா தன் கிருபா கடாக்ஷத்தால் அந்நபிமார்களுக்கு வெளியிட்ட அற்புத நிகழ்ச்சிகளையும் பல சந்தர்ப்பத்திலும் திரு குர்ஆனில் அறிவித்துள்ளான்.

இனி இறுதி நபி வள்ளல் ரசூல் (ஸல்.) அவர்களுடைய சத்தியப் பிரசாரத்தை எடுத்துக்கொள்வோம்: நபிபட்டம் வந்த சிறிது காலத்திற்குள் பஹிரங்க போதனை புரியுமாறு உத்திரவிடப்பட்டார்கள். உபகாரத்திற்குச் சேனையில்லாத நிலைமையில் தன்னந்தனியே நின்று போதித்தார்கள். நல்லடியார்களோ வெனில், இவ்வினிய போதனையைக் கேட்ட மாத்திரத்தில் ஈமான் கொண்டார்கள். உதாரணமாக,

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி.) அவர்கள் வியாபாரத்திற்காக வெளிதேசம் சென்றிருந்தவர்கள் 'மக்கா முஅல்லமா' வந்து சேர்ந்தவுடன் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் போதனைகளைக்கேள்விப்பட்ட மாத்திரத்திலே, அப் பெருமானார் (ஸல்) இருக்குமிடம் தேடிச் சென்று சத்தியத்தை அன்போடேற்று 'ஈமான்' கொண்டுவிட்டார்கள். இதனாலேயே அவர்களுக்கு சித்தீக்கீன்களில் சேரும் பாக்கியம் கிடைத்தது. மற்றவர்கள் சந்தர்பா சந்தர்ப்பங்களில் நபிபெருமானின் உபந்நியாஸங்களைக் கேட்டுறுகி ஈமான்கொண்டனர். அபூஜஹ்லும், அவனைச் சேர்ந்தவர்களும் சத்தியத்திற்கு விரோதிகளாகி அபஜெயமுற்று மாண்டனர்.

நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் யார் என்ன சொன்ன போதிலும், தொந்தரைகள் செய்த போதிலும் யாதொன்றையும் பொருட்படுத்தாமலும், மனஞ் சலியாமலும் அஞ்சா நெஞ்சத்தோடு தங்கள் பிரசாரத்தை நடத்தியே வந்தார்கள். அதனால் சத்தியம் ஜெயமடைந்தது, அசத்தியம் வீழ்ச்சியடைந்தது. பின்னர் தங்கள் உம்மத்துகளும் இந்தத் திருப்பணியை இறுதி நாள் வரைசெய்து கொண்டு போகும்படி கட்டளையுமிட்டார்கள்.

இக்கட்டளையை ஸஹாபக்கள் காலமுதல் நாளிதுவரை முஸ்லிம்கள் அனுஷ்டித்து சத்தியத்திற்காகப் போராடியும் வருகின்றனர். நபிபெருமானார் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை தக்கமுறையில் போதித்ததோடு, அதன்படி செவ்வனே நடந்தும் காட்டினார்கள். அதோடு தங்கள் ஸஹாபாக்களான தோழர்களை பரிபக்குவப்படுத்தி இலங்கா நிற்கும் நக்ஷத்திரங்களைப் போலுமாக்கி விட்டார்கள். இதனால் இஸ்லாத்தின் ஜோதி இப்பூபரப்பின்கண் நாலு பக்கங்களிலும் பிரகாசமாய் ஜொலிக்க முற்பட்டது. மேலும் திருக்குர்ஆனைச் சட்டதிட்டமாகக் கொண்டபலமான செங்கோலாகாக்ஷி நிறுவப்பட்டுப் போயிற்று; இஸ்லாத்தின் துவஜம் உலகத்தின்பிரதானக் கோட்டைகளில் பறக்க ஹேது வேற்பட்டுப் போயிற்று. அக்காலத்தில் இஸ்லாத்துக்கு எழுந்த இன்னல்களை தங்கள் கரங்களினாலேயே அகற்றிவிட்டனர். உதாஹரணமாக, நபிபெருமானார் (ஸல்) அவர்களின் கடாசிகாலத்திலும், கிலாபத்தின் ஆரம்பகாலத்திலும் சில போலிகள் நபிகளெனத் தோன்றினர். அதில் முதன்மையானவனும், பராக்கிரம சாலியுமானவன், "முஸைலமத்துல் கத்தாபா"வான். இவன் தன்னுடன் ஒரு பெரும் சேனையைத் திரட்டிக்கொண்டு விட்டதால்,இவனுடன் போர்புரியவேண்டியசந்தர்ப்பமேற்பட்டு விட்டது. எனவே ஸய்யிதுனாஹஸ்ரத் அபூபக்ர்ஸித்தீக் (ரலி.) அவர்கள் மற்றெல்லாக்காரியத்தைக்காட்டினும் இதனைமுற்படுத்த வேண்டுமென்று கருதி "காலிதிப்னுவலீத்" (ரலி.)அவர்களின் தலைமையில்பெரும் சேனையை அனுப்பி வைத்தார்கள். இச்சேனையில்'வஹ்ஷி' என்னும் பெயருடைய அடிமையு மிருந்தார். இவர் இன்னாரென்பது முஸ்லிம்களுக்குத் தெரியாதவிஷயமன்று. இவர் 'உஹத்' யுத்தத்தில் குப்பார்களுடனிருந்து ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி.) அவர்களை ஷஹீதாக்கியவர். பின்னர் இஸ்லாத்தில் சேர்ந்து அவரிழைத்த இத்தவறுக்காக அந்தவாளைக்கொண்டு இஸ்லாத்திற்கு உபகாரமான வேலையைச் செய்துவிட வேண்டுமென்னும் எண்ணங்கொண்டிருந்தாராதலின், இந்த யுத்தத்தில் அரும்பிரயாசைபோடு முஸைலமாவை அந்த வாளுக்கு இரையாக்கினார். ஆகவே இந்த யுத்தத்தில் முஸ்லிம்கள் தங்கள் முழுபலத்தையும் உபயோகித்து போராட வேண்டியிருந்தது. இதில் 'குர்ரா'க்களான 700 ஸஹாபாக்கள் ஷஹீதாய்விட்டார்கள். அவர்கள் திருக்குர்ஆனை பாராயணஞ் செய்து அதன் கருத்துக்களையும், தப்ஸீர்களையும் சாங்கோபாங்கமாய் எடுத்தியம்புவதில் நிபுணர்கள். இவர்கள்ஷஹீதானதால் இஸ்லாத்திற்கேற்பட்ட நஷ்டத்திற்கோர் அளவு கூற முடியாது. இது விஷயமாய் குலபாக்களும் ஸஹாபாக்களும் கவலையுற்றார்களாயினும் இந்த யுத்தத்தால்முஸைலமாவின் பஸாது அடக்கப்பட்டுப்போனமைபற்றி சந்தோஷமடைந்தார்கள். நபிகள் நாயகம்ஸல் அவர்களுக்குப் பின் யாரும் நபியாகவரமுடியாதென்று திருகுர்ஆன் பஹிரங்கமாக அறிவித்துவிட்டபின் போலிகள் கிளம்பி நபிப்பட்டத்தை தாவாச்செய்வது பெரும்பாலும் வீண்கிளர்ச்சியாகு மென்பதில் ஐயமில்லை. ஆகவே இதை ஒழிக்க வேண்டியது சத்தியப் பிரசாரத்தின் முதல் வேலையாகும். இதனால்தான் ஹஸ்ரத் சித்தீக் அக்பர் (ரலி.) அவர்கள் இவ்வளவுதூரம் முன்வந்து இதனை அடக்கி ஒடுக்கினார்கள்.

'முஸைலமா'வைத் தவிர்த்து வேறு பலரும் நபித்துவத்தை வாதாடினார்களாயினும் அவர்களெல்லோரும் கண்டிக்கப்பட்டு அக்காலத்திலேயே ஒழுங்கு படுத்தப்பட்டு விட்டனர்.

ஸஹாபாக்களுக்கடுத்த 'தாபியீன்'கள் காலத்திலும் இஸ்லாத்திற்கு விரோதமாய் பலரூலும் பல வினோதக்கொள்கைகள் தோற்றுவிக்கப்பட்டது. உதாரணமாக, 'முஅதஸிலா'க்கள் முற்கால 'பலாஸிபா'க்களைக்கொண்டு பல நூதனக் கொள்கைகளைக் கிளப்பினர். இன்னவர்களுக்கும் குர்ஆனுடைய 'பிலாஸபா'வைக்கொண்டு தக்க மறுப்புக்கள் கொடுக்கப்படவே அன்னோரும் ஒடுங்கினர்.

பிற்காலத்திய கிறிஸ்தவப் பாதிரிமார்கள், அறியாத்தனத்தாலும், அழுக்காறு கொண்டும் இஸ்லாத்தின் மீதும், அதன் திருத் தூதர் (ஸல்.) அவர்கள்மீதும் சுமத்திவந்த—வரும் அபவாதங்களுக்கோரளவு கூறமுடியாது. அப்பாதிரிமார்கள் சற்று நிதான புத்தியோடு கவனிப்பார்களாயின், நபிபெருமானார் (ஸல்.) அவர்களுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதைத் தெரிந்துகொள்வர். ஏனெனின், யூதர்கள் ஹஸ்ரத் மர்யம் (அலை.) அவர்கள்மீது படுதூறு கட்டி, ஈஸா (அலை.) அவர்கள் 'விபசார புத்திரர்' என்று பிரஸ்தாபப்படுத்தி விட்டிருந்தனர். திருக்குர்ஆன் பலதரப்பட்ட விதத்தில் இவ்வபவாதங்களையெல்லாம் அகற்றி, ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் ஓர் பரிசுத்த நபியென்பதை பிரகடனப்படுத்தி, முன்னுண்டான எல்லா நபிமார்களையும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திற்று; மஸீஹ் (அலை.) அவர்களுடைய பரிசுத்த போதனை இன்னதென்பதையும் விளக்கிற்று. நபிகள்பிரான் (ஸல்.) அவர்கள் காலத்திலிருந்த பிடிவாதமற்ற கிறிஸ்தவ அறிஞர்களும், பாதிரிமார்களும் திருக்குர்ஆனின் போதனைகளை கவனித்து இதுதான் மஸீஹ் (அலை.) அவர்களின் போதனையென்று கூறி இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்கள். நஜ்ஜாஷீ பாஷா, புஹைரு ருஹிப் போலொத்தவர்களின் சரித்திரங்கள் இதற்கு நற்சான்றுகளாகும்.

இக்காலத்தில் தோன்றியுள்ள கொள்கைகளில் 'மிர்ஸாயி'க் கொள்கை மிகவும் அபாயகரமான கொள்கையாகும். இதனை தோற்றுவித்தவர் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியாவர். இவர் நபி பெருமானார் (ஸல்.) அவர்களுக்கெதிராய் தான் ஓர் நபி, எல்லா நபிமார்களைவிட மேலானவன், தன்னை ஒப்புக்கொள்ளாதவர் காபிர், முர்தத்து என வாதாடி பல புத்தகங்களையும் இயற்றியுள்ளார். இவர் தாவா முழுதும் பொய் என்பதற்கு அநேக அத்தாக்ஷியுள. இவருடைய முக்கிய சிஷ்யரும், இவருடைய புத்தகங்களை தமிழில் மொழிபெயர்த்து விற்று வருபவரும் தென்னாட்டு மிஷனரியுமான ஒருவர், தம் பத்திரிகையில் அஹ்மதீபேகம் லீலை விஷயமாய் மிர்ஜா முன்னறிக்கை செய்த விஷயங்கள் யாவும் பொய்யாகவந்து முடிந்ததென்று பிரகடனப்படுத்தியிருப்பதே அவர் புழுகர் என்பதற்குப் போதிய அத்தாக்ஷியாகும்.

இவருக்கு அநேக நவீனக் கொள்கைகளுண்டு. அதில் ஓர் முக்கியமான கொள்கையைக் கவனியுங்கள்: நரகம், சொர்க்கம் என்பது இரு இடங்களின் பெயரல்லவாம்? மானிடரின் ஹிருதயத்தில் தோன்றும் சந்தோஷம் சொர்க்கமாம்! அவர்களின் ஹிருதயத்தில் தோன்றும் மனக்கவலைதான் நரகமாம்? இம்மாதிரி இவருக்கு அநேக கொள்கைகளுண்டு. அவைகளில் பெரும்பாலானவைகள் ஞான போதத்தில் கூறப்பட்டுள்ளன.

சித்தீக் அக்பர் (ரலி.) அவர்களுடைய பிரசாரத்தின் போக்கில், நபிகளென வாதாடிய போலிகளின் விஷயம் அவசியமாயும், அவசரமாயும் கவனிக்கப்படல் வேண்டும். இவரையும், இவருடைய சிஷ்யர்களையும், அவர்கள் எந்தப் பார்ட்டிக்காரர்களாக இருப்பினும் சரியே, அவர்களைவிட்டு 'முஸ்லிம்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்; இத்தீய கொள்கைகள் மக்களிடை பரவாமல் தக்கப் பிரசாரம் செய்யவேண்டும். இவர்களுடைய ஒவ்வொரு கொள்கையும் தக்க அத்தாக்ஷிகளோடு மறுக்கப்பட்டுப் போயிருப்பினும், தமிழ்நாட்டில் மக்களிடையே அவைகளைப் பரப்புவதற்கு பலவித தந்திரங்களைக் கையாண்டு வருகின்றனர்.

வடநாட்டிலோவெனின், காதியானிக் கொள்கையின் கெடுதல்களைச் சிறுவர் முதல் முதியோர்வரை யாவரும் நன்கறிந்திருக்கின்றனரா தலின், அக்கொள்கையில் சிக்குண்ட விரல் விட்டெண்ணக்கூடிய ஒருசில நபர் தவிர வேறெவரும் ஏமாறமாட்டார்கள். தமிழ்நாட்டிலோ இதைப்பற்றிய பிரசாரம் போதாது. இது சம்பந்தமாய் அவசியமானவிடங்களில் மகாநாடுகள் நடத்தப்பட வேண்டும்; இவர்களின் கொள்கைகளை மறுத்து பற்பல நூல்களும் எழுதி வெளியிடல் வேண்டும். இவைகளை நன்காலோசித்து தென்னிந்திய உலமாக்களும், கனவான்களும் ஆவன செய்ய முன்வருவார்களாக!

உலகின் நெகிரற்ற வழிகாட்டி

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் தூய்மை பொருந்திய வாழ்க்கையானது உலகம் முழுதுக்கும் நேர்வழி காண்பிக்கும் சுடர் தீபமாய் இலங்கிக் கொண்டிருக்கிறது. எனவே மானிட வாழ்க்கையின் எந்தப் பிரிவும் பெருமானார் (ஸல்.) அவர்களின் நேர்வழியை விட்டு நீங்கியதா யிருக்கமுடியாதென்பது திண்ணம். உதாஹரணமாக, ஆத்மார்த்த முன்னேற்றத்துக்குக் காரணமாயிருக்கும் சற்குணங்களை எடுத்துக்கொள்வோமாகில், அவைகள் அப்பெருமகர் (ஸல்.) அவர்களின் வாழ்க்கையின் பிரதான பாகமா யிருப்பதைக்கண்டு கொள்ளுவோம். எனவே பெருமானார் (ஸல்.) அவர்களின் சற்குண ஒழுக்கங்களை கவனிப்போமாகில், மிகக்கடுமையான சொல்லுகளையுங்கூட தங்களுடைய புன்முறுவல் பூத்த முகாரவிந்தத்தினால் மிகமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்கள்; பிறர் எவருக்கும் எச்சமயமும் கடுமையான பதங்களால் மறுமொழிப் பகர்ந்தவர்களல்லர் என்பதைத் தெரிந்துகொள்வோம்.

நபிபெருமானார் (ஸல்.) அவர்கள், கிருபை, கோடை ஆகிய குணம்சத்தில் எம்மட்டும் சிறந்தவர்களா யிருந்தார்களெனின், தங்கள் உதிரத்தின்மீது வெறிகொண்டிருந்த கொடிய பகைவர்களிடம் கூட பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் ஒருபோதும் கொண்டது கிடையாது. அப்படிப்பட்ட கொடும் பகைவர்கள் மீது ஆத்திரங் கொள்வதற்குப் பதிலாய், அவர்கள்மீது அளப்பரிய தயாளம் பூண்டு மன்னிப்பார்கள். எனவே எம்பிரான் (ஸல்.) அவர்கட்குபற்பலவிதமான தீங்குகளும் துன்பங்களு மிழைத்த கொடிய பகைவர்களையுங்கூட மன்னித்து விடுவார்கள்.

உதாரணம்: 'உத்பாபின் அபீவக்காஸ்' என்பான் லோகதயாளர் நபி (ஸல்.) அவர்கள் மீது 'உஹத்' யுத்தசமயத்தின்போது கற்களை வீசி யெறிந்தான். இதன் கடுமையால் திருவள்ளல் (ஸல்.) அவர்களின் புனித பற்களும் உதிர்ந்து (ஷஹீதாகி) விட்டன. அவர்களுடைய திருமுகமண்டலமும் காயமடைந்து சிதைந்தது. அதுசமயம் தோழர்கள் சிலர், நபியையணுகி, 'ஆண்டவனின் திருத்தூதரவர்களே! தங்கட்கு தீங்கிழைத்த அன்னவர்கள் மீது (பத்-துஆ) சாபமிடுங்கள்! என்று கோரினார்கள். அதற்கு லோகதயாளர் (ஸல்.) அவர்கள், "சோதரீர்! யான் அவர்கள் மீது 'பத்-துஆ' செய்வதற்காக இத்தாணிக்கு வரவில்லை; ஆனால் அவர்களை சன்மார்க்கத்திற்கழைக்கவே வந்தேன்" என்று மிகப் பொறுமையோடு பதில்சொன்னார்கள்.

'பத்ரு' யுத்தம் நிகழ்வுற்றக்கால், மக்காவின் கொடிய காபிர்கள் சிலர் கைது செய்யப்பட்டு அவர்கள் கைகள் பின்கட்டாகக் கட்டுப்பட்டு, ஒரு கூடாரத்தில் அடைக்கப்பட்டுக் கிடந்தார்கள். அந்தக் கைதிகளில் பெரும்பாலோர், நபிகள் பிரான் (ஸல்.) அவர்களுடைய உயிரைப் போக்குவதற்கு பன்முறை முயன்றவர்களாவர். நிற்க அன்றிரவு நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் மேற்படி கூடாரத்தின் அருகில் ஓரிடத்தில் தொழுது வணக்கம் புரிந்து கொண்டிருந்தார்கள். அச்சமயம் அந்தப் பகைவர்கள், திணரும் சப்தம் லோகதயாளர் (ஸல்.) அவர்கள் காதில் விழுந்தது. உடனே நாயவர்கள் அங்கு சென்று அவர்களைக்கண்டு என்னகஷ்டம்என்று விசாரித்தார்கள். அதற்கந்த கைதிகள், 'எங்கள் கைகளை மிகவும் இறுக்கமாகக் கட்டிவிட்டார்கள் எனவேஎங்கட்கு வலி ஏற்படுகிறது என்று சொன்னார்கள். உடனே நாயகம் (ஸல்.) அவர்கட்கு அந்தப்பகைவர்கள் மீதும்கூட கிருபையுண்டாகி, அவர்களின் கைக்கட்டுகளை அவிழ்த்துவிட்டுவிட்டார்கள். அத்துடனில்லாமல், அக்கொடியவர்கள், தங்கட்கு தாகமாயிருக்கிறது என்று கூறியதன்மேல், நபி நாதர் (ஸல்.) அவர்கள் குளிர்ந்த தண்ணீர் கொண்டுவந்து அவர்கட்கெல்லாம் குடிப்பாட்டினார்கள்.

தியாகத்திலும், ஏழைகளை ஆதரிப்பதிலும் நபிகள் நாயகம் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள் எம்மட்டும் சிறந்தவர்களாயிருந்தார்களெனின், எந்த ஒருஏழையும் எம்பிரான் (ஸல்.) அவர்களிடம் யாஸகம் கேட்டுவிட்டு காரியசித்தியின்றித் திரும்பிப் போனதே கிடையாது. யாசகர் வந்து ஏதேனும் கேட்குங்கால், எம்

பிரான் (ஸல்.) அவர்களது கைவசத்தில் யாது மில்லாதிருந்தால், "என்பெயரால் இன்னொரிடம் கடன்வாங்கி எடுத்துக் கொள்வீராக! அக் கடனை யான் தீர்த்துவிடுவேன்" என்று உதவி செய்வார்கள்.

தூய்மையிலும் ஒழுக்கத்திலும் நபிகணுதர் (ஸல்.) அவர்கள் எம்மட்டும் சிறந்தவர்களா யிருந்தார்களெனின், அவர்களது, மிக மிகக் கொடிய விரோதிக்குங்கூட அப்பெருமானு ரவர்களது தூய ஒழுக்கத்தின் மீது ஒரு சிறு சந்தேகமு முண்டானது கிடையாது. முஹம் மத் (ஸல்.) அவர்கள், குண ஒழுக்கத்திலும் நட வடிக்கையிலும் மிகமிகத் தூய்மையானவரா யிருந்தாரென்றும், எக்காலும் சத்தியவந்தரா யிருந்தாரென்றும் கொடிய பகைவர்களே சாக்ஷியம் பகர்ந்திருக்கின்றூர்கள்.

பக்தி வணக்கத்தில் நபி (ஸல்.) அவர்கள் எம்மட்டும் சிறந்தவர்களா யிருந்தார்களெனின், இரவுகாலம் முழுமையையும் 'நபில்' தொழுகை யில் கழித்து விடுபவர்களா யிருந்துவந்தார்கள். இரவில் அவர்கள் எம்மட்டும் நின்று வணங்கு வார்களெனின், காலையிலே அவர்களது கால் கூட வீங்கிவிடும்.

ஆண்டவனுடைய பயமும் அச்சமும் அவர் கட்கு எம்மட்டு மிருந்ததெனின், 'நபியே உமக்கு யான் சுவர்க்கலோகத்தை அருள்புரிந்து விட்டேன்' என்று ஆண்டவனே அவர்கட்கு நல்வாக்குக் கூறியிருந்துங் கூட, தங்கள் புனித தாடி ரோமங்கள் கண்ணீரால் நனைந்து போகிற வரை பயந்தழுவார்கள்.

லோகார்த்தப் போதனைகள்

உலக வியவகார முன்னேற்றத்துக்கு வேண் டிய குண ஒழுக்கங்களிலும் நம் லோகதயாளர் ரஸூல் (ஸல்.) அவர்கள் பரிபூரண நிலையும் பரிபக்குவத்தன்மையும் பெற்று உலகத்துக் கோர் இணையிலா வழிகாட்டியாக இருந்துவந் தார்கள். உதாரணமாய், உறுதியான எண் ணம், ஊக்கம், வீரம், தைரியம், உழைப்பு, சிரமமேற்றல், புத்துணர்ச்சி, ஆலோசனை, பகுத்தறிவு, முன் ஜாக்கிரதை முதலிய குணங் சங்கள் அவர்களுடைய சுபாவத்திலும் நடப்பி லும் மிக மிகப் பூரணமாய் அமைந்திருந்து வந்தன.

'பிரபஞ்ச தயாபரர் ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கள், மகா பராக்கிரமசாலியாய் இருந்தார் கள் என்பதை உலகத்தின் சரித்திராசிரியர்கள் எல்லோரும் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளுகிறூர் கள். வாஸ்தவத்தில் அல்லாஹ் தஆலா அவர்க ளுடைய உள்ளத்திலே ஓர் அபூர்வமான ஹிரு தயத்தை அருளியிருந்தான். எனவே அவர் கள், வீரப் பராக்கிரமத்தில் 100 சைன்னிய வீரர்களைவிட வீரமும் தீரமும் உடையவர்களா யிருந்தார்கள். எம்பெருமானூர் (ஸல்.) அவர் கள் மகா தயாளமும் கருணையும் மிக உடைய வர்களாயிருந்தனரெனினும், சத்தியத்தைப் பாதுகாத்து குப்ரியத்தை ஒழிக்கும் துறையில் மகா பெரும் மலையையும் வைராக்கியத்தோடு எதிர்த்துத் தகர்த்துப் போராடுகிற வீரஞ் செறிந்தவர்களாயிருந்தனர். எனவே, அமைதி யைக் குலைத்து ஜனசமூகத்துக்குக் கேட்டை உண்டாக்குபவர் விஷயத்தில் எம்பிரான் (ஸல்.) அவர்கள் தாழ்மைத்தன்மையை காட்டிக் கொண்டது கிடையாது.

உழைப்பிலும், கஷ்டமேற்பதிலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் எம்மட்டும் மேம்பா டுடையவர்களாயிருந்தார்களெனின், 'அனு தினமும் சூரிய உதயத்துக்கு நான்கு நாழிகை முன்னடியாக நித்திரை விட்டெழுந்துகொள் வார்கள். முதன்முதலாக குளிர்ந்த நீரால் ஒலுச் செய்துகொண்டு மனமுருக்கத்துடன் ஏகாக்கிரசித்தராய் 'தஹஜ்ஜுத்' தொழுகையை நிறைவேற்றுவார்கள். அதன்பின் ஜபதப தியானத்தில் ஈடுபட்டுவிடுவார்கள். அவ்வாறே யிருந்து 'பஜ்ரு' தொழுகைக்குரிய நேரம்வந்த தும் தொழுகையை இனிது நிறைவேற்றிக் கொள்வார்கள். இங்ஙனமே பொழுதுமுடிந்த பின் வழக்கம்போல் ஏழையோர்கட்குத் தொண்டாற்றுவதிலும், வியாதியஸ்தர்களை க்ஷேமம் விசாரிப்பதிலும் ஈடுபட்டுவிடுவார் கள். மேலும் வறுமையாலோ சஞ்சலத்தா லோ கஷ்டப்படுவோர்க்கு ஆறுதல் கூறுவதி லும் ஏழை விதவா ஸ்திரீகளின் குடித்தனச் சாமான்கள் வாங்கிக் கொண்டுவந்து கொடுப் பதிலும் ஈடுபட்டுச் சேவை செய்வார்கள். முதலில் பிறர்க்குரிய சேவைகளைப் புரிந்தபின் னரே தங்களுடைய ஜீவனம்சம் சம்பாதிப்ப தற்குரிய சுய வியவகாரங்களில் பிரவேசிப் பார்கள். தங்கள் உணவு உடை கட்குரிய சாதனங்களை தாங்களே சொந்தப் பிரயாசையி னால் சம்பாதித்துக் கொள்வரேயல்லாமல் பிற ரிடமிருந்து இலவசமாகப் பெறவேமாட்டார் கள். பிறருக்குப் பொதுத் தொண்டாற்றிய

நேரம்போக மிச்சமுள்ள ஆறு மணி நேரங்களை குடும்ப சம்பாத்தனை விஷயத்தில் செலவிடுவார்கள். அதன்பின் பிற்பகல்—மாலை நேரங்களை பொதுமக்கட்கு நல்லுபதேசங்கள் புரிவதிலும், பாமரர்கட்கு சன்மார்க்க சட்டதிட்டங்களைப் போதிப்பதிலும், சிறுவர்கட்கு நீதி புகட்டுவதிலும் செலவழிப்பார்கள். சுருங்கக் கூறுமிடத்து, லோக தயாபரர் ரஸூலே கரீம் (ஸல்.) அவர்களுடைய வாணுள் முழுதும் ஏழை எளியோர்களின் உபகாரங்களிலும் பொதுஜனச் சேவையிலும், சொந்தமாய் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துண்பதிலும் கழிந்ததெனலாம். இப்படிப்பட்ட வாழ்நாள் முறையில் எம்மட்டுப் பிரயாசையும் உழைப்புமிருக்குமென்பதை நன்கறிகின்றோம். எனவே எம் பெருமானுர் (ஸல்.) அவர்கள் ஊக்கம், உழைப்பு, பிரயாசை, கஷ்டம் இவைகட்குச் சிறிதும் பின்வாங்குவதேயில்லை.

தீர்க்காலோசனை, மேதாவித்தன்மை ஆகியவற்றில் எம்பெருமானுர் ரஸூலுல்லாஹி(ஸல்.) அவர்கள் எம்மட்டுஞ் சிறந்திருந்தார்களோ அதற்கிணை இப்பிரபஞ்சத்தில் எந்தக்காலத்திலும் காணப்படுதல் முடியாது. எனவே, நபிகணுதர் ரஸூல் (ஸல்.) அவர்கள் தங்கள் அபார ஆலோசனையின் தெளிவினுல், உலகமக்களின் நிலைமையை நன்குணர்ந்து அவர்களை தீயவழிகளை விட்டுங் காப்பாற்றி சீர்திருத்தம் புரியலாணுர்கள். தங்கள் யோசனையினுலும் பேருழைப்பினுலும் எல்லாவிதமான வழிகேடுகளையும் இத்தரணியை விட்டும் ஒழித்துவிட்டார்கள். மேலும், இவ்வந்தகாரம்மிக்க உலகத்திலே பல நூற்றுண்டுகளாய் ஒழியாதிருந்துவந்த துன்மார்க்கங்களை யொழித்து உலகத்தைத்தூய்மைப் படுத்தினுர்கள். மேலும் நபிகணுயகம் (ஸல்.) அவர்கள், தங்களுடைய சத்தியஜோதியொத்த இதோபதேசத்தின் மகிமையினுல், இவ்வுலமக்களைப்படர்ந்திருந்த அவிவேக அஞ்ஞான அந்தகாரப் படலங்களை அழித்தொழித்து, ஜோதிமயமாகச் செய்துவைத்தார்கள். எனவே உலகத்தில் நடந்துவந்த அக்கிரம அட்டூழியங்கள் மறைந்தொழிந்தன ; ஆயிரக்கணக்கான துர்த்தர்கள் சன்மார்க்கத்திற்கு வந்துவிட்டார்கள். எனவே, நபிபெருமானுர் (ஸல்.) உலகத்தின் சகாப்தத்தை மாற்றியமைத்து விட்டார்கள். அதாவது மூடர்களையெல்லாம் அறிவாளிகளாகவும் கொடுங்கோன்மையாளர்களையெல்லாம் தயாளமூர்த்திகளாகவும், சுகபோகலோலர்களை யெல்லாம் பக்திமான்களாகவுமாக்கிவைத்து விட்டார்கள்.

மேலும் நபிகட் பெருமானுர் (ஸல்.) அவர்கள், தங்கள் அரும்பெரும் போதினைகளால், ஒட்டகம் மேய்த்துக் கொண்டிருந்தோரை உலகத்தை ஆளும் அரசாதிபதியாகவும் செய்துவைத்தார்கள்; கீழான அந்தஸ்திலிருந்தோரை உயர்வான அந்தஸ்துக்கு உயர்த்தியும்வைத்தார்கள். இங்ஙனம் காரியசித்தியும் வெற்றியும் பேரருளும் பெற்று விளங்கிய எமது நபிகட் பெருமானுர் (ஸல்.) அவர்கட்கு இணையானேர் வேறெவரும் இத்தரணியில் இருந்தது கிடையாது, இனியும் இருக்கமுடியாதென்பது திண்ணம். நபிபெருமானுர் (ஸல்.) அவர்கள் தங்கள் அரும் பெரும் போதனையின் பயனுக, ஆண்டவனுக்கும், அடியானுக்குமுள்ள தாரதம்மியத்தையும் கடமையையும் உணரவைத்து, ஆண்டவனை விட்டு கேவலம் விக்கிரகங்களை வணங்கிக் கொண்டிருந்தோரை ஏகதெய்வ வணக்கஸ்தரான பக்தர்களாகச் செய்தும் வைத்தார்கள். ஒரு காலத்திலே எல்லா அஞ்ஞாரங்கட்கும், எல்லாவித துர்க்கிருத்தியங்கட்கும் மூலஸ்தானமாயிருந்து வந்த அரபிய பிரதேசங்களை, புனிதமும் புண்ணியமும் தெய்வஸ்தோத்திரக் கோஷமும் நிலவும் ஸ்தலமாக ஆக்கிவைத்த பெருமை எமது நபிகணுயகம் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களுக்கே உரியதாகும்.

சுருங்கக் கூறுமிடத்து, பிரபஞ்சத்து மகத்தான சீர்திருத்த வழிகாட்டி ஒருவர் தன்மையில் என்னென்ன சக்திகளும் குணதிசயங்களும் அமைந்திருக்க வேண்டுமோ அவையெல்லாமும் நமது நபிகணுயகம் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களது தன்மையில் மிகப்பரிபூரணமாக அமைந்திருந்தது. அந்தசக்திகளை எந்த சமயத்தில் எந்தெந்த இடத்தில் யார்யாரிடம் பிரயோகிக்க வேண்டுமோ அவ்வெல்லா ஆற்றல்களையும் ஆண்டவன் தன்திருநபிமுஹம்மத் (ஸல்.) அவர்கட்கு அருள் புரிந்திருந்தான். அதன்படியே எம்பிரான் (ஸல்.) அவர்கள் தங்கட்குரித்தான சக்திகளை இடம் பொருள் ஏவல் உணர்ந்து—பிரயோகித்து மானுஷ்ய உலகத்தார்மாட்டுத் தங்கள் வாழ்க்கைமுறையின் அனுபவழிகாட்டலான 'உஸ்வயே ஹஸனு'வைக் காண்பித்துவைத்தார்கள். எனவே, இத்தரணிவாழ் மாந்தர் ஒவ்வொருவரும் லௌகிகத்துறையில் முக்தியும், வைதீகத்துறையில் விசிராந்தியும்

அடையவேண்டுமாயின், நபிகட் பெருமானர் றஸூல் (ஸல்.) அவர்களுடைய அடிச்சுவட்டையே பின்பற்றி நடந்தாதல் வேண்டும். உலகமக்களனைவர்கட்கும் இகபர இருலோக சாம்ராஜ்ஜிய வழிகாட்டி நபிகணயகம் (ஸல்.) அவர்களேயாவார்.

டால்ஸ்டாயின் அறவுரை.

நபிகணதர் அஹ்மத் (ஸல்.) அவர்கள் உலகத்துக்குப் புகட்டிய சத்திய சன்மார்க்க சுவிசேஷத்தை யொட்டி ருஷ்யாதேசத்து மகாபெரும் தத்துவ ஞானியான பலாஸிபர் காவுன்ட்டால்ஸ்டாய் அவர்கள் எழுதியிருப்பதாவது:—ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்.) அவர்கள் உலகத்தின் மனேன்னத சீர்திருத்த கரா யிருந்தார்கள்; அம்மகானின் வாழ்க்கையின் எந்த அம்சமும் எந்த விதத்தாலும் எத்தகையும் குறைவுமுடையதாயில்லை. அவர், ஒருபால் ஆன்மார்த்தமுக்திக்கு வழி காட்டி யான ஞாஞசிரியராக விளங்கினர்; அவ்வாறே மற்ருெருபால், உலக வியவகாரங்களின் முன்னேற்றமும் வெற்றியும் பெற்றுய்வதற்கான வழிகளைக் காட்டும் தலைவராகவும் விளங்கினர். எம்பெருமானர் (ஸல்.) அவர் மானுஷ்யத் தன்மையில் பரிபூரண-பரிபக்குவ நிலையை அடையவில்லையென்பதற்கு ஆதாரமாக ஒரு சின்னஞ் சிறு குறையையுங் கூட அப்புருஷோத்தமரின் ஜீவிய வாழ்நாள் முறைமையினின்று எடுத்துக் காட்ட எந்தப் பெரிய அறிவாளியாலும் முடியாதென்பது திண்ணம். அதாவது, நபிமுஹமத் (ஸல்.) அவர்கள் எல்லாவிதமான குறைகளை விட்டும் நீங்கி, எல்லாவிதமான உச்சஸ்தானத்தையும் பெற்ற இணையிலா மாந்தராய் விளங்கிஞர்கள்.

முகம்மதுறஸூல் (ஸல்.) அவர்கள் ஞானசிரியராகவும், உலகவழிகாட்டியாகவும் மட்டுமிருந்துவிடவில்லை. உலகத்தை யாளும் அரசராக-அரசர்க்கரசராகவு மிருந்துள்ளார்கள். அவ்விதப்பதவி வகித்துங்கூட அவர்கள், ஏழைப் பங்காளியாகவும், தயாளப்புருஷராகவுமே இருந்து வந்தார்கள். சுருங்கக் கூறின் அவர்கள், தயைக்கும் கொடைக்குமே அரசராய் விளங்கினர்கள். உலகமன்பதைகள்பால் ஆண்டவனுடைய கட்டளைகளான சட்டதிட்டங்களைப் பிரகடனப் படுத்தினவற்றில் ஓர் இம்மியளவும் நியாயத்துக்கோ, தர்மத்துக்கோ முரண்பாடாக நடந்துகொண்டதே கிடையாது. மிருதுவான சுபாவமும் சகிப்புத்தன்மையும், ஆழ்ந்த சிந்தையும் அதிகமுடையவர்களா யிருந்ததோடு, தங்கள் தாழ்மை சுபாவத்தால், சத்தியத்தையோ உண்மையையோ பகிரங்கப்படுத்தாமல் கைநழுவ விட்டவர்களன்று.

எல்லாவற்ருலும் நபிகணயகம் (ஸல்.) அவர்கள் வெற்றிபெற்ருர்க் கெல்லாம் பெரிய வெற்றிப் பெற்ருராக இருந்துவந்தார்கள். அங்ஙனமிருந்துங் கூட, தோல்வியடைந்தார் மீதும் சிறைபிடிப்பட்ட அடிமைகள் மீதும் அளவற்ற அன்பும் தயாளமும் மன்னிக்கும் தன்மையும் உடையவர்களாயிருந்து வந்தார்கள். ஆனல், சத்தியத்துக்கு விரோதமாகி விட்ட பாதகர்களை ஒருபோதும் மன்னித்தது கிடையாது. தங்களுடைய சொந்த விஷயமான விரோதிகளை ஒருபோதும் தண்டித்ததோ, இழிவுபடுத்தியதோகிடையாது. அப்படிப்பட்டபகைவர்கள்பால் ஜயம்பெற்றமைக்கு நபிகட் பிரான் (ஸல்.) அவர்கள் கைக்கொண்ட ஆயுதம் அன்பு, இதோபதேசம், சத்குணம், பெருந்தன்மை இவைகளேயாம்.

லோகப் பிரதாபர் முகம்மது றஸூல் (ஸல்.) அவர்கள் இத்தரணியின்கண் எழுந்தருளிய போழ்து, உலகமெங்கணும் அவிவேக அந்தகாரமே சூழ்ந்து கொண்டிருந்தது; மானுஷ்ய சத்குண ஒழுக்கமென்ற அரும்பொருள் செத்தொழிந்து போய்க்கிடந்தது; அக்கால மக்கள் ஆபாசமான வசனங்களை உபயோகப்படுத்துவதில் சிறிதும் பேணுதலற்றவர்களாயிருந்தனர். அப்படிப்பட்ட உலகத்துக்கு புத்துணர்ச்சிப் புகட்டி, சேத்துப்போயிருந்த நல்லொழுக்க நல்லாசாரத்தை உயிர்ப்பிக்கச் செய்து வைத்தார்கள்; உலகமக்களுக்கு உயர்குணத்தையும் உய்யும் மார்க்கத்தையும் கற்பித்துக் கொடுத்தார்கள்; நன்னகரீக நடைமுறையையும், கல்வி யறிவாராச்சியையும் இனிது கற்பித்துக் கொடுத்தார்கள்; மக்கட்கு அன்பையும் தூய எண்ணத்தையும் பெரிதும் படித்துக் கொடுத்தார்கள் என்பதே. ("The Light of Islam" 194-வது பக்கம்)

ஹர்-பர்ட் வாயில்

ஐரோப்பாவின் மிகப் பிரபல சரித்திராசிரியரான ஹர்பர்ட் வாயில் என்ற அறிஞர் தம்முடைய பிரசித்த "Great Teacher" என்ற நூலில் எழுதியிருப்பதாவது :— "ஹஜ்ரத்

முஹம்மத் (ஸல்.) அவர்கள் இப்பிரபஞ்சத்து மகத்தான வழிகாட்டியாயிருந்தார்கள். அவர்கள் தன்மையில், மகத்தான சீர்திருத்த வழிகாட்டியின் தன்மையில் அமைந்திருக்க வேண்டுமான எல்லாவித சிரேஷ்டாம்சங்களும் மிக மிகப் பூரணமாயமைந்திருந்தன" என்பனவற்றை யான் மனமுவந்து ஒப்புக்கொள்ளுகின்றேன். மேலும் அச்சிரேஷ்டர் மிகுந்த சுகுணசாலியாகவும், மக்கட்பற்றுடையவராகவுமிருந்து வந்தார்கள். ஏழை எளியோர்கள்பால் அவருக்கு அளவற்ற விசுவாசமிருந்து வந்தது. ஏழை, எளியோர், விதவை, அனாதை முதலியோரின் சுக துக்கங்களில் எப்போதும் கலந்து கொள்வார்கள். அன்னாருக்கு பெரிதும் ஊழியம் புரிவார்கள். அவருடைய தன்மையில் உலகார்த்தமான ஆடம்பரமோ, பகட்டோ, பெருமையோ இருந்ததே கிடையாது. அவர்கள் தனவந்தன், ஏழை எல்லோர்மாட்டும் ஒரே விதமாக நடந்து கொள்வார்கள். அவர்களுடைய பகுத்துணர்வும், ஆராய்ச்சியும், அனுஷ்டானமும், அபார சக்தியும் மேன்மையான அந்தஸ்துமுடையதாயிருந்துவந்தன. வாஸ்தவத்திலேயே அவர்கள் தீட்சண்ய ஞானமும், சுறுசுறுப்பான சுபாவமும் உடையவர்களாயிருந்துள்ளார்கள். அவர்களது ஞாபகசக்தி அபாரமானது; அவர்களது சம்பாஷணை மிகவும் அமைதியும், மிருதுத்தன்மையுமுடையதாயிருந்தது. மேலும் அப்பெரியார், சொற்பமான சொற்களை நிறைந்த பொருள் கொண்டதாய் சம்பாஷிப்பார்கள். அவர்கள் ஆழ்ந்து யோசித்துப் பேசுபவர்களாயிருந்தனர்.

முஹம்மத் நபியவர்கள் திடமான எண்ணமுடையவர்களாயிருந்ததற்கு அத்தாக்ஷி, அவர்கள் தங்கள் ஆயுட்பரியந்தம் உயர்தரமான நோக்கமே கொண்டவர்ளகா யிருந்ததாகும். அவர்கள் அளவற்ற கருணையும் தயையுமுடையவர்களா யிருந்தார்கள். மக்கா வெற்றிக்குள்ளானபோது கைதியான கொடிய காபிர்களையும் மன்னித்து விடுதலைசெய்துவிட்டார்கள். இப்படிப்பட்ட தயைக்கு உதாரணம் வேறெந்த மதப் பெரியாரின் சரித்திரத்திலும் காணப்படவில்லையாயினும் அஹ்மத் நபி (ஸல்.) அவர்கள், தயையும் கருணையும் உருவாய் விளங்கினர்களென்று சொல்லலாம் என்பதே.

ஸ்பெயினிலிருந்து வரும் இஸ்லாமிக நாகரீகத்தின் இறுதிச் சின்னங்கள்

ஸ்பெயினின் அரசாங்கத் தலைநகரான "மேடார்டி"லிருந்து சுமார் 30 மைல் தூரத்தில் "ஸ்கோரியால்" என்னும் பெயர் புனைந்த ஒரு கிறிஸ்துவ மடம் இருக்கிறது. இம்மடத்தை மன்னர், இரண்டாவது பிலிப் 1584-ல் கட்டினர். கட்டிடத்தின் ரீதியையும் இனத்தையும் பொருத்தமட்டில், உயரமானதும் விஸ்தீர்ணமானதுமான ஒரு கட்டிடம் என்னும் விசேஷத்தன்மையல்லாது, மற்றேதும் சொல்லத்தகுந்த விசேஷம் அதற்கில்லை. ஸ்பெயினின் கிறிஸ்துவ அரசாங்க இறுதி காலத்தில் கட்டப்பட்ட இதர கட்டடங்களைப் போன்றே இக்கட்டிடமும் சிற்ப சாஸ்திர சம்பந்தமான எவ்வித நுணுக்கமும் இல்லாததாகவே இருக்கிறது. இருந்தாலும் இக்கட்டிடம் உலகமக்களின் உள்ளங்களைத் தன்னிடத்தே ஆகர்ஷித்துக் கொள்வதில் மிகவும் சக்திவாய்ந்தது வென்பதில் ஐயமில்லை. உலகத்தின் எக்கோணங்களிலிருந்தும் தேச சஞ்சாரிகளும், கலா வல்லுனர்களும் பிரதிதினமும் இக்கட்டிடத்தை தரிசித்துச் செல்கிறார்கள்.

இவ்வளவுதூரம் இக்கட்டிடத்திற்கு முக்கியத்தன்மை கிடைக்கக் காரணமென்ன? இதன் ஒரு பக்கத்தில் ஸ்பெயினின் ராஜீய புத்தகாலயம் இருந்துவருவதே இதற்குக் காரணமாகும். இஸ்லாமிக ஆட்சிக்கு முன்னும் பின்னுமுள்ள அத்தேச சரித்திர சம்பந்தமான பொருள்கள் என்னென்ன உண்டோ அவை யாவையும் அக்கட்டிடத்தின் சுவர்கள் பாதுகாத்து வருகின்றன. ஆகையால் இக்கட்டிடம் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் மியூசியத்தையும், பாரிஸ் புத்தகாலயத்தையும், செய்ரோவின் பூர்வசின்ன ஆலயத்தையும், பெர்லினிலுள்ள கீழ்நாட்டுப் புத்தகாலயத்தையும்விட சற்றும்

அந்தஸ்தில் குறைந்ததல்ல. மேலும் ஒருசில நிலைமைகளில் அவைகளைவிட வெகுமுக்கிய மானதாகவும் இருக்கிறது.

புத்தகாலயத்தின் இரண்டு பக்கங்கள்

இந்தப் புத்தகாலயத்தில் சுமார் 45 ஆயிரம் புத்தகங்களிருக்கின்றன. பழைய நாணயங்கள், படங்கள், சித்திரங்கள், இதர பொருள்கள் ஆகிய சரித்திர சம்பந்தமாய் போதுமான அளவைக்கொண்ட பல வஸ்துக்களும் சேகரிக் கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமிக ஆட்சிக்கு முன்னுள்ள சரித்திரகாலத்தைச் சேர்ந்த பொருள்களை இதன் ஒரு பக்கத்திலும், இஸ் லாமிய ஆட்சி காலத்தைப் பொருத்தவற்றை மற்றொரு பக்கத்திலும் வைக்கப்பட்டிருக்கின் றன. இவ்விரு பக்கங்களிலுமுள்ள பொருள் கள் உலக மக்களுக்குப் பெரியதோர் பாடத் தைக் கற்பித்துக்கொண்டு சாந்தமாகவும் மௌனமாகவும் இருந்து வருகின்றன.

இஸ்லாமிய ஆட்சிக்கு முன்னுள்ள பொருள் கள் இருந்துவரும் முதலாவது பாகத்தில், ஸ்பெயின் மன்னர்கள் ஓதுவதற்கெனச் சொந்த மாக எழுதப்பெற்ற பைபிள்கள் அவைகளின் பூர்வ உருவத்திலேயே பரிபூர்ணமானவைக ளாக இருந்து வருகின்றன. லாத்தீன் பாஷை யில் எழுதப்பட்ட நூற்றுக்கு மேலான மத சம்பந்தமான புத்தகங்கள் அக்கால ஞாபகச் சின்னங்களாக இருந்துவருகின்றன. ஸ்பெயி னின் பூர்வ பாஷையில் வரையப்பெற்ற ஒரு பெருந்தொகையைக் கொண்ட புத்தகங்களும் இருந்துவருகின்றன. ஒரு குறிப்பிடப்பட்ட தொகை யவன பாஷையில் எழுதப்பட்ட மத சம்பந்தமான புத்தகங்கள் சரித்திரகால மத் திய தசையில் யவன பாஷைக்கு மதபரமாக வும் கல்விபரமாகவும் இருந்திருந்த செல் வாக்கை விளக்குகின்றன.

மேலும் இப்புத்தகங்கள், அவ்வக்காலத்தி லிருந்த புத்தகம் தயாரிக்கும் முறை, அவை களை அலங்கரிக்கும்விதம் என்பன போன்ற வைகளுக்கும் ஆதாரங்களாக இருக்கின்றன. ஏனெனில், இவைகளில் சில புத்தகங்கள் கிலிட்டு போடப்பட்டவைகளும், சுவர்ண மையால் தீட்டப்பட்டவைகளும், சித்திரப் படங்கள் உள்ளனவைகளுமாக இருக்கின்றன. காகிதத்திற்குப் பதிலாக மானின் ஜவ்வை உப யோகிக்கப்பட்ட சில புத்தகங்களும் இருந்து வருகின்றன. மதபரமான கிரியைகளுக்கும் சடங்குகளுக்கும் உதவக் கூடியவைகளும், ஸ்பெயினின் கடைசி மன்னனாகிய ராட்ரிக்கின் உபயோகத்தில் இருந்துவந்தவைகளுமான சில பொருள்களும் அங்கேயிருக்கின்றன.

கட்டடத்தின் மற்றொரு பக்கத்தில் இஸ் லாம் அரசாங்கத்தின் நாகரீக ஞாபகச்சின்னங் கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதில் சுமார் இரண்டாயிரம் அரபிப் புத்தகங்களும், சில சித்திரங்களும், செதுக்குகளும், இதர வேலை மானங்களும் இருக்கின்றன. இவற்றுள் சில முக்கியமான பொருள்களின் விவரம் அடியில் காணுமாறு:—

1. க்ரநடாவின் கடைசி முஸ்லிம் மன்னரா கிய அபூ அப்துல்லாவின் உருவப்படம். இது பர்டினண்டின் உத்திரவின்பேரில் தயாரிக்கப் பட்டுள்ளது.

2. அபூ அப்துல்லா, க்ரனடாவையும், அரண்மனைச் சாவிகளையும் பர்டினண்டுக்கும், அஸாபிலாவுக்கும் ஒப்படைத்துவிட்டு க்ரன டாவை விட்டும் வெளியேறும் காட்சியைக் காட்டும் படம்.

3. அபூ அப்துல்லாவின் வாளும் உறையும்.

4. அபூ அப்துல்லாவின் பட்டு நெடியங்கி.

5. குர்ஆன் வைத்து ஓதுவதற்கு உபயோ கிக்கும் ஒரு ஸ்டாண்டு.

6. இஸ்லாமிய நீதிமன்றத்தின் காட்சியை அளிக்கும் ஒரு படம்.

7. ஈவிரோஸ் திக்ரேட் (மகானுன இப்னு ரஷீத்)டின் உருவப்படம். இப்படம் அவரு டைய யூத சீடர்களால் செதுக்கிய ஒரு கற் சிலையிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

8. ஸ்பெயினின் அரபிச் சிப்பாய்களின் சூரத்தனத்தைக் காட்டும் படமொன்று.

9. அபூ அப்துல்லா பெர்டினண்டுக்கு ஒப் படைத்த க்ரனடாவின் அரண்மனைப் பொற் சாவிகள்.

10. அல்ஹம்ரு அரண்மனையிலிருந்து வந்த தும், ஒரு முஸ்லிம் மன்னரின் ஞாபகச்சின்ன மென நினைக்கப்படுவதுமான ஒரு கற்பதுமை யின் நகல்.

ஸமரஸ உடன்படிக்கை

நேயன்மீர் !

நமது ஹிபாஜத்துல் இஸ்லாத்துக்கும், தாருல் இஸ்லாத்துக்கு மிடையே நடைபெற்றிருந்த ஒப்பந்தத்தை யொட்டி, 13-1-34-ல் மத்தியஸ்த உலமாக்களின் சபை கூடிக் கலைந்த விபரத்தை முன்னமே அறிவித்துள்ளோம். மத்தியஸ்த உலமாக்களில் மௌலானா மௌலவி அப்ஜலுல் உலமா அப்துல் ஹக்சாஹிபும், மௌலானா மௌலவீமுப்தி அப்துல் அஜீஜ் சாஹிப் பெங்களூரீ அவர்களும் இம்மத்தியஸ்தத்தில் கலந்துகொள்ள முடியாதென்று வருத்தத்துடன் தெரிவித்துவிட்டார்களாதலின் அது சம்பந்தமாய், வேறு இரு உலமாக்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று பா. தாவூத்ஷா சாஹிபுக்கு பலமுறை எழுதிக் கேட்டும், அவருக்கு வேண்டியவர்கள் மூலம் நேரில் பேசும்படி செய்தும், அதற்கவர் சரியான ஜவாப் தெரியப்படுத்தாமலும், போலிக் காரணங்களைக் கூறிக் கொண்டும் விஷயத்தை மழுப்பிக் கொண்டே வந்தார். அதன்பின் அவர் கோரிக்கைப்படியே கூத்தாநல்லூர் சமரஸக் கமிட்டித் தலைவரான ஜனாப் அ. கா. மன்சூர்சா ரூவுத்தர் அவர்கள் மூல்யம் கடிதப்போக்குவரத்து செய்யப்பட்டதிலும் பிரயோசனமேற்படவில்லை. கடைசியாக சமரசஸக் கமிட்டியார் 14-7-34-ல் கூத்தாநல்லூரில் கனம் அ. கா. மன்சூர்சா ரூவுத்தர் அவர்கள் தலைமையில்கூடி விஷயங்களை ஆலோசித்தார்கள். அதுபொழுது, 28-5-34-ல் நடைபெற்ற மீட்டிங்கில் தீர்மானிக்கப்பெற்ற சமரச சம்பந்தமான நடவடிக்கைகள் கவனிக்கப் பட்டதில், பா. தாவூத்ஷாசாஹிபால் இதுகாறும் சமரஸக் கமிட்டித் தலைவருக்கு வந்த பதில்கள் சமரஸத்தை நடத்த மார்க்கமற்றதாக ஏமாற்றத் தோரணையில் எழுதப்பட்டிருப்பதால், 22-10-33-ல் ஏற்பட்ட உடன்படிக்கையில் கண்ட ஏழு உலமாக்களில் பா. தாவூத்ஷாசாஹிபால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இருவர் வரமுடியாதென தெரிவித்துவிட்டதை முன்னிட்டு அவ்விருவர்களுக்குப் பகரமாய்வேறு இரு உலமாக்களை தெரிந்தெடுக்கும்படி சமரஸக் கமிட்டித் தலைவரால் பா. தா. வுக்கு இறுதிலெட்டரொன்று எழுதிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருந்ததற்கேற்ப, பா. தா. வுக்கு 29-5-34-ல் தபால் எழுதப்பட்டதில், 31-5-34-ல் பா. தாவூத்ஷாசாஹிப் எழுதிய பதில் நிரூபம் சபையில் படிக்கப்பட்டது. அதில் சமரஸக்கமிட்டியார், பா. தா. இடம் வேறு இரு உலமாக்களை நியமிக்கும்படி கிரமமாய்க் கூறியது சம்பந்தமாய் யாதொரு விஷயமும் எழுதாமல், 22-10-33-தேதியின் உடன்படிக்கைப்படி நடக்க அபிப்பிராயமில்லாதவராயும் சமரஸ அமூலை காலதாமதப்படுத்தி, ஷை உடன்படிக்கையை உதாசீனம் செய்துவிடும் நோக்கங்கொண்டு அவ்வுடன்படிக்கைக்கு கட்டுப்பட்டு ஸமரஸக் கமிட்டியார்களின் கருத்துகளை ஏற்று அதை நிறைவேற்ற அறவே மனமில்லாத முறையிலும் பதில் எழுதப்பட்டிருக்கிறதென சபையோர் அனைவரும் ஒருமனதாய் அபிப்பிராயப்பட்டார்கள். எனவே சமரஸக்கமிட்டியாரின் தீர்மானத்திற்கும், 22-10-33 உடன்படிக்கைக்கும் உள்பட்டு சமரஸத்தை அமூல் நடத்த பா. தாவூத்ஷா சாஹிபே தடைகல்லாக நிற்கிறாரென ஏகமனதாய்த்தீர்மானித்துவிட்டார்கள்.

சமுகமளிக்க முடியாத உலமாக்களுக்குப் பகரமாய் வேறு இருவரை தெரிந்தெடுக்கும் விஷயத்தில் பா. தா. ஒற்றுவந்திருப்பாராகில், மத்தியஸ்த உலமாக்களின் கூட்டத்தை நடத்தி ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். அவ்வாறு பா. தா. செய்யத் தவறிவிட்டதால், சமரஸ உடன்படிக்கை அமூல் நடத்த முடியாதுபோய் விட்டதை வருத்தத்துடன் நேயர்களுக்குத்தெரிவித்துக் கொள்ளநேர்ந்திருக்கிறது. இனிநாம் வழக்கம்போல் நம்முடைய பிரசாரத்தை ஆரம்பித்து அவருடைய தவறான கொள்கைகளும், மார்க்க முரணாக எழுதப்பட்ட நூல்களும் நம் நாட்டில் பரவாமலிருப்பதற்கு சகல துறைகளிலும் முயற்சிக்கவேண்டும். எனவே, நம்தேசத்து உலமாக்கள் ஒவ்வொரு இடங்களிலும், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளை மக்களுக்கு விளக்கிக் காண்பித்து அதைவிட்டு பொது மக்கள் ஜாக்கிரதையாக இருக்குமாறு போதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். சமீபத்தில் "ஹிஸ்புல்லாஹ்"க்கள் சுற்றுப் பிர

யாணஞ் செய்ய ஏற்பாடாகி வருகிறபடியால் அதற்கு உலமாக்கள் அழைக்கப்படுவார்கள்.

இது சம்பந்தமாய் சிலோன் பகுதிகளில் ஜனுப் மௌலானு மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்களும், தென்னுட்டில் ஜனுப்களான மௌலானு மௌலவீ முஹம்மது மியான் சாஹிப் (திண்டுக்கல்), மௌலானு மௌலவீ முஹம்மது இப்ருஹீம் சாஹிப் (வேட சந்தூர்) இவர்களும் சுற்றுப் பிரயாணஞ் செய்து பிரசாரஞ் செய்து வருகின்ருர்கள். ஆகவே, இனி நடைபெறும் விஷயங்களை அப்போதைக்கப்போது பத்திரிகை மூலம் வெளியிடப்படும். அல்லாஹ் தஆலா நம்மையும் நம் சந்ததிகளையும் மிர்ஜாய்யீன்களின் வழிகெட்ட கொள்கையைவிட்டு காப்பாற்றிவைப்பானுகவும்.

இங்ஙனம்
காரியதரிசிகள்,
ஹிபாஜத்துல் இஸ்லாம்.

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்.

அன்புற்ற நேயன்மீர் !

உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் ஏற்பட்டு இன்றைக்கு ஐந்தாண்டுகள் பூர்த்தி யடையப்போகிறது. இதனிறுதியில் அது ஆற்றியிருக்கும் தொண்டினை தாங்கள் நன்கறிந்தே இருக்கின்றீர்கள். எனவே பரிசுத்த இஸ்லாத்தின் மீது அன்னியர்களால் கிளப்பப்படும் அபவாதங்களுக்கு அவ்வப்போது தக்க மறுப்புகள் கொடுத்தும், அவசியமானபோது நடவடிக்கை எடுத்தும் தக்க தொண்டாற்றி வருகின்றது. எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைக்குறித்து அன்னியமதஸ்தினர் பெரும்பாலும் தப்பாகவே தான் உணர்ந்துகொண்டிருக்கின்றனர். பாட புத்தகங்கள் எழுதும் அன்னியமதஸ்தினர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைக்குறித்து எழுதும்போது அறிவின்மையாலோ, அழுக்காறு கொண்டோ அநேகமாய்த் தப்புந்தவறுமாகவே எழுதிவருகின்றனர். நம்மவரோவெனில், பெருமானுர் (ஸல்.) அவர்களுடைய ஜீவியம் குணுதிசயம் முதலியவற்றை நன்குணராதவர்களாகவே இருக்கின்றனர். எனவே, நபி பெருமானுர் (ஸல்.) அவர்களுடைய ஜீவிய ஒழுக்கங்களை மக்களிடையே பிரசாரஞ்செய்ய வேண்டியது மிகமிக ஆவசியமானதா யிருந்துவருகிறது. இதற்காக ஆண்டுகள்தோறும் ரபீஉல் அவ்வல் மாதத்தில் ஜீவிய வரலாற்றுச் சுருக்கங்கள் நம் சங்க முயற்சியால் எழுதப்பட்டு, பல்லாயிரக்கணக்கான பிரதிகள் முஸ்லிம்களிடையேயும் முஸ்லிம் அல்லாதாரிடையேயும் வினியோகிக்கப்பட்டு வருகிறது.

இதுநிற்க, நம்நாட்டில் பரவி சிலரைக்கெடுத்துக்கொண்டிருந்த மிர்ஸாயீ—காதியானிக் கொள்கைகளை அகற்றுவதற்கு உங்கள் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி அளவிடற்பாலதன்று. அது சம்பந்தமாய்த் தீவிரப் பிரசாரஞ்செய்து, மிர்ஸாயிகள், பஹிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் தந்திரமாகவும் ஏமாற்றமாகவும் செய்து வரும் சகல சூழ்ச்சிகளையும் விளக்கி சகலரும் அதன் கெடுதிகளைத் தெரிந்துகொள்ளக் கூடிய நிலைமையில் கொணர்ந்துவிட்டது. இனி அது சம்பந்தமாயுள்ள சகல காரியாதிகளையும் செய்வதற்குள்ள ஏற்பாடும் செய்துகொண்டிருக்கிறது.

இஸ்லாத்தைத் தகர்க்கக்கூடியகெட்ட கொள்கைகளில் மிர்ஸாயிக் கொள்கைக்கு நிகரான வேறு எந்தக் கொள்கையுங்கிடையாது. ஏனெனில், மிர்ஸா குலாம் அஹ்மத் என்பவர் நபிமார்களின் முத்திராங்கமான நமது நாயகம் (ஸல்.) அவர்களுக்கு எதிரிடையாய்த் தன்னை ஒரு 'நபி' எனப் பிரபலப்படுத்தினர். இது மட்டுமா ? எல்லாநபிமார்களைவிட மேலானவரென்றும் பிதற்றினர்; திருகுர்ஆனின் போதனைகளையெல்லாம் மாற்றிக் கூறினர்; ஹதீதுகளை உதாசினஞ் செய்தார். இந்நிலைமையில் தான் இஸ்லாமியவட்டத்திலேயேஇருப்பதாகவும் பிரஸ்தாபித்துக் கொண்டார். ஆங்கிலம் படித்த சிலரும், சுயநலம் படைத்தபலரும் அவர் கையில் சிக்கினர். இந் நிலைமையில்மிர்ஸா தம் கொள்கையைப் பிரசாரஞ் செய்வதற்காக சில பத்திரிகைகளையும், பல பண்டுகளையும் ஏற்பாடுசெய்து விட்டார். உலகத்தில் தோன்றிய

எல்லாக் கெட்ட கொள்கைகளைவிட இஃது சற்று பலம் பொருந்தியதாக இருந்துவந்தது— இருந்தும் வருகிறது. எனவே, இத்தீய கொள்கை மக்களிடையே பரவாமலிருப்பதற்கு நாமும் வேலை செய்ய வேண்டியதிருக்கிறது.

இதற்காக நமது சங்கம், பத்திரிகைவாயிலாய் எழுத்துப் பிரசாரஞ் செய்து வருவதோடு பிரசங்கமூலமாகவும் சேவைபுரிந்து வருகிறது. சமீபத்தில் "ஹிஸ்புல்லாஹ்" களான உலமாக்களைச் சேமித்து தஞ்சை ஜில்லாவின் பிரதான ஊர்களில் மகாநாடுகள் நடத்தி அவைகளில் ஜில்லாவாசிகள் யாவரும் கலந்துகொள்ளுவதற்கு வசதியும் அளிக்கப்பட்டிருந்தது. ஆங்காங்குள்ள கனவான்களும் பிரபுக்களும் மார்க்க பக்தியுடைய மகாஜனங்களும் அப்பிரசாரத்திற்கு அன்போடு ஆதரவு காட்டிவந்தார்கள். இதனால் பெரும் பிரயோசன மேற்பட்டதென்பது யாவருக்கும் நன்கு தெரிந்த விஷயமாகும்.

உலகப்பிரசிபெற்ற பெரியாரும், இஸ்லாமியப் பிரசாரத்திற்கென்று தங்களை அற்பணஞ்செய்து சேவைபுரிந்துவரும் மகானுமான ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவி அல்ஹாஜ்காரீ ஷாஹ் முஹம்மது அப்துல்அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்களை இவண் அழைத்து மார்க்க உபன்னியாசஞ் செய்விக்க வேண்டுமென்று நமது சங்கம் வெகுநாளாய் முயற்சித்ததன் பயனாய், சென்ற ஜூன் மாத ஆரம்பத்தில் கனம் மௌலானா அவர்களை தெரிசித்து அவர்களது அரிய உபன்னியாசங்களை கேட்டு ஆனந்திக்கும் பாக்கியம் நம்மவருக்குக் கிடைத்தது. அதனால் சென்னையிலும், நம் தமிழ்நாட்டின் சில ஜில்லாக்களிலும் மௌலானா அவர்கள் சுற்றுப் பிரயாணஞ்செய்து பொன்னேபோல் போற்றத்தக்கதும், தங்க மையினால் எழுதி பத்திரப்படுத்தக்கூடியதுமான 15 பிரசங்கங்கள் புரிந்தார்கள். அதனை நேரில் கேட்டு இன்புறாதவர்களும் பயன்பெறுவதற்காக ஸை. இ., ஹி.இ. தில் அவைகள் முறையே பிரசுரிக்கப்பட்டு வந்திருந்திருக்கிறது. இதனால் மகாஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் உங்கள் கண்முன் இருந்துகொண்டிருக்கிறது.

சங்கத்தின் நோக்கங்களை எடுத்தோதுவதற்காகவும், சன்மார்க்கத்தின் நற்போதனைகளையும் சட்டதிட்டங்களையும் மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும், வாலிபர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை அகற்றுவதற்காகவும், காதியானி குழாத்தினர்களாலும் நேச்சரிகளாலும் அன்னியமதவாதிகளாலும் கிளப்பப்படும் அபவாகளுக்கு அப்போதைக்கப்போது வாயாப்புக் கொடுப்பதற்காகவும் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" மாசிகை அரும்பிரயாசையோடு நடத்தப்பட்டு வருகிறது. நஞ்சிறூர்கள் இவ்வரும் மாசிகையைப்பார்த்து வருவார்களாயின் மார்க்க பக்தியில் சிறந்து விளங்குவார்கள்; மார்க்க சட்டதிட்டங்களை உணருவார்கள்; கள்ள காதியானிகளின் மாயவலைக்குள் சிக்கிக்கொள்ள மாட்டார்கள். எனவே ஒவ்வொரு முஸ்லிமும் இச்சஞ்சிகையை வாங்கிப் படித்து பயன்பெறுவதோடு மற்றவர்களையும் வாங்கிப் படிக்கும்படி செய்வார்களாக.

நம் சோதரர்கள், நமது சங்கத்திற்கு தற்பொழுது ஆற்றவேண்டிய பணி என்னவெனின், சகல முஸ்லிம்களும் சந்தாதாரர்களாகச் சேருவதுடன், இதரர்களையும் சேரும்படி செய்வதேயாகும். நண்பர்கள் பிரயாசையோடு இச்சேவையிலீடுபடுவார்களாயின் நம் அரும் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' வாரப் பத்திரிகையாக மாறிவிடுவது பெரிய காரியமல்ல. எனவே, நண்பர்கள் இவ்விஷயத்தில் தக்க முயற்சி எடுத்துக்கொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

இவ்வரும் நோக்கங்களைப் பிரகடனப்படுத்துவான்வேண்டி, ஜனாப் மௌலானா மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் சிலோன் சென்று பலவிடங்களிலும் அரும் பெரும் சொற்பெருக்காற்றி வருகின்றார்கள். ஆங்காங்குள்ள நண்பர்கள் மௌலானா அவர்களை அன்போடு வரவேற்று அவர்களின் அரும் உபந்நியாசங்களைக் கேட்டு ஆனந்திப்பதுடன் மாசிகையின் அபிவிர்த்திக்கு அன்போடு பெரிதும்முயற்சித்தும் வருகின்றார்கள். அக்கனவான்களுக்கு நாம் மிகவும் நன்றிசெலுத்துவதுடன் அவர்களின் அரிய முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றோம். அவ்வாறு உதவி புரிந்து வரும் கனவான்களின் பெயர் நாமங்களை விபரமாகக் குறிப்பிட்டு ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வோம்.

இதேபோன்று தென்னாட்டிலும் சுற்றுப் பிரயாணஞ்செய்ய, ஜனாப்களான மௌலானா மௌலவீ முஹம்மது மியான் சாஹிப் (திண்டுக்கல்), மௌலானா மௌலவீ முஹம்மது இப்

ரூஹீம் சாஹிப் (வேடசந்தூர்) இவ்விரு மௌலானுக்களும் புறப்பட்டு, ஆரம்பமாக தென்னுற்காடு ஜில்லாவுக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கு நெல்லிக்குப்பம், பண்ணுருட்டி, கூடலூர், பாண்டிச்சேரி, பரங்கிப்பேட்டை, சிதம்பரம், லால்பேட்டை, நெய்வாசல், மாயவரம் தாலுக்கா முழுதும் செல்வார்களாதலின், ஆங்காங்குள்ள நண்பர்கள் அவர்களை வரவேற்று அவர்களின் அரும் உபந்நியாசங்களைக் கேட்டு பயன்பெறுவதுடன், மாசிகையின் அபிவிருத்திக்கும் அன்போடு ஆதரவு புரிவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

நாயக சரிதையில் நம்மவரின் தவறு

(சன்மார்க்க சாரணர் சாற்றுவது.)

இஸ்லாத்தையும், அதன் திருநபி அவர்களையும் குறித்து அயல் மதவாதிகள் பெரும்பாலும் தவறாகவே உணர்ந்து துர்ப்பிரசாரஞ் செய்து வருகின்றனர். நம்மவரிலநேகர், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய ஜீவிய ஒழுக்கங்களை நன்கு படித்து உணர்வதில்லை. ஆகவே, மக்களிடையே நபி பெருமான் (ஸல்.) அவர்களுடைய ஜீவிய விபரத்தைப் பிரசாரஞ் செய்யவேண்டிய அவசியமிருந்து வருகின்றது. இவ்வுயரிய கருத்தைக்கொண்டே லாகூர் பட்டியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அகில உலக ஸீரத் கமிட்டி அருந்தொண்டாற்றி வருகிறது. அன்றோர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் ஜீவியத்தை நன்குணர்ந்த பிரபலஸ்தர்களால் ஜீவிய சரித்திரச் சுருக்கத்தை எழுதி ஆண்டுகள்தோறும் ரபீஉல் அவ்வல் மாதத்தில் 30 பாஷைகளில் லக்ஷக்கணக்கான பிரதிகளை வெளியிட்டு வருகின்றார்கள். அதனை தமிழில் மொழிபெயர்த்து வினியோகஞ் செய்யும் பொறுப்பை நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் யேற்று தக்கமுறையில் ஊழியம் புரிந்து வருகிறது. இத்தொண்டு என்றென்றும் நீடூழி வாழ்க! இதைப்போன்றே நமது தமிழ்நாட்டிலுள்ள சில சங்கங்களும், கனவான்களும் சரிதைச் சுருக்கத்தை எழுதி வெளியிட்டு வருகின்றனர்.

சரித்திரமெழுதுவோர் கவனிக்க வேண்டியவைகள்

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் திருசரிதையை உள்ளது உள்ளவாறே எடுத்துரைக்க வேண்டும்; பலமான ஆதாரமுள்ள றிவாயத்துகளைக் கொண்டும், அவ்வப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் ஆண்டவனால் அருளப்பட்ட கருணைகளைக் குறிப்பிடுவது கொண்டும் சரித்திரங்களை அலங்கரிக்க வேண்டும்; எதிரிகள் அச்சரித்திரங்கள்மீது சுமத்தும் அபவாதங்களையும் அகற்ற வேண்டும். விஷயமிவ்வாறிருக்க,

இவ்வாண்டு ரபீஉல் அவ்வல் மாதத்தில் வெளியிடப்பட்ட பல நூற்களிடையே, அவைகள் இரண்டில், என் பார்வைக்கெட்டிய சிற்சில தவறுகளை இக்கட்டுரையில் வெளியிட முன்வந்துள்ளேன். அச்சந்தர்ப்பங்களில் நாயக சரிதை சம்பந்தமாய் வெளியிடப்படும் நூற்கள், கருத்தில் விளக்கமானதாயும், எதிரிகளால் கூறப்படும் அபவாதங்களைப் போக்கக்கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டியதற்குப் பதிலாய், குளிக்கப்போனவன் சேற்றைப் பூசிக்கொண்டதற் கொப்ப, இந்நூற்களிலும் சந்தேகாஸ்பதங்களும் தவறுகளும் காணப்படுவதெனின், அஃதொரு துர்லபமேயாகும். அவ்வாறு இழைக்கப்பட்டுள்ள தவறுகளுக்கு இதுகாறும் பிழைதிருத்தம் வெளிவரலாமென்று எதிர்பார்த்தும் வெளிவராததுகண்டு, அவ்விரு நூற்களையும் தக்க "முல்லா"க்களிடம் காண்பித்து, இவைகளில் எழுதப்பட்டிருப்பவைகள் யாவும் சரிதானா? அல்லது தவறா? என வினவியபோது, அம்முல்லாக்கள் இந்நூற்களைப் பார்வையிட்டு, இதிலுள்ள தவறுகளை எடுத்துக்காட்டி கீழ்க்கண்டவாறு வினாக்களையும் வினவ எனக்குக் கட்டளையிட்டதின் நிமித்தம் அவைகளை ஈண்டு எழுதத் துணிந்தனன்.

முல்லா

இங்கு யான் "முல்லாக்கள்" என, எழுதிக் குறிப்பிட்டிருக்கும் "முல்லா" என்னும் பதத்

திற்கு, சில நூதன சித்தாந்திகளான, நவ, நூதன மாக்கள் தப்பர்த்தங்கொண்டு தவறிய கருத்த ராய், தடுமாறி எழுதிவரும் கருத்தின்பொரு ளன்று. எனவே, வட நாடுகளிலும் அதற் கடுத்த நாடுகளிலும் 'முல்லா' வென்னும் பதம் எத்தகைய அந்தஸ்தை யுடையோர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறதோ அதே உயரிய அந் தஸ்து பதத்தைப் பூண்ட "முல்லாக்கள்" என் பதே எமது கருத்தாகும்.

'முல்லா'வென்னும் அரபிப்பதத்திற்கு கலா ஞானி என்றுபொருள். வடப்பிரதேசங்களில் இப்பதத்தை, கலாபயின்று கீர்த்திபெற்ற உயர்குலப் பெரியார்களுக்குச் சொந்தமாக வழங்கப்பட்டு வருகிறது. உதாரணமாக, மாபெரும் பண்டிதரும் பாரமார்த்திக ஞானி யும், 'மஆரிஜுன்னுபுவ்வா' வின் ஆசிரியரு மான ஹஸ்ரத் முல்லாமுஹம்மது காஷிபி (றஹ்) அவர்களும், பெரிய கலாஞானியும் சிறந்த ஆசி ரியரும் திருமறை காறியுமான 'முல்லா அலிகாரீ' என்னும் பெயர்கொண்ட ஓர் பெரியாரும், பிக் ஹுகலையின் மூலாம்சங்களை விபரித்து நூலெழுதிய ஆசிரியர் "முல்லா ஜீவன்" அவர்க ளும் முற்காலத்தில் கீர்த்திபெற்ற மகான்க ளாய் வடநாட்டில் விளங்கி வந்தார்க ளென் பது சரித்திரச் சான்று.

அப்கனிஸ்தான்

இக்காலை அப்கனிஸ்தானில் முல்லா முஹம் மது சாதிக் என்னும் ஷோராபஜார் முல்லாவும் ஙஷ்க்னூர் முல்லாவுமான இருவர்களுக்கும், மற்ற இதர அப்கனிய முல்லாக்களுக்கும் தங் கள் ஆன்மாக்களையும், அப்கனிய மக்கள் ஆலாத் திவைத்து வருகிறார்களென்பது உலகோர் நன் கறிந்த விஷயமாகும். அப்கனிய நிகழ் அர சாட்சியில் அரசியல் முறைகளை பரிசிலனை செய்துவரும் பிரதான ஜனநாயக "லோயி ஜர்க்கா" வென்னும் சபையிலும் அநேகபிரபல முல்லாக்கள் ஆதிக்கம் பெற்று அப்கன் ராஜரீ கத் துணைவர்களாக விளங்கி வருவதை யாம் ஆண்டு காண்க.

இந்தியா

வட இந்தியாவில், 'ராப்ஸி' வகுப்பினரில் ஒரு பிரிவினரான 'போரா' என்னும் பிரிவின ருக்கு, முல்லா தாஹிர் ஸைபுத்தீன் என்னும் நாமமுடைய ஓர் உயரிய குலப் பெரியார், பிர தம மதகுருவாய் ஹிஸ் ஹோலினஸ் என்னும் மேலிய புகழ்பட்டத்தோடு விளங்கிவருகிறார். அப்பெரியாரான முல்லாஜி யானவர் அக் குழாத்தினரால் மிகுந்து உன்னதமாக மதிக் கப்பட்டும் கண்ணியமாக நடத்தப்பட்டும் வரு வதோடு அக்குழாத்தினரனைவரும் அவரை முல்லாஜீ யெனவே உயரிய நாமத்தோடு அழைத்து அவரைச் சிரமேற்றாங்கி நிற்பதை ஈடுகாண்க.

தென்னாடு

எனவே, 'முல்லா' என்னும் உயரிய அர்த்த புஷ்டியுள்ள பதத்தின் உண்மைப் பொருளை அறியாத குறையும், அப்பதத்திற்குரிய லட் சண புருடர்களை இதர நாடுகளில் எங்ஙனம் கண்ணியமாய்க் கருதிவருகிறார்களென்பதைத் தெரிந்துகொள்ளாத மடமையும் நிறைந்த இத் தென்னாட்டு ஒரு சில நவீன மதப் பேர்வழி கள், அப்பதத்திற்கு இழிவான பொருள் இருக் கலாமெனக்கருதி, மதக்கலைகள் பயின்ற உல மாக்களுக்கு, இத்தென்னாட்டில் முல்லா வென் னும் பதத்தை லட்சணமிட்டு இழிமொழி தோரணையில் எழுதிவிட்டோமென தங்கள் உன்மத்த மனத்தால் உண்ணி எள்ளி நகைபுரி வோரின் புத்தியைக்கண்டு இவ்வறியுலகு எள்ளி நிற்குமன்றோ ?

மதக்கலா வல்லுனர்களான உலமாக்களை "நபிமார்களின் அனந்தரக்காரர்களேன" நமது நாயகம் (ஸல்) திருவாய் மலர்ந்தருளி யிருக்கும் போது, யாங்களும் இஸ்லாமியத் தொண் டாற்றி, முஸ்லிம்களுக்கு முன்னேற்ற வழி காட்டி, நாயக வாக்கியங்களை முற்றும் பேணி நடக்கிறோமெனச் சாற்றிவரும் 'கானு', 'காவன்னு' (கள்ளக் காதியாணி) குழாத்தினர், நாயகம் (ஸல்.) அவர்கள் உன்னதமாய்க் கூறி யிருக்கும் உலமாக்களை பல இழிபதங்களைக் கொண்டு சதா தூஷிக்கும் தொழிலையே சிற மேற்கொண்டு திரிந்து வருகின்றனர். இன்ன வர்களின் சொல்லிலும் செயலிலும் திருஷ் டாந்தமாக எத்தனை ஏமாற்ற மிருக்கிறதென் பதை பகுத்தறிவுடையோரெவரும் நன் குணர்ந்துகொள்வர். இங்ஙனம் உலமாக்களின் தூஷணையே தமது பூஷணமாகக்கொண்டு திரி யும் சித்திரநாதாக்கள், நாயகவாக்கை அலட்சிய மிட்டவர்களாகவும், உலமாக்களின் சாபத்திற் கிலக்காகியோராகவும், பொதுமக்கள் தூஷ ணைக்குப் பாத்தியப்பட்டோராகவும் ஆகிவிடு கின்றார்களென்பதை அவர்கள் உணராது, எப் பதத்தைக்கூறியாவது உலமாக்களை எள்ள வேண்டுமென பித்த உருவாளிகள், உலமாக்கள்

அறியும் அறபிப்பதத்திற்கு, தமக்குப் பொருள் தெரியாவிடினும் கண்மூடித்தனமாக தூஷண வெறிகொண்டு, எள்ளி எழுதிவரும் பதங்களில் 'முல்லா' வென்னும் பதமும் ஒன்ருகும்.

மதக்கோட்பாடுகளைப் பிரகடனப் படுத்தி மதநெறி வழுவாது சாதித்துவரும் பத்திரிகைகளை 'வைதீக' ப்பத்திரிகைகள் என்னும் உன்னதப் பெயரிட்டு 'அவைதீக' ப்பத்திரிகை எள்ளி வருவதுபோலும்.

இஸ்லாமிய உண்மைக் கொள்கைகளுக்கு ஹானி ஏற்படாவண்ணம் கார்க்க கங்கணங் கட்டி உழைத்துவரும் 'ஹிஸ்புல்லா'க்களை "பிஸ்மில்லா"க்களென்றும் மா மகத்துவ திரு நாமங்களையிட்டு அவைகளால், நாம் இவர்களை எள்ளிவிட்டோமெனக் கருதி எழுதி வருவோர் தோரணையைப் போலவே, மதக்கல்வி பயின்ற இவ்வுலமாக்களை 'முல்லா' வென்னும் உயரிய பதத்தால் எள்ளியாடுகின்ருர்களென் றெண்ணி உருவல் வேண்டும்.

எனவே, இப்பகல் வேஷக்குழாத்தினர்களுக்கு ஆத்திரமேலிட்டு, இச்சராசரங்கள் முழுதும் தூஷணமாகவே தோன்றி நிற்பதால், தாம் உபயோகிக்கும் பதங்களின் பொருள்களையும் கவனியாது அவைகளைக் கூறி எள்ளி விட்டோமென மனனஞ் செய்கின்றனர். இப்பகல்வேஷப்போக்கின் வேகந்தானென்னே! இவ்வாறு உயர் பொருள் கொண்ட பதங்களை உபயோகித்து எழுதி எல்லோரையும் தூஷித்து எள்ளிவிட்டோமென யுண்ணி நிற்போர் அறிவைக் கண்டு யாம் எள்ளி நிற்கவேண்டுமன்ருே?

இனி நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தை கவனிப்போம்:—

அவ்விரண்டு நூற்களில் முதல்நூல் 'கருணை நபி' என்பதாகும், இதனை இயற்றியவர் S. புருஹானுத்தீன் சாஹிபாவர். இது நான்கு பக்கங்களைக் கொண்ட சிறிய புத்தகமாகும். இதில் சரித்திர மெழுதும் முறை சற்றும் கவனிக்கப்படாது இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் நடைபெற்ற சம்பவம் பிந்தியும், பிந்திய சம்பவங்களை முன்னுலும், பார்ப்பவர்களுக்கு சந்தேகம் ஜனிக்கும் தோரணையில் எழுதப் பட்டிருக்கிறது. இதனை அன்னிய மதஸ்தர்களும் பள்ளிச்சிருர்களும் பார்ப்பது கொண்டு எம்பெருமானுர் நபிகள் திலகம் ஸல், அவர்களின் தூய்மை பொருந்திய வாழ்க்கையை நன்கு தெரிந்துகொள்ள இயலாமலிருக்கின்றது. உதாரணமாக, ஷைபிரசுரத்தின் 3-ம் பக்கம் முதல் வரியில், "15 வருடங்கடந்த பின் தமது 40 வது வயதில் இஸ்லாம் பிரசாரத்தை அதி தீபரமாகப் பரத்தமுற்பட்டார்கள்" என்று எழுதிவிட்டு, அதன்பின் 5-வது பாராவின் முதல் வரியில், மக்காவிற்குச் சமீபத்திலுள்ள மலைக்குச் சென்று சதா தியானித்து வருவது வழக்கம்......ஒரு நாள் ஆண்டவனிடமிருந்து வஹீவந்தது" எனவும், "சிலவருடங்களுக் கப்பால் நபிபெருமான் பலவித கஷ்டங்களையும் அனுபவித்து தமது வீட்டைவிட்டும் (மதீனுவுக்கு) துறத்தப்பட்டார்கள்" என்றும் எழுதி முடித்தபின், 6-வது பாராவில் "திடீரென ஏற்பட்ட இவ்விதக்கிளர்ச்சியினுல் அரபிய மக்கள் முழுவதும் ஹஸ்ரத் முஹம்மது நபி அவர்களுக்கு விரோதமாக புறப்பட்டுவிட்டார்கள். பதின்மூன்று ஆண்டுகள்வரை தன்னந்தனியாக.......காட்டு அராபியர்களிடையில் மக்காவில் பிரசாரஞ் செய்து வந்தார்கள்" எனவும் குறிப்பிட்டிருக்கிருர். இதில், வஹீ வருவதற்கு முன்பே இஸ்லாமியப் பிரசாரஞ் செய்து கொண்டிருந்தார்களென்றும், மதீனுவுக்குச் சென்றபின் மக்காவில் பிரசாரஞ் செய்தார்களென்றும் யூகிக்க ஹேதுவேற்படுகின்றது. இது வாசகர்களை சந்தேகத்திலாக்கிவைக்கும் விஷயமென்பதிலையமில்லை. மேலும் அப்புத்தகத்தில், "முஹம்மது நபி அவர்கள் மதீனு நகரிலே பிரபல்ய குடும்பத்திலே பிறந்தார்" என எழுதியிருக்கிருர். சரித்திரமெழுத முற்படும் ஒருவர், கதாநாயகரின் சகல விஷயங்களையும் நன்கறிந்துகொண்டு எழுதவேண்டும். நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் மக்கமா நகரில் ஜனனமானுர்களென்பது பள்ளிச்சிருர்களுக்கும் தெரிந்த விஷயமாகும். இந்நிலைமையில் நாயகம் (ஸல்.) அவர்கள் ஜனனமான இடத்தையுங்கூடத் தெரிந்து கொள்ளாத ஒருவர், சரித்திரமெழுத முற்பட்டது விசனிக்கத்தக்கதேயாகும்.

மற்ருென்று,

உன்னதநபியும், உயரியவழியும்

என்பதாகும். இதன் ஆசிரியர் சி. மீ. பாவலராவர். இந்நூலுக்கு "உன்னத நபியும், உயரிய வழியும்" என மிகப்பொருத்தமான நாமமே சூட்டப்பட்டிருக்கிறது.

இந்நூல் முந்தியதைவிட சற்று உன்னதமாக அமைந்திருக்கிறதென்பதில் ஐயமில்லை.

ஆனல், இதில் நபிகளின் தத்துவம் பொருந்திய மகத்தான விஷயங்களேயும், நிகழ்ச்சிகளேயும் எவ்வாறு எழுதவேண்டுமோ அப்படி எழுதப் படாமல் முக்கிய பிரதான நிகழ்ச்சியான 'பத்ரு' யுத்தத்தை போலி ஆதாரங்களேக்கொண்டு தவருயும், அர்த்தபுஷ்டியற்றும், பொருத்தமற்ற முறையில், பிரமதஸ்தர் எள்ளியும், பசுஞானிகள் பரிகசிக்குந் தோரணேயிலும் எழுதப்பட்டிருப்பது விசனிக்கத்தக்கதேயாம்.

இரண்டாவதாக, தெய்வாசக்தியால் உதவியளிக்கப்பட்ட உண்மை வேதப்பிரமாண விஷயத்தையும் இந்நூலில் எழுதப்படாது விடப்பட்டிருப்பது அதிலும் மிக்க குறையாகும்.

ஓர் முஸ்லிம் பத்திராதிபர், தெய்வாருள் பூண்ட திருநபியின் ஜீவிய வரலாறுகளே எழுதி வரும்போது, தெய்வ தத்துவமெய் விஷயங்களே முற்றும் திரையிட்டிருப்பதை இவ்வாராச்சி உலகோர் நோக்கின், அதைக்கண்டனிக்கவும், தமது பொருப்பை முழுதும் தவரவிட்டு நூலெழிதி இருக்கிருரென அதன் கர்த்தாவைகண்டித்தவும் முன்வர மாட்டார்களா?

இந்நூலிலும் முன்னேய நூல்போல் அரிய தத்துவங்களே வெளியிடும் நோக்கமன்றி, நாமும் நூல் எழுதி வெளியிட்டோமென்ற பேருக்கே இஃது எழுதப்பட்டிருக்கிறதென்று கீழ்வரும் எழுத்துகளால் நன்கு விளங்கும்.

நபிகள் நாதர்(ஸல்) தங்கள் ஜீவியத்தில் மிக மனக்கிலேசமடைந்து ஓர்மையோடு, பகலிரவாக நாயகன் சன்னிதியில் இறஞ்சி நின்று உதவி தேடிய சம்பவமும், திருமறை மேற்கோள்படி விண்ணவர்படை முஸ்லிம்களுக்கு உதவிபுரிந்து, முஸ்லிம்கள் ஜெயமடைந்த சமரும் இஸ்லாத்தின் எழுச்சிக்கு முதற்படியாயும், தெய்வ வாக்குறுதி கிடைத்தும், முஸ்லிம்களுக்குமுற்றுந் தெய்வானுக்கிரகங் கிடைத்ததாயுமான பத்ரு யுத்தத்தை நமது பாவலர், தமது நூலில் பிரஸ்தாபித்து எழுதிவரும்போது, மிக கீழ்நோக்காக எழுதியிருப்பதை கண்ணுற்றதும், இங்ஙனம் பாவலரின் கருத்திருக்கமாட்டாது, இவை பதிப்புத் தவறுதலால்தான் ஏற்பட்டிருக்குமெனவும், இதற்கு பிழைத்திருத்தம் வெகு சீக்கிரம் வெளிவரலாமெனவும் எதிர்பார்த்தும் வாராதது கண்டு ஏமாற நேர்ந்தது.

பாவலர் நூலான "உன்னத நபியும் உயரிய வழியும்" என்பதின் 8-வது பக்கத்தில் 'தற்காப்பு யுத்தங்கள்' என்ற மகுடத்தின் கீழ் முதல்வரியில் "முஸ்லிம்கள் திருமதீனவிற்குச் சென்று விட்டபின்பும் குறைஷிக் கொடியர்கள் தங்கள் பகைமையை விட்டார் களல்லர். முதன்முதலில் உத்பா என்பவரின் தலைமையின் கீழ் 1,000 போர் வீரர்களே அனுப்பி மதீனவிலுள்ள முஸ்லிம்களே கருவறுத்து வரச் செய்தனர். இனியும் முஸ்லிம்கள் வாளாய் பொறுமையுடனிருத்தல் முடியாமலாகி விட்டது. நாயகமவர்களும் செய்வதற்கு வேறுவழியின்றி இஸ்லாத்தைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு தங்களுடனிருந்த சிறுர்களும் முதியோர்களும் வாலிபர்களுமாகிய 313 நிராயுதபாணிகளான முஸ்லிம் விசுவாசிகளுடன், எதிரிகளின் படை வருகின்ற வழியில் வந்து 'பத்ரு' என்ற இடத்தில் எதிரிகளே எதிர்த்து போர்புரிந்தனர். அந்தப் போரில் எதிரிகளின் அஜாக்கிரதையால் முஸ்லிம்களுக்கே வெற்றி கிடைத்தது. இப்போரானது, ஹிஜ்ரி 2-வது வருடம் நடைபெற்றதாகும்" என எழுதி பத்ருயுத்த சம்பவத்தை முடித்திருக்கிருர்.

இந்த யுத்தத்திற்கு, தற்காப்பு யுத்தமென மகுடமிட்டு, குரைஷிப் போர்வீரர் 1000 பேர்கள் மதீனவிலுள்ள முஸ்லிம்களேக் கருவறுத்துவிட கூடிவருவதை யறிந்து, இனியும் முஸ்லிம்கள் வாளாய் பொறுமையுடனிருப்பது முடியாமலாகி இஸ்லாத்தைத்தற்காக்க வேறுவழியின்றி நாயகமவர்கள் தங்களுடனிருந்த "முப்பருவ" 313 நிராயுதபாணிகளான முஸ்லிம்களுடன் எதிரி படைவருகின்ற வழியில் 'பத்ரு' என்ற இடத்தில் எதிரிகளே எதிர்த்துப் போர்புரிந்தனரென எழுதியதில், "நிராயுதபாணிகளான முஸ்லிம்கள்" என கொஞ்சமும் நிதானியாது எழுதிய பாவலர் தைரியமே தைரியம்! இத்தைரியத்தை யாம் மெச்சாமலிருக்க முடியவில்லே! பேஷ்!! பலேபேஷ்!!!

தங்களே கருவறுக்க எண்ணிவரும் போர்வீர எதிரிகளே விட்டும் தங்களே தற்காக்கு நிமித்தம் எவ்வித ஆயுதமுமற்ற முஸ்லிம்கள், நிராயுதபாணிகளாக எதிர்த்துப் போர்புரியச் சென்றுர்களென்ருல், சுவாதீன புத்தியுடையோர் எவரும் இதை ஒப்பமாட்டார். நேச்சரியர் சைன்ஸ் வாதிகள், இஃதைக் கேட்பார்களாகில் நகைபுருவல் கொள்ளார்களா?

ஈஸா (அலே.) அவர்களே "ஸ்தூல சரீரியாய்" உயிருடன் மேலோகத்தில் உயர்த்தி வைத்

திருக்க சர்வசக்தனான அல்லாஹ்வுக்குத் தராணிகிடையாதென, தெய்வ தத்துவப்பிரமாணத்தையே உதாசினஞ் செய்து, அக்கொள்கையுடையாரை பழங்கதைபாடித் திரிபவர்களென சொல்லித்திரியும் மிர்ஸாயியரிடம், 1000 போர் வீர பராக்கிரமசாலிகளை நிராயுதபாணிகளான முஸ்லிம்கள் எதிர்த்துப் போர்புரிந்து ஜெயமடைந்தார்களெனக் கூறினால், உடனே நபிகள் நாயகம் "இன்றைய நள்ளிரவில் நான் ஸ்தூல சரீரத்தோடு விண்ணுலகு சென்று தெய்வ தெரிசனம்பெற்று வந்தேன்"னெனக் கூறியதைக்கேட்ட அபூஜஹ்ல் நின்று சிரசில் கைவைத்து திங்கு திங்கென்று குதித்து நடனமாடினதைப்போல் இவர்களும் ஆடமாட்டார்களா?

இதில், "தெய்வ தத்துவப் பிரமாணம்" எனக் குறிப்பிட்டேனாகையால் அதுசம்பந்தமாயும் கொஞ்சம் விவரிக்க விரும்புகிறேன்: (1) இயற்கை தத்துவப் பிரமாணம். (2) நர தத்துவப் பிரமாணம். (3) தெய்வ தத்துவப் பிரமாணம் என தத்துவப் பிரமாணங்கள் மூவகைப்படும்.

இதில் (1) இயற்கை தத்துவ வாதிகள், சகல வஸ்துக்களும் அவைகளின் இயற்கைப்படி இயற்கை தத்துவத்தாலே இயங்கி வருகிறதெனவும், இயற்கைக்கு மாறாக எவ்வஸ்தும் நிகழ்வதில்லை எனவும் சித்தாந்தம் கொண்டிருக்கின்றார்களாதலின், இவர்கள் தெய்வ தத்துவங்களை ஒப்புவதில்லை.

(2) நரதத்துவ வாதிகள், இயற்கை தத்துவத்தையும், மானிடர்கள் வித்தியா விர்த்தியறிவால் அபூர்வ அற்புத வேலைகள் செய்வது மனிதன் சக்திக்குட்பட்டதென்பதையும் ஒப்புக்கொண்டு, முற்காலத்து நபிமார்களுக்கு அக்காலத்திற்குத் தக்கபடி அற்புதங்கள் அருளியதை இக்கால மனிதர்களே செய்துகாட்ட முடியும் எனவும், அவைகளை அற்புதங்களென மதியாது "நர சக்தி"க்கு அவைகள் உட்பட்டதெனவே கூறுகின்றார்கள். உவமையில், செய்யிதினா "சுலைமான்" (அலை.) அவர்களுக்குப் "பறவை சிம்மாசனம்" அற்புதமாகக் கொடுக்கப்பட்டிருந்ததை அக்காலத்து மானிடர்கள் அற்புதமாகக் கருதினார்கள். ஆனால் இக்காலத்து மானிடர்கள், 50 பேர்கள் ஏறிச்செல்லக் கூடிய சிம்மாசனம் போன்ற அப்பறவைக் கப்பலையும் நரசக்திக்குட்பட்டதெனவே கருதுகின்றனர். எனவே, இவர்கள் இயற்கை நர, தத்துவங்களையும் ஒப்பி தெய்வ தத்துவத்தை ஒப்புவதில்லை. அவை புத்திக்குப் பிடியாததெனவும், அதற்குச் சரியான முகாந்திரமில்லையெனவும் இன்னவர்கள் மறுக்கின்றார்கள். இவ்விருதரப்பட்ட குழாத்தினரும் எத்துணை வாய்வேதாந் தங்கள் பேசினாலும் இவர்களை பூரண ஞானமுள்ள உண்மை "நரர்" என இயம்ப முடியாது. இவ்விரு குழாத்தினருக்கும் மறுமை காலத்தின் விமோசன பாக்கியம் தெய்வ அருளின் மேலீட்டாலேதான் கிடைக்கக்கூடுமென இயம்புவோம்.

(3) தெய்வ தத்துவப் பிரமாண மாகும். இவை மானுடர் கலைஞானத்திற்கும், யூகத்திற்கும், மனோசக்திக்கும், சிருஷ்டகோடிகளின் அறிவு ஞானத்திற்கும் புறம்பானதாகும். இந்த சக்தியை இத்தகையதென லட்சணமிட்வோ, அதை இன்னதென அறிந்து வரம்பிடவோ சிருஷ்டிப் பொருள்கள் எவையாலும் இயலமாட்டாது. இவ்வாறு மனுக்கள்முதல் சகல சிருஷ்டிகோடிகளும் இன்னதென அறிந்துகொள்ளவும், அதுவரை புத்தியையோட்டவும் அறவே எவராலும் எப்போதும் இயலாத தெய்வத் தத்துவத்தை இக்காலை சில நவீன மேதாவிகள், அதற்கு ஓர் வரம்பிட்டு தெய்வத்தால் செய்யக்கூடியவைகள் ஓரளவே தான்; இதைக் கடந்து எதையும் செய்ய தெய்வத்திற்குச் சக்தி கிடையாதெனவும் கூசாது கூறிவரும்போது, மனிதர்கள் புத்தியும் யூகமும் எட்டும்வரையிலே தெய்வதத்துவமும் நின்றுவிடுகிறது என எல்லைக்கல் நாட்டி அதை சாதித்தும் வருகிறதைப் பார்க்கில், இவர்களின் அறிவைக்கண்டு விசனிக்காதிருக்க முடியவில்லை.

தெய்வ லட்சணங்களையும், தெய்வ தத்துவங்களையும் பூரணமாக அறிந்து, தெய்வ தத்துவத்தின் எம்பிளையாய் நிற்கும் "சர்வ சக்தன்" என்னும் நாமத்தின் கருத்தை அறிந்த உத்தமர்கள், தெய்வ தத்துவத்தில் தமது அறிவை அறவே ஓட்டி வரம்பிடமாட்டார்கள்.

ஈஸா. (அலை.) அவர்களை மேலோகத்தில் ஸ்தூல சரீரியாயும் உயிருடனும் வைத்திருக்க அல்லாஹ்விற்கு சக்தி ஏது? அவர்கள் வானத்தில் அந்தரத்தில் தொங்கிக்கொண்டா நிற்கின்றார்கள் எனவும், சுவர்க்கங்களையும் அதிலிருக்கும் கட்டடங்கள், கனிவகைருக்கள், நதிகள் இவைகளை ஆண்டவன் படைத்திருக்கிறானெவனவும், அவைகளை எங்ஙனம் படைத்து

எங்குவைத்திருக்கிறான் என எம்பிக் முடியுமா எனக்கூறுவதும், "முன்கிர் நக்கிரும், ஜெண்டல்மேனும்" என்னும் வியாசதார், முன்கிர், வனக்கிர் என இருமலக்குகள் கப்ரில் வந்து கேள்வி கணக்குக் கேட்பார்களென்பது பாட்டிகதையேதான், அவ்வாறு இருமலக்குகள் வந்தால் கப்ரில் உட்கார இடமேது? அவ்வாறு மக்களை கேள்விகணக்குக் கேட்க அல்லாஹ் விரும்புவானுகில் மனிதர் உயிராக இருக்கும்போதே அம்மலக்குகளை அனுப்பி, அனுதினமுஞ் செய்தவைகளை அன்றாடு கேட்டிருக்கமாட்டானு? எனவே, முன்கீர் வனகீர்கள், கேள்வி யென்பதும் பொய்யே எனவும்? நபிகள் நாதரை ஸ்தூல சரீரத்தோடு விண்ணுல கேற்றி, அர்ஷு குர்ஷையும் கடாத்தி, தன்கூட வசனிக்கச் செய்வதற்கு பூத ஜடமனுவை சூட்சமலோகு உயர்த்த அல்லாஹ்விற்கு சக்தியுண்டா? இவ்விதம் கூறுவது அறிவின்மையாகமாட்டாதா? இதை உண்மை கொள்வோர் பாபிகளாக ஆகமாட்டார்களா? எனவும், இவைகள்போன்ற இதர அநேக விஷயங்கள் அவர்களின் பாழுமனங்களில் பதியாது தத்தளித்து பிறரையும் பித்தனுக்க செத்த கேள்விகளைக் கேட்பது தெய்வ தத்துவத்தை சரிவர அறியாத் தோஷமேயாகும்.

மேலும் இவர்கள் இவ்வாறு வார்த்தையாடிமுல்லாக்களையே எதிர்க்கிருேமெனக் கூறுகின்றார்கள். இவர்கள் எதிர்ப்பெல்லாம் "அல்லாவின்" சக்தியுடன் தானென்பதை இவர்கள் யுண்ணுகிறதில்லை. எனவே, இவர்கள் போய் மோதும் வஸ்துவானது இரும்பு மலையென உணருகிறதுமில்லை. அதில் போய் மோதினல் இவர்கள் மண்டைகளெல்லாம் உடைந்து சிதறிப்போய் விடுமென்பது இவர்களுக்குத் தெரிகிறதில்லை!

நாம் சில தமிழ் நூல்களைப் படித்து, பத்திரிகைகள் பார்த்து, பிரசங்க மேடையிலேறி இரண்டொரு வார்த்தைகள் பிரசங்கித்து விடவும் பழகிக் கொண்டமாத்திரத்தில், உடனே நாம் ஆண்டவன் சக்தியை எதிர்க்க ஆரம்பித்து விடுவது நமக்கு தகுமா? அதற்கு நாம் அருகதையாகுவோமா? ஆண்டவனின் சக்தியென்ருல் கிள்ளிக்கிறை என மதிக்கிறீர்களா? நாம் எதிர்ப்பது தெய்வத்தின் சக்தியை என நமக்கு உணர் வருமாயின், நாம் ஈஸா (அலை.) அவர்கள் மேல்லோகத்தில்அந்தரத்திலா நிற்கின்றார்கள்? அவர்கள் எவ்வாறு உணவருந்துகின்றார்கள்? மலோபாதை அவர்கள் கழிப்பது எப்படி? என்னும் நெறிதவறிய கேள்விகளைக் கேட்கமாட்டோம். இவ்வாறு வினவுவோரிடம், ஈஸா (அலை.) அவர்களை மேலோகத்தில் ஸ்தூல சரீரியாயும், ஆன்மாவோடும் உயர்த்திவைத்திருக்க ஆண்டவனுக்கு சக்தி கிடையாதா? என வினவுவோம் பதில் கூறட்டும்.

மேலும் மனிதர் உண்ணும் உணவானது இரைக்குடரில் சென்று, ஜீரணமாகி இரத்தம் உதிராஸயங்களிலும், சக்கையானது மலோமயமாயும், இதரவைகள் அததன் ஸ்தலங்களிலும் சென்றபின், அந்த உணவின் சத்துவாக உண்டாகும் கோழையோடு கூடிய வெண்மை ஜலமானது சிரசின்மீது சென்று, அவை மூளையால் சுத்தப்படுத்தப்பட்டு கோழையானது வாய்வழியாயும், மூக்குவழியாயும் வெளியான பின், எஞ்சி இருக்கும் அதன் தூய சுத்தசத்து ஜலமானது மூளையிலிருந்து நேத்திரங்களுக்குச் செல்லும் இருநரம்புகளின் வழியாய் நேத்திரங்களில் சென்று, அதற்கு ஒளியூட்டி அந்த ஒளியின் துவாராவால் மேல்நோக்கி பார்க்கும்போது, எத்துணையோ லட்சம் மைல்களுக்கப்பால் வான உலகிலுள்ள கிரகங்களெல்லாம் போய் தெரிந்துவந்து அவைகள், இன்னதென இமைப்பொழுதில், மூளையில் உணர்த்தி அறிவித்துவிடும். வானங்களை இமைப்பொழுதில் கடக்கும் மிக்க, அபார இந்த சக்தியை, நூரே முஹம்மதியா வின் ஓர் இம்மிநூரால் உற்பத்தி செய்யப்பட்ட உணவிலிருந்து, கசக்கி எடுக்கப்பட்ட ஓர் துளி ஜலமானது பெற்றிருக்கும்போது, சிருஷ்டி கோடிகளுக்கும் மூலமாய் பேரொளி பூர்ணமித்து, நூரே நிறைந்து, நூரே ததும்பி, நூர்வடிவராய், நூர்மயமாய், முன்பார்ப்பனபோல் பின்பார்க்கும் மேனியருமாய், சிருஷ்டிப் பொருள்களின் மூல சிருஷ்டியாய், தெளித்த மேனியாய், திருஉருவங்கொண்டு வள்ளலாய், அருளாய் அவதரித்த திரு நபிநாதரவர்களின் மகிமையும் அவர்களின் சக்தியும் அந்தஸ்தும், சிருஷ்டிக் கர்த்தாவான அல்லாஹ் இடத்தில் எத்தகையதென உணராத மாக்களே, அன்னவர்கள் பூதஜடலத்தோடு மிஃராஜ் சென்று வந்தார்க ளென்பதை மறுத்து நிற்பர்.

நபிகள் நாதர் (ஸல்.) அவர்களின் உயரிய அந்தஸ்தையும், ஒளியால் நிறைந்து ஒளிமயமான அவர்கள் சரீரத்தையும் நன்குதெரியாத மாக்களுக்கு, அவ்வாறு மிஃராஜுக்கு ஸ்தூல ஜடத்தோடு சென்றார்களென்பது புத்திக்குப்

பிடிக்காவிட்டால், "உங்கள் நபிக்கு கனவில் விதியான ஐங்கால தொழுகையைத்தான பெரிய கடமையாகத் தொழுது வருகிறீர்களெ"ன பிற மதஸ்தர் வினவும் கேள்விக்குப் பதில்கூற இவர்களிடமே விட்டுவிடுவோம்.

இறுதியாய், தெய்வ சக்தியைத் துருவி, அதை வரம்பிட்டு அலைந்துழலும் நண்பர்கள், அதன் பிரஸ்தாபத்தைவிட்டு, பூகம்பங்கள் எப்படி நிகழ்கின்றது? அதற்கு நிவர்த்திப் பரிகாரமென்ன? அதில் என்ன சக்தி வேலை செய்கிறது? அவை ஏற்படுவதற்கு இரண்டொரு நிமிஷங்களுக்குமுன் உண்டாகும் பயங்கரமான சப்தம் எங்கிருந்து வருகின்றது? எனவும், அவ்வாறு பூகம்பம் ஏற்படும் ஸ்தலங்களில், சில தூரத்தில் நீர்குமிழிகளும், 20 அடிகளுக்கப்பால் வெண்ணீர் குமிழிகளும், மறு 20 அடிகளுக்கப்பால் கெந்தக நீர்க்குமிழிகளும், அதற்கு 20 அடிகளுக்கப்பால் தீக்கங்குகளும் வெளியாகிறதே அவை எப்படி, எதிலிருந்து வெளியாகிறதென விளக்கவேண்டுமென வினவுகின்றோம். இவை இயற்கையின் சக்தி, தெய்வத்தின் சக்தி அல்லவெனக் கூறி, அப்பூகம்பத்தின் அழிவை விட்டும் தப்பிக்க பரிகாரத்தையும்கூறி, நண்பர்கள் எழுதிவிடுவார்களாகில் நாம் உடனே இன்னவர்களுக்கு, அல்லாஹ்வின் சக்தியை எதிர்ப்பதற்கு உரிமைச்சீட்டு எழுதி ரிஜிஸ்டர் செய்தும் கொடுப்போம். எனவே நண்பர்கள் இனியாவது தெய்வ சக்திகளை எதிர்க்காது, தெய்வ கட்டளைக்கு நம் அனைவர்களையும் அடிபணிந்து நடக்க சர்வ சக்தனான "காதிறே முத்லக்" நமக்கு நல்லருள் புரியல் வேண்டும். விஷயம் நீளுவதால் இத்தோடு நிறுத்தி அசலில் மீளுவோம்.

அற்ப விஷயமானாலும் குறைகூறி நீசத்தனமாய் நரோத்துவமற்று தாக்கும் தொழிலையுடைய ஒருசில பத்திரிகைகள், இம்மகத்தான தவற்று நூலின் ஆக்கியோர் ஓர் முல்லாவாக இருப்பாராகில், அதில் இதன் கண்டனங்கள் பத்தி பத்தியாக வரையப்பட்டு தாள்களும் கருப்பாகியிருக்க மாட்டாதா?

ஆயுதப் பரிஹாரண நிமித்தம் ஜினிவாவில் கூடி ஆலோசனை செய்துவரும் மகாநாட்டின் மத்தியில் இங்ஙனம் முஸ்லிம்கள் நிராயுதபாணிகளாகச் சென்று 1000 போர்வீரர்களை ஜெயித்துவந்த சங்கதியை வாசிக்கப்படுமாகில், அதன் பிரதிநிதிகளெல்லாம் தங்கள் தங்கள் தாய்நாடு ஓடிவிடமாட்டார்களா? ஜெர்மன், அமெரிக்க நாடுகளிலுள்ள யுத்தக் கருவிச் சாலைகளெல்லாம் இதைக் கேட்டமாத்திரத்தில், அவைகள் அடைக்கப்பட்டுப் போகமாட்டாதா? அச்சாலையின் தொழிலாளிகள் வேலையில்லாமல் திண்டாடமாட்டார்களா?

தற்காப்பு நிமித்தம் எதிரிகள் வரும் வழியில் வந்து எதிரிகளை எதிர்த்துப் போர்புரிந்து ஜெயமடைதல் என்பதும், நிராயுதபாணிகள் என்னும் இவ்விரு விஷயமும் ஏககாலத்தில் ஒரே சாராரில் அமைந்திருந்ததெனக் கூறுவோமாகில், விவகார சாஸ்திர ரீதி இதை ஒப்பி நிற்குமா?

ஒரு கையில் வாளும், மறு கையில் குர்ஆனும் ஏந்தி முஸ்லிம்கள் பிரசாரம் புரிந்து வந்ததினாலேயே உலகில் இஸ்லாம் இவ்வாறு பரவியதென மிகுந்து பறைசாற்றி நிற்கும் ஆரிய புத்திரர்களிடம், இவ்வாறு ஆயுதங்கள் யாதுமேயின்றி 1000 போர்வீரர்களை முஸ்லிம்கள் ஜெயமடைந்தார்களென்றால், இதை அண்டப்புளுகென அவர்கள் நவிலமாட்டார்களா?

இன்னும் மதமும், மதச் சட்டதிட்டங்களும் புத்திவட்டத்திற்குப் புறம்பானதன்று என சித்தாந்தங்கொண்டிருக்கும் மிக உயரிய மகான்களின் புத்திகள் இதைக்கேட்டவுடன் துண்டுதுண்டாக சிதைந்து ஓடிவிடமாட்டாதா?

மரணித்தபின் நிகழ்ச்சிகள் ஏற்படுமென்பதும், சுவர்க்க, நரகவேதனை, சுகங்கள் என்பதெல்லாம் வீண் கதையேயாகும்; மனோனுபவ சுக துக்கங்களுக்கே சுவர்க்க நரகவேதனை எனப்படுமேயன்றி வேறு யாதுமில்லையென்று மனனமிடும் மனோரதியர்களின் மனங்கள் இஃதைக்கேட்டவுடன் ஓடி மலைப்பாழியைத் தேடி ஒளிந்து நிற்கமாட்டாதா?

(1) எனவே, "நிராயுதபாணிகளான முஸ்லிம்" என எழுதப்பட்டிருப்பது, அறவே எவ்வித ஆயுதமுமற்ற தன்மையையே குறிக்கும்.

(2) நிராயுதபாணிகளான முஸ்லிம்கள் தற்காப்பு யுத்தம் செய்யப்போனார்களென்பதைவிட அந்நிராயுதபாணிகள் சத்தியாக்கிரஹம் செய்யப்போனார்களென எழுதியிருந்தால் மிக்க நலமாகயிருக்கும்.

(3) தற்காப்பு யுத்தமென மகுடமிட்டு, நிராயுதபாணிகளாகச் சென்றார்களென கீழே எழுதினால், நிராயுதபாணிகளும் தற்காப்பு யுத்தஞ்

செய்ய முடியுமென எந்தக் கித்தாபில் வருகிற தென்னும் கேள்வி எழும்பாதா ?

(4) எங்கள் நபி நிராயுதபாணிகளான அவரின் தோழர்களே, ஆயுதம்பூண்ட எதிரிகளுடன் யுத்தம் நிகழ்த்த கூட்டிச் சென்றூர்களென்று பிற மதஸ்தர்களிடம் யாம் கூறுவோமாகில் நம்மை உன்மத்தனென புகலமாட்டார்களா ?

(தொடரும்)

மிர்ஜாயி பித்ந

(ஜனப் அபுல்ஹஸன் சாஹிப் வரைவது)

அன்புற்ற நேயர்காள் ! மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியின் சரித்திரத்தையும், அவரின் வழிகெட்ட கொள்கைகளேயும், அவருடைய தஅவாவில் அவர் பொய்யராகுமென நிருபணமாய்விட்ட விஷயத்தையும் அநேக முறை எடுத்தியம்பியுள்ளேன். நம்தமிழ் நாட்டு முஸ்லிம்கள் இவ்வண்டப்புழுகரின் அடா மொழிகளே நன்கு தெரிந்துகொண்டிருக்கின் றனர். அஸ்ஹாபுல்பீல்—யானைப் பட்டாளக் காரர்களே மென்றுவிட்ட வைக்கோலேப்போல் ஆக்கிவிட்டதாக அல்லாஹ்தஆலா திருகுர் ஆனில் அருளியிருப்பதே போல், இவருடைய கொள்கையு மாக்கப்பட்டுப்போயிற்று. இந்நிலேமையில் ஈண்டும் இவருடைய கொள்கைகளேப் பிரசாரஞ்செய்ய முற்படுவ தானது, கழிக்கப்பட்டதை சபைக்கு கொண்டு வருவதற் கொப்பாகவே இருக்கிற தென்பதி லேய்யமில்லே.

மிர்ஸாவானவர், எம்பெருமானர் (ஸல்.) அவர்கள், முத்திராங்கமான நபியாகஇருப்பதை மறுத்து தாமும் ஒருநபியெனவும், எல்லா நபி மார்களேவிட மேலானவரெனவும் வாக்காடினர். நபிமார்களுக்கு பொய்புகலும் பழக்கமிருந்த தென்று கைகூசாது எழுதினர். நபிபெருமானர் (ஸல்.) அவர்களுக்கு சந்திரகிரகணம் ஏற்பட்டது தமக்கோ சந்திரசூரிய கிரஹணங்கள் ஏற்பட்டதென 'கஸீதயெ இஅஸாஜிய்யா' வில் கூறியிருக்கின்றூர். அல்லாஹ்தஆலாவும் சில சமயங்களில் பொய் சொல்லிவிடுகிறுன் என்று கைகூசாதுவரைந்திருக்கின்றூர்.மானிடர் சரீரத்துடன் எழுப்பப்படுவதில்லே ; நரகமும் சொர்க்கமும் மனேராஜ்யமாகும்யெனஉஸூலெ பல்ஸபயெ இஸ்லாமில் (ஞானபோதத்தில்) உளரியுள்ளார். திருக்குர்ஆனுக்கு மாற்றமாய் ஹஸ்ரத் ஈஸா (அலே.)சிறுவையிலறையப்பட்டதாகப் பிதற்றினர். இன்னும்இவைபோலொற்ற அநேக மாறுபாடானவும் மார்க்கமுறணனவுமான விஷயங்களேயெல்லாம் வெளியிட்டார்.

இத்தியாதி கொள்கைகளின் காரணமாய் அவரை மறுத்து, அவருடைய கொள்கைகள் மக்களிடையே பரவாமல் தடுப்பது சத்தியதீனின் முக்கியாம்சத்திலாய் விட்டது. அதற்கேற்பவே, அவருடைய காலமுதல் நாளிதுவரை, இறுதி நபியைப்பின்பற்றிய முஸ்லிம் உலமாக்கள் அவருக்கு தக்க வாயாப்புக் கொடுத்து வருவதற்கு, அவரும் அவருடைய சிஷ்யர்களும் பதில் கூற அசக்தர்களாக இருந்தனர்; இருந்தும் வருகின்றனர்.மௌலானுதனுவுல்லாசாஹிப்அவர்களுடன்தற்க வாதம் நடத்த முன்வந்து அநேக நாட்கள்வரை கண்டதை யெல்லாம்பிதற்றிவிட்டுகடைசியில்தோல்வியுற்றுஅடியில் கண்டவாறு இறுதிநாமா விடுத்தார். அதாவது, "ஏ ஆண்டவா ! தனுவுல்லா என்னே எந்த வழியிலும் முன்னேற விடுகிறுரில்லே ; அளவு கடந்துஅவமரியாதை செய்கின்றூர்; ஆதலால் யான் சத்தியவானுக இருந்தால் என் காலத்லேயே அவரை மௌத்தாக்கிவிடு, அல்லது அவர் சத்தியவானுக இருப்பாராகில் அவர் கண்ணெதிரே என்னே மௌத்தாக்கிவிடு" என்பதே.இக்கடிதம் விடுத்த சிறிது காலத்துக்குள் மிர்ஸா மரணமாய் விட்டார் ; மௌலானு அவர்களோ இற்றைக்கும் சுகஜீவியாக இருந்துவருகின்றூர்கள். இன்னுமவர், 'மன்கூஹாத்த ஆஸ்மானீ' முகம்மதீ பேகம் விஷயத்திலும், தன்னுடைய கலீபாக்கள் விஷயத்திலும் முன்னறிக்கையாகக் கூறிய தீர்க்கதரிசனம் முழுதும் பொய்யாகவே முடிந்தது.இவ்வாறு மார்க்க முரணுக இவர் உளறிக் கொட்டியதையும், முன்னறிக்கைகள் பொய்ப்பித்துபோனதையும் கண்டு அநேக மக்கள் மாயவலேயில் சிக்காது தப்பினர்.

இவ்வளவு பாரதூர விஷயங்கள் நிகழ்ந்திருந்தும், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் அதில் சிக்குண்டுழல்கின்றனர்; தாம் கெட்டதன்றி இதரர்களையும் அதில் சிக்கவைக்க முயற்சிக்கின்றனர். ஆனால் உலகம் கண் விழித்துக் கொண்டிருப்பதால் இதுதான் அன்னோரால் முடியாமலிருக்கின்றது.

கொழும்பிலும் இத்திய கொள்கையுடைய ஒரு சிலர் இருந்துவருவதாகத் தெரிகிறது. அன்னர் சமீபத்தில் சில துண்டுப் பிரசுரங்கள் விடுத்து தங்கள் பழம்பல்லவிகளைப் பாடி இருக்கின்றனர். அவைகளுக்கு நம் பிரதிநிதி ஜனாப் மௌலானா மௌலவீ S. K. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப், ஜனாப் அப்துல் கப்பார்கான் சாஹிப் முதலானோர் தக்க மறுப்புகள் கொடுத்திருக்கின்றனர். காதியானிகள், ஹஸ்ரத் ஸையிதுனா ஈஸா அலைஹிஸ்ஸலாத்துவஸ்ஸலாம் அவர்கள், மரணமாய் விட்டார்களென்று எழுதி அதற்கு, பலமுறையும் பல சந்தர்ப்பங்களிலும் மறுக்கப்பட்டுப்போன விஷயங்களையே ஆதாரமாக எழுதிவருகின்றனர்.

விசேஷமென்னவெனின், ஜனாப் மௌலானா முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் வெளியிட்ட பிரசுரத்தில் சஹீஹான—உறுதியான இரண்டு ஹதீதுகள் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதிலொன்று இப்னுஜரீடைய ரிவாயத்து. அதில்ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் அல்லாஹ்தஆவிடத்தில் ஹயாத்தாக இருக்கிறார்களென்று நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறுகின்றார்கள். மற்றொன்று இப்னு கதீருடைய ரிவாயத்து. அதில் ஈஸா (அலை.) மரணிக்கவில்லை; நிச்சயமாக தீர்ப்புநாள் சமீபத்தில் உங்களிடத்து வருவார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டு ஹதீதுகளையும் காதியானிகள் அறவே பிரஸ்தாபிக்காமல் என்னென்னவோ பொய்க் கதைகளை தங்கள் கூற்றுக்கு ஆதாரமாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால் பெருமானார் (ஸல்.) அவர்களின் ஹதீதுகளுக்குமுன் அக்கதைகளெல்லாம் ஊற்றுக்கு நிற்குமா?

மேலும் இந்த ரிவாயத்துகளன்றி நூற்றுக் கணக்கான ரிவாயத்துகள், ஹஸ்ரத்ஈஸா (அலை.) அவர்கள் கியாமத் நாள் சமீபத்தில் உலகின் கண் இறங்குவார்களென்று அறிவித்துக் கொண்டிருக்கிறது. அதில் சில ரிவாயத்துகளை மிர்ஸாஜீயும் ஒப்புக்கொண்டிருக்கின்றார். அந்த ரிவாயத்துகளைக்கொண்டு ஹஸ்ரத் ஈஸா(அலை.) அவர்கள் விண்ணுலகில் ஹயாத்துடனிருக்கின்றார்களென்பது நிச்சயமாய் விடுகின்றது. எனவே, நபி பெருமானார் (ஸல்.) அவர்களுடைய ஹதீதுகளைக்கொண்டுதான் குர்ஆன்ஷரீபுடைய ஆயத்துகளுக்குகருத்தமைக்கவேண்டும். ஆனால் இந்த ஹதீதுகளில் பிற்காலத்தில் வருவார்களென்று பெருமானார் (ஸல்.) அவர்கள் அறிவித்த நபர் மிர்ஸாதானென காதியானிகள் கூறுகின்றனர். என்னே இக் குழாத்தினரின் அறியாமை? ஹதீதுஷரீபில் "ஈஸப்னுமர்யம்" என ஹஸ்ரத் அவர்களின் திருநாமத்துடன் தாயார் பெயருமன்றோ குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இது சம்பந்தமாக அறிவிக்கப்பட்ட ஹதீதுகளில் வாக்குச் சொல்லப்பட்ட ஈஸா (அலை.) அவர்கள் விஷயமாய் இரண்டு நூற்றுக் கதிகமான வர்ணிப்புகளையும், அவர்கள் வரும் சமயம் நடைபெறும் நிகக்ஷிக்குறிப்புகளையும் பெருமானார் (ஸல்.) அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் தங்களுக்குப்பின் இம்மாதிரியான போலிகள் கிளம்பி ஈஸவியத்தைக்கொண்டும் நுபுவ்வத்தைக்கொண்டும் மஹ்தவிய்யத்தைக்கொண்டும் பொய் தஅவாக்கள் செய்வார்களென்பதை எற்கனவே அறிந்திருந்ததினாலேயே, அது விஷயமாய் மேற்கூறப்பட்டவாறு விபரமாகவே அறிவித்து, போலிகள் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்குமாறு உம்மத்தோர்களுக்கு எச்சரிக்கையும் செய்திருக்கின்றார்கள். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் இவ்வாறெல்லாம் முன் ஜாக்கிறதையாக எச்சரிக்கை செய்திருந்தும் காதியானிகள் இன்றைக்கும் அவரை நபியென்றும், மஸீஹ் யென்றும் மஹ்தி யென்றும் ஒப்புக்கொண்டு பிரசாரம் புரிந்து திரிவதுதான் விந்தைக்குறியதாக இருக்கிறது.

சமீபத்தில் கொழும்பு அஹ்மதியர்கள் வெளியிட்ட துண்டு பிரசுரத்தில், "கைப அன்தும் இதாநஜல இப்னுமர்யம் பீகும் வ இமாமுக்கும் மின்கும்" என்னும் ஹதீதுக்கு, இப்னுமர்யம் உங்களிலிருந்துவந்து உங்களுக்கு இமாமாய் நிற்கும் காலத்தில் உங்கள் நிலைமை எப்படியாயிருக்குமோ? என பொருள் கூறி,நம்மில்வரக்கூடியவரென்று குறிப்பிடப்பட்டிருப்பது மிர்ஸாவைத்தான் சுட்டிக்காட்டுகிறதென்று கருத்துக் கொள்ளுகின்றனர். இந்த ஹதீதின் கருத்தை யுணர்ந்தவர்கள் இவண் ஒருவருமில்லை என்று இவர்கள் மனப்பால் குடித்தனரா? அல்லது அவர்களுடைய வார்த்தைகளை யாவ

ரும் நிராகரித்து வருவதால் இதனை எவரும் கவனிக்க மாட்டார்களென்று ஏமார்ந்து கூறி விட்டனரா அறிகிலேம். ஆனால் ஹதீதின் கருத்தென்னவெனின், உங்களினின்றும் உங்களுடைய இமாம் ஏற்பட்டிருக்கும் நிலைமையில் மர்யத்தின் மகனார் உங்களில் இறங்கிவிடுவாரானால் அதுபொழுது உங்களுடைய நிலைமை என்னவாயிருக்குமோ என்பதாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் வானுலகிலிருந்து திமஷ்கின் வெள்ளை மினராவிலிறங்கும் போது ஹஸ்ரத் மஹ்தீ (அலை.) அவர்கள் பஜ்ர் தொழுகைக்காக தயாராய் நிற்பார்களென்று வேறு ஹதீதில் அறிவிக்கப்பட்டிருப்பதால், இந்த ஹதீதும் அதைத்தான் சமிக்கை செய்கிறது. விஷயம் இவ்வாறிருக்க, அறபி எழுத்து வாசனையே தெரியாதவர்களேபோல் "இப்னு மர்யம் உங்களிலிருந்து வந்து, உங்களுக்கு இமாமாக இருக்கும் காலத்தில்" என்று மொழிபெயர்த்திருக்கின்றனர். இவ்வாறேதான் அக்குழாத்தினர் திருவசனங்களின் கருத்துக்களையும் புறட்டி தலைகீழாய் எழுதி வருகின்றனர்.

மேலும் அதே பிரசுரத்தில்,

> இறைவன் என்னை (மிர்ஸாவை) சத்திய ஆதாரங்களோடும் தெய்வீக அடையாளங்களோடும் அனுப்பியுள்ளான். எனதுயிர் எவன் கையிலிருக்கிறதோ, எவன் என்னை அனுப்பியிருக்கிறானோ அந்த ஆண்டவன் மீதில் ஆணையாக நான் வாக்களிக்கப்பட்ட மஹ்தீகாக இருக்கிறேன். எம்பெருமானார் (ஸல்.) அவர்களால் நபியுல்லாவென்று கூறப்பட்ட மனிதன் நானுயிருக்கிறேன். எவர் என்னை ஒப்புக்கொள்ள வில்லையோ அவர் அல்லாஹ்வையும் என்னைப்பற்றி முன்னறிவித்த முகம்மது (ஸல்.) அவர்களையுமே ஒப்புக்கொள்ளவில்லையென்று இறைவன் எனக்கு அறிவித்திருக்கிறான்.

என மிர்ஸா கூறியதாக வரைந்திருக்கின்றனர். இக்கூற்றில் மிர்ஸா தனக்கு சத்திய ஆதாரங்களும் தெய்வீக அடையாளங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறதென உளறுகின்றார். அவரோ வெற்றுரையாளராகவும் வெறுங்கைக்காரராகவும் வந்து போனாரென்பது உலகபிரசித்தம். இந்நிலைமையில் இந்த வியாசமூலம் தாம் நபியென்றும் மஸீஹென்றும், இவ்வாறே நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் அறிவித்ததாகவும் பிதற்றுகின்றார். எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களோ தங்களுக்குப் பின் எவ்வித நபியும் கிடையாதென்றும், அவ்வாறு தங்களை நபியென்று தஅவாச் செய்பவர்கள் பொய்யர்கள், தஜ்ஜால்கள் என்றும் அறிவித்தஹதீதுகள் சஹீஹ்ஸித்தாக்களில் நிரம்பி இருக்கின்றது. எனவே தன்னை நபி என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக மிர்ஸா பிதற்றிய விஷயத்தில் அவர் வெற்றுரையாளராயிருக்கிறாரென்பதிலையப்பமில்லை. ஆனால் காதியானிகளுக்கு நாம் எவ்வளவு தூரம் உண்மையை எடுத்தோதிய போதிலும் செவிடன் காதில் ஊதிய சங்கைப்போலவேதான் ஆகக்கூடியதாயிருக்கிறது. ஆகவே நஞ்சோதிரர்கள் இவ்வழிகெட்ட காதியானிகளின் தீயவலையில் சிக்கிக்கொள்ளாமல் தங்கள் ஈமானைக் காப்பாற்றிக் கொள்வார்களாக.

திருகுர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்புகள்

(ஜனாப் அப்துல் மஜீது சாஹிப் கர்ஷி வரைகின்றார்)

தர்யாபாத் வாசியும், 'ஸச்' பத்திரிகையின் ஆசிரியருமான மௌலானா அப்துல் மாஜித் சாஹிப், B.A., அவர்களுக்கு அல்லாஹ் தஆலா பிரத்தியேகமான அனேக காருண்யங்களை அளித்து கிருபை புரிந்துள்ளான். அதில் சமீபத்தில் நிகழ்ந்துள்ள கடாக்ஷம் என்னவெனின், சென்ற ரமலான் மாதத்தில் அல்லாஹ்தஆலா, சங்கை பொருந்திய திருமறையாம் குர்ஆன் ஷரீபை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் சேவையி லீடுபடும்படி செய்ததாகும். மௌலானா அவர்களால் நடத்தப்பட்டு வந்த 'ஸச்' என்னும் பத்திரிகை சென்ற ஆறு மாதகாலம்வரை நிறுத்தப்பட்டிருந்ததால், பரிசுத்த குர்ஆன் தர்ஜுமாவி லீடுபட்டுழைக்க அவர்களுக்கு ஹேது வேற்பட்டிருந்தது.

சென்ற ஜுலை மீ 25-ந் தேதி 'ஸச்' பத்திரிகையின் ஓர் பிரதி வெளியாயிற்று. அதில் மௌலானா அவர்கள், "தற்கால

நிகழ்ச்சி '' என்னும் தலையங்கத்தின் கீழ் 6 மாத காலமாய் பத்திரிகை நடைபெறாது நின்று விட்டதைக் குறித்து வருத்தந் தெரிவித்து, சந்தாநேயர்களிடம் இன்னும் 6 மாத தவணை கோரிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நஞ் சோதிரர்களுக்கு மௌலானா அவர்கள் 'தற் கால நிகழ்ச்சி' என்னும் மகுடத்தின் கீழ் குறிப் பிட்டிருப்பதின் சுருக்கத்தை வெளியிட முன் வந்துளேன்.

கிறிஸ்தவர்களின் மொழிபெயர்ப்பு

முதன் முதலாக மௌலானா அவர்கள், கிறிஸ்தவர்களாலும் முஸ்லிம்களாலும் குர்ஆன் ஷரீபுக்கு ஆங்கிலய மொழிபெயர்ப்புச்செய் திருப்பவைகளை ஆராய்ச்சிசெய்து வெளியிட் டிருப்பதின் சுருக்கம் வருமாறு:—

முதன்முதல் 18-வது நூற்றாண்டில் பாதிரி 'ஜார்ஜ் சேல்' என்பவர், குர்ஆன் ஷரீபுக்கு ஆங்கில பாஷையில் மொழிபெயர்ப்பொன்று வெளியிட்டார். அவர் அறபியில் பாண்டித் துவம் பெற்றவராக இராத்ததால் அம்மொழி பெயர்ப்பில் அநேகந் தவறுகள் மலிந்து கிடக் கின்றன. மேலும் அறியாத்தனத்தால் சிற்சில இடங்களில் தமது பிடிவாதத்தையும் வெளியிட் டிருக்கிறார். ஆனால் அவர் சில குறிப்புகள் எழுதுவதற்கு எடுத்துக்கொண்ட பிரயாசை புகழத்தக்கதாகவே இருக்கின்றது. மொழி பெயர்ப்பில் உபயோகித்திருக்கும் பாஷை மிக வும் புராதனமானவையாயும், தற்கால பழக் கத்திலில்லாத அநேக வார்த்தைகளை யுடைய தாயுமிருந்து வருகின்றது.

இதற்குப்பின் ஜே. எம். ராடுவேல் என்பார் 19-வது நூற்றாண்டின் இறுதியில் ஒரு மொழி பெயர்ப்பை வெளியிட்டு அதை மிகவும் பிர பல்யப்படுத்தினர். அதில் உபயோகிக்கப்பட் டிருக்கும் பாஷை, சேல் துரையின் பாஷையை விட நாகரீகமுடையதாயிருந்த போதிலும், இதில்காணப்படும் தவறுகள் முன்னையதைவிட அதிகமாகவே இருக்கின்றன. மேலும் இதின் பற்பல இடங்களிலும் தமது மதப்பிடிவாதக் கொள்கையையே புகுத்தியிருக்கின்றார். அநேக இடங்களில் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் விஷயமாய், அந்தரங்க சுத்தியில்லாது பேச்சில் பகட்டிக் காட்டக்கூடியவரென்று குறிப்பிட் டிருக்கிறார். இதுவன்றி அநேக ஸூராக்களின் வரிசை முறைகளை மாற்றி, அதுதான் சரியான முறை என்று வரைந்திருக்கிறார்.

மூன்றாவதாக, 1878-ல் V.H. பாமர் என்பார் ஒரு மொழி பெயர்ப்பை வெளியிட்டார். இது சாதாரண முறையில் மேற்போக்காக, ஓர் காட்டு மனிதருடைய சம்பாஷணைகளை ஆங்கி லத்தில் மொழிபெயர்க்கும் தோரணையில் எழு தப்பட்டிருக்கிறது.

முஸ்லிம்களின் மொழி பெயர்ப்பு

முஸ்லிம்களில் முதன்முதலாக, காலஞ்சென்ற டாக்டர் அப்துல் ஹகீம்கான் பட்யாலவீ குர் ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவர் "அஸ்லாபி கூனல் அவ்வலூன்" என்னும் முதன்தர வகுப்பில் சேர்ந்தவராவர்.

பின்னர் தெஹ்லிவாசியான மர்ஹூம் மிர்ஸா ஹீரத் என்பவர், சிறிய மூன்று வால்யமாக குர் ஆன் வியாக்கியானத்தை வெளியிட்டார். இதில் பெயருக்காகமட்டில் ஆங்காங்கு சிற்சிலகுறிப்பு கள் வரையப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, ஹாபிஸ் குலாம் சர்வர் என் பவரால் ஒரு மொழிபெயர்ப்பு வெளியிடப்பட் டது. இஃது வெளித்தோற்றத்தில் அழகாக இருந்தபோதிலும், முக்கியமான இடங்களில் குறிப்பெழுதப்படா திருப்பதால், அன்னியர் கள் இதனைப்பார்த்து பிரயோசனம் பெறமுடி யாதிருக்கின்றது. இதிலேற்பட்டுள்ள பெரும் குறை என்னவெனின், பாஷா அலங்கிரிதம் செய்யவேண்டுமென்னும் நோக்கங்கொண்டு குர்ஆன்ஷரீபின் திருவாக்கியங்களின் கருத்தை விட்டு வெகுதூரம் சென்றிருப்பதேயாகும்.

நவ்வாப் 'இமாதுல்முல்க்' ஸையித் ஹுஸைன் பில்கிராமீ என்பவர் சில ஜுஸுவுகளுக்கு தர்ஜுமாசெய்தார். ஆனால் அவருடைய வயதா னது, அதனை நிறைபூர்ணமாக்கிவைக்கும்படி விடவில்லை. இதிலும் சில குறைகள் உள. முத லாவது குறிப்புகள் எழுதப்படவில்லை. இரண் டாவது இதில் உபயோகிக்கப்பட்டிருக்கும் பாஷை, 16-வது நூற்றாண்டில் இன்ஜீலுடைய தர்ஜுமாவில் புழங்கப்பட்ட உயிரற்ற பாஷை யாக இருக்கிறது.

ஈதன்றி, காதியான் ஊர்வாசிகள்சிறந்தமுறை யில் ஒரு ஜுஸுவுக்கும், லெக்னவ் மத்ரஸத் துல் வாயிஜீன் சார்பாக ஒரு ஜுஸுவுக்கும், அலஹபாத்தில் ஒருவர் ஒரு தர்ஜுமாவும் வெளி யிட்டிருக்கின்றனர்.

முகம்மதலியின் தர்ஜுமா

இதுபொழுது ஆங்கிலத் தர்ஜுமாக்களில் இரண்டு ஜனங்களிடையே புழக்கத்திலிருக்

கின்றன. 1. லாகூர்வாசியான முஹம்மத் அலி M. A. உடையதாகும். மற்றொன்று மிஸ்டர் பிக்தாலுடையது. முந்திய தர்ஜுமாவில் அதிகமான பிரதிகள் வெளிவந்திருக்கின்றன. ஆங்கிலம் கற்ற வகுப்பு மிகுதமாய் இதனையே படித்துவருகின்றது. இந்த வியாக்கியான விஷயமாய், ஆங்கிலம் மட்டும் கற்ற ஒருவருடைய அபிப்பிராயம் என்னவெனின், முகம்மது அலி சாஹிப் தன்னுடைய வியாக்கியானத்தில் குர்ஆன்ஷரீபின் கருத்தைவிட்டு அப்புறம் சென்றுவிட்டார்; ஆனால் தன் காலப்போக்கின் உணர்ச்சியை ஒட்டி ஒவ்வொரு விஷயத்தையும் காலப்போக்குக்குத் தக்கவாறு வெளியிட்டிருக்கிறார். உண்மையில் அவ்விடங்களில் அவர் கூறும் விஷயங்களின் சாடைகூட யில்லாதிருக்கிறது என்பதே. மேலும் மௌலானா அப்துல்மாஜித் சாஹிப் அவர்கள், இந்த தர்ஜுமாவினால் ஏற்பட்ட நன்மைகளைக் கூறிவிட்டு கீழ்காணும் குறைகளையும் விபரித்திருக்கின்றார்கள்.

1. இந்த மொழிபெயர்ப்பு இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைகளை விளங்கிக்கொள்ளக் கூடிய விதத்திலில்லை. மொழி பெயர்ப்பிலும் வியாக்கியானத்திலும் நேச்சரியத்து (எல்லாம் இயற்கைப்படியே நடக்கும் என்னும் கொள்கை) மிகைத்து நிற்கின்றது. முஅஜிஸாக்கள் (அற்புத நிகட்சி) விஷயத்தில் ஸர்ஸையித் அஹ்மத் கானின் கொள்கையே வெளியிடக்கூடியதாக இருக்கிறது. நவீனக்கொள்கைக்கேற்றவிதமாய் குர்ஆன்ஷரீபின் கருத்துக்களை அமைக்க வேண்டுமென்னும் நோக்கங்கொண்டு லுகத், (அரபி அகராதி) நஹ்வு, (இலக்கியம்) ஹதீது, (நாயகதிருவாக்கியம்) குர்ஆனின்போக்கு, பெரியார்களால் ஒற்றோர்மித்த முடிவு இவைகளையெல்லாம் அலக்ஷியஞ்செய்து மிகமிக பல ஹீனமான (தாவீல்) கருத்துக்கள் கூறப்பட்டிருக்கிறன்து.

2. நவீனமாய்த்தோன்றும் சந்தேகங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மறுப்புகள் போதியனவாய் இருக்கவில்லை.

3. குர்ஆனுடைய கருத்துகளை விளங்கிக் கொள்வதிலும் அநேக சந்தேகாஸ்பதங்கள் தோன்றக்கூடியதாக இருக்கின்றது.

4. அதில் உபயோகிக்கப் பட்டிருக்கும் பாஷையின் போக்கு எல்லாவிடத்தும் அத்துணை மேன்மையாக இருக்கவில்லை.*

பிக்தாலின் தர்ஜுமா

இந்த மொழிபெயர்ப்பு பாஷை அளவு கடந்து இனிமையாக இருக்கின்றது. என்றாலும் கருத்துகளில், பலவிடங்களிலும் தவறுகள் காணப்படுகின்றது; குறிப்புகளும் மிகவும் கம்மியாக எழுதப்பட்டிருக்கின்றது. ஏக தேசத்தில் நோக்குமிடத்து, வேறொரு வியாக்கியான கர்த்தா இந்த தர்ஜுமாவை அசலாகக் கொண்டு வேறொரு தக்க வியாக்கியானம் எழுதுவதற்கு லாயக்குள்ளதாக இருக்கின்றது.

தற்காலத் தேவை யாது ?

இதுபொழுது சுன்னத்ஜமாஅத்துகளின் நிர்ணயங்களை எடுத்தோதக்கூடியதும், மார்க்க சட்டதிட்டங்களில் உறுதியான சொற்களை வெளியாக்கக் கூடியதும், ஆதாரமற்ற கதை காரணங்களைவிவரிக்கக்கூடியதாக இல்லாததும், இனிய நடை, போதிய விரிவுரை உடையதும், அழகிய முறையில் அச்சிடப்பட்டதும், நவீன சந்தேகங்களை நீக்கக்கூடியதும், நேர்

* காதியானி முகம்மது அலீ M. A. யால் எழுதப்பட்ட ஆங்கிலய தர்ஜுமாவைக் குறித்து மௌலானா அப்துல்மாஜித் சாஹிப் என்ன அபிப்பிராயம் கூறியிருக்கிறார்களென்பதைத் தெரிந்துகொண்டீர்கள். யாமும் இவ்வியாக்கியானத்தின் குணதோஷங்களைப் பற்றி பன்முறையும் எழுதி வந்திருக்கிறோம். இவருடைய கருத்துக்களிற் சில குர்ஆனின் போதனைக்கே நேர் விரோதமாய் இருக்கின்றன. அவைகள் குபிரையும் பித்தத்தையும் பண்ணக்கூடியவைகளாயு மிருக்கின்றன. மௌலானா அவர்களின் ஆராய்ச்சியை கவனிக்குமிடத்து, இவ்வியாக்கியானம் குர்ஆனுடைய கருத்தையே ஒருபக்கல் ஒதுக்கிவிட்டு தன்னுடைய பிடிவாதத்தையும் கெட்டகொள்கைகளையும் அவண் சாதித்துச்சென்றிருக்கின்றாரென்பது தெற்றென புலனாகின்றது. இவ்வாறே தான் இவருடைய உர்தூ வியாக்கியானமும் இருந்து வருகிறது. இதனாலேயே தான் இவ்வியாக்கியானங்கள் முஸ்லிம் ராஜ்யங்களில் விற்பனை செய்யக்கூடாதென்று தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

இத்தியாதி இலக்ஷணங்களையுடைய வியாக்கியானத்தைத்தான் தா.இ. ஆசிரியர்கள் குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு தமிழில் தர்ஜுமா செய்துவருகின்றனர். இதிலும் அந்தக் கொள்கைகள் அப்படியே மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால், அந்ததர்ஜுமாவை தமிழ்நாட்டு முஸ்லிம்கள் யாவரும் மறுத்துவருகின்றனர். ஆகவே விஷயமும் விபரமும் தெரியாதமுஸ்லிம்கள் இந்த தர்ஜுமாக்களைகொண்டு ஏமாற்றமடையாதிருப்பார்களாக.

வழியையே உறைகல்லாகக் கொள்ளக்கூடியது மான ஆங்கில வியாக்கியானமொன்று வேண்டற்பாலதாகும். ஆகவே மௌலானா அவர்கள், அல்லாஹ் தஆலாவின்மீது முழு நம்பிக்கை வைத்தவர்களாய், பெரியார்களின் ஆசீர்வாதத்தைப் பெற்று இம்மாபெரும் பணியாற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். சென்ற ரமலான் மாதமுதல் இச்சேவை ஆரம்பிக்கப் பெற்று சிறிதுநாளையில் முந்திய ஜுஸுவு முற்றுபெற்றுவிட்டது. ஆரம்பத்தில் போதிய மொழிபெயர்ப்பும் சுருக்கமான குறிப்பும் எழுத வேண்டுமென மௌலானா அவர்கள் கருதியபோதிலும் சற்று செல்லச் செல்ல, ராடுவேல் போலொற்றவர்களுடைய விஷமக் கூற்றுகளைப் பார்த்தபின், அவைகளுக்கெல்லாம் தக்க மறுப்புகளை வியாக்கியானத்தில் சேர்க்க வேண்டுமென்றும், வியாக்கியானம் செய்யும் போக்கிலேயே கூடியமட்டும் அவர்களுடைய குயுக்தி வாதங்களெல்லாம் அகற்றப்பட்டுப்போகும் முறையில் எழுதப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு அந்த முறையிலேயே எழுதிவருகின்றார்கள். இதற்காக ஆங்கில நூற்களையுடைய புத்தகசாலையொன்று மிகமிக அவசியமாய்த் தேவையாக இருக்கிறதென்றும், அதில்,

1. தவ்ராத், இன்ஜீல், வேதங்கள், இவைகளுக்கு எழுதப்பட்ட குறிப்பு, வியாக்கியான நூல்கள், இதர மதஸ்தர்களின் கொள்கைகள் கூறப்பட்டிருக்குமிடத்து அவர்கள் கையாண்டு வரும் நூற்களிலிருந்தே அக்கொள்கைகளை விவரிப்பதற்காக இதர மத விஷயங்களைத் தெரிந்துகொள்ளக்கூடிய புத்தகங்கள்.

2. குர்ஆனில் பல வகுப்பார்களைப்பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால், அவர்களின் சரித்திரங்களைக் கொண்டு குர்ஆன் ஷரீபை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக அவர்களின் சரித்திர நூல்கள்.

3. அனேக இடங்களைப்பற்றி குர்ஆன் ஷரீபில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால், அவைகளை விவரிப்பதற்காக பூகோள சாஸ்திரங்கள்.

4. இஸ்லாத்தைப் பற்றியும், குர்ஆனைப் பற்றியும் மேனாட்டு அறிஞர்கள் "கல்வி ஆராய்ச்சி" என்னும் பெயரால் எழுதியிருக்கும் நூல்கள்.

5. குர்ஆனின் திருவாக்கியங்களை ஆங்கில பாஷையில் விவரிப்பதற்காக அப்பாஷையில் எழுதப்பட்ட கலாஞான நூல்கள் இருக்க வேண்டுமென்றும் மௌலானா அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

(ஈமான்)

பாதிரியின் பதற்கூற்று

ரெவரண்டு M. J. M. என்னும் பெபரால் * "திருச் சபை சரித்திர சங்க்ஷேபம்" என்னும் பெயருடைய புத்தகமொன்று வெளிவந்திருக்கிறது. அதில், கத்தோலிக் கிறிஸ்தவர்களின் சரித்திரங்கள் வரையப்பட்டிருப்பதற்கிடையே, இஸ்லாத்தின் திருத்தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுடைய சரித்திரமென்று தப்புந் தவறும், பொய்யும் புளுகுமாயும் சில விஷயங்கள் அதன் 32, 33-ம் பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றது. பாதிரியாருக்கு சரித்திர சம்பந்தமான கலை சூன்யமென்பது அவர் பிதற்றியிருக்கும் வியாசத்திலிருந்து தெரிய வருகின்றது. ஷை புத்தகத்தின் பல யிடங்களிலும் பாதிரியார் சிலுவையையும் ஏசுநாதரின் உருவங்களையும் படத்தையும் வணங்குவதை சிலாகித்து எழுதியிருக்கின்றார். இதிலிருந்து அவர் அஞ்ஞானம் நிறைந்த விக்கிரகத் தொழும்பரென்பது செவ்வனே வெளியாகின்றது. நபி பெருமான் (ஸல்.) அவர்கள் விக்கிரகத் தொழும்பை வேரோடு கெல்லி எறிந்து வெற்றி பெற்றவர்களாதலின், அன்னவர்பால் பாதிரியார் சீற்றங்கொண்டு இல்லாததையும் பொல்லாததையும் புகல முற்பட்டிருக்கின்றார் போலும்.

நபிமார்களையும் தீர்க்க தரிசிகளையும் கௌரவிக்கும் குணம் முஸ்லிம்களிடமிருந்தன்றோ கற்றுக் கொள்ளவேண்டும். ஹஸ்ரத் ஈஸா (அலை.) முதல் மற்றெல்லா நபிமார்களையும் கௌரவிக்கும்படி முஸ்லிம்கள் போதிக்கப்பட்

---

* அவர் இன்னாரென்பதும், அவருடைய முழுப் பெயர் யாதாகுமென்பதும் இதுவரை தெரியாதே இருந்து வருகின்றது.

டிருக்கின்றனர்களாதலின் எல்லா நபிமார்களை யும் கௌரவித்து வருகின்றனர். பாவம் பாதிரி யாருக்கு ஈதெல்லாம் எங்கிருந்து தெரியப்போ கின்றது? ஒருவரைக் குறித்து சரித்திர சம்பவங் களை எழுதுவதென்ருல், உண்மையான சரித் திர புத்தகங்களிலிருந்து சரியான ஆதாரங் களைக் கொண்டே எழுத முற்படல்வேண்டும். வாயில் வந்ததை யெல்லாம் பிதைத்தி விடுவதை சரித்திர சங்க்ஷேபமென்று நினைத்துவிடுதல் மடமைத்தனமே யாகும். நண்பர்காள்! பாதிரி யாரின் சரித்திர அறிவை சீர்தூக்கிப் பாருங்கள்!

அவர் பிதற்றியிருக்கும் வியாசத்தில் கி. பி. 622-ல் பிறந்து 631-ல் நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் மரணமாய் விட்டதாகச் சரித் திரங் கணிக்கப்பட்டிருக்கின்றது. இதன்படி நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் 9 வருட காலமே இவ்வுலகின்கண் வாசஞ் செய்ததாக ஏற்படுகின் றது. அதில் பெருமானார் (ஸல்.) அவர்களின் 40-வது வயதில் நடைபெற்ற சம்பவத்தையும் குறிப்பிடுகின்ருர். 9 வருடவாழ்க்கைக்குள் 40-வது வருட சம்பவம் எப்படித்தான் வந்து நுழைந்துகொண்டதென்பதற்குப் பாதிரியார் தான் விடை பகரவேண்டும். என்னே! இவரின் சரித்திர ஆராய்ச்சி!! உண்மை எவ்வாறிருந்த போதிலும், முகம்மதை ஸல். அவர்களை குறைகூறி இழிவாக எழுதிவிடுவதுகொண்டு பாதிரியார் திருச்சபையில் தங்கப்பதக்கம் பெற லாமென்னும் கருத்துக் கொண்டார்போலும்!

முதலாவதாக, சத்தியத்தூதர் (ஸல்.) அவர் களின் திருநாமத்தையாகிலும் சரிவர எழுதக் கற்றுக்கொண்டனரா? அதுதான் இல்லை. இந்த லக்ஷணத்தில் இவருடைய கூற்றுக்கு அறி வுலகு ஒரு மதிப்புக்கொடுக்காது அவைகளை வசை மொழிகளென்றே கருதிவிடும். என்ருலும் அவர் பிதற்றியிருக்கும் பொய்யுரைகளின் முக்கியாம்சங்களை இங்கு கவனிப்போம்: நபி கள் திலகம் (ஸல்.) அவர்களுடைய தாய் தந் தையர் விஷயத்தில், "இவன் தகப்பன் அஞ் ஞானி, தாய் யூதச்சி, இவன் குழந்தையாயிருக் கும்போதே அவன் தாய் தந்தையர் இறந்து போனார்கள்" என புகலுகின்ருர். பாதிரியாரின் இவ்விழி மொழிகளைச் செவியுறும் எந்த முஸ் லிமின் ஹிருதயமும் அதனைச் சகித்துக் கொண்டிருக்கமாட்டாதென்பதி லையமில்லை. அதனைக் குறிப்பிடுவதில் எழுதுகோலும் தது ம்புகின்றது. உலகம் போற்றும் இவ்வுத்தமரை, வானவர்கள் புகழும் இவ்வாசிரியரை, சுவி ஶேஷங்கள் புகழும் இச்சிரேஷ்டரை, உலக முழுதிற்கும் ஞானஒளி கொளுத்திய இம் மகாத்மாவை இவ் அறிவிலி மனப்புழுக்கத்தா லன்ருே இவ்வாறு எழுதத் துணிந்தனன். எம்பெருமான் (ஸல்.) அவர்களின் தாயார் அவர்கள் யூதமதத்தைச் சார்ந்தவர்களன்று. தாய்தந்தையர் இருவர்களும்விக்கிரகத்தொழும் பர்களாக இல்லாது தங்களுக்குத் தெரிந்தவரை ஏகநாயகனை வணங்கிவந்தார்களென்பது சரித் திர சான்ருகும். பாவம்! பாதிரியார் வாசித்த பாடசாலையில் சரித்திர புத்தகங்களை போதிக் கப் படாததால்தான் அவர் இவ்வாறெல்லாம் தடுமாற்றங் கொள்கிருர்போலும். மேலும், அவ்வியாசத்தில் "மகம்மதுக்கு 40 பிராயம் நடக்கும்போது தனக்குச் சர்வேஸ்வரன் தோன்றி ஒரு புதுவேதத்தை போதிக்க கற் பித்ததாகப் பிதற்றி, யூத வேதத்திலிருந்து சில தையும் கிறிஸ்து வேதத்திலிருந்து சிலதையும் சேர்த்து எழுதி அதற்கு கொரான் என்னும் பெயர் கொடுத்தான்" என்று வரைகின்ருர். பாதிரியார், திருகுர்ஆன் விஷயமாய் யூத வேத த்திலிருந்து சிலதையும், கிறிஸ்தவ வேதத்தி லிருந்து சிலதையும் சேர்த்து எழுதி அதற்கு கொரான் என்று பெயர்வைத்துவிட்டதாக பிதற்றுகின்ருர். நபிபெருமான் (ஸல்.) அவர் கள் சத்திய வேதத்தை போதிக்க முற்படு வதற்குமுன் எவரிடத்திலும் கல்வி பயிலவில்லை யென்பதை உலக சரித்திரமே ஒப்புக் கொண்டிருக்கிறது. இன்னிலைமையில் அவர் களுக்கு யூத வேதமோ கிறிஸ்தவ வேதமோ எங்கிருந்து தெரியப்போகிறது? ஆனல் பாதிரி யாரின் கூற்றுக்கு சுருக்கமான ஓர் பதில் விடுத்து விடுவது உசிதமாகுமென கருதுகின் றனம். சில பாதிரிகள், முன் வேதங்களில் காணப்படாத சிற்சில விஷயங்கள் திருக்குர் ஆனில் காணப்படுவதாக வரைந்திருக்கின்றனர். உதாரணமாக, பிர்அவ்னுடைய விஷயத்தை கவனியுங்கள்: ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களை பிர்அவ்ன் பின்தொடர்ந்து சென்றபோது செங் கடலில் அவன் தன் சேனைகள் சகிதம் மடிந்து போன விஷயம் பைபிளிலும் குர்ஆனிலும் காணப்படுகிறது. ஆனல் திருகுர்ஆனில் அவ னுடைய பிரேதம் கடலிலிருந்து வெளியாக்கப் பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ் விஷயம் பைபிளில் கிடையா. இதற்கேற்ப மிஸர் தேச அரசர்களின் பிரேதங்கள் காப் பாற்றி வைக்கப்பட்டிருக்கும் அறையிலும்

இவனுடைய பிரேதமில்லை. இதனை ஆதாரமாகக் கொண்டு, உண்மையற்ற சம்பவங்கள் குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறதென்று பாதிரிமார் ஆக்ஷேபனை கிளப்பினர். ஆனால் சமீபத்தில் ஈஜிப்டில், புதையல்கள் சோதிக்குமிடத்து ஒரு மனிதனின் பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டு அதனைப் பரிசோதித்துப் பார்த்ததில், ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர்களுடன் போராடிய பிர்அவ்னுடைய பிரேதமென்றே தீர்மானிக்கப்பட்டது. இதைக் கண்டு பாதிரிகளும் திரு குர்ஆன் தெய்வீக வேதமென்னும் உண்மையை ஒப்புக்கொள்ள நேர்ந்ததோடு உலகமே இச்சம்பவத்தைக் கேட்டு ஆச்சரியமடைந்தது. இப்பரிசுத்த வேதம் யூதவேதத்திருந்தும் கிறிஸ்து வேதத்தி லிருந்தும் சேமிக்கப்பட்டதென்று கூறும் எம். ஜே. எம். பாதிரியார் இங்கு நிதானபுத்தியை சற்று செலவிட்டு, இச்சம்பவம் எங்கிருந்து சேமிக்கப்பட்டதென்பதை கூறுவாரா? கிறிஸ்துவ வேதத்தில் கூறப்படாத இம்மகத்துவமான சம்பவம் பரிசுத்த வேதத்தில் எங்கிருந்து அருளப்பட்டதோ, அங்கிருந்தே தான் சகல அம்சங்களும் அருளப்பட்டதென்பதை பாதிரியார் உணர்வாரா? இதுமட்டுமென்ன? தற்காலையுள்ள பைபிள்களில் எழுதிவைக்கப்பட்டிருக்கும் தப்பான அநேக விஷயங்களை தக்க ஆதாரத்தோடு திருகுர்ஆன் மறுத்து, புத்திக்கும் யுக்திக்கும் சுருதிக்கும் தக்க சமாதானங்களை வெளியிட்டிருக்கின்றது. இதற்கு பாதிரியார் என்ன பதில் கூறுவார்? நாயகம் (ஸல்.) அவர்களுடைய வே:தத்தைக் குறைகூற முன்வந்த பாதிரியார் அதன் பெயரைக்கூட நல்லவிதமாகத் தெரிந்துகொள்ளாத்தது பேராச்சரியமல்லவா?

மேலும் பாதிரியார் "தன் வேதத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை மனைவிகளையாகிலும் வைத்துக் கொள்ள உத்தரவு தந்தான். அவனே ஒரே சமயத்தில் 10-மனைவிகளை வைத்துக் கொண்டிருந்தான்" என வரைகின்றார். பாதிரியாரின் பதர்கூற்று பொய் எனருசுப்பிப்பதற்கு, அவரின் இவ்வாக்கியங்களே போதிய சான்றாகும். எத்தனை மனைவிகளையாகிலும் வைத்துக்கொள்ள் உத்திரவு கொடுத்ததாக பாதிரியார் கூறுவது ஆதாரமற்ற—உண்மைக்கு மாற்றமான விஷயமென்பதை சாமான்யருமறிவர். அதாவது, ஒரு மனைவியை விவாகம் புரிந்துகொள்ள வேண்டும். இதுவன்றி அவசியமேற்படுங்கால், மனைவியர்களுக்கிடையே நீதியாய் நடந்துகொள்ள வேண்டுமென்னும் நிபந்தனையின்பேரில் நான்கு மனையாள்வரை விவாகம் புரிந்துகொள்ளலாமென்பது திருகுர்ஆன் போதனையாகும். சமீபத்தில் நிகழ்பெற்ற ஐரோப்பிய யுத்தத்தில் அநேக ஆண்கள் மடிந்து அவர்களின் மனைவியர்களெல்லாம் விதவைகளாகிவிடவே, அவர்களை மணமுடித்து வைக்க வேண்டுமென்னும் அவசியமேற்பட்டுப் போயிற்று. அது சம்பந்தமாய் கிறிஸ்தவர்களுக்குத் தக்க உணர்ச்சி ஏற்பட்டது. அவர்களோ ஏகதார மணம் புரிந்துகொள்ளக் கூடியவர்களாயிருப்பதால் வேறு வகையின்றி, இத் தூரதிருஷ்டியை அனுசரித்தேதான் பலதார மணத்தை குர்ஆன் அனுமதித்திருக்கிறதென்னும் முடிவுக்கு வந்தனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் என்னசெய்தனரென்பதை பாதிரியார் கவனிக்கவேண்டும். இதே சந்தர்ப்பம் துருக்கி அரசாங்கத்திலும் ஏற்பட்டது. அந்த முஜாஹிதீன்களின் பெண்மணிகளை எஞ்சியிருந்தவர்கள் அரசாங்க உத்தரவுக்கேற்ப, அவரவர்களின் தகுதிக்குத் தக்கவாறு மணந்துகொண்டனர். இதுவல்லவோ முக்காலத்துக்கும் பொருத்தமுடைய சத்தியவேதம். இம்மதமன்றோ அகில உலக மதமாவதற்கு அருகதையுடையது. விஷயமிவ்வாறிருக்க, இவ்வறிவிலி எவ்வாறு தூஷணங்கூறமுற்பட்டனனோ அறிகிலேம். எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒரேசமயத்தில் 10 மனைவிகளை வைத்துக் கொண்டிருந்ததாக பாதிரி வரைகின்றார். இது இவருடைய அறியாத்தனமாகும். ஏககாலத்தில் 10 மனைவியர்கள் அவர்களுக்கு இல்லையென்பதை பாதிரியார் உணரவேண்டும்.

இன்னும் பாதிரியார், "தன் மதஸ்தர் விருத்த சேதனச் சடங்குகளை அனுசரித்து மதுபானத்தையும், பன்றி இறைச்சியையும் விலக்க கற்பித்தான்" என வரைகின்றார். பாவம் என் செய்வார் பாதிரியார். குற்றங் கூறுவதற்கு விஷயமொன்றும் அகப்படாமல், "உன் பாட்டன் வெள்ளிக்கிழமைசெத்தான்" என்று சொல்வதுபோல, பாதிரியார் மேற்கூறப்பட்ட மூன்று விஷயங்களையும் குறையாகக்கூற முற்பட்டார் போலும்! கிறிஸ்தவர்களில் விருத்த சேதனத்தின் நன்மையையுன்னி அதனை அனுசரிப்பாரும் உண்டு. ஆனால் இவர் அந்த வகுப்பில் சேர்ந்தவரல்லர் போலும்! மதுவிலக்கை

யும் பன்றி இறைச்சி விலக்கையும் குறையாகக் கூறுகின்றார். இதுபொழுது அபரிமிதமான பணங்கள் செலவிட்டும், மாபெரும் பிரசங்கங்கள் நிகழ்த்தியும் மதுவிலக்குச் செய்துவருகின்றனர். இவ்வபார சேவையை அக்காலத்திலேயே நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் சாதாரண முறையில் புரிந்திருக்கின்றார்கள். இவ்வரும் சேவையைப் பாதிரியார் குறைகூற முற்பட்டிருப்பது அறிவின்மையேயாகும்.

மேலும், "தன் வேதத்தை பிரபல்யப் படுத்த ஆயுதங்களை உபயோகிக்க உத்தரவு தந்தான்" என்றார் பாதிரியார். இது கிறிஸ்தவர்களின் அபாண்டமான பழைய கூற்றேயாகும். இதற்குப் பன்முறையும் பலராலும் தக்க விடை அளிக்கப்பட்டிருக்கிறதென்பதை பாதிரியார் உணர்வாராக!

மேலும், "அவன் வேதம் மெய்யான வேதமென்று காட்ட யாதொரு புதுமை செய் யென்று யாராகிலும் கேட்டால், நான் வேதத்தைப் போதிக்க வந்தேனே யொழிய புதுமை செய்ய வரவில்லையென்று மகமது சொல்வான்" என்று உளறினர் பாதிரியார். இது பாதிரியாரின் ஆகாயப் புளுகாகும். ஆயிரக்கணக்கான உண்மையாளர் நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் புதுமையைக் கண்டு சத்திய வேதத்தில் சேர்ந்தார்களென்னும் விஷயம் சரித்திரத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கும் நிலைமையில், 1300 வருடங்களுக்கு இப்பால் பாதிரியார் நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் புதுமையை மறுக்க முன்வந்தது, அவருடைய பிடிவாத குணத்தையன்றோ காட்டுகின்றது.

இன்னும், "மகமதுக்கு காக்காய் வலி கண்டு மூர்ச்சையாய்க் கிடக்கும்போது கப்ரயேல் சம்மனசு தோன்றி தன்னுடன் சம்பாஷித்ததாகக் கூறி தான் கடவுளுடைய தீர்க்கதரிசி என்று சொல்லுவான்" என வரைகின்றார். இதுவும் கிறிஸ்தவர்களின் பழைய கூற்றேயாகும். இதற்கும் பலராலும் தக்க மறுப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. "வஹீ" வரும் சந்தர்ப்பங்களைக் குறித்து இவ்வாறு எழுதி வருகின்றனர். வஹியின் விஷயங்களையும், அதன் அந்தரங்கங்களையும் தெரிந்திருப்பாராயின் பாதிரியார் இவ்வாறு எழுதத் துணிந்திருக்கமாட்டார். அவ்வாறு அறிந்துகொள்வதற்கு இவர்களுக்கு சந்தர்ப்பந்தானேது? ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள்மீது இறக்கப்பட்ட இன்ஜீல் வேதம் அவர்களுக்குப்பின் சொற்ப காலத்திலேயே அது இருக்குமிடந் தெரியாது மறைந்துவிட்டபோது, ஹவாறிய்யீன்களாலும் மற்றவர்களாலும் எழுதப்பட்ட புத்தகங்களை வேதமென்று வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு வஹியின் தன்மை எங்கிருந்து தெரியப் போகிறது?

இன்னும் பாதிரியார் அனாவசியமாக உண்மையற்ற விஷயங்களை அவதூறாக பல வாறு எழுதியிருக்கின்றார். அவை ஒவ்வொன்றுக்கும் மறுப்பெழுதுவதானால் அநேக ஏடுகள் நிறைந்துவிடுமெனக் கருதி விடுத்தனம்.

இவ்வாபாசக் கட்டுரையை மறுப்பதற்காக 17-8-34 வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப்பின் முத்தியால்பேட்டை ஜாமிஆ மஸ்ஜிதில், ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர் மௌலானா மௌலவீ அஹ்மத் சயீத் சாஹிப் அவர்கள் தலைமையின் கீழ், நம் 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்க சார்பில் மகாநாடு பெற்று, அதில் இவ்வாபாசக்கட்டுரையைக் கண்டித்தும், இதனை எழுதியவர் அச்சிட்டவரை தண்டிக்க வேண்டுமென கவர்ன்மெண்டாரைக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கிணங்க நமது சங்கம் நடவடிக்கை எடுத்து கவர்ன்மெண்டு கனம் சீப் செக்ரிடரி, போலிஸ் கமிஷனர் துரை முதலியவர்களுக்கு மனுக்கள் அனுப்பியிருப்பதோடு கமிஷனரிடம் சங்கத்தின் டெபுடேஷன் சென்று விஷயங்களைத் தெரிவித்துக்கொண்டதில் கமிஷனர் துரை அதற்கு வேண்டிய பந்தோபஸ்துசெய்வதாய்த் தெரிவித்திருக்கின்றார்.

சென்னை முஸ்லிம் மகாநாடு,

ரெவரண்டு M. J. M. பாதிரியாரால் இயற்றப்பெற்ற நூலைக் கண்டித்து அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்காக, 2-9-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், மண்ணடி முஸ்லிம் யூனியன் முயற்சியால், சென்னையிலுள்ள சகல அஞ்சுமன்களின் சார்பில், முஸ்லிம்களின் மகாநாடு நடைபெறும். ஆலீ ஜனாப் ஸவுக்கார் ஸீ. அப்துல் ஹகீம் சாஹிப் அவர்கள் பஹாதூர் தலைமை வகிப்பார்கள்.

வைஸ்ராய் நிர்வாக சபை மெம்பர் பதவி

வைஸ்ராய் நிருவாக சபையில் மெம்பராக இருந்துவரும் ஜனாப் ஸர், மியான் பஜ்லி ஹுசைன் அவர்கள் வகித்துவரும் ஸ்தானம் சமீபத்தில் காலியாகப் போவதால், அந்த ஸ்தானத்துக்கு காதியானிக் கொள்கையுடைய செளத்ரீ ஜபருல்லாகானை நியமிக்கப் போவதாக ஒரு வதந்தி வெளிவந்துலவுகின்றது. இதைக்கேட்டு இந்தியா முழுவதிலுமுள்ள முஸ்லிம்கள் பெரும் பரபரப்புக்கொண்டு பஞ்சாப், மத்திய மாகாணம், டில்லி, ஷிம்லா, பம்பாய், காஷ்மீர் முதலிய இடங்களில் மகாநாடுகள் நடத்தி, அதில் செளத்ரீ ஜபருல்லாகானை காலியாகப் போகும் நிர்வாகசபை மெம்பர் ஸ்தானத்தில் நியமிக்கக் கூடாதென்று தீர்மானங்களை நிறைவேற்றி, லண்டனிலுள்ள இந்தியா மந்திரிக்கும், ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் தந்திமூலம் அனுப்பிவருகின்றனர். ஜபருல்லாகான் பக்கா காதியானியாவர். மிர்ஸாவை நபியென்று ஒப்புக்கொள்ளும் கோஷ்டியைச் சேர்ந்தவர். நபி பெருமானார் (ஸல்.) அவர்களோடு நபித்துவம் முற்றுப்பெற்றுப் போய்விட்டதென்பது சர்வ முஸ்லிம்களின் சித்தாந்தமாகும். எம்பெருமானார் (ஸல்.) அவர்களை இறுதிநபி யென்று ஒப்புக் கொள்ளவேண்டியது ஈமானின் முக்கியாம்ஸமாகும். ஆதலின் அவ்வாறு உறுதிகொள்ளாதவரை ஈமான் பரிபூர்ணமாகமாட்டாது. இவ்வாருன—இஸ்லாத்தின் அடிப்படையான அநேக விஷயங்களில் காதியானிகள் முஸ்லிம்களைவிட்டுப் பிரிந்து போவதால், அவர்கள் இஸ்லாத்தைவிட்டுப் புறம்பானவர்களென்று உலமாக்களால் தீர்ப்பளிக்கப்பட்டுப் போயிருக்கின்றது. எனவே ஜபருல்லாகான் இக்காதியானி வகுப்பைச் சேர்ந்தவராகையால், எட்டு கோடி இந்திய முஸ்லிம்களுக்கு அவர் பிரதிநிதியாக இருக்கமுடியாதென்பது திண்ணம். ஆகவே, இதனைக்கண்டிப்பதற்காக நமது 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்க சார்பில் சென்னை முத்தியால் பேட்டை ஜார்ஜடவுன் ஜாமிஉ மஸ்ஜிதில், 24-8-34 வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப்பின் ஜனாப் மௌலவீ முப்தீ முஹம்மது தமீம் சாஹிப் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஜபருல்லா கானின் நியமனத்தை கண்டித்தும், காலியாகும் மெம்பர் ஸ்தானத்திற்கு ஒரு முஸ்லிமை ஏற்படுத்தும்படியும் தீர்மானம் நிறைவேற்றி அத்தீர்மானம் இந்தியா மந்திரிக்கும், வைஸ்ராய் அவர்களுக்கும் அனுப்பவேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டு, அதன்படி தந்தியும் கொடுக்கப்பட்டதுடன், முழுவிபரங்களை தபால் மூலமும் அறிவிக்கப்பட்டது. இதேபோன்று நம் தமிழ்நாடு, சிலோன் முதலிய இடங்களிலுள்ள முஸ்லிம்கள் ஆங்காங்கு மகாநாடுகள் நடத்தி, இது சம்பந்தமான தீர்மானங்களை நிறைவேற்றி இந்தியா மந்திரிக்கும் கனம் வைஸ்ராய் அவர்களுக்கும் அனுப்பிவைக்கவேண்டும். இது அஜாக்கிரதையாக இருக்கக்கூடிய விஷயமன்று. ஏனெனின், ஜபருல்லாகான் சமீபத்தில் சிறிதுகாலம் ஆக்டிங்காக அப்பதவியை வகிக்க நேர்ந்தபோது முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தொந்திரவுகள் யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஆகவே, இது விஷயத்தில் நம் நேயர்கள் முன் ஜாக்கிரதையாக தக்கன செய்ய முன்வருவார்களாக.

சத்தியப் பிரசாரம்

காதியானிக் கண்டனம்

இதில், தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வந்த "ஹிஸ்புல்லா"க்களின் அருஞ் சேவைகளும், அந்த ஜில்லாவின் பல பாகங்களிலும் மகாநாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும், ஆங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளும், அது தென்னாட்டில் பரவியவரலாறும், அதன் பிரசாரத்தை ஏற்றி நடத்திவரும் தென்னாட்டு மிஷனரியின் விபரமும் விவரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரு வாசித்துணர்வார்களாயின், தக்க பிரயோசன மேற்படுமென்பது திண்ணம். இவ்வளவு அவசி மான புத்தகத்தை அச்சிட்டு இனமாய் விநியோகிப்பதற்காக முஹம்மது பந்தர்வாசியும், சிங்கை ஜோஹர்பார் பிரபல்ய வியாபாரியுமாகிய ஜனப் உ. றஹ்மான் சாஹிப் அவர்கள் இதற் கேற்பட்ட முழு செலவுகளையும் கொடுத்துதவி யிருக்கின்றார்கள். இப்புத்தகம் நண்பர்களுக்கு இனமாக விநியோகிக்கப்படுமாகையால் கீழ்காணும் விலாசங்களுக்கு அதற்கேற்படும் தபால் செலவுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்வார்களாக.

கிடைக்கு மிடங்கள்:—

(1) **ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்**
43-A. போஸ்டாபீஸ் தெருவு, சென்னை.

(2) **O. றஹ்மான் சாஹிப்**
2-3. ரேச்சர் ரோடு, சிங்கப்பூர்.

சித்தீகி மலர்

இஃது ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஷாஹ் முஹம்மது அப்துல் அலீம் சாஹிப் சித்தீகி காதிரீ மீரட்டீ அவர்கள், சென்னையிலும் நம் தமிழ்நாட்டின் பல ஜில்லாக்களிலும் ஆற்றிய பொன்னேபோல் போற்றத்தக்க 15 பிரசங்கங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அரும் நூலாகும். இஃது ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டுமென்பதையும், இதனை நண்பர்கள் சதா மடக்கி மடக்கிப் பார்ப்பது கொண்டு பெரும் பிரயோசன மடைவார்களென் பதையும் நாம் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை. நண்பர்காள்! இதுபொழுதே முன்வந்து இப்புத்தகத்தின் பிரதியைப் பெற்று பயன் பெறுவீர்களாக.

பிரதி 1-க்கு 0—8—0. தபால் சார்ஜ் வேறு

தனிப்பிரதி வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்

43A, போஸ்டாபீஸ் தெருவு சென்னை.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb Manager, Hifazath-ul-Islam. 43 A, Post Office St., G.T., Madras.

Regd. No. M. 2569

607

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 OCT 1934
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 5

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 10

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 ஜமாதுல் ஆகிர்மீ 1934 அக்டோபர்மீ

1. திருகுர்ஆன் ஓதுவதும், அதன்படி நடப்பதும் 357
2. ஹஜ்றத் முஹம்மது முஸ்தபா (ஸல்.) மனித வர்க்கத்துக்கு பெரிய உபகாரி ... 360
3. அன்னிய மதத்தினரின் சூழ்ச்சி ... 362
4. நாயக சரிதையில் நம்மவரின் தவறு ... 365
5. பராவீன அஹ்மதிய்யாவும், குலாம் அஹ்மதும் ... 373
6. லாஹூர் அஹ்மதியர்களும், ஆங்கில நவ்முஸ்லிம்களும் ... 374
7. அப்கானிஸ்தானில் 200 வயதுப் பெரியார் 377
8. ஹங்கேரி முஸ்லிம்களின் நிலை ... 379
9. லாஹூர் அஹ்மதியர்களும், காதியானி மிர்ஜாயீகளும் ... 382
10. தீண்டாமை விலக்கின் அந்தரங்கம் ... 387
11. மிர்ஸாயீ பித்னா ... 392
12. காதியானிகள் காபிர்களல்லவா? ... 394
13. பாதிரியார் நூல் பறிமுதல் ... 395

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா 3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,, 4	0	0
தனிப் பிரதி ...	,, 0	4	0
ஸித்திகி மலர் ...	,, 0	8	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 OCT 1934
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1353 ஜமாதுல் ஆகிர் மீ 1934 ஹு அக்டோபர் மீ	இதழ் 10

திருகுர்ஆன் ஓதுவதும், அதன்படி நடப்பதும்

ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் இறைவனுக்குக் கீழ்படிந்து நடந்ததையும் அவனுடைய திருப்திக்கும், சந்தோஷத்துக்கும் தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்திருந்ததையும் பற்றிய அருமையான ஒரு சம்பவத்தை ஷாஹ்வலியுல்லா சாஹிப் திஹ்லவி(றஹ்.)அவர்கள், தங்கள் கிரந்தத்தில் வரைந்திருக்கின்றார்கள். அல்லாஹுதஆலாவின் நல்லடியாரான ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் அல்லாஹுதஆலாவினுடையவும், அவனது றஸூல் நாயகமவர்களுடையவும் கட்டளைகளுக்கு எவ்வாறு கீழ்ப்படிபவராக இருந்தார்கள் என்பதும், அவைகளை எவ்வாறு அமல் நடத்திவைத்தார்கள் என்பதும், அல்லாஹுதஆலாவின் மார்க்கம் என்ற வர்ணத்தில் எவ்வாறு தங்களை வர்ணமிட்டிருந்தார்கள் என்பதும், வேறு எந்த வர்ணமும் ஹஜ்றத் உமர் (றலி.) அவர்களின் இருதயத்தில் ஏற்பட்டிருக்கவில்லை என்பதும் இச்சம்பவத்திலிருந்து விளங்கும்.

ஒரு முறை ஹஜ்றத் இப்னு அப்பாஸ் (றலி.) அவர்களது சபையில், ஹஜ்றத்அபூபக்ர் ஸித்தீக், ஹஜ்றத் உமர்பாறூக் ரலியல்லாஹுஅன்ஹுமா ஆகியவர்களைப்பற்றிய பிரஸ்தாபம் வந்தது. ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்டபோது, ஹஜ்றத்இப்னுஅப்பாஸ் (றலி.) அவர்களது மனம் வருத்தமுற்றுக் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது. தம்முடைய உணர்வு நீங்கும்வரை அழவும் செய்தார்கள். பின்னர், உணர்வுண்டானபோது ஹஜ்றத் இப்னுஅப்பாஸ் (றலி.) அவர்கள் "அல்லாஹுதஆலா அந்த அடியாருக்குக் கிருபை செய்யட்டும்! திருகுர்ஆனை ஓதினார். ஓதிய பின் அதன் கட்டளைப்படி நடந்தார். அல்லாஹுதஆலாவின் கட்டளையை நிறைவேற்றுவதில் எவருடைய தூற்றுதலையும் லக்ஷியம் செய்யமாட்டார். தம்முடைய புதல்வருக்கு "ஹத்து" அடிக்கும்படி செய்து, அதனால் அவருடைய புதல்வரின் உயிரும் போய்விட்ட சம்பவத்தை என்னுடைய கண்களால் நான் பார்த்தேன் என்று கூறினார்கள். அப்பொழுது சபையிலிருந்தவர்கள் ஹஜ்றத் இப்னு அப்பாஸ்

(றலி.) அவர்களிடத்தில் "றஸூலின் சிறிய தந்தையின் புதல்வ! அச்சம்பவம் எவ்வாறு நிகழ்ந்த"தெனக் கேட்டார்கள்.

அதற்கு ஹஜ்றத்இப்னுஅப்பாஸ் (றலி.) அவர்கள் கூறியதாவது: ஒருநாள் 'மஸ்ஜிதுநபவி'யில் ஹஜ்றத்உமர் (றலி.) அவர்களுடன் யான் உட்கார்ந்துகொண்டிருந்தேன். வேறு பல ஜனங்களும் அவரைச்சுற்றிலும் இருந்தனர். அப்பொழுது ஒரு ஸ்திரீ அங்கு வந்து அமீறுல்மூமினீன் (ஹஜ்றத்உமர் றலி) அவர்களுக்கு "ஸலாம்" சொன்னாள். ஹஜ்றத்உமர் (றலி.) அவர்கள் அந்த ஸலாமுக்கு பதில் சொல்லிவிட்டு "ஏதேனும் காரியமிருக்கிறதா?" வென அந்த ஸ்திரியை வினவினார்கள். அதற்கு அவள், ஆம் என்று சொல்லிவிட்டுத் தமக்கு நிகழ்பெற்ற விருத்தாந்தத்தைக் கூறினாள். அவள் கூறிய விபரத்திலிருந்து, அமீறுல்மூமினின் ஹஜ்றத் உமர் (றலி) அவர்களின் புதல்வரான 'அபூஷஹ்மா'வினால் ஒரு தவறு நிகழ்ந்ததாகவும், அதன் காரணமாக, மார்க்கச்சட்டப்படி 100 சவுக்கடி தண்டனை அடையவேண்டியவராக இருக்கிறார் என்றும் தெரியவந்தது. இதைக் கேட்டதும் அமீறுல்மூமினீன் அவர்கள், மதீனாவிலுள்ள எல்லா முஸ்லிம்களும் மஸ்ஜிதுநபவிக்கு உடனேவந்து சேரவேண்டும் என்று நகரில் அறிவித்துவரும்படி ஆள் அனுப்பினார்கள். இதன்படி முஸ்லிம்கள் மஸ்ஜிது நபவியில் வந்துசேர்ந்தார்கள். அப்பொழுது ஹஜ்றத்உமர் (றலி.) அவர்கள் "எல்லாரும் இங்கேயே இருங்கள்" என்று சொல்லிவிட்டு, என்னைத் தம்முடன் அழைத்துக்கொண்டு, தங்களது வீட்டிக்குக் கால்நடையாகச் சென்று, கதவைத்தட்டி, 'என் புதல்வன் அபூஷஹ்மா இங்கு உண்டா?' என்று கேட்டார்கள். "சாப்பிடுகிறார்" என்று வீட்டுக்குள்ளிருந்து சப்தம் வந்தது. ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் வீட்டுக்குட்சென்று "சாப்பிட்டுக்கொள்! இந்தச் சாப்பாடுதான் உனக்குக் கடைசிச் சாப்பாடாக இருக்கக் கூடும்" என்று தம்புதல்வரிடம் கூறினார்கள். இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் அவரது நிறம் மாறிவிட்டது; கையிலிருந்த உணவும் விழுந்துவிட்டது. பிறகு, அமீறுல் மூமினீன் அவர்கள் "மகனே! யான் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "தாங்கள் எனக்குத் தந்தையாகவும், அமீறுல்மூமினாகவும் இருக்கிறீர்கள் என்று கூறினார்.

அதற்கு, ஹஜ்றத்உமர் (றலி.) அவர்கள் எனக்குக் கீழ்படியவேண்டும் என்ற கடமை உம்மீது ஏதேனுமிருக்கிறதா? என்று கேட்டார்கள். அதற்கு அபூஷஹ்மா "ஒன்றல்ல, இரண்டு விதத்தில் கடமைப்பட்டுளேன்" என்று கூறினார்கள். அப்பொழுது அமீறுல்மூமினீன் அவர்கள் தங்கள் புதல்வரிடம், அந்த ஸ்திரீயுடன் நடந்துகொண்டுள்ள விஷயத்தைப்பற்றிக் கேட்டார்கள்.

அந்த ஸ்திரீ கூறியதை அபூஷஹ்மா முற்றிலும் ஆதரித்துக் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இவரது வாக்குமூலத்தைக் கேட்டுக்கொண்டு ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் அவரது கையைப்பிடித்து மஸ்ஜிதுக்கு அழைத்து வந்தார்கள். அதுபொழுது அபூஷஹ்மா (ஹஜ்றத் உமர் (றலி) அவர்களிடம்) என் தந்தையே! அவமானத்தை விட்டு என்னைக் காப்பாற்றுங்கள்; நீங்கள் எந்த தண்டனை விதித்தாலும் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்; ஆனால், பகிரங்கமாக என்னை அவமானப் படுத்தாதீர்கள்" என்று மிகவும் வருந்தியவராக மன்றாடினார். அதற்கு ஹஜ்றத் உமர் அவர்கள், "அவர்களிருவருக்கும் தண்டனை கொடுக்கும்போது விசுவாசிகளில் ஒரு கூட்டத்தார் (அவ்விடம்) பிரசன்னமாக இருக்கவேண்டும்" என்று இறைவன் கூறி இருக்கிறான் என்று கூறி, மஸ்ஜிதுக்கு அவரை இழுத்துவந்து, ஸஹாபிகளின் முன்னிலையில் நிறுத்தி "அந்த ஸ்திரீ உண்மை கூறி இருக்கிறாள்; அபூஷஹ்மா அவளுடைய வாக்கு மூலத்தை மெய்யென்கிறார்" என்று கூறி, அபூஷஹ்மாவுக்கு 100 சவுக்கடி கொடுக்கும் படியும், தம்முடைய புதல்வர் என்பதற்காக அடிப்பதில் தயை பாராட்டக் கூடாது" என்றும் தமது அடிமையான 'அப்லஹ்'க்குக் கட்டளையிட்டார்கள். இதைக் கேட்டவுடன் அப்லஹ் நடுங்கினார்; மிகவும் வருத்தமுற்று தன் எஜமானனின் புதல்வரைச் சவுக்கினால் தானடிப்பது தன்னால் ஆகாது என்று துக்கமாகக் கூறினார். அதற்கு ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் "அப்லஹே! எனக்குக் கீழ்படிவதானது அல்லாஹ்வுக்கும் அவனது றஸூலுக்கும் கீழ்ப்படிவதாகும். ஆதலால், நான் கட்டளையிடுவதை நிறைவேற்றுவது (வாஜிபு) கடமையாகும் என்பதை நீ அறிவாயாவெனக் கூறினார்கள். இதைக் கேட்டவுடன், அபூஷஹ்மாவின் திரேகத்தின் மீதிருந்த வஸ்திரத்தை

அப்லஹ் அப்புறப்படுத்தினர். இதைப்பார்த்த ஏனைய ஜனங்கள், கண்களிலிருந்து நீர்வடிந்தவர்களாய் அழ ஆரம்பித்துவிட்டனர். ஹஜ்றத் உமர் (றலி) அவர்களும் கண்ணீர் வடித்துக் கொண்டு "மகனே! அல்லாஹுத ஆலா எனக்கும் உனக்கும் கிருபைசெய்யட்டும் என்பதற்காகவே நான் இதைச் செய்கிறேன்" என்று கூறினார்கள். எனவே, ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் தங்கள் புதல்வரிடம் இம்மாதிரி கூறியவர்களாய், "அடி" என்ற கட்டளையை அப்லஹுக்கு இட்டுக்கொண்டிருந்தார்கள். எழுபது அடிவிழுந்த பின்னர் அபூஷஹ்மாவுக்குத் தாகவிடாய் ஏற்பட்டது. அவர் ஜலம் கேட்டார். அதற்கு ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள் "மகனே! பொறுமையாயிரு. அல்லாஹுத ஆலா இந்தத் தண்டனையினல் உன்னை உனது பாவத்தைவிட்டுப் பரிசுத்தமாக்கி விட்டால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் திருகரங்களால் 'கௌதர்' என்ற தடாகத்தின் ஜலத்தை அருந்துவாய்; பின்னர் உனக்கு எப்பொழுதும் தாகவிடாய் ஏற்படாது என்று கூறினார்கள். பின்னர், அப்லஹை நோக்கி "அடி" என்று கட்டளையிட்டார்கள். 80 அடி முடிந்தபோது அபூஷஹ்மா மூர்ச்சையாகிவிட்டார். அது சமயம் தமது தந்தையாருக்கு பயணத்துக்குரிய 'அல்விதாஇ' ஸலாம் சொன்னார். ஹஜ்றத் உமர் (றலி) அவர்களும் "வஅலைக்கஸ்ஸலாம்" என்று கூறி, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றீராயின் என்னுடைய ஸலாமைச் சொல்லி, தங்களது ஊழியரான உமரானவர் திருகுர்ஆனை ஓதுகிறார். அதன் கட்டளைகளை அமல் நடத்துகிறார். இவ்வித நிலைமையில் அவரை விட்டு வந்தேன் என்று கூறவேண்டும்" என்று சொன்னார்கள். மறுபடியும் தமது அடிமையினிடம் "அடி" என்று உத்தரவிட்டார்கள். மறுபடியும் 10 முறை அடித்தபோது அபூஷஹ்மாவுக்குப் பலஹீனமேற்பட்டதால் பேச்சு நின்றுவிட்டது. கொஞ்சம் நேரத்திற்காகவேனும் அடிப்பதைத் தாமதப்படுத்தும்படியாக ஏனைய ஸஹாபாக்கள் கேட்டுக்கொண்டார்களாயினும் அதற்கு ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள், "பாபம் செய்வதில் தாமதம் ஏற்படவில்லையாதலால், தண்டனையிலும் தாமதம் செய்யமுடியாது" என்று கூறிவிட்டார்கள். இதற்கிடையே அபூஷஹ்மாவின் தாயார் அவ்விடம் வந்து "அமீறுல் மூமினீன் அவர்களே! தாங்கள் அபூஷஹ்மாவை விட்டுவிடுங்கள்; இனி மீதி இருக்கிற அடி ஒன்றுக்கு ஒரு ஹஜ்ஜுவீதம் கால்நடையாகச் சென்று நிறைவேற்றுகிறேன். இன்னும், அதற்குத்தகுந்த அளவு ஸதக்காவும் செய்கிறேன்" என்று கூறினர். அதற்கு ஹஜ்றத் உமர் (றலி.) அவர்கள், ஹஜ்ஜுச் செய்வதாலும் ஸதக்கா கொடுப்பதாலும் 'ஹத்து' அதாவது சவுக்கடிக்குப் பகரம் ஏற்படாது என்று பதில் கூறிவிட்டுத் தங்கள் அடிமையை நோக்கி "ஹத்து அடிப்பதைப் பூர்த்தியாக நிறைவேற்றிவிடும்" என்று கட்டளையிட்டார்கள். அப்லஹும் அடிக்க ஆரம்பித்தார். இவ்விதமாக 100-வது அடியாகிய கடைசி அடி விழுந்தவுடன் அபூஷஹ்மாவும் பூமியில் விழுந்தார். அவரது உடலத்தில் உயிரும் இருக்கவில்லை. பின்னர் ஹஜ்றத் உமர் (ரலி.) அவர்கள் தங்கள் மைந்தரின் தலையைத்தூக்கி மடியின்மீது வைத்துக்கொண்டு மிகவும் துக்கப்பட்டு வருந்தி அழுததுடன் "உன்னுடைய பாவத்தை இறைவன் மன்னிப்புச் செய்வானாக" என்று கூறிக்கொண்டிருந்தார்கள். இச்சம்பவம் நிகழ்ந்த 40-வது நாள் 'ஹுதைபத்துப்னுயமான் (றலி) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைச் சொர்ப்பனத்தில் பார்த்தார்கள். அதுபொழுது ஒரு வாலிபர் பச்சை உடை அணிந்தவராய் நாயகமவர்களுடன் நின்று கொண்டிருந்தார். உடனே நாயகமவர்கள் "ஹுதைபாவே! உமறுக்கு என் சலாம் எத்திவைத்து, "நீர் திருகுர்ஆனை ஓதி அதிலுள்ள கட்டளைகளை நிறைவேற்றும் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றினீர்" என்று கூறும் என்றார்கள். ஹஜ்ரத் அவர்கள் இவ்வாறு சொல்லி முடிந்தவுடன், அவ்வாலிபர் "ஹுதைபாவே! என் தந்தைக்கு என் சலாம் சொல்லுவதுடன் எனக்குத் தண்டனை கொடுத்து பாவம் என்ற அழுக்கைவிட்டு என்னைச் சுத்தம் செய்ததுபோல அல்லாஹுத ஆலா அவரைப் பரிசுத்தமாக்கி நற்கூலி அளிப்பானாக" என்று என்சார்பாகக் கூறுங்கள், என்று தெரிவித்தார்.

நேயர்காள்! முற்கால சஹாபாக்கள் திருகுர்ஆனின் கட்டளையைச் சிரமேற்கொண்டு அதன்படி நடந்துவந்ததால்தான் அல்லாஹ்த ஆலாவின் உண்மை அடியார்களாகவும், உலகில் பெரும் கீர்த்தி மகிமையோடி விளங்குபவர்களாகவு மிருந்துவந்தார்களென்பது மேலே கூறப்பட்டுள்ள சம்பவங்களால் நமக்கு நன்கு புலனு

கின்றது. எனவே நாமும் அந்த தெய்வத்திரு மறையின் திருக்கட்டளைகளை சிரமேற்கொண்டு நடப்போமாகில் இருபதியிலும் ஜெயசீலர்களாக விளங்குவோமென்பது திண்ணம். நம் முஸ்லிம் நேயர்கள் இதனைச் சிந்தையில் கொண்டு சிறப்புற்று விளங்குவார்களாக.

ஹஜ்றத் முஹம்மது முஸ்தபா (ஸல்.) மனிதவர்க்கத்துக்கு மிகப் பெரிய உபகாரி.

காஷ்மீர் ஜம்மு சமஸ்தானத்தின் பிரதம நீதிபதியான லாலா கண்ணூர்ஸேன் பிரசங்கம்.

பஞ்சாப் ஹைகோர்ட் நீதிபதியான ஜஸ்டிஸ் அப்துர் ரஷீது அவர்களின் தலைமையின்கீழ், இஸ்லாமியாகாலேஜ் "ஹபீபிய்யா" ஹாலில் திருநபி ஜனனவிழா கொண்டாடப்பட்டபொழுது, காஷ்மீர் சமஸ்தான பிரதம நீதிபதி லாலாகண்ணூர் ஸென் ஆங்கிலத்தில் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:—

நபிமார்களும், அவதார புருஷர்களும் தோன்றாத எந்த சமூகமும் உலகிலில்லை. உலகத்தின் எந்த தேசத்திற்குச் சென்றாலும் ஆங்கு இறைவனது தூதர்களின் பிரஸ்தாபமிருந்துகொண்டு தானிருக்கும். கிறிஸ்துவர்களுக்கு இயேசுநாதரைப்பற்றிய பெருமையும் சந்தோஷமும் இருப்பதுபோல, ஹிந்துக்களும் தங்களுடைய ரிஷிகளையும், அவதார புருஷர்களையும் தங்களுக்குரிய நேர்வழியின் பொக்கிஷமாகக் கருதுகின்றார்கள். ஆனால், ஹஜ்றத் முஹம்மது ரஸூலுல்லாஹ் அவர்களைப் பின்பற்றிய மனிதர்கள் இவ்வுலகில் கோடிக்கணக்காக இருந்து வருகின்றார்கள். ஆயினும், அவர்கள் ஹஜ்றத் அவர்கள்பால் கொண்டுள்ள பக்திக்கும் விசுவாசத்துக்கும், அன்புக்கும் உலகில் வேறெந்த சமூகத்தினரிடத்திலும் நிகர் இல்லை. இது ஒன்றே அப்பெரியாரின் உண்மைதத்துவத்திற்கும் மகத்துவத்துக்கும் பெரிய சான்றாகும். நாங்கள் ஸ்ரீ கிருஷ்ணஜீயை அவதார புருஷராக ஒப்புக்கொண்டிருக்கிறோமாயினும் ஹஜ்றத் முஹம்மத்ஸாஹிப் அவர்களின் சரித்திரத்தையும்ஆழ்ந்துபடிக்கவேண்டியது அவசியமாகிறது.

அற்புதங்கள்

சில ஜனங்கள் அற்புதங்களையும் முஃஜிஸாத்துகளையும் பற்றிய நிகழ்ச்சிகளை மறுக்கின்றார்கள். ஆனால், முஃஜிஸாத்துகள் அப்பெரியார்கள் மூலம் நிச்சயமாக வெளியாயிருக்கின்றன; அவைகளை எவ்விதத்திலும் மறுக்கமுடியாது என்று யான் பகிரங்கமாகக் கூறுகிறேன். படிப்பற்றவர்களாகவும், ஒற்றுமை யற்றவர்களாகவுமிருந்த அறபியர்களை, உலகத்திலுள்ள சிறந்த நாகரீகவான்களின் முன்னணியில் ஹஜ்றத்முஹம்மது ஸாஹிப் கொண்டுவந்து நிறுத்திவிட்டார்கள். இது அப்பெரியாரின் அற்புதச் செய்கையல்லவா? அவர்களிடத்தில், இப்பெரியார் உண்டுபண்ணிய லௌகிக வைதிக மாறுதல்களுக்கு உலகச் சரித்திரத்தில் வேறெங்கும் உதாரணம் இருப்பதாகக் காணப்படவில்லை. உலகத்தில் அக்கிரமமும் அநீதியும் பெருகிவரும்போது,இறைவனின் சக்தியானது முஃஜிஸா என்ற முறையில் வெளிப்படுகிறது. உங்களுக்கு ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களின் நடவடிக்கைகள் ஞாபகமிருக்கலாம். அவர்களுக்கு இறைவன்பாலுள்ள அன்பு,பிரியம் ஆகியவைகள் "என் றப்பே! உன்னை எனக்குக் காண்பிப்பாயாக" என்ற தொனியை அவர்கள் நாவிலிருந்து அவர்களையும் அறியாமலே வெளிப்படுத்தின. அதற்கு "என்னை நீ பார்க்கவே முடியாது" என்ற பதில்வந்தபோது, சிருஷ்டிக்கர்த்தாவுக்கும் சிருஷ்டிப்பொருளுக்குமிடையிலுள்ள நேசமானது ஒருஸ்தானத்தில் ஒன்றுகூடிற்று. அதனால், ஹஜ்றத்மூஸா அவர்களிடமிருந்து அற்புதச் செய்கைகள் தோன்றலாயின.

சிறந்த குணம்

ஹஜ்ரத் முஹம்மது (ஸல்.) குறைஷியரின் கௌரவ மிக்கமேலான ஒரு குடும்பத்தில் பிறந்தார்கள். மக்கமா நகரில்தான் ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள், எல்லாவற்றிற்கும் முதலில் கஃபா என்ற ஆலயத்தின் அஸ்திவாரத்தை உயர்த்தி, ஏக நாயனையே வணங்கவேண்டுமென்று அறிக்கையிட்டார்கள். ஹஜ்றத் முஹம்மது ஸாஹிபின் பால்யப்பருவகாலத்தை நீங்

கள் கவனித்துப்பார்ப்பீர்களாயின், அவருடைய உண்மை, நற்குணம் ஆகியவைகளின் மகத்துவம் உங்களுக்குப்புலப்படும். அவருடைய நாணயமும், அமானிதத் தன்மையும் அச்சமூகத்தினரிடம் பழமொழியாக ஏற்பட்டுவிட்டது. அவருடைய எல்லா சமூகத்தாரும் அவருக்கு 'அல் அமீன்' என்ற சிறப்புப் பெயரைக் கொடுத்திருந்தனர். நபிகள் நாயகமவர்களின் நடைமுறைகளிலும், தன்மையிலும் ஒருவிதமான அகிருன சக்தி இருந்தது. இதனால், எல்லா மனங்களும் அவர்பால் திரும்பி இருந்தன. 'ஹஜ்ருல் அஸ்வத்' சம்பந்தமாகநடந்தசம்பவம்நாயகமவர்களின் தீர்க்கதரிசனத்துக்குச்சிறந்த அத்தாட்சியாகும். குறைஷியருக்குள் ஏற்பட இருந்த ஒருபெரிய யுத்தத்தைத் தம்முடைய சிறந்தயுக்தியினால் தடுத்து விட்டார்கள். அவருடைய ஒப்பற்ற நற்குணமும், பரிசுத்த நடத்தையும் தான் எல்லா மனிதரும் அவரைச் சுற்றி ஒன்று கூடும்படி செய்து விட்டன. அவர் உலகம் அனைத்திலும் ஒருபெரிய மாறுதலை உண்டு பண்ணி விட்டார். நாகரீகமடைந்த வர்க்கத்தார் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த கல்வி ஞானமற்றவழி கேடான அந்த சமூகத்தார், சிலவருஷங்களுக்குள் பூமண்டலத்திலுள்ள எல்லா தேசங்களிலும் ஆதிக்கம் கொண்டு விட்டார்கள்.

ஏகதேய்வக் கோள்கையும் மனித சமத்துவமும்

விக்கிரக ஆராதனை, நக்ஷத்திர வணக்கம், மூடக்கொள்கை ஆகியவைகளில் உலகம் உழன்று கொண்டிருந்தது. ஒவ்வொரு சமூகத்தாரும் தங்களுக்கென வெவ்வேறு தெய்வங்களை ஏற்படுத்தி வைத்திருந்தனர். ஏராளமான தெய்வங்கள் இருந்தபடியால் ஜனங்களுக்குள் பகைமையும் விரோதமும் அதன் கடைசி எல்லையை அடைந்திருந்தது. நாயகமவர்கள் நபியாகத் தோன்றிய உடனேயே ஏக தெய்வக் கொள்கையைப் போதித்தார்கள். மிகவும் கம்பீரமான வார்த்தைகளில் லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதை அறிக்கை இட்டார்கள். தெய்வம் ஒன்றுதான் என்ற கொடியை உலகம் அடங்கலிலும் பறக்க விட்டார்கள். தங்களுடைய அஸ்திவாரமான கொள்கையிலேயே எல்லா சமூகத்தாரிலும் ஒற்றுமையையும் நேசத்தையும் உண்டாக்கி விட்டார்கள். பின்னர், மனித ஒழுக்கத்தைச் சீர்திருத்தம் செய்வதற்காக ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அத்திட்டம் யாவரையும் கவரக்கூடியதாக இருக்கின்றது. மனித சமத்துவத்துக்கு கிரியாம்சையில் நடந்து காட்டிச் செய்த முன்மாதிரிதான் அவர்கள் செய்த ஊழியங்களிலெல்லாம் மிகப்பெரிய ஊழியமாக இருக்கிறது. வம்சப்பெருமையையும், நிறவித்தியாசத்தையும் அடியுடன் அழித்துப் போட்டார்கள். இப்போதைய உலகத்துக்கு இதுதான் தேவையுள்ளதாக இருக்கிறது. மனிதவர்க்கத்துக்கு நாயகமவர்களின் இச்செய்கை மிகவும் பெரிய உபகாரமாக இருந்து வருகிறது.

மனிதசமூகத்தின் வழிகாட்டி

அவருடைய இருதயத்தில் அறபிகளைச் சீர்திருத்தும் எண்ணம் மாத்திரமில்லாது, எல்லா சமூகத்தாரின் நன்மையும், வெற்றியும் அவருடைய முக்கியநோக்கமாக இருந்தது. அவருடைய இருதயம் எல்லா சமூகத்தாருடையவும், எல்லா மதத்தாருடையவும் வழிகேடான நிலைமைக்காக வருந்தித்துடித்துக்கொண்டிருந்தது. எல்லாமனிதர்களிலும் ஒரே சகோதரத்துவத்தை ஏற்படுத்தி விடவிரும்பினர். நபிப்பதவியடைவதற்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் ஹஜரத் கதீஜாவை அவர்மணம் புரிந்து கொண்டார். இந்தக்காலத்தில் அவர் ஒப்பற்ற வாழ்க்கையை நடத்திக்காண்பித்தார். ஏழைகள், தரித்திரர்கள், அடிமைகள் ஆகியவர்களுக்கு உதவி புரிந்து கொண்டிருந்தார். இவர் தம் கையை, அடித்துத் துன்புறுத்துவதைவிட்டுக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். ஏழைகளையும், தரித்திரர்களையும், தேவையுள்ளோரையும் நேர்மையாகவும், கருணையாகவும் நடத்தினர். அவர்களுடைய துக்கத்திலும், கவலையிலும் பங்கெடுத்துக்கொண்டிருந்தார். குழந்தைகள்பால் கருணை காட்டினர். அந்நியர் தமது ஊருக்கு வருங்காலை, அவர்களுக்குச் சவுகிரியமும் வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தார். இப்படிப்பட்டவர்களுக்குத் தம்மாலான எல்லா உதவியும் புரிந்தார். ஹஜ்றத் கதீஜாவின் துணையை அவர் மிகவும் நேரானமுறையில் உபயோகப்படுத்தினர்.

ஹஜ்றத்முஹம்மது சாகிப் உண்மையான நபியாக இருந்தாரென்பது, அவருடைய சரித்திரத்தை கவனித்துப் படிப்பது கொண்டு இவ்வுண்மை நன்கு வெளியாகும். தமது நுபுவ்

(364-ம் பக்கம் பார்க்க)



அன்னிய மதத்தினரின் சூக்ஷி

நேயன்மீர் !

ஸர்வசத்தியு முள்ள அல்லாஹ்த ஆலாவானவன் சிருஷ்டிக் கோடிகளைப் படைத்து இரக்ஷித்து வருவதோடு, நபிமார்களையும் வேதங்களையும் அனுப்பி மானிடர் உய்த்தொழுகும் வழிகளையும் காண்பித்திருக்கின்ருன். எனவே அதன்படி நடந்தால்தான் இம்மையிலும், மறுமையிலும் நேர்வழி அடையமுடியும். ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் காலம் முதல் இறுதி தீர்க்கதரிசியான ஹஸ்ரத் முகம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் காலம்வரையிலுள்ள எல்லாத் தீர்க்க தரிசிகளும் ஒரே தோரணையில்தான் அனுப்பப் பட்டார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் எல்லாத் தீர்க்கதரிசிகளையும் உண்மை யாக்கிவைப்பார்கள். ஜனங்களின் தேவைக்குத் தக்கவாறு வேதங்கள் சிறியதாயும் பெரிதாகவும் அருளப்பட்டு வந்ததாயினும் முற்காலத்திய வேதங்கள் யாவும் அதன் மீது அநேக காலங்கள் சென்றுவிட்ட காரணத்தாலும், அக்காலத்தில் எழுதிவைக்கும் சாதனம் குறைவாக இருந்ததாலும், மக்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்வது கொண்டு வேதாகமங்களை தீக்கிரையாக்கி வந்த காரணத்தாலும் அப்பிரதிகள் கையிழக்கப் பட்டுப் போய்விட்டது.

அதன் பின் பிற்காலத்தவர் தாங்கள் கேள்விப் பட்டிருந்த விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு தங்களிஷ்டம்போலெல்லாம் விஷயங்களை அத்துடன்சேர்த்து எழுதி, அவைகளுக்கு பழயவேதங்களின் பெயர் நாமங்களைச் சூட்டி விடுவது வழக்கம். இந்நிலைமையில் பற்பல சமயங்களில் விஷமிகளின் கையாடல்களின் காரணமாய் அநேக ஆபாஸக்கட்டுறைகளும் அதில் புகுத்தப் பட்டுவிட்டது. எனவே பைபிளின், புதிய, பழய, ஏற்பாடுகளனைத்தும் இதே முறையில்தான் இருந்து வருகிறது. தவ்ருத் முஸாநபி (அலை) அவர்களுக்குப் பின்னும், நான்கு இன்சீல்களும் ஈஸா நபி (அலை.) அவர்களுக்குப் பின்னும் வெகுகாலம் கழித்து எழுதப்பட்ட தென்பதற்கு அதே வேதங்களிலே போதிய அத்தாக்ஷிகள் இருந்துவருகிறது. இந்நிலைமையில் இவைகளுக்குப் பாதிரிகள் தட்டுக்கெட்டு தடுமாறி கூடார்த்தங்கள் செய்தும், ஒன்றும் முடியாது இவைகள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதுதான் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள நேர்ந்திருக்கின்றன என்பதற்கு அவர்களின் வியாக்கியான நூற்களே சாக்ஷியம் பகர்ந்து கொண்டிருக்கிறது.

அக்குறைகளையெல்லாம் நீக்குவான்வேண்டி, என்றைக்கும் நின்றிலங்கும் வேதமான திருக்குர்ஆன் ஷரீபை அல்லாஹ்த ஆலா எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குக் கொடுத்தனுப்பினுன். அவர்கள்பால் ஸகல நபிமார்களிடம் காணப்பட்ட யாவற்று சர்குணங்களும் ஸம்பூரணமாய் ஒருங்கே காணப்பட்டு வந்தது. "மானுஷீக நற்குணங்களைச் சம்பூரணமாக்குவான் வேண்டியேயான் அனுப்பப்பட்டுளேன்" என நபிபெருமானுர் (ஸல்.) அவர்களே கூறியுள்ளார்கள்.

ஆரம்பகாலத்தில் எதிரிகளால், நபிகள் திலகம் (ஸல்.) துன்புறுத்தப்பட்டாலும் கடைசியாக தங்கள் கோரிக்கையில் வெற்றிபெற்ருர்கள். அரபநாடு முழுதையும் ஜெயித்துவெற்றிக் கொடி நாட்டிய அக்காலத்தும் தங்கள் விரோதிகளை பழிவாங்காமல் மன்னித்தருளினுர்கள். அவர்களின் மேன்மையான இந்நற்குண நற்போதனைகளைக் கொண்டே இஸ்லாம் இவ்வளவு தீவிரமாகப் பரவிற்று. அதனுல் தங்கள் கண்முன் ஆயிரக்கணக்கான பக்தகோடிகள் இறுதி வேதத்தை சிரமேற் கொண்டொழுகும் பாக்கியத்தைக்கண்டு களித்து ஆனந்தித்தார்கள். சத்திய இஸ்லாத்திற்கே நேர்விரோதமாய் அதனை அடியோடு கெல்லி எறிந்துவிட வேண்டுமென்று கங்கணங்கட்டி வாளேந்தித்திரிந்த

எத்தனையோ வேந்தர்கள், நபிபெருமான் (ஸல்) அவர்களின் போதனைக் குட்டப்பட்டு விஷம் அகற்றப்பட்ட சர்ப்பத்தைபோல் படிந்து, இஸ்லாத்தைக் காப்பாற்றும் வீரர்களாக அமர்ந்து விட்டனர்.

இலங்கா நிற்கும் சூரியனை நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் ஸஹாபாக் (தோழர்)கள் ஒளிசொரிக்கும் நட்சத்திரங்கள் போலாகி விட்டனர். ஆடுகள், ஒட்டகங்கள் மேய்த்துக் கொண்டு பாலைவனங்களில் சஞ்சரித்து நாகரீகம், முன்னேற்றம், நற்குணம் முதலியவைகள் இன்னதென்றே அறியாத அராபியர்கள் நபிபெருமான் (ஸல்.) அவர்களின் சத்போதனையின் பயனாக அகில உலக போத காசிரியர்களாகவும், ராஜீய தேசிய நிபுணர்களாகவும், தேசங்களை ஜெயித்தாளும் வீரர்களாகவும் ஆகிவிட்டனர். எனவே நபிபெருமான் (ஸல்.) அவர்களுக்குப் பின் சொற்பகாலத்திற்குள் உலகத்தின் அரைபாகத்தை தங்கள் வயப்படுத்திக் கொண்டார்கள். இஸ்லாத்தின்போதனைகள் யாவரிடமும் பரவுவதற்கு தக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு நூற்றாண்டுக்குள் உலக முழுதும் இஸ்லாத்தின் நற்போதனைகள் இன்னதுதான் என்பதை நன்குணர்ந்து கொண்டது. ஆகவே புத்திக்கும், யுக்திக்கும், இயற்கைக்கும் பொருத்தமான சத்திய மார்க்கமாம் இஸ்லாத்திற்கு முன் மற்ற மதங்கள் யாவும் போட்டிபோட முடியவில்லை.

இறுதி நபியான, எம்பெருமான் (ஸல்) அவர்களையும், அவர்களின் போதனைகளையும் ஒருவாறு உணர்ந்து கொண்டீர்களாதலின் இவண் இறுதிவேதமாம் திருக்குர்ஆனின் விஷயங்களையும்சற்று கவனிப்பீர்களாக. இதில் முந்தியவேதங்கள், ஆகமங்கள், சுவிஸேஷங்கள் ஆகியவற்றின் முக்கியாம்சங்கள் யாவும் அருளப்பட்டுளது. முக்காலத்தும் தேவைப்படும் சகல போதனைகளும் இதில் நிரம்பியுளது. இதன்போதனை முறையோ சகல மானிடர்களையும் தம்பக்கம் ஈர்த்துக்கொள்ளும் சக்திவாய்ந்ததாய் அமைந்துளது. சகல கலைகளும், சகல சீர்திருத்தங்களும் மானுஷீக முன்னேற்றத்திற் குறிய சகல வழிகளும் இதில் விவரிக்கப்பட்டுளது.

முந்திய வேதங்களைப் போல் இவ்வருள் வேதத்தையும் ஜனங்கள் காப்பாற்ற வேண்டிய விஷயத்தில் அசட்டைசெய்துவிடக்கூடும் என்னும் காரணத்தாலும், இதுகடைசிவேதமாகவும் இதற்குப்பின் வேதம் இல்லாதிருப்பதாலும் இதனைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பை அல்லாஹ்த ஆலா தன் வயமேவைத்துக்கொண்டான். எனவே குர்ஆன்ஷரீப் காப்பாற்றப்படும் விதம் ஓர் தெய்வீக சக்திவாய்ந்ததாகவேதான் யிருந்துவருகின்றது. அதாவது, கோடிக்கணக்கான மக்களின் ஹிருதயங்களில் குர்ஆன் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. எவராகிலுமொருவர் அதில் சற்றுகூட்டியோ, குறைத்தோ மாற்றியோ ஓதுவாராயின் அல்லது எழுதுவாராயின் அல்லது அச்சிடுவாராயின் அக்ஷணமே மக்கள் அறிவுறுத்தி சீர்திருத்தி விடுவர். இக்காரணத்தினால் அது எவ்வாறு அருளப்பட்டதோ அவ்வாறே இன்றுவரை இருந்து வருகிறது. இன்ஷா அல்லாஹ் இறுதி நாள்வரை அப்படியே யிருந்தும் வரும் என்பதிலையமில்லை. இதினாலேதான் பன்னிரண்டு நூற்றாண்டுகளாக எவ்வித மாறுதலுமின்றி பாதுகாக்கப்பட்ட வேதம் குர்ஆனைப்போல் வேறொன்றுங் கிடையாதென ஸர்வில்லியம் முயூர் "லைப் ஆப்முஹம்மத்" என்ற நூலில் வரைந்திருக்கின்றார். மேலும், நபிபெருமான் (ஸல்.) அவர்களுடைய வாழ்க்கை விபரங்களும், பட்டப் பகலே போன்று மிளிர்ந்து கொண்டிருக்கிறது. திருவேதத்திற்கு அவர்கள் செய்த வியாக்யானமும், அவர்கள் அநுஷ்ட்டித்துக் காட்டிய விதங்கள் சகல விபரங்களுடனும் தெளிவுபடுத்தப் பட்டிருக்கின்றன. எனவே முந்தியவேதங்களின் கருத்துக்களில் ஜனங்கள் தடுமாறுவது போலல்லாமல் திருக்குர்ஆனின் கருத்துக்களை விளங்கிக்கொள்வதில் வெகு சுலபமான வழிகள் ஏற்பட்டுள்ளன.

இஸ்லாம்மார்க்கம் பூஷணமாய்ப் பூண்டுள்ள இத்தியாதி சிறப்புகளின் பயனாக, மக்கள் உலகின் சகலமதத்தினின்றும் இஸ்லாத்தின் கொடி நிழலில் வந்து சேர்ந்து வருகின்றனர். சத்திய இஸ்லாத்தின் வளர்ச்சியும் தெய்வீக சக்தி பொருந்தியதாகவே இருந்து வருகின்றது. கிறிஸ்துவர்களைப் போல் முஸ்லிம்களிடத்து மிஷனரி பண்டுகள் கிடையா. நவ்முஸ்லிம்களை ஆதரிக்கும் ஸ்தாபனங்களும் போதிய முறையிலில்லை. இன்னிலைமையிலும் இஸ்லாம் ஆச்சரியப்படத்தக்க முறையில் வளர்பிறைபோல் முன்னேற்ற மடைந்துவருகின்றது.

பகுத்தறிவும், நிதானபுத்தியும் படைத்த கிறிஸ்தவர்கள் அனேகர், பழயவேதங்களை

னச் சொல்லப் படுபவைகளிலேற் பட்டுள்ள ஊழல்களேயும், புதுவேதத்தின் சிறப்பையும் நன்குணர்ந்து இஸ்லாத்தில் தாமேவந்து சேர்ந்துவருகின்றனர். இவைகளேயெல்லாம் கண்டு பொறுமை கொள்ளும் பாதிரிமார்கள் மனப்புழுக்கங் கொண்டு இஸ்லாத்தின் மீதும் அதன் திருநபி அவர்கள்மீதும் இல்லாததும் பொல்லாததுமான அபவாதங்களேச் சுமத்த ஆரம்பித்தனர். அதிலும் பிற்காலத்திய கிறிஸ்தவர்கள் நபிபெருமான் (ஸல்.) அவர்கள்மீது வசைப் புராணங்கள் பாட முற்பட்டிருக்கின்றனர். இதே தோரணேயில்தான் ரெவரெண்ட் எம். ஜே. யம் என்பவர் இயற்றிய "சரித்திர சங்க்ஷேபம்" என்ற நூலின் கட்டிரையுமிருந்து வருகின்றது. இவ்வியாச நூல் சமீபத்தில்தான் முஸ்லிம்களின் பார்வைக்கு வந்தது.

நபிபெருமான் (ஸல்.) அவர்களுக்காக தங்கள் உயிரையும் அர்ப்பணம்செய்யக் காத்திருக்கும் முஸ்லிம்கள், இவ்வசை மொழியைக் கண்டு மனம்புழுங்கினர்; ஆவேசங்கொண்டனர்; கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசாங்கத்தாருக்கு அனுப்பிவந்தனர். டெபுடேஷன் சென்று அதிகாரிகளேக் கண்டும் வந்தனர். இதற்கென்றே 2-9-34-ல் திருவல்லிக்கேணி கடற்கரையில் மாபெரும் மகாநாடு நடைபெற்றது. அன்று முஸ்லிம்கள் பூர்ண ஹர்த்தால் அனுஷ்டித்தனர். சென்னேயின் எல்லாவிடங்களிலிருந்தும் சகல முஸ்லிம்களும் ஊர்வலமாகப் புறப்பட்டு, திருநபியின் மீது தங்களுக்கு ஏற்பட்டுள்ள அன்பையும், பிரீதியையும் வெளியாக்கும் தோரணேயில் பாடிக்கொண்டும் கைகளில் கொடிகளேத் தாங்கிக்கொண்டும் பவனி சென்றதானது கண்களே கவரக்கூடியதாகவும், நெஞ்சைப்பிளக்கக் கூடியதாகவுமிருந்தது. அன்று 40000 பேர்கள் ஸவுகார் ஸி. அப்துல்ஹகீம் சாஹிப் பகதூர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கண்டனத்தீர்மானம் நிறைவேற்றினர்கள்.

ஆனல் முஸ்லிம்களின் உணர்ச்சியைத் தெரிந்துகொள்ளாத "கத்தோலிக் லீடர்" என்னும் கிறிஸ்தவ ஆங்கிலப் பத்திரிகையானது, ஹோம்மெம்பராக ஓர் கிறிஸ்த்தவர் நியமிக்கப் பட்டு விட்டதற்காகத்தான் முஸ்லிம்கள் இவ்வாறு கிளர்ச்சிசெய்து வருகின்ருர்களென்று எழுதி யிருந்தது. இது அப்பத்திரிக்கையின் அறியாத்தனமேயாகும். ஏற்கனவே இதே மாதிரியான கட்டுரையொன்றை தூத்துக்குடி ஞானதூதன்" என்னும் பத்திரிகை எழுதி வெளியிட்டது. அதனல் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. இதுபோன்றே சமீபத்தில் லண்டன் 'பியற்சன்ஸ் வீக்லி' என்ற ஆங்கலப்பத்திரிகை ஆபாஸக் கட்டுரைவரைந்தபோதும் உலக முஸ்லிம்களால் கிளர்ச்சி ஏற்படவே அது ஒழிக்கப் பட்டுப்போயிற்று. கத்தோலிக் பத்திரிக்கை இவைகளேயெல்லாம் அறிந்திருந்தும் மெம்பர்ஷிப் தவறிப்போனதற்காக கிளர்ச்சி செய்யப் படுகிறதென்று வரைவது அறிவீனமேயன்றி வேறென்னவென்று சொல்லமுடியும்.

அரசாங்கத்தினர் இவைகளே நன்கு கவனித்தும் முஸ்லிம்களின் மத உணர்ச்சியை மதித்தும் ஷை தூஷண நூலேப் பறிமுதல்செய்துவிட்டனர். ஆகவே இனியேனும் பாதிரிமார்கள் சீரான முறையில் நேராய் நடந்து கொள்வார்களாக.

(361-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தை அவர் அறிக்கை இடுவதற்கு முன்னர் வணக்கம் புரிவதற்காகவும், மனத்தெளிவுண்டாகுவதற்காகவும் அவர் 'ஹிரா' என்ற மலேக்குகைக்குச் செல்லுவதுண்டு. பல நாள் வரை அவ்விடத்தில் தொடர்ச்சியாக இருந்து வணக்கம் புரிந்தார். மனத்தில் ஒன்றித்த ஒரே நிலேயுண்டாகுவதற்காக ஆங்குத்தங்கி இருந்தார் .நுபுவ்வத்துக்கு முன்னர் அவருக்கு உண்மைச் சொர்ப்பனங்கள் தோன்றின. சொர்ப்பனத்தில் பார்த்தவைகள் அவருக்கு நிகழ்ந்துகொண்டிருந்தன. இந்த உண்மையான சொர்ப்பனங்கள் மனிதனின் இருதயத்தில் உறுதியையும் ஸ்திரத்தையும் உண்டாக்குகின்றன; யக்கீனுக்கும் ஈமானுக்கும் பலத்தைக் கொடுக்கின்றன. மனத்தை ஓர்மைப் படுத்துதல், நேர்மையாக நடத்தல், உண்மை யோடுங்கூடியவாழ்க்கை புரிதல் ஆகியவைகளில் 40 வருஷம் பூர்த்தியாயிற்று. அவருக்கு ஹிரா மலேப் பொதும்பில் அல்லாஹதஆலாவின் ஒளி வெளியாயிற்று. உலகத்தை மூடிக்கொண்டிருந்த வழிகேடு, வழிதவறு என்ற எல்லா இருள்களும் ஒரு க்ஷணப் பொழுதில் தூரமாயின.

நாயக சரிதையில் நம்மவரின் தவறு

(சன்மார்க்க சாரணர் சாற்றுவது)

(சென்றமாதத் தொடர்)

(5) முஸ்லிம்களை கருவறுக்க நாடி, எதிரிகள் வரும்போது தங்கள் உயிரை, கூடுமான வரை காத்துக்கொள்ளக்கூடிய ஆயுதத்தோடு ஜாக்கிரதையாய்ச் செல்வது முஸ்லிம்களின் கடமையாகயிருந்ததல்லவா? ஆயுதமில்லாது இவர்கள் போயிருப்பார்களாகில் தங்கள் கடமையை நிறைவேற்றியவர்களாக இவர்கள் ஆகுவார்களா?

(6) சாதாரணமாய் ஆயுதபாணிகளாக இருப்பது அராபியர் ஒவ்வொருவரின் இயற்கையாகயிருக்கும்போது, எதிரிகள்கூட போர்புரியப் போகும் இவர்கள், தங்கள் இயற்கை ஆயுதங்களைக் கழட்டி வைத்துவிட்டு நிராயுதபாணிகளாகப் போய்விட்டார்களா? அல்லது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஆயுதங்களை இல்லங்களில் கழட்டிவைத்துவிட்டு வரும்படி இவர்களுக்கு ஆக்ஞாபித்தார்களா?

(7) பூரண ஆயுதம் பூண்ட எதிரிகள்முன், நிராயுதபாணிகளாக முஸ்லிம்களைக் கூட்டிச் செல்ல நபிகளுக்கு மனமும்வருமா? ஒரு சிறிதளவேனும் ஆயுதமிருந்தாற்றானே "வல்லவனுக்கு புல்லாயுதம்" என்னும் உறுதியாவது ஏற்படும். எதிரிகளின்முன் நபிகள் தங்கள் இஸ்லாமியச் சேனைகளை நிராயுதபாணிகளாக கூட்டிச் சென்றிருப்பார்களாகில் இன்று நபிகளை ஓர் தேர்ந்த சேனாதிபதி என, உலகோர் எங்ஙனம் கௌரவிப்பார்கள்?

(9) நரோத்தும பராக்கிரமசாலியான "உத்பா" என்னும் "குறைஷி" சேனாதிபதியானவர் தமது சேனைகளை அணிவகுத்து நிறுத்திய போது, மறுபுறம் தெய்வோத்தும பராக்கிரமசாலியான நமது நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், தங்கள் கரத்தில் அம்பை வைத்துக் கொண்டு இஸ்லாமிய சேனையை அணிவகுத்து நிற்பாட்டவில்லையா?

(10) குரைஷியரின் சேனைகள் நெருங்கி முன்னேறி வந்தும், சஹாபாக்கள் முன்னேறுவதை, நாயகம் (ஸல்.) அவர்கள் தடை செய்து, எதிரிகள் மிக்க நெருங்கி சமீபமாய் வருவார்களாகில், அவர்களை அம்புகளால் எய்து சமீபமாய் வராது தடுத்துக்கொள்ளும் படி முஸ்லிம்களுக்கு ஆக்ஞாபித்தார்களென்றால், முஸ்லிம்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஆயுதமிருந்திருக்கிறதென ஏற்படுகிறதில்லையா?

(11) "ஸஈதிப்னுல்ஆஸ்" அவர்கள் குமாரரான 'உபைதா' வானவர் உச்சிதொடுத்து உள்ளங்கால் வரை இரும்பால் மூழ்கப்பட்டு, இரும்பு மயமாய் போர்களத்தில் முன்னே வந்து முஸ்லிம்களை நோக்கி அறைகூவி அழைத்து நின்றபோது 'ஸுபைர்' (ரலி.) அவர்கள் எதிரில்வந்து, உபைதாவின் இரு நயனங்களைத் தவிர இதர அவயவங்கள் தோணுதிருந்ததைக் கண்டு, அவரின் நயனத்தைப் பார்த்து தமது ஈட்டியால் குத்தி கீழே விழுத்தாட்டி, அவர் மரணித்ததும், அப் பிரேதத்தின்மீது காலை வைத்து மிகச் சிரமத்துடன் ஈட்டியை பிடுங்க நேர்ந்தது. இரு முனைகளும் வளைந்துவிட்ட அவ்வீட்டியை நாயகமவர்கள் தாங்கள் யுத்த ஞாபகார்த்தமாக வாங்கி வைத்திருந்து, பின்னர் நான்கு கலீபாக்களிடத்திலும் அது மாறி மாறி வந்துகொண்டிருந்ததென, சரித்திரங்கள் கூறவில்லையா?

(12) மதினாவைவிட்டு வெளியில் ஒரு மைல் தூரம் சென்று, சிறுவர்களை நீக்கிவிட்டு, நாயகமவர்கள் தங்களது ஸஹாபிகளைத் தேர்ந்தெடுத்துக் கூட்டிச் செல்லும்போது எல்லோரின் ஆயுதங்களையும் கழட்டிவைத்துவிட்டு வாருங்களென, உத்தரவளித்திருந்தார்களா என்ன?

(13) குரைஷியர், முஸ்லிம்களைத் தாக்குவதற்காக முன்னேறிவரும் விஷயத்தை நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் அறிந்து தங்கள் ஸஹாபிகளை நோக்கி "நாமும் அவர்களை எதிர்த்துப் போர் புரியவேண்டும். இதற்கு உங்களின் அபிப்பிராயங்களென்ன" வென வினவிய போது, முஹாஜிரீன்கள், "தாங்கள் கட்டளையைசிறமேற்கொண்டு நடத்த நாங்கள் தயாராக

யிருக்கிறோ"மெனக் கூற, 'அன்ஸாரீன்'கள் "தாங்களிடம், நாங்கள் பைஅத்துச்செய்து கொண்டபின், தாங்கள் சமுத்திரத்தில் குதிக்கும்படி எங்களுக்கு கட்டளை யிடுவீர்களானுலும், அங்ஙனம் குதிக்கயாங்கள் தயாராக இருக்கின்றோமே யன்றி, நீங்களும், உங்கள் நாயனும் போய், சண்டையிடுங்கள், நாங்கள், ஈண்டே தங்கியிருக்கிறோமென, மூஸா (அலை.) அவர்களின் உம்மத்துகள் கூறியதுபோல் நாங்கள் கூறமாட்டோம், வாருங்கள் யுத்தஞ் செய்யப் போவோமென, விடை பகர்ந்தவர்கள், யாது ஆயுதமுமில்லாது விரோதிகளை எதிர்க்கப் பிரயாணித்திருப்பார்கள் என்பதை, அறிவு ஏற்றுக் கொள்ளுமா? இத்தாதி முகாந்தரங்களால், பத்று யுத்தத்திற்குச் சென்றிருந்த ஸஹாபிமார்களில் எவ்வித ஆயுதமுமில்லாது நிராயுதபாணிகளாக எவருஞ் சொல்லவில்லை என்பது ஊர்ஜிதப் படுகிறது.

(14) முஸ்லிம்களிடம் வாள்கள் குறைந்தும், இதர ஆயுதங்கள் பூர்த்தியாக இல்லாமலுமிருந்ததால், முஸ்லிம்கள் போதிய ஆயுதமில்லாமலிருந்தனரென, எழுதுவது தகுமேயன்றி நிராயுதபாணிகளாக இருந்தனரென எழுதுவது நியதியாகுமா?

(15) சரித்திர மெழுதுவோர், நிகழ்ந்த விஷயங்களைக் குறைக்காமல் எழுதுவது சரித்திராசிரிய தர்மமன்றோ?

(16) ஷை தர்மத்தை கை, நழுகவிட்டு, உண்மையைக் குறைத்துக் கூறுவோர், பெரியார்களால் குற்றமெனக் கண்ட "குன்றக் கூறல்" என்னுங் குற்றத்திற்கிலக்காகுவரன்றோ?

ஆனல், குரைஷியரைப்போல், பூரண ஆயுதங்களைப் பூண்டிருந்தோர் முஸ்லிம்களில் சிலரே இருந்தனர். மேலும் முஸ்லிம்கள் போதிய, நிறைந்த ஆயுதமற்றவர்களாயிருந்தும், விண்ணவர் படைகளின் உதவியாலும் விண்ணவனனுக் கிரஹத்தினுலும், ஜெய பேரிகை என்னுங் கிரீடத்தை, தங்கள் சிரசின்மேற் சூட்டிச் சென்றனர், என பாவலர் எழுதியிருப்பாராகில், எத்துணை பொருத்தமாயும், உண்மையாயு மிருந்திருக்கு மென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

எனவே, பாவலர், இந்நூலை எழுதிவரும்போது, நிராதாரபாணியாக இருந்தாரேயன்றி பத்ரீன்களான முஸ்லிம்கள் அவரவரிடமிருந்த ஆயுதங்களை அணிந்துகொண்டு, ஆயுதபாணிகளாகவே சென்றிருந்தார்களென்பது எமது துணிபு.

2-வது குறை.

இவ்வாறுஷை நூலில் நிராயுதபாணிகளென எழுதியிருக்கும் இருவரிகளுக்கப்பால் "அந்தப் போரில் எதிரிகளின் அஜாக்கிரதையால், முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது" என வெகு அழகாயும், மிகப் பொருத்தமாயும், புத்திக்குப் பிடிக்குமாறும் எழுதியிருக்கிறார் என்னே! சரித்திர ஆராய்ச்சியின் விந்தை!!

பக்குவ, வயதையுடைய் திடகாத்திர வாலிபர்களான குரைஷியர், பூரண ஆயுதங்கள் பூண்டு இவ்வுலகை விட்டும் இஸ்லாத்தை அறவேஒழித்துவிடவேண்டுமென ஆர்வங்கொண்டு, மக்காவிலிருந்து கங்கணங்கட்டி 220 மைல்கள் தூரம் வரை வந்து, மிக ஆத்திரத்தோடும், சர்வ ஜாக்கிரதையோடும், உக்கிரமாக, பிராணனை கையிலேந்தி புரிந்த போரில், விண்ணவனருளும், விண்ணவப் படைகளினுதவியு மில்லாதிருக்கில், அன்று முஸ்லிம்கள் ஜெயமடைவது பரம சங்கடமாக இருந்தபோது, விரோதிகள், அஜாக்கிரதையாக இருந்தார்களென, ஷை நூலில் எழுதியதைக் கண்ட யாம், வியப்படையாதிருக்கமுடியா?

(1) எதிரிகள் அஜாக்கிரதையாக இருந்தார்களென்றால், அவர்கள் சயனித்திருந்தார்களா என்ன? யுத்தமானது 'ரமலான்' மீ பிறை 17வ வெள்ளிக்கிழமை காலைப் பொழுதில் நிகழ்ந்ததால், காலை நேரம், யாரும் சயனிக்காத நேரமாகுமே? அல்லது குரைஷியர் குடிவெறியால் போதைகண்டு மயங்கிக் கிடந்தார்களா? அல்லது குரைஷியர் வேறுபுரம், வேறு கவனத்திலிருக்கும்போது முஸ்லிம்கள் ஒளித்துப் பதுங்கி இருந்து, சமயம் பார்த்து குரைஷியர்மீது, ஏகமாய்சாடி அவர்களை வெட்டி சங்காரஞ்செய்தார்களா? அவ்வாறு செய்யவும் முஸ்லிம்களிடத்தில் போதிய ஆயுதமேது? அல்லது அவர்கள் சந்தியாவந்தனஞ் செய்து கொண்டிருந்தார்களா? அல்லது அவர்கள் சமாதி நிலை பூண்டிருந்தார்களா? அல்லது அவர்கள் "அராபியன் னைட்" கதாபுத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார்களா? அல்லது அவர்கள் கானகாவன்ன சிறுவர் பகுதி நறையூர் னைட், டைபடித்துக்கொண்டிருந்தார்களா? அல்லது அவர்கள், முஸ்லிம்கள் வருவதை அறியாது

வேள்வி' வளர்த்து யாகஞ் செய்துகொண் டிருந்தார்களா? அல்லது சந்தனக் கூண்டு வேடிக்கைப்பார்க்கப் போயிருந்தார்களா? என, பலவாறு ஐயக் கேள்விகளுதிப்பதால், அஜாக் கிரதையாக எதிரிகள் எங்ஙனமிருந்தார்கள் என்பதை, பாவலர் பல ஆதாரங்களைக் கொண்டு தெளிவாக விவரிப்பாரெனஎதிர்பார்க்கின்றேம்.

(2) நபிகள் நாதரின் ஹிஜ்ரத்திற்குப் பின், மதீனாவிற்குச் சென்று எதிர்க்க வேண்டு மெனக் குறைஷியர் தீர்மானித் திருக்கும் சமையம் 'உமரிப்னுஹல்ரமீ' என்னுங்குரை ஷியர், ஸஹாபி யொருவரால் கொல்லப்பட்ட விஷயம் மக்காவில் எட்டியவுடன், குரைஷிய ரில் மிகுந்த பரபரப்பு எழுந்து, உடனே முஸ் லிம்களை கருவறுக்க வேண்டுமெனக் கருதி, மதீனாவை நாடி 1000ம் குரைஷியவீரர்கள் வரவில்லையா?

(3) அவ்வாயிரம் பேரும், சரியான போர் வீரர்களாயும், யுத்தப் பயிற்சியில் தேறியவர்க ளாயு மிருந்தனரில்லையா?

(4) அவர்கள் போதிய யுத்தாயுதங்களோடு, மதீனாவை நோக்கி வரவில்லையா?

(5) அவர்களில், குறைஷித்தலைவர் அநேகர் வரவில்லையா?

(6) அவர்களுக்கு தளகர்த்தராக, கீர்த்தி பெற்ற குறைஷியத் தலைவரும் செல்வவந் தருமான "உத்பா" என்பார் நியமித மாகி, வரவில்லையா?

(7) மக்காவில் குறைஷியரின் பார்லிமெண் டாகயிருந்த "தாருன் னத்வா" வை, சூழ்ச்சி பீடமாக மாற்றி, அதில் நாயகத்தைக்கொல்ல, சூழச்சி செய்வதற்காகக் கூடி, ஆலோசனை செய்த 14 குரைஷித் தலைவர்கள், அத்துணை பேரும், இவர்களுடன் சேர்ந்து வரவில்லையா?

(8) குரைஷியர், முதலிலே வந்ததிநிமித்தம் 'பத்று' என்ற ஸ்தலத்தில் தகுந்த இடங்களை தங்கள் வசப்படுத்திக்கொள்ள வில்லையா?

(9) இவர்களின் வருகையைத் தெரிந்த நபி கள் நாதர் (ஸல்.) மனோவீரர்களான தங்கள் ஸஹாபிகளில் முப்பருவ, 313-பேர் கொண்ட படை யொன்றை திரட்டிக்கொண்டு, பத்று என்ற ஸ்தலத்திற்கு பின்னர் வந்து சேர வில்லையா?

(10) இரவில் முஸ்லிம் படைகள் சயனித் திருக்கும் சமயம், ஒரே உத்தம ஆத்மாவான நபிகள் திலகம் (ஸல்.) மட்டிலும் இரவெல்லாந் துயிலொழிவராய், அல்லாவினிடம் இறைஞ்சி நின்று, 'ஸுப்ஹு' தொழுதபின் ஜிஹாதைப் பற்றி தங்கள் படைகளுக்கு உபன்னியாசித் துக்கொண்டும், மறுபுரம் குரைஷியர், யுத்த நிகழ்த்துவதற்காக துள்ளிக்கொண்டும், நிற்க வில்லையா?

(11) படைத்தலைவரான 'உத்பா' வையும் அந்தயுத்தத்திற்குக் காரணமாகயிருந்து கொலை யுண்ட 'உமரிப்னுல் ஹல்ரமீ'யின் சகோதர ரான "ஆமிர் ஹல்ரமியை" யும், யுத்தம் ஆரம் பிக்குமுன்னர் அபூஜஹ்ல் ரோஷமூட்டவில் லையா?

(12) அபூஜஹ்லின் அவச் சொற்களைக் கேட்ட குரைஷி சேனாதிபதியும், அவரின் சைனியங்களும், ஆயுதங்களை அணிந்து கொண்டு, யுத்த சன்னத்தராய் நிற்கவில்லையா?

(13) ஈண்டு ஆண்டவன் வெற்றியளிக்கப் படுமென்னும் சுபச்செய்தியை வாக்களித்தும், விண்ணவர் படை, தமது நேசப்படையாகயிருந் தும், சர்வவிஷய தானங்களையு மறிந்தவர்க ளென்பதை அனுசரித்து நாயகமவர்கள், யுத்த முறைப்படி படைகளை அமைத்து, முஹா ஜிரீன்களின் கொடியை"முஸ்அ,பிப்னு உமைர்' வசங்கொடுத்து நிற்பாட்டவில்லையா?

(14) நன்கு வைகறையானபின் தங்கள் கையிலிருந்த அம்பைக்கொண்டு நாயகமவர்கள் தங்கள் படைகளை அணிவகுத்து, முன், பின் செல்லாது, யுத்தஞ்செய்யு மொழுங்குப் பிர காரம் அரண்கட்டி நிற்பாட்டவில்லையா?

(15) இருதரப் படைகளும், எதிரெதிராய் நின்றிருக்கும்போது, சத்தியமும் அசத்திய மும், இருளும் ஒளியும், இஸ்லாமும் குபிரும் நிற்பதாக காட்சி தோன்றவில்லையா?

(16) அன்று இப்பரந்தபூமண்டலத்தின்கண் "தௌஹீத்" (ஏக, தெய்வநம்பிக்கை) ஆனது சிலஉயிர்களையே நம்பியிருக்கவில்லையா?

(17) இறுதியாய் ரமலான் மீ 17-வது பிறை, காலையில் கள்ளார் படையும், நாயகர் படையும் யுத்த முஸ்தீப்போடு யுத்தநிகழ்த்த இதோ மறுநிமிஷமோ,வென தயாராக நிற்கும்போது, நபிகள்நாதர் வெகு,மனவாட்டத்தோடு ஒருமை நிலை பூண்டு இருகரங்களையும் ஏந்தி 'ஓ அல்லா! நீ, எமக்களித்த வாக்குறுதியை, இன்று நிறை வேற்று' என இறைஞ்சி நிற்கும்போது, தங்கள்

தோளின்மீதிருந்த திருப்பரிவட்டம் கீழே விழுந்த உணர்வுமில்லாது, வல்லோன் சந்நிதியில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தி நின்று, மீண்டும் ஸஜ்தாவில் விழுந்து, இந்த சில ஆத்மாக்கள் அழிந்துவிடுமாகில், இறுதி நாள் வரை உன்னை வணங்குவோர் இப்புவியில் எவருமிரார்' என வெகு மனவாட்டத்துடன் துஆச்செய்து முடிந்தபின், ஒருவாறு ஆன் மீகத்தேறுதலால் மனத்தைத் தேற்றி" (எதிரி) படைகள், முறியடிக்கப்பட்டு அவர்கள் பிற்கால் வெட்டி ஒடுவோர்கள்" (கமர்). என்னும் ஆயத்தை ஓதியவர்களாய் நாயகமவர்களின் திருஉதடானது வெற்றியின் முன்னறிக்கையை அறிந்து கொள்ளவில்லையா?

இங்கு வாசக நேயர்கள் கவனத்தில், நபிகளின் அனுஷ்டான முறையின் என்பினையையும், அதன் படிப்பினையையும் விவரிக்க விரும்புகிறேன். அதாவது மேற்கூறப்பட்டவைகளில் நபிகள் அனுஷ்டான தோரணையை கவனிக்கில், (1) நாயகம் (ஸல்) உண்மைநபி யெனவும், (2) சூனியகாரரல்ல வெனவும், (3) அன்னவர்கள் மனிதரே என்பதும், (4) சதா தெய்வ உதவியைத் தேடவேண்டுமென்றும், (5) எவராலும் வாக்குறுதி அளிக்கப்பட்டு நம்பிக்கையிருந்தும் முயற்சியை கைநழுகவிடக் கூடாதெனவும், (6) தீர்க்கதரிசிகள் முதல் ஒவ்வொரு மனுக்களுக்கும், தங்கள் உயிரைக் காப்பது அவசியமெனவும், அதற்காக ஜாக்கிரதையோடிருக்கவேண்டுமெனவும், (7) எத்தகைய அபாய சமயங்களிலும், ஆபத்தான நிலைகளிலும், மனந்தளரது மனத்தைத் தேற்றி, பொறுமை பூண்டிருக்க வேண்டுமெனவும், (8) சத்தியத்திற் கழிவில்லை யெனவும், (9) தெய்வத்தை நம்பினால் சர்வமும் நமக்கு வெற்றியாகுமெனவும், நமக்கு ஓர் முன்மாதிரியாயும், மேற்கோளாயும், அனுஷ்டித்து அறிவுறுத்திச் சென்றார்களென்பதை உணர்ந்து அவ்வாறே யாமெல்லோரும் ஒழுக, முயல வேண்டும்.

(18) பின்னர் ஸஹாபிகளை நோக்கி "நமக்கு அல்லாஹ் உதவி அளித்து, வெற்றிபெறச் செய்வதாய், வாக்களித்திருக்கிறான்" என்னும் நன்மாராயத்தை நாயகமவர்கள் மொழியவில்லையா?

(19) முஹம்மதின் உயிர், எவன் கையிலிருக்கிறதோ அவன்மீது சத்தியமாக "இன்று பொறுமையோடும் உறுதியோடும், முஷ்ரிகீன்கள் கூடப் போர்புரிவோர், ஷஹீதாகிவிடுவார்களாகில், அவர்களை ஆண்டவன் சுவர்க்கத்தில் சேர்த்துவிடுவோன்" என! நபிகள் (ஸல்) திருவுளமாகி, ஒரு கை,மண் எடுத்து ஓதி, அதை காபிர்கள் முகங்களின் புறம் நபிகள் வீசவில்லையா?

(20) இவைகளெல்லாம் நிகழ்ந்த பின்னர், ஸஹாபிகளை யுத்தஞ் செய்ய நாயகம் (ஸல்.) அனுமதிக்க வில்லையா?

(21) அல்லாஹ், அல்லாவின் றசூல், பிரியத்தை மேலாகக்கொண்டு முஸ்லிம்கள், தகப்பன் பிள்ளையையும், நண்பன் நேசனையும், அண்ணன் தம்பியையும், அறைகூவி போருக்கழைக்கவில்லையா?

(22) பழிக்குப்பழி வாங்கும் பொறுப்பை சிறமேற்கொண்ட 'ஆமிர்ஹல்ரமி' என்பார் முதன்முதலில் போர்களத்தில் அதிஜாக்கிரதையோடு இறங்கிவந்து, அறைகூவி அழைத்து நிற்க, ஹஜ்ரத் உமரின் அடிமையான "மஹ்ஜஃ" என்னுஞ் சஹாபியானவர் அவனை எதிர்த்து சண்டையிட்டுக் கொல்லவில்லையா?

(23) இதன்பின் 'உத்பா'வான சேனதிபதி, ஹஜ்ரத் 'ஹம்ஸா' (ரலி.) அவர்களாலும், 'வலீத்' என்பார் ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்களாலும், கொல்லப்படவில்லையா?

(24) யுத்தகளத்தில் இருசேனைகளும் எதிரெதிராய் நின்றுகொண்டிருக்கும் போது, தங்கள் ஈறத்துண்டுகளான மக்கள்கள் தங்கள் வாளுக்கு எதிரால் நின்றுகொண்டிருப்பதை கண்டு கொஞ்சமும் நிதானியாது அத்தியாகிகள் புரிந்த தத்தங்கள் பெரிய மகத்தான ஆச்சர்யத்தை யளிக்கத்தக்கக் காட்சியே என, சில சரித்திரங்களில் எழுதப்படவில்லையா?

(25) இவ்வாறு சில்லரை சண்டைகள் நிகழ்ந்தபின் ஏகமாய் எதிர்ப்பு ஆரம்பமாகி முஷ்ரிக்கீன்கள் வெகு உக்கிரமாகப் போர்புரிந்து வரும்போதும், மீண்டுமொருமுறை நபிகள் (ஸல்.) திலகம் தங்கள் சிரஸை ஸுஜூதில் வைத்து, தெய்வசக்தியின் உதவியை வேண்டிக் கொண்டிருக்கவில்லையா?

(26) குறைஷியரின் சூழ்ச்சி பீடத்தலைவர்களும் இதரதலைவர்களுமாக, "இதேயுத்தத்தில் இத்தரணியை விட்டும் இஸ்லாத்தை ஒழித்துவிட வேண்டுமென, கனவு கண்டு வெகு ஜாக்கிரதையாகவும், மிக்க கொடூரமாகவும், யுத்தம் நிகழ்த்திய இவர்களை, அஜாக்கிர

மையாக இருந்தார்களெனச் சொல்லவும் நாவெழுமோ?

(27) இஸ்லாத்தின் ஜன்ம விரோதியான அபூஜஹ்லை 'மஊத்' 'மஆத்' என்னும் இரு சகோதரர்கள் சமர்க்களத்தில் தேடித் தேடிக் கொல்லவில்லையா?

(28) உத்பா, ஷைபா, அபூஜஹ்லு இம்மூவரும் கொல்லப்பட்டபின், குரைஷியர் கலக்கமுற்றும், அவர்கள் படையில் அமைதியின்மை ஏற்பட்டும், அவர்கள் கோழை மனமடையவில்லையா?

(29) முப்பெரிய தலைவர்கள் குறைஷியரில் மாண்டதைக்கண்ட அநேகர், முஸ்லிம்களிடம் தங்கள் கேடயங்களைப் போட்டுவிட்டு, கைதியாகிவிடவில்லையா?

(30) ஷை யுத்தகளத்தில், வீரபுருஷரான ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள், யுத்தநாயகராக விளங்கவில்லையா? அந்த யுத்தத்தில் அவர்கள், தங்கள் முழுதீரத்தோடும் வீரத்தோடும் சமர் நடத்தியதால், "அலீ" என்னும் பேரைக் கேட்டமாத்திரத்தில் காபிர்கள் நடுக்கங் கொள்வதில்லையா?

(31) அஜாக்கிரதைக் குறைஷியரை வெட்டி ஜெயமுற்ற அலீ (ரலி.) அவர்களுக்கு யுத்த நாயகரென பெயர் சூட்டுவதுந் தகுமா?

(32) இத்தகைய அஜாக்கிரதையோரை, வெட்டிய முஸ்லிம்களை வீரர்களென இன்னும் உலகோர் புகழ்வதும் தகுமா?

(33) தக்கவலுவும், ஆயுத முஸ்தீப்போடும், அஜாக்கிரதையாயிருந்த குறைஷியரை, முஸ்லிம்கள் தாக்க ஆரம்பித்த பின்னராவது குறைஷியர் ஜாக்கிரதையாகி, முஸ்லிம்களை முழு பலத்தோடு தாக்கியிருக்கக்கூடாதா? அவ்வாறு தாக்காது புறங்கால் வெட்டி, பின்னோக்கி ஓடி, அவர்கள்ஏன் உயிர் தப்பித்துக்கொள்ள வேண்டும்?

(34) இஸ்லாமிய தியாகிகளின், அபூர்வ சாமார்த்தியக்கிருத்தியங்களைக் கண்டு, அன்று வானோர், புவியோரனைவரும் மெச்சித்துநிற்க வில்லையா?

எனவே, அஜாக்கிரதையாக இருந்த விரோதிகளுக்காக, இத்துணை துஆவும் செய்து, துயரமும்பட நாயகத்திற்கு தேவையுமிருந்திராது என்பது இதனால் நன்கு விளங்குவதோடு, எதிரிகளும் மிக உக்கிரமாகவே முஸ்லிம்களைத் தாக்கிவந்தார்களெனவும், தக்க ஜாக்கிரதையாயிருந்தார்களெனவும் நிரூபணமாகின்றது. மேலும் மிக்க பிரதானமானதும், சிறியதொகையரான முஸ்லிம்கள் பெரிய போர் நிகழ்த்தியதுமான 'பத்று' யுத்தத்தில் சேர்ந்த பத்ரீன்கள் மகிமையின் ஆதாரங்களையும் கவனித்து அவை எவ்விதப் போராக யிருந்திருக்கலாம். அதில் முஸ்லிம்கள் எவ்வாறு தியாகக் கிருத்தியங்கள் செய்திருக்கிறார்கள் என்பதை, செவ்வென தெரிந்துகொள்ளலாம்.

"பத்ரீன்கள் மகிமையில்"

(35) பத்ரீன்கள் அனைவரின் பாபங்களும், மன்னிக்கப்படவில்லையா?

(36) ஹஜ்ரத் உமறு கத்தாப் (ரலி) அவர்கள் காலத்தில் பத்ரீன்களின் மகிமையைக்கருதி, அவர்களுக்கு மட்டும், அதிக உபகாரச்சம்பளம் (வஸீபா) கொடுக்கப்பட்டுவரவில்லையா?

(37) இவர்கள் நாமங்கள் கூறம்படும்போது 'பத்ரீ' எனசேர்த்துக் கூறப்படுவதுகொண்டு இவர்களுக்கு மதிப்பு கொடுக்கப்படவில்லையா?

(38) பத்ரீன்கள் விஷயமாய், மகிமையாய் கூறப்பட்ட அநேக ஹதீதுகள் வரவில்லையா?

(39) 'பத்ரீன்' களின் சிபாரிஷால் துஆக் கேட்கப்படுவதுகொண்டு அவை ஒப்புக்கொள்ளப்படுமென, இஸ்லாமியப்பெரியார்கள் கருதுகிறார்களில்லையா? அஜாக்கிரதை எதிரியைக் கொன்றோருக்கு இத்துணைமகிமையும், கீர்த்தியும், மகாத்மியமும், எங்கிருந்து கிட்டும்? இவைகளினால் பத்று யுத்தம் பேடித்தனமாக நடத்தப்பட்ட யுத்தமல்லவென ருஜுவாகின்றது.

பத்று யுத்தம் நிகழ்த்தப் பட்டபின் முஸ்லிம்களின் நிலை எத்துணைமாறுதலடைந்திருக்கிறதென்பதையும், அதனால் இஸ்லாத்திற்கேற்பட்டபிரயோஜனங்களையும், ஈண்டு கூறுவோம்.

பத்ரின் பிரயோஜனங்கள்

(40) இதில் முஸ்லிம்கள், வெற்றியடைந்ததால் இக்குறைஷியர், இதர குரைஷிக்கூட்டத்தாரின் இதயங்களில், இஸ்லாமியதியாகிகளின் மகிமையும், முஸ்லிம்களின் வீரபராக்கிரமங்களும், நன்கு பதிந்திருந்த காரணத்தால், உஹது யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு பல சேதங்கள் ஏற்பட்டிருந்தும் குறைஷியர் வெற்றி பெறாது அபஜெயவாதிகளாய்த் திரும்பிச் செல்ல நேர்ந்தது, உண்மையல்லவா?

(41) இந்தயுத்தத்தில் முஸ்லிம்கள் ஜெய மடைந்ததால் உலகில் "இஸ்லாமிய உருவம்" ஒப்புக்கொள்ளப் பட்டு இஸ்லாத்தின் அஸ்தி வாரமும், ஸ்திரமடைய வில்லையா?

(42) இந்த யுத்தமானது இஸ்லாமிய ஜெயத் தின் முகூர்த்தமல்லவா?

(43) "பத்று" யுத்தமானது வைதீக, தேசிய் நிலமைகளை முற்றும் மாறுதல் செய்ததோடு, அதன் வெற்றியானது இஸ்லாத்தின் முன் னேற்றத்திற்கும், அதன்கௌரவம், மதிப்பிற் கும், முதற்படியாக இருக்கவில்லையா?

(44) இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு தடைகல் லாய் நின்ற, பெரிய பெரிய குறைஷியர்களெல் லாம் இந்த யுத்தத்தில் மாண்டுபோய் முஸ்லிம் களுக்கு பாட்டை நேராகிவிடவில்லையா?

(45) உத்பா, "அபூஜஹ்ல் ஷைபா" இவர் களின் மாணத்திற்குப் பின், குரைஷியரின் மூலாதார பலத்தின் அளவு குறைந்து விட வில்லையா?

(46) மதீனாவில் இதுவரை பகிரங்கமாய் காபிராக இருந்த "அப்துல்லாஹிப்னு உபையி, ப்னு, ஸலூல்" என்பார் இதன்பின் வெளிரங் கத்தில் இஸ்லாமிய வரம்பினுள் சேர்ந்து கொள்ளவில்லையா?

(47) இதே யுத்தத்தில் கிடைத்த ஒன்றே கால் ரூபாய் கிரையமுள்ள இரும்புக்கவசத்தை மஹராகக் கொடுத்து பெண்களின் நாயக மான "சைய்யிதத்தினு பாத்திமா" நாயகியை, ஹஜ்ரத் அலீ(ரலி.)அவர்கள் திருமணம் புரிந்து கொண்டார்களென்றால்! இந்த யுத்தத்தின் மகி மைதானென்னே!!

(48) இத்தகைய உன்னதமும், கீர்த்தியும், அருளும் சரித்திரப் பூர்வமுமான பத்று யுத்தத்தின் மதிப்பையும், கௌர்வத் தையும் சிதைத்து எவ்வித சுவையுமின்றி எழுதி யிருக்கும் பாவலரின் கூற்றானது, இத்துணை மகத்துவ, பிரதான தெய்வசக்தி பூண்ட விஷயங்களை எல்லாம் மறுத்து நிற்கிற தென்பதை, வாசக நண்பர்களுக்கு இயம்பு தற்பாலன்று!

(49) பத்று யுத்தத்தை இத்தாதி மகிமை பொருந்திய யுத்தமென, முல்லாக்கள் பார்க்கும் கித்தாபுகளில் பாவலர் பார்த்து அறிந்திருப்பா ராகில், இவர் பத்று யுத்தத்தை இங்ஙனம் தவ றாக, சுவையற்று எழுதியிருக்கமாட்டார்.

(50) எனவே, பத்ரில், யுத்தத்திற்காக வந்த குறைஷியர், ஆரம்பமுதல் யுத்தமுடிவுவரை அஜாக்கிரதையாக இருந்தார்களில்லை யென்பது பல ஆதாரங்களைக்கொண்டு நாம் இறுதியாய் முடிவு செய்து கொண்டோம். ஆனால் நமது பாவலர், பத்று யுத்தசம்பவங்களை எழுதிவரும் போது அதற்கு தகுந்த ஆதாரங்களைத்தேடி சேமித்து வைக்காது, அஜாக்கிரதையாகஇருந்து விட்டாரேன இதனால் திடப்பிரமாணமாக நன்கு விளங்குகிறதென்பதை ஆட்சேபிப் போர் எங்கேனு முண்டோ?

ஷை நூலில் "குரைஷியர் அஜாக்கிரதையாக இருந்தனர்" என பாவலர் எழுதியிருப்பதா னது, இஸ்லாத்தை இழித்து, துர்ப்பிரசாரஞ் செய்யும், புறமத வாதிகளின், திரித்தெழுதப் பட்ட சரித்திரங்களிலிருந்து இஃதைக் காப்பி யடித்து, இவர் எழுதி இருக்கவேண்டுமே யல் லாது முஸ்லிம்களின் எப்பாஷைச் சரித்திலும் இவ்வாறு எழுதப் பெற்றிருதென்பது திண் ணம்.

N. B. சில கிறிஸ்தவர்கள் இஸ்லாமிய இயற்கை சக்தியை மறைத்துக் கூறக்கருதி இவ்வாறு எழுதியுமிருக்கின்றனர்.

3-வது குறை

விண்ணவப் படையுதவி

அல்லாஹ் தனது வானப்படைகளை அனுப்பி உதவி புரிந்ததை, தனது, திருமறையில் "திடனாக, நீங்கள், கேவலஸ்திதியி லிருந்த போது, பத்ரில் உங்களுக்கு அல்லாஹ் உதவி யளித்தான். ஆதலால், அல்லாஹ்வை பயந்துகொள்ளுங்கள் நீங்கள் நன்றியாளர் களாகுவீர்கள்" என்பதிலிருந்து, "நீங்கள் பொருமை கொள்ளுங்கள். அல்லாஹ்விற்கு மாறுசெய்வதைப் பயந்துகொள்ளுங்கள்" எனக் கூறியதில், பத்ரில் 5 ஆயிரம் விண்ணோர்களைக் கொண்டு உதவி செய்ததாக உஹதுப் போரில் அல்லாஹ் கூறியிருப்பதை, நமது பாவலர் அறவே பிரஸ்தாபிக்காது விட்டுவிட்டார். 'சைன்டிபிக்' முறைப்படி விண்ணுலகரான அமர கோஷ்டியர், மண்ணுலகில் எங்ஙனம் வந்து சமர்புரிய முடியும் என்னும் ஐயம், இவ ருக்கு ஏற்பட்டதால், அதை பிரஸ்தாபிக்காது விட்டிருக்கலாம், என நினைவு உதிக்கின்றது. வேறு எந்த நபிகளின் யுத்தத்திற்காவது இங்ங னம் வானவர் படைகளை அனுப்பி உதவிசெய்த

தாகக் கூறுது, தனது ஹபீபுக்கு, இஸ்லாமிய ரின் முதல் பெரிய யுத்தத்தில் தனது வானப் பட்டாளங்களை அனுப்பி உதவியளித்ததை சவிஸ்தாரமாகத் தனது மறையில் கூறியிருக்கை யில், இவர் எழுதாது விட்டதானது பத்ரு யுத் தத்தின் தெய்வீக உதவியையும், அந்த யுத்தத் தின் மகிமையையும் குறைப்பதோடு, பாவலர் நூலின் மதிப்பையும் குறைத்துவிட்டதென கூசாது கூறலாம்.

(1) பிரஸ்தாப "பத்ரு" யுத்தத்தில் குறைஷி யர், 1000-ம் பொறுக்கான போர்வீரர்களில் 100 குதிரை வீரர்களும், 700 ஒட்டக வீரர்களு மிருந்து, யுத்தம் மிக்கக் கொடூரமாக நடாத்தி வரும்போது, போதிய சாமக்கிரிகைகளும், யுத் தளவாடமுமற்ற முப்பருவ 313 முஸ்லிம் கள், அவர்களை ஜெயித்ததற்கு, தெய்வ சக்தி உதவிபுரிந்ததுதான் காரணமாகு மென்பது ஸ்பஷ்ட மாகுதன்றோ?

(2) அல்லாவின் சக்தியின் உபகாரத்தால் முஸ்லிம்கள் ஜெயமடைந்ததினுல், அல்லாஹ் (ஜல்.) தனது மறையில், பத்ருவிஷயங்களை விவ ரித்துக் கூறி "ஸூரத்து, அன்பால்" என் பதை பத்ரின் நன்றிற்காகவும் அதன் கடாட்சத் தின்விபரத்திற்காகவும், சொந்தப்படுத்தி அந்த யுத்தத்தை மதிப்பிக்கவில்லையா?

(3) (குரைஷியர்) "தங்கள் நயனங்களால் முஸ்லிம்களின் கணிதத்தில் இரட்டிப்பாகப் பார்த்திருந்தார்கள்" (ஆல இம்ரான்) என்னும், திருமறை வாக்குப்படி தெய்வச்சேனைகளும், தெய்வசக்தியுமே அவர்களின் நிலைமையை பேதலிக்கச்செய்து, அவர்களை தடுமாற்றம டையச் செய்தனவென்பது, நன்கு துலங்க வில்லையா?

(4) யுத்தகளத்தில், மலக்குகளின், நடமாட் டத்தை, முஸ்லிம்களெனவே கருதி, குரைஷியர் மனங்களெல்லாங் கலங்கி நிற்கவில்லையா?

(5) விண்ணவப் படைகளான அமரர்களை, அல்லாஹ் அனுப்பி, தனது ஹபீபை, மகிமைப் படுத்தியது உண்மையல்லவா?

இவ்வாறு தெய்வச் சேனைகள், உதவிபுரிந்த அபூர்வமிக்க பிரதான சம்பவத்தை, இரண்டு வரிகளிலாவது எழுதாது, இவர் விட்டுவிட்டது முற்றுந் தகாது எனவும், மேற்கூறப்பட்ட விஷ யங்களையெல்லாங் கூறி, இந்த வினுவிடுதூது வைப் பாவலருக்கு அனுப்பிவைக்க வேண்டு மென முல்லாக்கள் எமக்கு ஆக்ஞாபித்தார்கள். எனவே இவ்விரு பிரஸ்தாப நூலாசிரியர்களும் தங்கள் நூலின் தவறுகளை யுணர்ந்து, இனி மேல் சரித்திரச்சுருக்க நூற்கள் எழுதினுல் அதில் உண்மை வரலாறுகளை நழுகவிடாது, வழுவச் சொற்களைப் புணைக்காது உண்மை வர லாறுகளை எழுதிவருவார்களாக.

ஆனுல் இதுபொழுது, மேற்கூறப்பட்ட வினுக்களுக்கு பதில்கூறுவது தம் கடமையென உண்ணி தக்க நூற்களைக்கொண்டு பாவலர் ஆதாரங் காட்டவேண்டும்.

பதில் கூறும் தந்திரங்கள்

சில சாமர்த்திய எத்தர்கள், தங்களுக்குப் போதிய ஆதாரங்கிடைக்காவிடில் பிரதான சில நூற்களின் பக்கங்களையும், வரிகளையும், ஏதோ ஆதாரங்காட்டும் பெரிய நிபுணரைப் போல் இலக்கமிட்டெழுதும் சன்மார்க்க ஆராய்ச்சியற்ற தன்மையைப்போலும், மத ஞானமும், அராபிய பாஷாச்சுவையும் பூஜ்ய மான சில பேர்வழிகள், வார்த்தையாடும் போது, கரையற்ற அராபிக்கலாக் கடலைப் போன்று இடை இடையே திருக்குர்ஆன் ஆயத்துகளை தப்புந்தவறுமாக ஓதிவிட்டுஏதோ சுருதி மேற்கோள் காண்பிப்போர் போன்று வாயாடும் வழக்கமுடைய சில "வாய்வேதாந் தத் தம்பிரான்கள்" போன்றும், போலி ஆதா ரங்களை வளவளவென எழுதி பதிலுறைப் போர்போன்றும், பதிலுரை எழுதாது, சரித்திர ஆதாரமான உண்மை விஷயங்களை மேற்கோள் காட்டி பாவலர் பதில் எழுதவேண்டும்.

எனவே, பாவலர் இவ்வினுக்களுக்கு, தமது பத்திரிகையான "சன்மார்க்க ஆதித்தனில்" ஒருவரை ஸ்பெஷலாய் வெளியே வரும்படி முயற்சித்து, அவர் வீதியில் உலாவி ஜனங் களின் அபிப்பிராயங்களை நிவர்த்தி செய்தும், (ஷி. ஷ, ஹூ சஞ்சிகை வெளிவர வேண்டு மென சந்தாவிற்காக முன்பணங் கொடுத்த அதன் எப். எம். எஸ். சந்தாதார்களெல்லாம் வெகு ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர்) சன்மார்க்கச் சாரணப்படையின் தலைவனுன எமக்குப் பொருத்தமான ஆதாரங்கூறி எம்மை சாந்தி செய்யவேண்டுமெனவும், விரும்பு கின்றேம்.

நமது பாவலர் வினுக்களுக்குப் பொருத்த மான தக்கவிடை பகர்வதில் வெகு சமர்த்த

ரென, பிரஸ்தாபமானதால் "ராவுத்தரா, ஸாஹிபா" என்னுங் கட்டுரை விளக்கம்போல், நன்கு பொருத்தமான பதிலை வெகுசடுதியில் வெளியிடுவாரென, எதிர்பார்க்கலாமென்பது நினைவு

பாவலர் கொண்டுவரும் ஆதாரச் சரக்குகளையும், நமது கையிலிருக்கும் ஆதாரங்களையும் சீர்தூக்கிப்பார்த்து, அவரின் ஆதாரங்கள் பொருத்தமானதாக இருக்குமாகில் அதற்கு வந்தனங் கூறுவேம். இன்றேல் நமதுஸ்திரகை, யிருப்பு ஆதாரங்களைக்கொண்டு அதற்கு வாயாப்பளிப்பேன்

குறிப்பு

நமது இக்கட்டுரையானது, பிரஸ்தாப இருநூற்களின் தவறுகளை விளக்குவதோடு, இயற்கை வாதிகள், தெய்வசக்தியை மறுத்துச் சைன்ஸையே விசுவாசிப்போர், நவீன நாகரீகப் பிரியமாக்கள் புத்தியே மதமென வாதிப்போர், ஆராய்ச்சி,மெஞ்ஞான பூஜ்யலட்சணமுடையோர், தீயசித்தாந்த விஷமப்பிரசங்கிகள் சதா கிளர்ச்சியையே விரும்பும் குண்டோதரர்கள் போன்ற தெய்வவிசுவாசமும், நல்லொழுக்கவன்மையுமற்ற குழாத்தினருக்கும், தக்கஉத்தரங்கொடுப்பதாக இருக்கிறது. அதிலும் முக்கியமாய் "காணகாவன்ன" க்களுக்கு தக்க ஆப்புகள் விடப்பட்டிருக்கிறதென்பதை வாசக கனவான்கள் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

இதில், பலமனோபாவமுள்ள சிற்சில குழாத்தினருக்கு இன்னுஞ் சிலவிஷயங்களைச்சேர்த்து இக்கட்டுரையை நீட்டி தொடர்ச்சியாக எழுத விருப்பங்கொண்டு "தொடரும்" என எழுதி இஃதை முடித்துவிட ஆயுத்தமாகி எழுதுகோலை எடுக்கும்போது ஓர் "குருவி" பரந்து வந்து "தங்களின், வினாக்களுக்கு விடைகளைத் தேடுவான் வேண்டி ஒருவர் மௌலவிமார், முல்லாக்களைத்தேடி, அங்குமிங்குமோடி அம்மகான்களிடம் முழந்தாளிட்டு பணிவுடனிருந்து இவ்வினாக்களுக்கு சில ஆதேயங்களைக்கொடுத்தருளவேண்டுமென, மிகவிநயமாய்த் தண்டமிட்டுக் கோர, அம்மகான்கள், சத்திய வினாக்களுக்கு விடை, யாதெனப் பகரவே, மனப்புழுக்க ஆதேயங்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு தங்களை நோக்கி வெகு தூரத்தில் ஷியார் வந்து கொண்டிருக்கிறாரென,, தூதுசொல்லிப் போயிற்று.

ஷி தண்டக்காரரின் மனப்புழுக்க மூட்டையில் யாது பண்டந்தேனிருக்கின்றது, அதைப் பார்ப்போமென நாடி விருப்பமுற்று இஃதைத் தொடரிற்று, இத்துடன் முடித்தனம்

(தொடரும்)

மார்க்க தீர்ப்பு

காதியானிகள் சம்பந்தமாய் எழுந்த வினாவிற்கு, மௌலானா ஜாஹிதுல்காதிரீ அவர்கள் அளித்த விடை அடியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

வினா:—எங்களூரில் ஒரு காதியானித் தலைவர் வந்திருக்கிறார். இவர் மிர்ஜா குலாம் அஹ்மத் காதியானியை நபியென்றும், ரசூல் என்றும் உறுதிகூறுகிறார். மிர்ஜாவை நபி, ரசூல் என்று ஒப்புக்கொள்ளாதவர் காபிர் என மதிக்கிறார். ஒருசிலர், காதியானிகளைப் பின்தொடர்ந்து தொழுவது ஆகும் எனக் கூறுகின்றனர். இதைப்பற்றிய சன்மார்க்க கட்டளை என்னவென்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

(ஒப்பம்) அப்துல் வாஹிது இதர்வலி.

விடை:—காதியானிகள், காபிர்களென்றே இஸ்லாமிய உலமாக்கள் யாவரும் ஒற்றுமித்து தீர்மானித்திருக்கின்றனர். எனவே, இவர்களின் குப்ரிய்யத்தில் சந்தேகிப்பதும் குப்ராகும். இவ்வழிகேடர்கள் நபியல்லாத ஒரு மனிதனை நபியென்றும், ரசூல் என்றும் விசுவாசிக்கின்றனர். எம்பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்களை இறுதி நபியென்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களில்லை. நாற்பதுகோடி முஸ்லிம்களையும் இவர்கள் காபிர்களென்றும், அவர்கள் பின்நின்று தொழக்கூடாதென்றும், காதியானியல்லாதவர்களுடன் கொள்வினை, கொடுப்பினை எதுவும் செய்துகொள்ளக்கூடாதென்றும் மதிக்கின்றனர். எனவே இவர்களை முஸ்லிம்களென்றும், இவர்களைப் பின்தொடர்ந்து தொழுவதுகூடும் என்றும் சொல்லுபவர்களும் காபிர்களாகயிருக்கும்.

7—8—'34.

ஸெய்யிது ஹிதுல் காதிரீ தெஹ்லி,
"இஸ்லாமி துன்யா"

பராஹீனெ அஹ்மதிய்யாவும், குலாம் அஹ்மதும்

மிர்ஜா குலாம் அஹ்மதுக்கு மிகவும் சாமான்ய கல்வித்திறமையே இருந்ததென்பது வாசக நேயர்களுக்குத் தெரிந்தவிஷயம். ஆனால், மனிதன் மிகவும் திறமைசாலியும் தந்திரசாலியுமாக இருந்ததால், தம்முடைய தந்திரத்தினால் அவர் ஜனங்களிடையே ஏற்படுத்திய திரை இன்னும் நீங்கவில்லை. இதனால்தான் அவருடைய சிஷ்யர்கள் இன்னமும் அவரை 'சுல்தானுல் கலம்' (எழுதுகோலின் அரசர்) என்று கூறி அவரைப் புகழுவதில் சளைக்காமலிருக்கின்றனர்.

'பராஹீனெ அஹ்மதிய்யா' என்ற புத்தகம் மிர்ஸாஜீ தாம் சுயமே எழுதியதாகக் கருதப்படுகிறது. ஆனால், இது அவருடைய முயற்சியின் பலனல்லவென்பது வெள்ளிடை. இப்புத்தகத்திலுள்ள சில வியாசங்கள் ஸைய்யிது ஜமாலுத்தீன் அப்கானீ என்பவரின் வியாசங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்டவை. வேறு பல இந்தியாவிலுள்ள சில உலமாக்களிடம் எழுதி வாங்கப்பட்டவை. ஆனால், மிர்ஜாயிகளிடம் கேட்டுப்பார்த்தால் "இந்தப்புத்தகம் முழுதும் இல்ஹாமிப் புத்தகம்" என்றே கூறுவார்கள்.

'பராஹீனெ அஹ்மதிய்யா' என்ற புத்தகத்தை எழுதவேண்டும் என்ற எண்ணம் மிர்ஸாஜீக்கு உண்டானபோது அவர் இந்துஸ்தானத்திலுள்ள பிரபல உலமாக்கள் பலருக்குக் கடிதம் எழுதி, இஸ்லாத்தின் உண்மையைப்பற்றி அவர்கள் அறிந்துகொண்டிருக்கிற ஆதாரங்களை வரைந்து அனுப்புமாறு வேண்டிக்கொண்டார். மௌலவீ சிராக் அலி மர்ஹூம் அவர்கள் அந்தக்காலத்துப் பிரபல உலமாக்களில் ஒருவராக இருந்ததால், அவர் இமாதுத்தீன்என்ற பாதிரி எழுதிய "தாரீகெ முஹம்மதீ" என்ற புத்தகத்துக்கு மறுப்பாக "தஹ்கீகாத்" என்ற பெயரால் ஒருபுத்தகம் இயற்றியுள்ளார். ஜிஹாதுடைய மஸ்அலாக்களைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூல் இயற்றியுள்ளார். இதில் ஸர் வில்லியம்முயூர், டாக்டர் ஸிப்ரிங்கர் முதலியவர்களின் ஆக்ஷேபனைகளுக்குச் சமாதானமும்கூறினார். இஸ்லாத்தின் இம்மைப் பேறுகள், மாரியா கிப்தியா, பீபீ ஹாஜரா, தஃலீக் நியாஸ்நாமா என்ற பெயர்களால் பல கிரந்தங்களை எழுதிஇருக்கிறார். இவைகளில் இஸ்லாத்தின் உண்மையைப்பற்றிய ஆதாரங்களைஎடுத்துரைப்பதும், ஆக்ஷேபனைக்காரர்களிடமிருக்கிற ஆதாரங்களின் தவறுகளை வெளியாக்குவதும் இந்தக் கிரந்தங்கள் எழுதப்பட்டதன் நோக்கமாக இருந்தது. இதனை யல்லாமல், மௌலவீ சாகிபவர்கள் மிகவும் அடக்கமுடையவராயிருந்ததால் பிறருக்கு உபகாரம் செய்வதைப் பிரஸ்தாபிக்கும் வழக்கம் அவரில் கிடையாது. தற்புகழ்ச்சியில் அவருக்கு வெறுப்புஅதிகம். மிர்ஜா சாகிபு இவருடைய இத்தன்மைகளை அறிந்து மிகவும் சந்தோஷமடைந்து, பராஹீனெ அஹ்மதிய்யாவை எழுதுவதற்கு அவரிடம் உதவி தேடினார். இந்த மனிதர் இனியொருகாலத்தில் முஸ்லிம்களுக்கு அபாயகரமானவராக இருப்பாரென்பது மௌலவீ சிராக்அலிக்கு முற்கூட்டியே தெரியாதாகையால், உடனே அவர் தன்னுடைய ஆராய்ச்சியின் முடிவுகளை எழுதி அனுப்பினார். மிர்ஸாஜீ உடனே அவைகளைத் தமது பாரஹீனெ அஹ்மதிய்யாவில் சேர்த்துவிட்டார். ஆயினும், இவைகளைக் கூறியவர் இன்னார் என்பதை அவர் கூறினாரில்லை.

மௌலவீ சிராக்அலீமர்ஹூம் அவர்களின் காகிதங்களிலிருந்து, மிர்ஸாஜீ எழுதிய கடிதங்கள் பல கிடைத்திருக்கின்றன. அக்கடிதங்களில் எழுதப்பட்டவைகளில் சில பாகங்கள், மௌலவீ முஹம்மது யஹ்யா "தன்ஹா" அவர்கள் எழுதிய "ஸியருல்மூஸன்னிபீன்" என்ற புத்தகத்தில் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒரு கடிதம் வருமாறு :—

"தங்களைப் போன்ற உறுதியும், இம்மை மறுமை மேன்மைகளு மடைந்தவர்கள், களங்கமற்ற மனத்துடன் எமக்கு ஆதரவளிக்கும்போது சந்தேகமின்றி இதை தெய்வ உதவி என்றே கூறுவது அவசியமாகும். இதைத் தவிர தாங்கள் வேறேதேனும் ஆதாரங்களைக் கண்டு பிடித்து வைத்திருந்தால் அவைகளையும் அனுப்பிவையுங்கள்."

மிர்ஜாயீகளின் ("சுல்தானுல்கலம்") பேனாவின் அரசரின் திறமையைப் பாருங்கள்!

மௌலவீ சிராக்அலீ மர்ஹூம் அவர்கள் ஆதாரம் தேடிக்கொடுக்கவேண்டும். குலாம் முர்தலாவின் புதல்வரான குலாம் அஹ்மது காதியானீயானவர் சுல்தானுல்கலமாகி விடவேண்டும். இது எவ்வளவு தூரம் நியாயமானது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

மிர்ஸாஜீயின் இரண்டாவது கடிதத்தில் எழுதப்பட்டிருப்பது வருவாறு:—

"நபித்துவத்தை ஸ்திரம் செய்வதற்கான ஆதாரங்களைக் கொண்ட வியாசங்களை யான் இதுவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இதுவரை தங்களிடமிருந்து வியாசங்களடங்கிய கடிதம் வந்துசேரவில்லை. ஆதலால் யான் மறுமுறையும் தங்களுக்குச் சிரமம் கொடுக்கிறேன். தாங்கள் மிகுந்த பெருந் தன்மையுடன் கூடிய சீக்கிரத்தில் திருகுர்ஆனின் உண்மைத் துவத்தைப்பற்றிய வியாசங்களைத் தயார்செய்து அனுப்பிவையுங்கள்."

'பராஹீனெ அஹ்மதிய்யா'வில் நுபுவ்வத்தையும் திருகுர்ஆனையும் பற்றிய ஆதாரங்கள் எழுதப்பட்டிருப்பவைகளனைத்தும், சிராக் அலீ மர்ஹூம் அவர்களின் சிந்தனையின் பலனேயாகும் என்று தோன்றுகிறது.

மற்றொரு கடிதத்தில் மிர்ஸாகுலாம் அஹ்மது எழுதி இருப்பது வருமாறு:—

"தங்களுடைய சொந்த ஆராய்ச்சின்பேரில் ஹிந்துக்களின்மீது தங்களுக்கு வெளியான ஆக்ஷேபனைகளையும், வேதத்தின்மீது உங்களுக்குத் தோன்றி இருக்கிற ஆக்ஷேபனைகளையும் தங்களுடைய இதர வியாசங்களையும் அனுப்பிவையுங்கள்."

திருகுர்ஆனின் உண்மைத் தன்மையை ருஜுப்படுத்துவதற்காக மௌலவீ சிராக்அலீ மர்ஹூம் அவர்கள் எழுதிய வியாசம் குலாம் அஹ்மதுக்குக் கிடைத்துவிட்ட தென்பதும், இன்னும் வேறு வியாசங்கள் எழுதி அனுப்ப வேண்டும் என்று மௌலவீ சிராக்அலீ மர்ஹூம் அவர்களை சுல்த்தானுல்கலம் மிர்ஸாஜீ வேண்டிக்கொள்கிறார் என்பதும் தெரியவருகிறது. 'பராஹீனெ அஹ்மதிய்யா'வில் ஆரிய சமாஜிகளைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் ஆக்ஷேபனைகளும் மிர்ஸாஜீ தானாக எழுதியதாக இல்லை என்றுந் தெரியவருகிறது. இது, அல்லாஹ்வுத ஆலாவினால்ஏவப்பட்டவரென்று தம்மைக் கூறிக்கொண்டிருந்தவரின் நிலைமையாகும்.

இவை 'இல்ஹாமி' என்று மிர்ஸாயீகள் கருதும் வியாசங்களாக இருக்கின்றன. இன்றைய தினம் மிர்ஸாஜீ உயிருடனிருப்பாராயின் "நீர் கூறியவைகள் பிறர் கூறியதாகவல்லவோ இருக்கின்றன" என்ற கருத்துள்ள கவிகளைக் கூறி அவரை வினவுவோம். ஆனால், அவர் மரித்து விட்டார். ஆதலால், அவருடைய பிள்ளையிடமும் சிஷ்யரிடமும் இதைச் சொல்லிக் காண்பிப்போம்.

லாஹூர் அஹ்மதியர்களும், ஆங்கில நவ்முஸ்லிம்களும்

(உண்மையை விளக்கும் உத்தமர் வரைவது)

அஹ்மதிய்யா இயக்கத்தின் லாஹூர் பிரிவார், உலகத்திலுள்ள பல தேசங்களிலும் இஸ்லாத்தைப் பரப்புவதாக நடித்து அதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனை, இந்தியர்களுக்குப் பொதுவாகவும் ஆங்கிலங் கற்கும் முஸ்லிம் இளைஞர்களுக்குச் சிறப்பாகவும் அறிவிக்கும் நோக்கத்துடன் Achievements of the Lahore Section of The Ahmadiyya-Movement; Conquests of Islam in Different countries Fruits of Islamic Propaganda - என்று டைட்டில் பேஜில் எழுதி ஆங்கிலத்தில் பிரசுரித்திருக்கும் புத்தகம் நமது தென்னாட்டிலுள்ள அநேக முஸ்லிம் கனதனவான்களுக்கும், ஆங்கிலங் கற்ற வாலிபர்களுக்கும் லாகூர் அஹ்மதியர்களால் அனுப்பப் பட்டிருப்பதை யாம் அறிவோம். அந்தப் புத்தகத்தின் பிரதி ஒன்று எம்மிடத்திலும் இருக்கிறது. இப்புத்தகத்தைப் படிப்பவர், இவ்வஹ்மதியர் உலகமெங்கும் இஸ்லாத்தைப் பரப்புவதாயும், சிறப்பாக ஐரோப்பா

அமெரிக்கா முதலிய வெள்ளையர் நாட்டில் இஸ்லாமிய ஒளியை இலங்கச் செய்வதில் பகீரதப் பிரயத்தனஞ் செய்து ஆயிரக்கணக்கான வெள்ளையர்களை இஸ்லாத்தில் சேர்த்திருப்பதாகவும், அநேகம் அரிய பெரிய மேதாவிகளும் அறிஞர்களும் இஸ்லாத்தைத் தழுவி இருப்பதாகவும் நினைப்பர். அப்புத்தகத்தில் லார்ட் ஹெட்லீ, ஸர் ஆர்ச்சிபீல்ட் ஹாமில்டன், ஸர் உமர்ஹூபர்ட் ரான்கின் போன்ற அறிஞர்களின் படங்களும் பொறிக்கப் பட்டிருக்கின்றன. அப்புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்ட நௌமுஸ்லிம்களில் ரைட் ஆனரபிள் சார்லஸ் மார்க் எலின்ஸன்வின் லார்ட் ஹெட்லீ என்பவர் (Rt. Hon'ble Charles Mark Elinsonwin Lord of Headley B. A, M. I. C. I. E. F. S. S. E. ete; 4 th Lord of Headley, Cresidant of the British muslim Seciety (London) டில்லியில் கூடிய அகில இந்திய தப்லீஃ மஹா நாட்டில் அக்கிராசனம் வகிப்பதற்காகச் சில வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு விஜயம் செய்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அக்கனவான் இந்தியாவுக்கு வந்தவுடன், தாம் அஹ்மதியர்களால் இஸ்லாத்தைத் தழுவவில்லை என்றும், அவர்கள் இங்கிலாந்துக்கு வரும் முன்னமே தாம் முஸ்லிமாக இருந்ததாகவும், காஜா கமாலுத்தீன் என்பவர் தமது நண்பர் என்றும் பகிரங்கமாகக் கூறினர். உலகப்பிரசித்தி பெற்ற பிரபல ஆங்கில நௌமுஸ்லிம் கனவான் டாக்டர் காலித்ஷெல்டிரேக் என்பவர் உலக சஞ்சாரம் செய்யும் முகத்தான் இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்துகொண்டிருந்த சமயம், சில காதியானிப் பத்திரிகைகள் துள்ளிக் குதித்தன. தங்கள் வர்க்கத்தாரால் இஸ்லாத்தைத் தழுவிய பேரறிஞர் வருவதாகப் பறை சாற்றின. ஆனால், அவர் பம்பாய் வந்திறங்கியவுடன் கூறிய மொழிகள் அப் பத்திரிகைகளுக்கு இடி விழுந்ததுபோலாயிற்று. பின்னர், அக்கனவான் இவ் அஹ்மதியர்களைப் பற்றி சிங்கையில் செய்த பிரசங்கமும், இக்கனவானை இஸ்லாத்தில் சேர்த்ததாக வாய்ப்பறை சாற்றிய இக்காதியானிகள், சென்னையில் அவர் இருந்த காலத்தில் ஒடி ஒளிந்துகொண்டதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இப்பொழுது மற்றொரு நவ்முஸ்லிம் கனவான் அஹ்மதியர்களைப் பற்றித் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருப்பதையும், தம்முடைய புகைப்படத்தை அஹ்மதியர்கள் தங்கள் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் பிரசுரிப்பதையும் கண்டித்து எழுதிய கடிதத்தை கீழே பிரசுரிக்கிறோம். இது நமது ஹி. இ. வாசகர்களுக்கு நல்ல விருந்தாக இருக்குமென்பது நமதபிப்பிராயம். இக்கடிதம் பிரபல ஆங்கில நவ் முஸ்லிம் கனவானுன டாக்டர் காலித் ஷெல்டிரேக்குக்கு எழுதப்பட்டது. இக்கடி சம்பந்தமாய் டாக்டர் அவர்கள் எழுதிய மற்றொரு கடிதமும் லாகூரில் பிரசுரமாகும் "ஜமீந்தார்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. காதியானிகளின் பொய்ப் பிரசாரம் நடைபெறுவதற்குத் தலைமை ஸ்தலமாக இருக்கிற அதே லாகூரிலிருந்து, அவர்களுக்கு மறுப்பு வருவதும், அதற்கு பதில் கூற முடியாது காதியானிகள் மௌனவிரதம் பூண்டிருப்பதும் இக்காலத்தில் இறைவன் செய்யும் நூதன விஷயங்களிலொன்றாகும். இத் தென்னாட்டில் காதியானிப் பிரசாரத்தைக் கண்டித்து நாம் எழுத முன்வந்தால், முல்லாக்கள் பொறாமையால் புழுக்கங்கொண்டு புலம்பித் திரிகின்றார்கள் என்று இங்குள்ள காதியானிகள் கதறுவார்கள். ஆனால், இப்பொழுது லாகூர் "ஜமீந்தார்" பத்திரிகையின் சொந்தக்காரரான மௌலானா ஜபர்அலீகான் அவர்கள் இதனை வெளியாக்க முன்வந்திருப்பதை என்னென்று கூறுவார்கள் என்பதைப் பொருத்திருந்து பார்ப்போம்.

டாக்டர் காலித் ஷெல்டிரேக் கடிதம்

C/o மெஸ்ஸர்ஸ் தாமஸ்குக் அன்ஸன்ஸ்
லிமிட்டட், பம்பாய் 24-7-1934.

கண்ணியம் பொருந்திய நண்பர் மௌலானா
ஜபர்அலிகான் சாஹிப்,
"ஜமீந்தார்" பத்திராதிபர் & சொந்தக்காரர்,
லாகூர்.

அஸ்ஸலாமுஅலைக்கும் வறஹ்மத்துல்லாஹி!

ஸர் உமர் H. ஸி. ஸ்யூவர்ட் ரான்கின்புரோனட் என்பவர் தங்களுக்கு எழுதிய கடிதமொன்று இப்பொழுது தான் வந்தது. அக்கடிதத்தின் பிரதியைத் தங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். இக்கடிதத்தில் எழுதி இருப்பதைப் பதம் பதமாகத் தங்கள் பிரசித்தி பெற்ற மேலான பத்திரிகையில் பிரசுரிப்பீர்கள் என்று நம்புகிறேன். சில சமயங்களில் கடிதங்கள் தவறிவிடுகின்றனவாதலின், கடிதத்தின் நகலைத் தங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். அசல் காப்பி என்னிடமிருக்கிறது. நான் லாகூருக்கு வரும்போது அக் கடிதத்தைத் தங்களுக்குக்

காண்பிப்பேன். கூடிய சீக்கிரம் நானும் ஸிம்ஸனும் பம்பாயிலிருந்து வட இந்தியாவுக்குப் புறப்படுகிறவர்களாக இருக்கிறோம். நான் லாகூர் வந்து சேருவதற்கு முன்னர், யான் லாகூருக்கு எப்பொழுது வருவேன் என்பதை தங்களுக்கு அறிவிப்பேன். சென்ற வருஷத்தில் யான் திடீரென நோய்வாய்ப்பட்டமை யான் இந்தியாவை விட்டுச் சீக்கிரத்தில் பிரயாணமாகிவிட நேர்ந்தது. அது சமயம் லாகூருக்கு வரமுடியவில்லை. ஆனால் அல்லாஹ் நாடினால் கூடியசீக்கிரம் லாகூர் வந்து சேருவேன். தங்களைச் சந்திக்க வேண்டுமென்று பூரண ஆதரவு வைத்திருக்கிறேன். ஸர் உமரிடமிருந்து எனக்கு மற்றொரு கடிதமும் கிடைத்திருக்கிறது. அதிலுள்ள சில விஷயங்களைப் பத்திரிகையில் பிரசுரிப்பதுபற்றி எனக்கு எவ்வித ஆக்ஷேபனையுமில்லை. இன்ஷா அல்லாஹ் இதைப்பற்றிப் பின்னால் எழுதுவேன்.

மௌலானா அவர்களே! எங்களுடைய இஸ்லாமிக் ஸொஸைட்டியானது லண்டன் ஒய்ட் ஸிட்டியில் "முஸ்லிம்தினம்" விழாவைக் கொண்டாடியபோது, யான் இமாமாக நின்று அஸர் தொழுகையை நிறைவேற்றுவித்தேன் என்பதும், தங்களது துருக்கித் தொப்பியை, தாங்கள் என்தலையில் வைத்ததும், அதிலிருந்து நம்மிருவருக்கு மிடையில் நேசமும் சகோதர வாஞ்சையும் ஏற்பட்டதென்பதும் தங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

தங்களது உண்மையுள்ள முஸ்லிம் சகோதரன்

காலித் ஷேல் டிரேக்

பேரன் உமர் கடிதம்

பார்வில் டைன் ஹௌஸ்
ஆர்காயிஸ் ஸ்காட்லண்டு
4—7—934.

கண்ணியம் பொருந்திய ஆசிரியர்
அவர்களுக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும், வறஹ்மத்துல்லாஹி! சில ஜனங்கள் தவறாகவும் வழிகெடுக்குந்தோரணையிலும் பிரசாரம்செய்துவருவதை மறுப்பதற்கு அனுமதியளிக்குமாறு வேண்டுகிறேன். இவர்கள் என்னைப்பற்றி மிர்ஜாயீ பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் தவறான விஷயங்களைப் பிரசுரித்து வருகிறார்கள்.

நான் மிர்ஜாயியாக இருக்கிறேன் என்று இந்தியாவிலுள்ள சில பத்திரிகைகள் எழுதிவருவதாகவும், என்னுடைய புகைப்படத்தைப் மிர்ஜாயீ பத்திரிகைகளும், பிரசுரங்களும் பிரசுரித்து வருவதாகவும் நான் இப்பொழுது தான் கேள்விப்பட்டேன். என்னுடைய புகைப்படத்தைப் பிரசுரிக்க எந்த மிர்ஜாயீ பத்திரிகைக்கோ, சஞ்சிகைக்கோ நான் அனுமதியளிக்கவில்லை. மேலும் நான் அஹ்மதீ என கூறப்படுவதையும் மிகவும் பலமாக மறுக்கிறேன்.

"நான் மிர்ஜாயி யன்று"

நான் வெஸ்டர்ன் இஸ்லாமிக் அஸோஸியேஷனின் அங்கத்தினனா யிருக்கிறேன். நான் எந்த அஹ்மதீ ஜமாஅத்துக்கோ அல்லது அவர்களின் அஸோஸியேஷனுக்கோ உபதலைவனாக இல்லை. நமது இஸ்லாமிய சகோதரரான டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்கள் அஸ்திவாரமிட்டதும், உலகப் பிரசித்திபெற்றதுமான கண்ணியமுள்ள அஸோஸியேஷனின் நோக்கத்தையும் திட்டத்தையும் தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

பிரிட்டிஷ் முஸ்லிம் சொஸைட்டியில் எனக்கு எவ்விதச் சம்பந்தமுமில்லை. இந்த ஸொஸைட்டியில் சிற்சில அஹ்மதிகள் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியுமாதலின், இந்த சொஸைட்டியைச் சேர்ந்த எந்த அங்கத்தினருடனும் யான் சேர இஷ்டப்படவில்லை.

நான் ஸ்காட்லண்டிலுள்ள கற்காட்டில்வாசம் செய்வதால், என் இருதயம் கற்காட்டில் வாசஞ் செய்பவர்களுடன் பற்றுள்ளதாக இருக்கிறது. ஆதலால், அரபியர்கள் பாலும் அவர்களது சந்ததியினர்பாலும் எனக்கு இயற்கையிலேயே பிரியமுண்டு. பக்கா முஸ்லிம் என்ற முறையில் எனக்கு ஹதீதின் பேரிலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரிலும், அவர்களுடன் நபித்துவம் முற்றுப் பெற்றுவிட்டதென்பதன் பேரிலும் பூரணவிசுவாசமிருக்கிறது. இன்ஷா அல்லாஹ் யான் கூடிய சீக்கிரம் இந்தியாவுக்கு வருகிறவனாயிருக்கிறேன். என்னுடன் என் மனைவியும் வருவாள். அவளும் சீக்கிரத்தில் இஸ்லாத்தைத் தழுவுபவளாயிருக்கிறாள். அது சமயம் தங்களிடம் அநேகம் விஷயங்களை அறிவிக்கவேண்டுமென்று விரும்பியிருக்கிறேன்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

தங்களது உண்மையுள்ள
முஸ்லிம் சகோதரர்

உமர். எச். ஸ்டூவர் - ரான்கின் புரோனட்.

இந்தக் கடிதத்தை எழுதியவர் படம்தான் மேலே கூறியுள்ள ஆங்கிலப்பிரசுரத்தின் 10-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. அஹ்மதீ என்பதிலும் மிர்ஜாயீ என்பதிலும் எவ்வித வித்தியாசமில்லை என்ற விஷயமும், லாகூர் பார்ட்டிக்கும் காதியானீ பார்ட்டிக்கும் கொள்கையில் வித்தியாசமில்லை என்றவிவரமும் மற்ருேரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சோதரீர்! லாகூர் அஹ்மதிகள் மேனுடு சென்று ஏதோ இஸ்லாமியப்பிரசாரஞ் செய்து பெரிய பெரிய லார்டுகளையும் மேதாவிகளையும் இஸ்லாத்தைத் தழுவும்படி செய்து வருவதாய் பறைசாற்றி, மக்களை ஏமாற்றிவரும் காதியாதி குஞ்சுகள், மேலே வரையப்பட்டுள்ள கடிதங்களைப் பார்த்து, தங்கள் பொய்ப்பிரசாரத்தின் சாயம்வெளுத்துவிட்டதைத்தெரிந்துகொண்டு, இனியாகிலும் மக்களை ஏமாற்றுவதற்குள்ள வழியைவிட்டு நேரானபாதையில்—உண்மையை எடுத்துக் கூறுவதில்—தாங்கள் அருமையான நேரங்களைச் செலவிடுவார்களாக.

அப்கானிஸ்தானில் 200 வயதுப் பெரியார்

256 வயதுள்ள ஒரு சீனர், சென்ற 1933-ம் வருஷத்தில் மரண மடைந்ததாகப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. சமீபகாலத்தில் மரண மடைந்த பிரபல துருக்கரான 'ஜாரு ஆகா' என்பவருக்கு 160 வயது என்று சொல்லப்படுகிறது. இவர் 9 விவாகங்கள் செய்திருந்தார். ஆனல் இம்மாதிரியான செய்திகளைப் பொதுவாக எல்லா ஜனங்களும் தவருன சமாச்சாரம் என்று நினைக்கின்ருர்கள். உண்மையில், இப்பொதுங் கூட இத்தனை வயதுள்ள பலர் இருந்துவருகின்றனர். சிறப்பாக அப்கானிஸ்தானில் இம்மாதிரியான வயோதிகர்கள் மிகவும் அதிகமாகஇருந்து வருகின்ருர்கள்.

180 வயது முதல் 200 வயது வரையுள்ள மனிதர்கள் பலரிருக்கின்றனர். 100-வயதுக்கு மேற்பட்டு, 180-வயதுவரை யுள்ளவர்கள் ஏராளமாக இருக்கிருர்கள். இத்தகைய அபூர்வ வயோதிகர்களிற் சிலரைப்பற்றிய விபரத்தைக் கீழே தருகிருேம்.

200 வயது

'காக்பரி' வகுப்பைச்சேர்ந்த ஒருவருக்கு 200 வயதாகி இருக்கிறது. 'மராகயி' என்பது அவரது பெயர். அவர் மலாஜா என்ற இடத்திலிருக்கிருர். இதுவரை அவர் விவாகம் செய்யவில்லை. இவர் அஃலா ஹஜ்றத் அஹ்மதுஷாஹ், தைமூர்ஷாஹ் முதலியவர்களைப்பற்றிய செய்திகளை எல்லாம் கூறுகிருர். இவருடைய சில பற்கள் விழுந்துவிட்டன. பின்னர், அவைகளிலிருந்த இடத்தில் வேறு பற்கள் முளைத்திருக்கின்றன.

180 வயது

அப்கானிஸ்தானின் தெற்குப் பாகத்தில் 'அர்கோன்' என்ற பிரதேசத்தில் 'மீதாங்' என்ற இடத்தில் 'ஹாஜிகுல்' என ஒருவரிருக்கிருர். இவர் அஹ்மது ஷாஹ் தௌலத் ஜாயீ என்பவரின் புதல்வர். இவரது வயது இப்பொழுது 180. அவர் இன்னமும் அவ்வளவு அதிகமாகப் பலஹீனமடையவில்லை. ஆனல், அவரது பார்வை குன்றிவிட்டது. இவர் ஒரே மணம் தான் செய்தார். அதனல் அவருக்கு 9 குழந்தைகள் பிறந்தனர். இவர்களில் 4 புதல்வர்கள் இன்னமும் உயிருடனிருக்கிருர்கள். ஆனல், இவர்கள் யாவரும் ஒதுக்கமாயிருந்து ஜனங்களிடத்தில் மிகக்குறைவாகவே பழகுகிருர் (முலாக்காத்துச் செய்கிருர்)கள்.

170 வயது

அப்கானிஸ்தானின் கிழக்குப் பிரதேசத்தில் ஷின்வாரிகபீலாவில் பஹதூர் என்ற பெயருள்ள ஒருவர் இருக்கிருர். அவருக்கு வயது 170 ஆகிறது.

'ஹஜாரா' என்ற ஊரில் ரம்ஜான் என்ற பெயருள்ள ஒருவர் இருக்கிருர். இவருக்கும் 170 வயதாகிறது. ஆனல், அவர் தற்போது மிகவும் பலஹீனராகி விட்டார்.

160 வயது

கோஹட்டுக்கு மூன்றுமைல் தூரத்தில் ஒரு கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் 'பாஜ்குல்கான்' என்ற பெயருள்ள ஒரு தலைவரிருக்கிருர். அவருக்கு வயது 160 ஆகிறது.

அவர் ஒரு ஜமீந்தார். அவருக்கு இரண்டு புதல்வர்களிருக்கின்றனர். அவர்களில் ஒருவருக்கு 99 வயதாகிறது. இதுவரை அவருடைய சக்தியும், கண்பார்வையும் நன்ருக இருக்கிறது.

150 வயது

அப்கானிஸ்தானின் கிழக்குப் பிரதேசத்திலுள்ள கன்னர் என்ற இடத்தில் 'யார் முஹம்மதுகான்' என்று ஒருவரிருக்கிருர். அவருக்கு 150 வயதாகிறது. அவர் இன்னும் சுவாத்தியமாகவே இருக்கிருர். சின்வாரிக் கூட்டத்தாரில் முல்லா மஜிதுகான் என்று ஒருவரிருக்கிருர். அவருக்கு வயது 150. இவர் ஹதீது, தப்ஸீர் ஆகிய கலைகளில் மிகப் பெரிய அறிஞராக இருக்கிருர்.

145 வயது

அப்கானிஸ்தானின் கிழக்குப் பிரதேசத்தில் 'நாஜியான் ஷின்வாரி' என்ற இடத்தில் ஒருவரிருக்கிருர். அவருடைய பெயர் 'மீர்ஜான்' என்பதாகும். இவருக்கு 145 வயதாகிறது.

120 வயது

கிழக்குப் பிரதேசத்தில், புஷ்து என்ற இடத்தில் அமர்சிங் என்று ஒரு ஹிந்து இருக்கிருர். அவருக்கு 120 வயதாகிறது. அவருடைய பற்கள் இன்னமும் பலமுள்ளவைகளாயிருக்கின்றன. இவர் இன்னமும் கால்நடையாக நடந்து திரிகிருர்.

கோர்பந்து என்ற இடத்தில் முஹம்மது அப்பாஸ் என்ற பெயருள்ள ஒருவரிருக்கிருர். அவருக்கு 120 வயதாகிறது. அவர் நான்கு விவாகம் செய்திருக்கிருர். அவர்களில் மூன்று பேர் மரித்துப்போயினர். இவருக்கு மொத்தம் 30 பிள்ளைகளிருக்கின்றனர். இவர்களில் இருபதுபேர் இன்னமும் ஜீவித்திருக்கிருர்கள். இவர் நீண்டதூரம்வரை கால்நடையாகச் சென்று வருகிருர்.

ஹாஜிஷாஹி வலீகான் என ஒரு இடையரிருக்கிருர். இவருக்கு 120 வயதாகிறது. இவருக்கு ஐந்து ஆண்மக்களும் பெண்மக்களுமிருக்கின்றனர்.

'அலீ ஆபாத்' என்ற இடத்தில் ஒருமனிதரிருக்கிருர். அவருக்கு 120 வயதாகிறது. இவருக்கு 29 மக்களிருக்கின்றனர். இவருக்கு 54 பேரன் பேத்திகளிருக்கின்றனர். இவருக்கு ஞாபகச் சக்தியும், ஸ்தூல பலமும் மிகவும் நன்ருக இருக்கிறது.

'கத்ஙன்' விலாயத்தில் இந்திரா என்ற இடத்தில் 'முராத்பாயி என்பவருக்கு 120 வயதாகிறது. இவருடைய சக்திகளும் மிக நன்ருக இருக்கின்றன.

115 வயது

கத்ஙன் பிரதேசத்தில் பாபா என்ற பெயருள்ள ஒருவரிருக்கிருர். அவருக்கு 115 வயதாகிறது. இவருக்கு 15 மக்களும், 60 பௌத்திரர்களுமிருக்கின்றனர்.

ரேஜாமாஹ் என ஒரு ஸ்திரீ இருக்கிருள். குர்பான்பேக் என்பது இவளது தந்தையின் பெயர். இவள் ஹஜாரா என்ற கபீலாவைச் சேர்ந்தவள். சார்பாக் கோஸ்த் என்ற இடத்தில் வசிக்கிருள். இவளுக்கு 115 வயதாகிறது. இவளுடைய மக்களில் 12 பேர் உயிருடனிருக்கிருர்கள். இவர்களுக்கும் மக்களுண்டு.

'சார்பாக்' என்ற ஊரில் ஹஜாரா கபீலாவில் 'பாயீமுராத்' என ஒருவரிருக்கிருர். 'கால்முராத்' என்பது இவரது தந்தையின் பெயர். இவருக்கும் 115 வயதாகிறது. இவருக்கு 7 மக்களும், 40 பௌத்திர பௌத்திரிகளுமிருக்கின்றனர்.

113 வயது

'கத்அன்' பிரதேசத்தில் அர்பாபு ஹஸன் என்ற பெயருள்ள ஒருவருக்கு 113 வயதாகிறது. இவருக்கு 31 மக்களுண்டு.

கோஸ்த் இந்திராபில் மலிக் குதாபக்ஷ்கான் என்பவருக்கு 112 வயதாகிறது. 40 புதல்வர்களும் 3 புதல்விகளு மிருக்கின்றனர். 15 பௌத்திர பௌத்திரிகளுமிருக்கின்றனர்.

தாரிகோஸ்த் பிரதேசத்தைச் சேர்ந்த யதீர் என்ற ஊரில் அஹ்மதுகான் பாயீ என்பவருக்கு 111 வயதாகிறது. இவர் தாஜுக் கபீலாவைச் சேர்ந்த முஹம்மது ரிஜாகான் என்பவரின் புதல்வர். இவருக்கு 6 புத்திரர்களும், 5 புத்திரிகளும், 22 பௌத்திர பௌத்திரிகளுமிருக்கின்றனர்.

கூராபா பன்ஜ்ஷபீர் என்ற இடத்தில் குலாம் முஹம்மது என்பவருக்கு 111 வயதாகிறது. இவருடைய ஸ்தூல நிலை மிகவும் நன்ருக இருக்கிறது. இவர் விவசாயம் செய்கிருர்.

ஸெய்யிது குலாம் நபீகான் என்பவருக்கு 110 வயதாகிறது. இவர் கோர்பந்து கணவாயிலுள்ள சஹாராவிலிருக்கிருர். 14 புத்திர புத்திரிகளிருக்கின்றனர். இவருடைய திரேக

நிலையும் மிக நன்ருக இருக்கிறது. மிகத்தூரமான இடத்துக்கும் கால் நடையாகச் செல்கின்ருர்.

ஹஜாரா கபீலாவைச் சேர்ந்த ஜுபைதா மாஹ் என்ற ஸ்திரீக்கு 110 வயதாகிறது. இவள் நப்ஸ் முஹம்மது என்பவரின் புதல்வி. 6 புத்திரர்களும், 2 புதல்விகளும், 40 பௌத்திர பௌத்திரிகளும் இவருக்கு இருக்கிருர்கள்.

முஹம்மது ஸாஹிப் ஜாதா என்பவருக்கு 103 வயதாகிறது. இவர் பிரபல ஆலிமாகவும் மேதாவியாகவுமிருக்கிருர். ஆத்மஞானத்தைப் பற்றிப் பல நூல்கள் இயற்றியுள்ளார். இன்னமும் மூக்குக்கண்ணுடி இல்லாமல் புத்தகங்களைப் படிக்கிருர்.

கான்ஆபாதில் லாபீ என்ற கபீலாவைச் சேர்ந்த ஹாஜி மீர்ஜான் என்பவருக்கு 105 வயதாகிறது. இவருடைய சந்ததியினர் 120 பேர்கள் வரை இருக்கிருர்கள். இவர்களில் அநேகரை இவருக்கு அடையாளமும் தெரியாது. இவருடைய தேகம் இன்னமும் பலமுள்ளதாகவே இருக்கிறது.

இந்திராப் என்ற இடத்தில் தோஸ்முஹம்மது என்பவருக்கு 103 வயதாகிறது. இவருக்கு 8 மக்களும், 68 பௌத்திர பௌத்திரிகளுமிருக்கிருர்கள்.

'இந்திராப்' கோஸ்த் என்ற இடத்தில் இருக்கிற நியாஸ் முஹம்மது குமாரர் ஸெய்பித் கிதம் பாயீ என்பவருக்கு 100 வயதாகிறது. இவர் தாஜுக்கு கபீலாவைச் சேர்ந்தவர். 16 மக்களும் 63 பௌத்திர பௌத்திரிகளுமிருக்கிருர்கள். இவருடைய ஸ்தூல நிலை மிக நன்ருக இருக்கிறது.

புர்கீராஜான் மோஙா என்ற இடத்தில் அப்துல் குத்தூஸ் என ஒருவரிருக்கிருர். இவருக்கு வயது 100. இவருடைய ஸ்தூல நிலைமை மிக நன்ருக இருக்கிறது. தம்முடைய வேலைகளைத் தாமே செய்துவருகிருர்.

—" ஜமீன்தார் "

ஹங்கேரி முஸ்லிம்களின் நிலை

டாக்டர் கர்மானுஸ் என்ற ஹங்கேரி நவ்முஸ்லிம் அறிஞர் எழுதியது.

டாக்டர் கர்மானூஸ் என்பவரை வாசகநேயர் நன்கறிவர். இவர் ஜெர்மன் தலை நகரான பர்லின் சர்வகலாசாலையில் இஸ்லாமியக்கலைகள் சம்பந்தப்பட்ட இலாக்காவுக்குத் தலைவராக இருந்தார். பின்னர், கவிச்சக்கிரவர்த்தி டாக்டர் ரபீந்தரநாத் டாக்கூர் அவர்களின் 'சாந்தி நிகேதனம்' என்ற ஆஸ்ரமத்திற்கு ஆசிரியராக இந்தியாவுக்கு வந்தார். பின்னர், டில்லி 'ஜாமிஆ மில்லிய்யா இஸ்லாமியா' என்ற தேசிய சர்வகலாசாலையின் திறப்பு விழாவின்போது இஸ்லாம் மதத்தைத் தழுவினர். தற்சமயம் இவர் ஐரோப்பாவில் இஸ்லாமியப் பிரசாரம் புரிந்து வருகிருர். இவர் தமது தாய்நாடாகிய ஹங்கேரியைப்பற்றி அடியிற்கண்ட வியாசத்தை எழுதியுள்ளார்.

ஹங்கேரியானது, ஒரு சிறிய ஏழை அரசாங்கம். இஸ்லாமிய உலகத்தை விட்டுப் பிறிந்திருக்கிற ஒரு தேசமாகும். இந்த தேசத்தார் இம்மை மறுமைப் பேற்றுக்கான கலைகளையும் கல்விகளையும் அறியாமலிருப்பதும், நேரான பாதையைக் காட்டக்கூடிய ஒரு வழிகாட்டி அவர்களுக்கு இல்லாமலிருப்பதும் ஆச்சரியப்படத்தக்க விஷயமன்று. அத்தேசத்திலுள்ள முஸ்லிம்களில் அநேகர், விஷயத்தை உணர்ந்துகொள்ளாமலும், பிறமதத்தில் சேர்ந்துள்ளோம் என்ற எண்ணமில்லாமலுமே கிறிஸ்தவர்களாகி இருக்கிருர்கள். அதாவது, ஒரு சிறுவனை அவனுடைய பெற்ருேர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்போது இந்தப் பையன் முஸ்லிமானவன் என்று கூறுவதில்லை. இதனுல், அந்தப்பையனுடைய பெயர் இப்ராஹீம் யூஸுப் என்றிருப்பது, அப்ராஹாம் ஜோஸப் என்று மாறிவிடுகிறது. மேலும் மத சம்பந்தமாகவும் ஒழுக்க சம்பந்தமாகவுமுள்ள கல்வியைப்போதிக்க வேண்டும் என்பதைப் பற்றி எங்கள்தேச அரசாங்கத்துக்குக் கொஞ்சமும் கவலையில்லை. ஆதலால், முஸ்லிம் சிருர்கள் கிறிஸ்துவக் கல்விகளைக் கற்றுக்கொள்ள வேண்

டும். அல்லது வீணாக ஒழுக்கக்கேடாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. இதனால் மதசம்பந்தமான எந்த விஷயத்தையும் தெரிந்துகொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்.

ஐரோப்பாவில் இஸ்லாத்தின் வெற்றிகள்

எங்களது தேசத்திலுள்ள முஸ்லிம் சிறார்களின் நிலைமையும், அவர்கள் வீணர்களாக இருப்பதும் இஸ்லாமிய உலகத்தால் கவனிக்கப் படத்தக்கதாக இருக்கிறது. ஹங்கேரி முஸ்லிம்கள், இதர ஐரோப்பிய தேசங்களிலுள்ள புதியகாலத்து முஸ்லிம்களல்ல. இவர்கள் பூர்வீககாலத்து முஸ்லிம்களின் சந்ததியர்களாவார்கள். இஸ்லாத்தின் மகத்துவமும் வெற்றிகளும் டான்யூப் நதியின் கரைகளிலும், வடஹங்கேரியில் கார்பேத்தியன் வரையிலும் பரவி இருந்தது. ஆகவே, ஹங்கேரியின் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் அலைகளுக்குத் தனிப்பட்ட ஆதாரமாக இருக்கிறார்கள். இஸ்லாம் என்ற சமுத்திரத்தின் அடையாளங்களுக்குப் பின் வீழ்ச்சியான அக்காலத்தில், இந்த தேசத்தில், இந்த முஸ்லிம்கள் தாம் இஸ்லாத்தின் பிரதிநிதிகளாக இருந்தனர். அது சமயம் இந்த இஸ்லாமிய கலைகளுக்கு எந்தவழி காட்டியும் ஞானசிரியரும் இருக்கவில்லை. ஆதலின், ஐரோப்பாவிலுள்ள முஸ்லிம்களில், இந்த தேசத்தாருக்கு சரித்திர சம்பந்தமான விசேஷ அந்தஸ்துண்டு.

மதத்தலைவர்

இற்றைக்கு 25 வருஷங்களுக்குமுன்னர் அதாவது, சென்ற 1909-ம் வருஷத்தில் போஸ்னியாவும், ஹெர்ஸ்கோவினியாவும் ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்துடன் சேர்க்கப்பட்டன. எங்களுடைய அரசாங்கம் ஒரு முஸ்லிம் தலைவரை (இமாமை) நியமித்தது. இந்த நியமனம் மத சம்பந்தமான ஆத்மார்த்த விஷயங்களுக்காக ஏற்படுத்தப்படவில்லை. போஸ்னியா, ஹெர்ஸ்கோவினிய்யாவின் ஆதிக்கம் எந்த கவர்ன்மெண்டினிடத்தில் இருந்ததோ அந்த கவர்ன்மெண்ட்டுக்கு (துருக்கிக்கு) இந்த இமாம் பிரதிநிதியாக இருந்தார். ஆகவே, இந்த நியமனம் ராஜீய விஷயங்களை அனுசரித்துச் செய்யப்பட்டதாகும். இந்தத் தலைவர் போஸ்னியாவைச் சேர்ந்தவர். இவர் துருக்கராக இருந்தார். இவர் இரண்டு அரசாங்கத்தின் ஒற்றுமையின்பேரில், ஹங்கேரி அரசாங்கத்தின் சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருந்தார். துருக்கியின் ஆத்மார்த்த ஆதிக்கத்துக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமலிருப்பதற்காக, துருக்கியரின் கஷ்டசங்கடங்கள் குறையவேண்டும் என்பது இவருடைய நோக்கமாக இருந்தது. இவ்விதமாகக் காலமும் கழிந்தது, மகாயுத்தமும் முடிவடைந்தது. ஹங்கேரி அரசாங்கத்தின் கையை விட்டு போஸ்னியாவும், ஹெர்ஸ்கோவினியாவும் நீங்கி, யூகோஸ்லாவியாவுடன் சேர்க்கப்பட்டது. அதனால், துருக்கித் தலைவரின் துருக்கி ராஜிய பிரதிநிதித்துவமும் ஒழிந்தது. துருக்கி அரசாங்கம் தன்னுடைய புதிய சட்டப்படி மதத்தை விட்டுப் பிரிந்து குடியரசை ஏற்படுத்திக்கொண்ட போதிலும், ஹங்கேரியிலுள்ள துருக்கி இமாம் மாத்திரம் வழக்கம்போல் இருந்து கொண்டுதானிருந்தார். யுத்தத்துக்குப் பின் ஏற்பட்ட பீதியினால் ஹங்கேரி அரசாங்கம் இந்த இமாமுடைய நியமனத்துக்கேற்பட்ட காரணங்களையும் நிபந்தனைகளையும் மறந்துவிட்டு, ஏற்பட்ட சம்பளத்தொகையை மாத்திரம் சரியாகக் கொடுத்துக்கொண்டே இருந்தது. இதில் ஆச்சரியமான விஷயம்யாதெனில், அவர் துருக்கிப் பிரஜை என்றமுறையில்ஹங்கேரி முஸ்லிம்களின் மத்தியில் இருக்கிறார்; அவர்களுடன் சம்மந்தப்படுவதற்கான யாதொருவேலையு மில்லை. ஏனென்றால், துருக்கியரின் இமாமான இவர், தமது துருக்கி அரசாங்கத்தின் சட்டப்படி ஹங்கேரியிலுள்ள துருக்கியரைப் பின்பற்ற முடியாது. ஹங்கேரி அரசாங்கமோ மதசம்பந்தமான பிரசாரம் செய்ய அனுமதி கொடுப்பதில்லை. இஸ்லாம் மதத்தைப் பலப்படுத்துவதற்கான முயற்சியை நல்ல முயற்சி என்று கருதுவதில்லை. ஆனால், ஹங்கேரி முஸ்லிம்களின் நிலைமையோ ஜலத்தில் மூழ்குபவன் ஆழமான கிடங்குக்குள் மூழ்குவதைப் பயந்து ஆற்றின் கரையைப்பிடித்துக் கொள்வதுபோல், தங்களுக்கு ஏற்படும் நிகழ்ச்சிகளில் மட்டும் மார்க்கத்தின்பால் திரும்பி திருகுர்ஆனின்மீது ஆதாரங்காட்டுகிறார்கள்.

முஸ்லிம்கள் தங்கள் இமாதைத் தெரிந்தெடுத்துக் கொண்டனர்.

துருக்கி இமாமானவர், அரசாங்கப்பிரதிநிதித்துவம் வகிப்பதால், தம்முடைய பிரதிநிதித்துவம் மாறிவிடுமோவென்றஞ்சி மதசம்பந்தமான போதனையைக் கவனிக்கமறுக்கிறார். ஆத

லால், ஹங்கேரி முஸ்லிம்கள் அவரைவிட்டுப் பிரிந்து தங்களுக்குள்ளாகவே வேறு ஒருவரை இமாமாகத் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். இவர் தக்வாவில் (பயபக்தியில்) பிரபலமான வர். இஸ்லாத்தின் நோக்கங்களைப் புரக்கணிப் பவராக இருக்கவில்லை. இவர் வீரதத்துவமுள்ள வர். தம்முடைய வீரதத்துவத்தின் காரண மாகக் கீர்த்தியும் வனுவும் பெற்றவர். தொழு கையாளி, சிறுசிறு இஸ்லாமிய ஜமாஅத்துக் களை ஒன்றுகூட்டி அவர்களில் சீர்திருத்த வேலை செய்து வருகிறார். மதப்பற்று, தக்வா ஆகிய வைகளைப்பற்றித் தமது பிரசங்கங்களில் வற் புறுத்துகிறார். இவ்விதப்பிரசாரத்தினால்சொற்ப காலத்துக்குள் நல்லபலன் கிடைத்தது. முஸ் லிம் சமூகத்தாருக்குப் புத்துணர்ச்சி ஏற்பட் டது. எப்பொழுதுமே நன்மை செய்தல் என் பதைக் கவனிக்காத ஜனங்கள் இப்பொழுது இஸ்லாத்தின்பால் சார்பானவர்களாகிவிட்ட னர். இந்த இமாமானவர் ஹங்கேரிப் பாஷையில் மதசம்பந்தமான ஒரு புத்தகம் எழுதிவெளி யிட்டிருக்கிறார். இவருடைய பிரசங்கங்கள், முயற்சிகள் ஆகியவைகளைக்கொண்டு முஸ்லிம் களை ஆத்மார்த்த மரணத்தைவிட்டு விடுதலை யளிப்பதற்காக அவர் கையாண்டமுறைகளி னால், கிறிஸ்துவ சமூகத்தாரிலும் கூட ஒரு கூட்டத்தார் இஸ்லாம்மத சம்பந்தமான விஷ யங்களைத் தெரிந்துகொள்வதற்காக அவரைச் சுற்றி வளைந்து கொண்டிருக்கின்றனர்.

ஈமானின் வெற்றிக்கு ஒருதாரணம்

இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில், இஸ்லாத்துக்கு ஏற்படும் இடுக்கண்களை அகற்றுவதற்காக அவர் ஒரு சபையைக் கூட்டி இருக்கிறார். ஏனைய அரசாங் கத்திய ராஜ தூதர்கள், உயர்ந்தகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இதற்குச் சார்பாக இருக்கிறார் கள். இம்மாதிரியான வேலைகளை எல்லாம் அவர் செய்தகாலத்தில் அவரிடம் எவ்விதச் சொத் தும் இருந்ததில்லை. அவருக்கு எங்கிருந்தும் சம்பளம் ஏற்பட்டு மிருக்கமில்லை. இவர் 'ஈதுல் அல்ஹா'வின்போது ஒரு மகாநாடு கூட்டினார். அதில் முஸ்லிம்களும், கிறிஸ்துவர் களும், இஸ்லாத்தின்பால் பற்றுள்ள ஹங்கேரி ஜனங்களும் கலந்து கொண்டனர். அதுபொ ழுது இஸ்லாத்தைப்பற்றியும் அதன் சிறப் பைப்பற்றியும் அநேகப் பிரசங்கங்கள் நடை பெற்றன. இவர் தம் முடைய எளிய நிலைமையில், தன்னுடைய சுயமுயற்சியால் சம் பாதித்த பொருளைப் புசித்துக்கொண்டு பலமா தங்களாக இவ்வரிய ஊழியங்களைச் செய்தார். இவருடைய முயற்சியைப் பார்த்த கிறிஸ்தவர் களிற் பெரும்பாலர், இவர்பால் அபிமானங் கொண்டுவிட்டனர். இவர்களிற் பலர் இஸ்லாத் தின் மேன்மைகளை ஒப்புக்கொண்டு இஸ்லாம் மதத்தைத் தழுவிவிட்டனர். ஹங்கேரி முஸ் லிம்களின் செல்வநிலை, கலை ஆகியவைகளுக்கு உதவி புரிவதற்காகப் பல தீர்மானங்களும் மேற் கண்ட கூட்டத்தில் நிறைவேறின. கிறிஸ்து வப் பிரஜைகளுக்குள்ளதுபோல் முஸ்லிம்களின் உரிமைகளையும் அரசாங்கத்தை ஒப்புக்கொள் ளச் செய்யவேண்டும்; முஸ்லிம்கள் தங்கள் குழந்தைகளுக்கு இஸ்லாமியக் கல்வி போதிக்க வேண்டும்; இதில் எவ்விதத்தடையு மேற்படக் கூடாது என்ற விஷயங்களுக்கான முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாஜி துருக்கி இமாமைப்பற்றிய தப்பபிப்பிராயம்

இச்சங்கத்தார், எங்களது அரசாங்கத் தலைநக ரில் ஒரு மஸ்ஜிது கட்டுவதற்காகவும் முயன்று வருகிறார்கள். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக எங்களுடைய சட்ட நிபுணர்கள் இஸ்லாமியக் காரியங்களை அறியாதவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள், துருக்கி அரசாங்கம் இப்பொழுதும் இவ்வுலகில் இஸ்லாமிய ஆதிக்கத்தை வகித்து வருகிறது; துருக்கியர்களால் நியமிக்கப்பட்ட முதலாவது இமாம்தான் எல்லா முஸ்லிம் சமூகத்தாருக்கும் இமாமாக இருக்கிறார் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான தப்பபிப்பிராயத்தினால், முஸ்லிம்களிலுள்ள தர்ம சிந்தையுள்ளவர்கள், ஹங்கேரி முஸ்லிம் கள் தங்களுக்கென வேறு இமாமைத் தாங்க ளாகத் தெரிந்தெடுத்துக்கொண்டார்கள் என நினைத்து, அவர்களுக்கு உதவி புரிவதை விட்டு விலகுகிறார்கள்.

மதத்துடன் சம்மந்தம் வைத்துக்கொள்ளாத இந்த இமாமைப் பார்க்கினும் மதப்பற்றுள்ள வேதக்காரர்கள் மேலானவர்கள் என்று நினைக் கிறார்கள். ஏனெனில், இந்த இமாமிடத்தில் வேதமோ மதமோ இல்லை. ஆனால், இந்த அபிப்பிராயத்தில் ஹங்கேரி முஸ்லிம்கள் குற்ற மற்றவர்களாயிருக்கிறார்கள். தற்போது ஹங் கேரி முஸ்லிம்கள் இவ்விதமான ஒரு கொடிய யுத்தத்தில் சிக்கி இருக்கிறார்கள். எங்களுடைய

இந்தச் சங்கத்தாரின் ஆயுதமானது அன்பும், தக்வாவும், இஸ்லாத்தின் ஏற்றங்களை எடுத்துரைப்பதும்தான். இரண்டாவது கக்ஷியாமாகிய அந்த துருக்கி அரசாங்கத்தின் மாஜிப்பிரதிநிதியின் ஆயுதமானது, அபாண்டமும், இட்டுக்கட்டும் தான். எங்களுடைய இஸ்லாமியச் சபையானது ஏழையாக இருக்கிறது. அல்லாஹுதஆலாவைப் பயப்படுத்துகிறது. இதற்கு உதவி செய்வது சிதேவித்தனமாக இருக்கிறது. எதிர்க்கக்ஷியினரிடத்தில் சகல வசதிகளுமிருக்கின்றன. ஆனால், திருகுர்ஆனும், தப்ஸீர்களும் இல்லை. எங்களது இமாமின் வீட்டில் வறுமை இருக்கிறது. ஆனால், எங்களது ஆத்மாக்களில் தக்வாவும் மார்க்க பக்தியும், முயற்சியும், இஜ்திஹாதும் நிறம்பி இருக்கிறது. ஆகவே, மறுபடி சீக்கிரத்தில் இஸ்லாமிய உலகத்தின் முன்னிலையில் வெற்றியின் முகத்தைக் காண்பிப்போம் என்பதில் எங்களுக்குக் கொஞ்சங் கூடச் சந்தேகமில்லை. முஸ்லிம் சகோதரர்களே! எங்கள்பால் கவனம் செலுத்துங்கள்! இஸ்லாமிய உலகத்திலுள்ள ஏனைய முஸ்லிம்களுக்கு உணர்ச்சியில் எவ்விதத்திலும் குறையாத ஒரு ஜமாஅத்து, ஹங்கேரி முஸ்லிம்களிலும் இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள். முஸ்லிம்களை நேசிப்பவர்களும், முஸ்லிம்களுக்கு ஆத்மார்த்த, ஸ்தூலஉதவி செய்கிறவர்களும், சகலவிதத்திலும் முஸ்லிம்கள் பால் நல்ல எண்ணமுள்ளவர்களுமான ஒருகூட்டத்தார் ஹங்கேரி தேசத்தில் இருக்கிறார்கள் என்பதை எப்பொழுதும் மறந்துவிடாதீர்கள்.

இவ்வடியேன் சம்பந்தமாக ஒரு விஷயமுண்டு. அரபிப் பாஷையை அறியாதவர்களும் திருகுர்ஆனை உணர்ந்துகொள்ளும் பொருட்டு திருகுர்ஆனின் மொழி பெயர்ப்பையும், அதன் வியாக்யானத்தையும் ஒரு ஜமாஅத்தாருக்காக எழுதி இருக்கிறேன். அல்லாஹுதஆலாவின் தௌபீக் (நல்லுதவி) இருக்குமாயின் யான் எகிப்துக்குச் சென்று உலமாக்களையும் அறிஞர்களையும் சந்திப்பேன். இன்னும், உங்களுடைய சிறந்தபாஷையைக் கற்றுகொள்வதற்குமுயற்சியும் செய்வேன்.

லாஹூர் அஹ்மதியர்களும், காதியானி மிர்ஜாயீகளும்.

லாகூரில் பிரசுரமாகும் "ஜமீந்தார்" பத்திரிகை வரைவது

பிரபல தேசியத் தலைவர்களிலொருவரும், லாகூர் வாசியுமான மௌலானா ஜபர் அலிகான் B. A. அவர்களை ஆசிரியராகவும், சொந்தக்காரராகவும் கொண்ட 'ஜமீந்தார், பத்திரிகையானது சிலகாலமாக லாகூர் மிர்ஜாயிகளையும், காதியானி மிர்ஜாயிகளையும் பற்றி பல கட்டுரைகளைப் பிரசுரித்துக் கொண்டிருந்தது. இவைகளை மறுத்து லாகூர் மிர்ஜாயீ பார்ட்டியின் தலைவரான முஹம்மது அலீ, M. A.-L. L. B. என்பவர், "ஜமீந்தாரின் அபரிசுத்தமான பிரசாரம்" என்ற தலைப்பின்கீழ் ஒரு மறுப்புரை பிரசுரம்செய்தார். அதற்கு, மிர்ஜாயீ முஹம்மது அலீயானவர் (1) நபிகள்நாயகமவர்களுடன் நபித்துவம்முற்றுப்பெற்றது என்பதை நம்புவதில்லை. (2) மிர்ஜாவின் நபித்துவத்தை ஒப்புக்கொள்ளாதவர்களைக் காபிர் என்று கருதுகிறார். (3) வாளேந்தி ஜிஹாது செய்வதை ஹறாம் என்று கருதுகிறார். (4) ஆங்கிலேயரிடம் அசையாத ராஜவிசுவாசப் பிரமாணம் கொண்டிருக்கிறார். என்ற நான்கு காரியங்களையும் ஜமீந்தார் பத்திரிகை எழுதிற்று. இது அபாண்டப் புளுகு என்று முஹம்மது அலீ விளம்பரம் செய்தார். ஆனால் இச்சம்பாஷணையில் இந்நான்குவிதக் கொள்கைகளும் முஹம்மது அலிக்கு உண்டு என்பதை அவருடைய புத்தகங்களிலிருந்தும், அவரது கக்ஷிப் பத்திரிகையிலிருந்தும், அவர்களது மதச்சகோதரக் கக்ஷியினரான காதியானி மிர்ஜாயிகளின் பிரசுரங்களிலிருந்தும், குலாம் அஹ்மது காதியானியின் நடவடிக்கைகளிலிருந்தும் எடுத்துக் காட்டப்படுகிறது. எனவேநேயர்கள் ஊன்றிப்படித்துஉண்மையை உணருவார்களாக.

அஸ்லம்—மௌவி முஹம்மது அலீ சாஹிப், என்ன செய்தி, தாங்கள் இவ்வளவு தூரம்

கவலைப்பட்டு யோசித்துக்கொண் டிருக்கிறீர்களே.

முகம்மது அலீசாஹிப்——அஜீ! என்ன செய்கிறது இந்த ஜமீந்தார் பத்திரிகை கொஞ்சநாட்களாகநம்மைத் தூற்றவே தலைப்பட்டிருக்கிறது. தினசரிநம்மைப்பற்றி ஏதேனும்ஒன்றுஎழுதாமலிருப்பதில்லை. நம்முடைய இந்த ஜமா அத்து ஐரோப்பாவில் லக்ஷக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்து மஸ்ஜிதுகளைக் கட்டி, திருகுர்ஆனின் மொழிபெயர்ப்புகளை திரித்துவக் கொள்கை நிறைந்த நாட்டில் பரத்தி, ஏகநாயனின் பெயரை உயர்த்தி, அவனுடைய ஹபீபாகிய முஹம்மது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் பரிசுத்த அழகிய முன்மாதிரியாகிய 'உஸ்வயேஹஸனு'வை உலகமெங்கணும் பரப்பி, இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் மேன்மையையும் கண்ணியத்தையும் உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது. இந்நிலைமையில், ஜமீந்தார் பத்திரிகை இம்மாதிரி நமக்கு விரோதமாகப் பிரசாரம் செய்வதற்கு அதைத் தூண்டிவிட்டது எதுவோ என்பதை அல்லாஹுத ஆலாதான் அறிவான். சென்ற ஏப்ரல்மீ 19-ந்தேதி வெளியான இந்தப் பத்திரிகையின் இதழில், மிர்ஜாயிகள்,

1. நபித்துவம் முற்றுப்பெற்று விட்டது என்பதை ஒப்புக்கொள்வதில்லை.

2. மிர்ஸாஜீயை நபியென்று நம்பாதவர்கள் காபிர்கள் என்று கருதுகிறார்கள்.

3. வாளைக்கொண்டு ஜிஹாது செய்வதை ஹராம் என்று எண்ணுகிறார்கள்.

4. ஆங்கிலேயரிடம் அசையாத ராஜவிசுவாசம் வைத்திருப்பது ஈமானின் ஒரு அம்சம் என்று கருதுகிறார்கள் என்று எழுதி இருக்கிறது. ஆனால், நாமோ நபிகள் நாயகமவர்களுடன் நுபுவ்வத்து முற்றுப்பெற்றுவிட்டது என்ற விஷயத்தில் ஜமீந்தாரைப் பார்க்கிலும் இன்னும் ஒருபடி அதிகமாகவே இருக்கிறோம். எங்களது குருநாதரான ஹஜ்ரத் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியைப் பின்பற்றி, நாயகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் புதுநபியோ பழைய நபியோ வருவது கூடாது என்று எண்ணுகிறோம்.

தவிரவும்., ஹஜ்ரத் மிர்ஜா ஸாஹிபுக்கு நபிப்பதவி இருப்பதாக நாங்கள் கருதுகிறோம் என்பதை இட்டுக்கட்டு என்று நாங்கள் கூறுவது மட்டுமல்ல, அவருக்கு நபிப்பதவி இல்லை என்று நாங்கள் சென்ற 20 வருஷங்களாகப் புத்தகங்களும், சஞ்சிகைகளும், விளம்பரங்களும் எழுதி வெளியிட்டு வருகிறோம். மேலும், பகிரங்கமாக எவர் கலிமாவை ஓதுகிறாரோ அவர் முஸ்லிமாக இருக்கிறார் என்றும், அவர் இஸ்லாமிய வகுப்பில் எவ்வகுப்பில் சேர்ந்திருந்தாலும் குற்றமில்லை என்றும் கூறிவருகிறோம்.

வாளேந்தி மார்க்கயுத்தம் செய்வதைப்பற்றி, எங்களுடைய முர்ஷித் இமாம் ஹஜ்ரத் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி (றஹ்.) அவர்கள் வாளேந்தி மார்க்கயுத்தம் செய்வதற்கான நிபந்தனைகள் இந்த தேசத்தில், இக்காலத்தில் இல்லை என்று கூறி இருக்கிறாரே அன்றி, ஜிஹாது சம்பந்தமாகத் திருகுர்ஆனில் கூறப்பட்ட கட்டளை மாற்றப்பட்டுவிட்டது என்று அவர் கூறியதில்லை. மேலும், அவர் திருகுர்ஆனிலுள்ள ஒரு பதம், ஒரு பதத்திலுள்ள ஒரு எழுத்து, ஒரு எழுத்திலுள்ள ஒரு கோடுகூட மாற்றப்பட்டுவிட்டதாகக் கருதுவது கூடவே கூடாது என்றுதான்கருதிவந்தார்.

ஆங்கிலேயரிடம் அசைக்க முடியாத ராஜ விசுவாசியாக இருப்பது எங்களது ஈமானில் ஒரு அம்சம் என்பதும் பொய்.

எனவே, ஜமீந்தார் பத்திரிகை எங்களைப் பற்றிக்கூறிய நான்கு ஆக்ஷேபனைகளும் ஆடிக்காற்றில் பறந்து போயின. இனி "ஜமீந்தார்" தன்னுடைய உறுதிமொழியை நிறைவேற்றுகிறதா இல்லையா என்பதைப் பார்ப்போம். அதாவது, இந்த நான்கு விஷயங்களில், மிர்ஜாயிகள் தங்கள் கொள்கையைத் திருத்திக்கொள்வார்களாயின், மௌலானா ஜபர் அலிகானாவது வேறு யாராவது, மிர்ஜாயிகளின் மாற்றமான கொள்கைகளைப்பற்றி விவாதிக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன் என்று அந்தப் பத்திரிகையில் எழுதி இருக்கிறது.

அஸ்லம்:—மௌலவீ சாஹிப்! தங்களுடைய இந்தப் பிரசங்கம் மேலெழுந்த வாரியாகப் பார்ப்பதாயின் மிக நன்றாகத்தான் தோன்றுகிறது. ஆனால், ஆழ்ந்து கவனிக்கும்போது, இஸ்லாத்தின் திரையில் மிர்ஜாயிக் கொள்கையைப் பிரசாரம் செய்வதாக இருக்கிறது. தாங்கள் கூறியவைகளில் "எங்களது முர்ஷித் இமாம் ஹஜ்ரத் மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானியைப் பின்பற்றி, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பின்னர் எந்தப் புதிய நபியும் வரமாட்டார் என்று ஒப்புக்கொள்கிறோம்"

என்ற இந்த வாக்கியத்தைமட்டிலும் ஒப்புக் கொள்கிறோம் என்பதையும் "இன்னும் பழைய நபியின் வருகையையும்" என்ற வாக்கியத்தையும், மிர்ஜா சாகிபின் சொற்களையும், அவரது தாவாக்களையும், தங்களுடைய பழைய கொள்கைகளையும் ஒன்று சேர்த்து சீர்தூக்கிப் பார்க்கும்போது, தாங்கள் ஏதோ ஒரு கருத்தை மனதில் வைத்துக்கொண்டு மிகச் சாதுரியமாக முஸ்லிம் பொது ஜனங்களை ஏமாற்றி இருக்கின்றீர்கள் என்றல்லவா தோன்றுகிறது. இன்னும், எல்லா முஸ்லிம்களின் நம்பிக்கைகளையும் பரிகசித்திருக்கிறீர்கள். அவ்வாறிருக்குமாயின் மிர்ஜா சாகிபைப் பின்பற்றும் விஷயத்தில் ஜமீந்தார் பத்திரிகை உங்கள்மீது கூறும் தோஷங்களைவிட்டு நீங்கள் ஒருபோதும் பரிசுத்தவனாக முடியாது. பழைய நபி ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் வானுலகிலிருந்து இறங்குவதானது குர்ஆனிலிருந்தும் ஹதீதுகளிலிருந்தும் ருஜுவாகி இருக்கிறது. இதைப் பற்றி இன்ஷா அல்லாஹ் வேறொரு சமயம் பேசிக்கொள்ளலாம். தற்சமயம் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களுடன் நபித்துவம் முற்றுப்பெற்றுவிட்டது என்பதை நிராகரித்தல், மிர்ஜா சாகிபை நபியென்று ஒப்புக்கொள்வதுதான் முக்திக்குரிய வழி என்று உணருதல் ஆகியவைகளைப்பற்றி ஜமீந்தார் பத்திரிகை தங்கள் மீது குறை கூறுவதால், அவைகளை தெரிந்துகொள்வதற்காக மிர்ஜாசாகிபால் இயற்றப்பட்ட புத்தகங்களைக் கவனித்துப் பாருங்கள். அதில்,

"அறிந்துகொள்! அவனுக்குத்தான் அதிகாரமிருக்கிறது. அவன்தான் தன்னுடைய தூதரைக் காதியானில் அனுப்பினான்." (தாபிஉல் பலா).

"எவன் என்னை ஒப்புக்கொள்ளவில்லையோ, அவன் அல்லாஹ்வையும் ரஸூலையும் ஒப்புக்கொள்ளவில்லை. இன்னும், நூற்றுக்கணக்கான திருஷ்டாந்தங்களிருக்கும்போதும் அவர் இட்டுக்கட்டியவராக இருக்கிறார் என்று சொல்லுவதுகொண்டு அவர் மூமினாக எப்படி இருக்கமுடியும். (ஹக்கீக்கத்துல் வஹி 163-164) குர்ஆன் மஜீதில் ஸூரத்துஸ் வாதில் ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்களின் சொற்களில் கூறப்பட்டிருக்கிற அஹ்மதும் ரஸூலும் நான்தான். ரஸூல் பதவி இன்னும் முற்றுப் பெறவில்லை." (இஜாலத்துல் அவ்ஹாம் 673-ல்)

"நான் கூறுவதெல்லாம் அல்லாஹுதஆலாவின் வஹியிலுள்ளதாகும். தவறைவிட்டுச் சுத்தமாக இருக்கிறதென்று அல்லாஹ்வைக் கொண்டு நானறிகிறேன். குர்ஆன் ஷரீபைப்போல் தவறுகளை விட்டுச் சுத்தமாக இருக்கிறதென்று நான் விசுவாசங்கொண்டிருக்கிறேன்" என்றுக்கூறப்பட்டிருக்கின்றது.

தங்களுடைய இமாமும் முர்ஷிதுமானவர், தமக்குவரும் வஹியானது திருகுர்ஆனைப்போல் இருப்பதாகக் கருதுகிறார். இன்னும், தம்மைத் தாமே நபியென்றும் ரஸூலென்றும், எல்லா நபிமார்களுக்கும் மேலானவரென்றும் பிரகடனப் படுத்துவதுடன், தன்னுடைய நபித்துவத்தை நிராகரிப்பவர் விசுவாசியல்லவென்றும் கூறுகிறார். தாங்களோ அவரைப்பின்பற்றியவராக இருந்துகொண்டு, அவரை நபியென்றும், அவருடைய நபித்துவத்தை ஒப்புக்கொள்வது முக்திக்குக் காரணமாக இருக்கிறதென்றும் கருதாமலிருப்பது எவ்வாறு நியாயமாகும்?

இனி தாங்கள் எழுதிய நூல்களையும், தங்கள் கக்ஷிப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் கொஞ்சங் கவனியுங்கள்! மிர்ஜா சாகிப் நபியாக இருக்கிறார். ரஸூலாக இருக்கிறார். முக்தியளிப்பவர் என்று தாங்களே வெளியிட்டிருக்கிறீர்கள். இதுபோன்ற தங்களுடைய எழுத்துக்களை ஒன்றுசேர்த்து காதியானி தப்லீகின் சார்பாக "ஒருசந்தேக நிவாரணம்" என்ற பெயரால் புத்தக வடிவமாக வெளியிட்டிருப்பதை காதியானிலிருந்து தருவித்துப் பாருங்கள். அதில், "கொள்கை சம்பந்தப்பட்டவரை லாகூரி மிர்ஜாயிகள், காதியானீ மிர்ஜாயிகளை விட்டுப்பிரிந்து இருக்கிறார்கள் என்று லாகூரி மிர்ஜாயிகள் கூறுவதானது, பிரத்தியேகமான ஒரு நோக்கத்திற்காகவோ, பணம் சேகரிப்பதற்காகவோதான். லாஹூரி மிர்ஜாயிகளும் நாங்களும் (காதியானி மிர்ஜாயிகளும்) கொள்கையில் ஒன்றாகவே இருக்கிறோம். எனவே மிர்ஜா சாகிபை நாங்கள் நபியென்றும், ரஸூலென்றும், முக்தி யளிப்பவரென்றும் ஒப்புக்கொண்டிருப்பதைப்போலவே லாகூர் மிர்ஜாயிகளும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் எனக்கூறப்பட்டிருக்கிறது. காதியானிகள் வெளியிட்ட ஷை புத்தகத்தின் 4-ம் பக்கத்தில் 'அஹ்மதியர்களின் சுருக்கமான விபரமும் கொள்கைகளும்' என்ற தலைப்புடன் தாங்கள் எழுதிஇருப்பதை எடுத்து எழுதி இருக்கிறார்கள். அதாவது:—

"நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குப்பிறகு அல்லாஹுதஆலாவிடமிருந்து வஹிவருவது அடியுடன் நின்றுவிட்டது

என்ற கொள்கையில் இக்காலத்திலுள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் இருந்துவருகிறார்கள். இதர மத்ஹபுக்காரர்களின் அகீதாவும் கிட்டத்தட்ட இதாகவே இருந்து வருகிறது. இன்னும்; இவர்களில் ஒவ்வொருவரிடத்திலும் இதனுடைய தெய்வீக வேதத்துக்குப்பின் அல்லாஹுதஆலாவின் இல்ஹாமின் பேரிலேயே முத்திரை இருந்து வருகிறது. இன்னும் இதன் தலைவாசல் என்றென்றைக்கும் அடைப்பட்டுவிட்டது. ஆனால், அல்லாஹுதஆலாவின் வஹியானது நின்று விடவில்லை என்றும், இந்தப் பாக்கியத்தின் தலைவாசல் இதர உம்மத்துகளுக்கு அடைப்பட்டுவிட்டாலும் உண்மையான முஸ்லிம்களுக்கு இதன் தலைவாசல் அடைபடவில்லை என்றும் திருகுர்ஆனிலுள்ள பல ஆயத்துகளிலிருந்தும்தெரியவருகிறது''என்பதே.

ஷை புத்தகம் 5-வது பக்கத்தில் லாகூரி மிர்ஜாயிகளின் பத்திரிகையான ''பைகாமே ஸுல்ஹ'' என்ற பத்திரிகையின் 16-10-1913 வருஷத்திய இதழிலிருந்து அடியிற்கண்ட வியாசத்தை எடுத்தெழுதி இருக்கிறார்கள். அதுவருமாறு:—

''பைகாமேஸுல்ஹு'' பத்திரிகையுடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தமுள்ளவர்களான எல்லா அஹ்மதியர்களான நாங்கள், இருதயத்திலுள்ள இரகசியங்களை அறியும்படியான அல்லாஹுதஆலாவை ஹாஜிரானவன் என்றும் நாஜிரானவனென்றும் அறிந்து நாங்கள் வெளிப்படையாகக் கூறுவதாவது:—எங்களைப்பற்றி இம்மாதிரியான தப்பப்பிராயங்கள் அதாவது,வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் உயர்ந்த அந்தஸ்துக்களை அதனுடைய அசலியத்தை விட்டுக் குறைவாகவோ அல்லது இலேசாகவோ மதிக்கிறோம் என்று கூறுவது வெறும் அபாண்டமாகும். மேலும் நாங்கள் ஹஜ்ரத் 'மஸீஹே மௌஊது' 'மஹ்தீயேமஃஹூது' மானவர் இந்தக்காலத்திலுள்ள நபியாகவும் ரஸூலாகவும் முக்தியளிப்பவராகவும் இருக்குமென ஒப்புக்கொள்கிறோம். ஹஜ்ரத் 'மஸீஹேமவ்ஊத்' அவர்கள் தமக்கு எந்தப் பதவி இருப்பதாகக் கூறி இருக்கிறாரோ அதில் கூடுதல் குறைவு இருப்பதாகக் கருதுவது ஈமான் பறிபட்டுப்போவதற்குக் காரணமாக இருப்பதாக நாங்கள் உணருகிறோம்.''

ஷை புத்தகம் 5-வது பக்கத்தில் தங்களுடைய பைகாமேஸுல்ஹின் 7-9-1913-ம் தேதிப் பத்திரிகையிலிருந்து எடுத்தெழுதி இருப்பதாவது:—

''ஹஜ்ரத் மஸீஹே மவ்ஊத், மஹ்தியே மஃஹூத் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்கள் அல்லாஹுதஆலாவின் உண்மையான ரஸூலாக இருந்தார்கள். இந்தக்காலத்தில் நேர்வழி காட்டும் பொருட்டு இவ்வுலகுக்கு வந்தார்கள். இவரைப் பின்பற்றுவதிலேயே உலகத்தின் விடுதலை இருக்கிறது. இவ்விஷயத்தை நாங்கள் ஒவ்வொரு மைதானத்திலும் வெளியிடுகிறோம். அல்லாஹுதஆலாவின் கிருபையால் யாருக்காக வேண்டியும் இந்தக் கொள்கைகளை நாங்கள் விடமுடியாது.''

இதே மாதிரி ஷை புத்தகம் 6-வது பக்கத்தில் ''மஸ்அலேகுப்ரும் இஸ்லாமும்'' என்ற வியாசத்திலிருந்து எடுத்தெழுதி இருப்பதாவது:—

''தம்மை நிராகரிப்பவர்களை ஒரு இடத்தில் காபிர் என்றும், இனனொரு இடத்தில் முஸ்லிம் என்றும் ஹஜ்ரத் மஸீஹ் மவ்ஊது அவர்கள் கூறி இருப்பதாக ஜனங்கள் ஆக்ஷேபித்தனர். இவ்விருகாரியங்களிலும் வெளிக்கு முன்னுக்குப்பின் முரண் இருப்பதாகத் தோன்றும். இது உண்மையில், பதங்களுக்கு விரிவான பொருள் செய்யாமலிருப்பதால் ஏற்படும் தப்பபிப்பிராயமாகும். இஸ்லாம் என்பது ஒப்புக்கொள்வதற்குப் பெயர். குப்ரு என்பது நிராகரிப்பதற்குப்பெயர். மனிதன் எந்தப் பாகத்தை ஒப்புக்கொள்கிறானோ அந்தப் பாகத்தில் அவன் முஸ்லிமாக இருக்கிறான். இன்னும் எந்தப்பாகத்தைவிட்டுவிடுகிறானோ அந்தப்பாகத்தில் அவன் காபிராக இருக்கிறான். எந்த மனிதன் ஹஜ்ரத் மஸீஹ் மவ்ஊது அலைஹிஸ்ஸலாமவர்களை நிராகரிக்கிறானோ இன்னும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இவரைப்பற்றிக் கூறியிருக்கிற அந்த முன்னறிக்கைகளை ஒப்புக்கொள்ளவில்லையோ—அந்த முன்னறிக்கைகள் இவரது வருகையால் நிறைவேறி விட்டன. அவன் அந்தப் பாகத்தைப் பொருத்தவரை அந்த அளவுக்குக் காபிராக இருக்கிறான்.''

பின்னர் ''கடைசிக் காலத்தின் சீர்திருத்தக்காரர்'' என்ற தங்களது வியாசத்திலிருந்து மேற்படி புத்தகம் 7-ம் பக்கத்தில் எடுத்தெழுதி இருப்பதாவது:—

''இவ்விதமாகவே ஒரு நபியை இந்தச் சமயத்தில் அல்லாஹுதஆலா எழுப்பி இருக்கிறான். ஆனால், முற்காலத்து நபிமார்களை நிராகரித்தது போலவே ஜனங்கள் இவரையும் நிராகரித்தார்கள். அந்தோ! மனிதன் காண்பிக்க முடியாத அடையாளங்களை அவர் காண்பிக்கவில்லையா? முற்காலத்து நபிமார்கள் பாபவிமோசனம் அளித்ததுபோல இவர் பாவவிமோசனம் அளிக்கவில்லையா என்பதை இந்த ஜனங்கள் உணர்ந்து கவனிக்கவேண்டாமா?'' என்பதே. ''ரிவ்யூ ஆப் தி ரிலிஜியஸ்'' என்ற பத்திரிகையில் தாங்கள் எழுதி இருப்பதாக ஷை புத்தகம் 7, 8-வது பக்கத்தில் எழுதுகிறார்கள்:—'' ஹஜ்ரத்

மஸீஹே மவ்ஊது அவர்கள் காலத்திலிருந்த யஹூதியும், நமது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் காலத்திலிருந்த யஹூதியும், இன்னும் கிறிஸ்துவர்களும், இந்தக் காலத்திலுள்ளவர்கள் தங்களை விசுவாசிகள் என்று கூறிக்கொள்வது போல் தங்களைத்தாங்களே விசுவாசிகள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆம்! நாங்களும் விசுவாசம் கொண்டிருக்கிறோம் என்று கூறி விடுவது மிகவும் சுலபம் என்று கருதுகிறார்கள். ஆனால், அந்தக் காலத்து ஜனங்களின் விசுவாசம் செத்துப்போனதைப்போல், இந்த ஜனங்களின் விசுவாசமும் செத்துப்போயிற்று. நாம் விசுவாசம் கொண்டிருக்கிறோமா? என்ற வினாவுக்கு எங்களது விடையாவது: அல்லாஹுத ஆலா தன்னுடைய மாமூன் (அமீன்) மூலமாக இந்தக் காலத்தில் வெளியாக்கிய வானலோக அடையாளங்களை நாங்கள் பார்த்ததிலிருந்து, நாங்கள் விசுவாசங் கொண்டிருக்கிறோம். அல்லாஹுத ஆலாவின் பரிபூரண உண்மையின்மீது நாங்கள் விசுவாசங்கொண்டிருக்கிறோம். இது அங்ஙனமில்லையாயின் நம்முடைய விசுவாசமானது நமது வாயினால் மொழிகிற வெறும் வார்த்தையாக ஆகிவிடும். இதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. (ரிவியூ வால்யூம் 3-இதழ் 11).

என்னுங்கோ ஹஜ்ரத்! நாங்கள் மிர்ஜாசாகிபை நபியென்றோ, ரஸூல்என்றோ, முக்தியளிப்பவரென்றோ ஒப்புக்கொள்ளவில்லை என்று முஸ்லிம் பொது ஜனங்களின் முன்னிலையில் வெளிப்படுத்தப்படுகிறது. பின்னர், மிர்ஜா சாகிபைச் சந்தோஷப்படுத்துவதற்காக, மிர்ஜா சாகிப் நபியாகவும் ரஸூலாகவுமிருக்கிறார் அவருடைய நபித்துவத்தின்பேரிலேயே முக்தி இருக்கிறது, அவருடைய உயர்ந்தபதவிகளில் குறைவு செய்பவன் விசுவாசமற்றவன் என்றும் வெளியாக்குகிறீர்கள். மௌலவீ சாகிப்! இவ்விதமான நயவஞ்சக நடத்தையினால் ஒன்றும்நடைபெறாது. எப்பொழுதும் திருகுகள்ளியைப் புசித்துக்கொண்டு நரகத்தில்கிடந்துழல்வதைப் பார்க்கினும் இவ்வுலகில் நான்கு நாள் பசித்திருந்து மரித்துப்போவது சிறந்ததாகும்.

இவை, மிர்ஜா சாகிபின் நபிப்பதவியையும், அவர் பாபவிமோசனமளிப்பதையும் பற்றியவை. இனி, வாளேந்தி மார்க்க யுத்தம் செய்வதைப்பற்றி அவர் கூறி இருப்பதைக் கவனிப்போம்.

"நண்பர்களே! மார்க்கத்துக்காக ஜீஹாது செய்யவேண்டும் என்ற எண்ணத்தை இனிவிட்டு விடுங்கள். இப்பொழுது சண்டையும் யுத்தமும் செய்பவனே அல்லாஹுத ஆலாவுக்குப் பகைவனாக இருக்கிறான். இந்த ஜிஹாதை எவன் நம்பிக்கை வைத்திருக்கிறானோ அவன் நபியை இன்கார் (நிராகரிப்புச்) செய்பவனாக இருக்கிறான்" என்று தமீன் என்ற புத்தகத்தில் எழுதி இருக்கிறார்.

ஆங்கிலேயரிடம் அசையாத ராஜவிசுவாசமாக இருக்கவேண்டும் என்ற பிரசினை சம்பந்தமாகவும், லேக்ராம் கொல்லப்பட்ட விஷயமாயும் தங்களுடைய முஜத்திது குலாம் அஹ்மது ஹிந்துக்களுக்குப் பயந்துகொண்டு 22-3-898-ம் வருஷத்தில் அரசாங்கத்தைக்கேட்டுக் கொண்டு எழுதி இருப்பதாவது:—

"எனது தகப்பனாரும் சகோதரரும் 1858-ம் வருஷத்தில் நடந்த சிப்பாய் கலகத்தில் அரசாங்கத்தை ஆதரித்துக் கலகக்காரர்களை எதிர்த்து இருக்கிறார்கள். நானும் சென்ற 17 வருஷகாலமாக அரசாங்கத்து இந்த ஊழியத்தைச் செய்துவருகிறேன். அறபி, பார்ஸி, உர்துப் பாஷைகளில் அநேகம் புத்தகங்களை எழுதியுள்ளேன். முஸ்லிம்கள் கவர்ன்மெண்டுக்கு விரோதமாக ஜிஹாது செய்வது ஜாயிஸ் இல்லை என்று அவைகளில் வற்புறுத்தி இருக்கிறேன். இன்னும் கவர்ன்மேண்டின் ராஜீய ஊழியம் புரியவும்,அதை ஆதரிக்கவும் வேண்டி ஒரு கூட்டத்தைத் தயார் செய்திருக்கிறேன். அவர்கள் கவர்ன்மேண்டுக்கு ஏற்படும் ஏற்ற சமயத்தில் கவர்ன்மேண்டை ஆதரித்து அதன் விரோதிகளை எதிர்ப்பதற்காகக் கிளம்புவார்கள்.

இன்னும் "கவர்ன்மெண்டுக்கு நீர் ஊழியம் செய்துகொண்டிருக்கும் வரை அல்லாஹுத ஆலா கவர்ன்மெண்டுக்கு எவ்விதக் கஷ்டத்தையும் உண்டுபண்ணமாட்டான்." இன்னும் "எந்தப்பக்கம் உமது முகம் இருக்கிறதோ அந்தப்பக்கம் அல்லாஹுதஆலாவின்முகமும் இருக்கிறது" என்று எனக்கு இல்ஹாம் வந்திருக்கிறது. மேலும் "என்னுடைய முகம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் பக்கமிருப்பதால் அந்த கவர்ன்மெண்டின் அபிவிருத்திக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் நான் துஆச் செய்வதில் ஈடுபட்டிருக்கிறேன். ஏனெனில் எனக்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அதிகாரத்திலும் ஆதரவிலும் அபயங்கிடைத்திருக்கிறது. இந்த அபயம் எனக்கு மக்காவிலுமில்லை, மதீனாவிலுமில்லை, ரூமிலுமில்லை, ஷாமிலுமில்லை, காபுலிலுமில்லை, ஈரானிலுமில்லை ஆதலால் அல்லாஹுத ஆலாவின் முகமும் அந்தபிரிட்டிஷ்கவர்ன்மெண்டில்தானிருக்கிறது." இன்னும், "என்னு

டைய ஜீவியகாலத்தில் கவர்ன்மெண்டுக்கு எவ்வளவு வெற்றிகள் கிடைத்திருக்கின்றன என்பதை அரசாங்கமே இதற்கு சாக்ஷிபகரக்கூடும். இத்தியாதி காரணத்தால் கவர்ன்மெண்டானது என் உயிருக்கும் பாதுகாப்பளிக்க வேண்டும். காதியானில் சௌக்தாரைத் தவிர வேறு போலிஸ் தானுவோ அல்லது போலிஸ்டேஷனோ இல்லை ஆதலால். என்னுடைய உயிரை ஹிந்துக்களிடமிருந்துக் காப்பாற்றக் கூடிய போலிஸ்காரர்களை என் பாதுகாவலுக்காக நியமிக்கவேண்டும். இன்னும், எனக்குப் பயமுறுத்திய ஹிந்துக்களிடம் ஜாமின் முச்சலிக்காவும் வாங்கவேண்டும்.''

மிர்ஜா சாகிப் தயார்செய்த ஜமாஅத்தில் தாங்களும் ஒருவரல்லவா? ஜமாஅத்து என்ற முறையில் அவசியமானபோது ஆங்கிலேயர்களுக்கு மாறுகவுள்ளவர்களை அதாவது, அது முஸ்லிம் அரசாங்கமாக இருந்தபோதிலும்— அவர்களை எதிர்ப்புதாகக் கிளம்புவது உங்களுடைய ஈமானில் ஒரு அம்சமல்லவா?

பொருங்கள்! கேளுங்கள்! தங்களுடைய இமாமும் முர்ஷிதுமாகிய குலாம்அஹ்மது தம்முடைய "ஸரூரத்துல் இமாம்" என்ற புத்தகத்தின் 24-ம் பக்கத்தில் எழுதி இருப்பது வருமாறு:—

"என்னுடைய ஜமா அத்தார்கள் ஆங்கில அரசாங்கத்தின் ஆதிக்கத்தைத் தங்களுடைய உலுல் அம்று என்று மதிக்கவேண்டும் என்பதே என் ஜமாஅத்தாருக்குநான் செய்யும்உபதேசமாகும்."

உங்களுடைய முர்ஷிதானவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரை உங்களுடைய உலுல் அம்ராகக் கொள்ளவேண்டுமென்று உபதேசம் செய்திருக்கும்போதுமா நீங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது அசையாத ராஜவிசுவாசங் கொண்டிருப்பதை நிராகரிக்க முடியும்?

மௌலவீ சாகிப்! இதுதான் அந்த நான்கு காரணங்களாகும். இவைகளைத்தான் தாங்கள் திருத்திக்கொள்ளவேண்டும் என்று ஜமீன்தார் பத்திரிகை விரும்புகிறது, இதற்காகத்தான் மௌலானு ஜபர் அலீகான் அவர்கள் மீது நீங்கள் சிற்றங்கொள்கிறீர்கள். இனி இதற்கு என்ன பதில் கூறுவீர்கள். மிர்ஜா சாகிபைப் பின்பற்றிக்கொண்டு, அல்லது உங்களுடைய மேற்கண்ட வியாசங்களை வாபஸ் வாங்காமலிருந்து கொண்டு, முஹம்மது முஸ்தபா ரஸூலுல்லாஹி ல்லல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறிய பொருளின்படி நபித்துவம் முற்றுப்பெற்றுவிட்டது என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்ள முடியுமா? மிர்ஜா சாகிபை நபியென்று ஒப்புக்கொள்வதுதான் முக்திக்கு வழியென்று தாங்கள் நம்புவதாக உங்களுடைய எழுத்துக்களிலிருந்து விளங்கவில்லையா? மிர்ஜா சாகிபை இமாம் என்றும் முர்ஷிது என்றும் தாங்கள் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கும்போது அவருடைய போதனையைத் தாங்கள் நிராகரிக்க முடியுமா? ஆகவே தாங்கள் மற்றவர்களிடம் இஸ்லாமியப் பிரசாரத்தைச் செய்யும் பொறுப்பை எடுத்துக்கொள்ளும்முன் உங்களுடைய கொள்கைகளைத் திருத்திக்கொண்டு தாங்கள் முஸ்லிமாக ஆகுங்கள்.

"அஸ்லம்"

தீண்டாமை விலக்கின் அந்தரங்கம்

(எதார்த்த வாதி இயம்புவது)

தீண்டாமை விலக்கின், இயக்கமானது, இஃதோர் சிறந்த, போற்றுதற்குரிய கிரியையாகும். அதனுல், ஒடுக்கப்பட்டு, கேவலஸ்திதியுடைய கோடிக்கணக்கான தீண்டாதார்களை மேலேதூக்கி விட்டு அவர்களுக்கு, மானுஷீக பாத்தியதைகள் பெருதற்குரிய சந்தர்ப்பங்களை அளிப்பது மகாப்பெரிய புண்ய கைங்கர்யமாகும். எனவே, இவ்வியக்கம் வெற்றிபெற முயற்சி எடுப்போர் எம்மதத்தைச் சார்ந்த எவராயிருப்பினும் அவர் நம்மிடத்தில் புகழுக்குரியவரேயாவர்.

இவ்வியக்கத்தில் ஹிந்துக்களின் கருத்து

ஆரியர்களும், ஹிந்துக்களும் இவ்வியக்கத்தை மேற்கொண்டு இரவு பகலாக தீண்டாமை விலக்கின் கூக்குரலிடுதல், எவ்வித

நல்லெண்ணத்தைக்கொண்டு மல்ல என்பதை மிகத்துயரத்துடன் கூற நேருகிறது. எனவே அவ்வியக்கத்தின் கீழ் தன்னலம், சுயக்கருத்துமே கிரிகை புரிந்துவருகின்றது.

மேலும் சிறுபிராயங்களிலே தீண்டாமை கற்றுக் கொடுக்கப்பட்டும், அச்சமுகத்தின் அஸ்திவாரம் தீண்டாமையைக் கொண்டு போடப்பட்டும், அவர்களின் மதம் தீண்டாமை அனுஷ்டானத்தினலே நின்றுவரும் சமுகத்தார், நூற்றுக்கணக்கான வருடங்களாயுள்ள தீண்டாதமக்களுக்கு "சரிபாத்தியம்" கொடுக்க முடியுமா? அல்லது அவர்கள்கூட உண்பினை, தின்பினை, கொள்வினை, கொடுப்பினை சம்பந்தஞ்செய்யவோ இடம்பாடாகுமா?

ஹிந்துக்கள் தீண்டாதார்களை நடத்தல்

தீண்டாமை விலக்கை தாவாச்செய்து வருபவர் மேற்கொண்டுள்ள ஹிந்துமதமானது, மிருகங்களைக்காண கேவலமான முறையில் மனுக்களுடன் நடந்துகொள்ள வேண்டுமென போதிக்கின்றது. மேலும் தீண்டாமை விலக்கை ஆதரிப்போர்களின் நிலைமையைக் கவனிப்போமாகில்,அவர்களின் மடியின்மீது நாயானது அழகிட்டுக் கொண்டிருப்பதற்கும், அவர்களின் சமையலறையின் பட்சணங்களை பூனை பசியாறிக் கொள்வதற்கும் அவர்கள் அனுமதியளித்தாலும், மனுவர்க்கத்தானிலும் ஹிந்துசமுகத்தானை ஓர் தீண்டாதானின் நிழலுங்கூட தீட்டென அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வோம். தாழ்த்தப்பட்ட ஹிந்துக்களை நோக்கி "நாங்கள் வீதியில் வருவதைக் காணும்பட்சத்தில் உடனே நீங்கள் பூவில் விழுந்து தண்டமிட்டு நிற்பது உங்கள் கடமை"யென ஆக்ஞையிடும் உயர்தர ஹிந்துக்களெனப்படுவோர் தீண்டாமை விலக்கவிற்கு பொருத்தமானவர்களென கருதமுடியுமா?

ஸ்வாமி விவேகாநந்தரின் சொற்பிரகாரம், "ஏழைகளின் துயரங்களை அகற்ற, சக்திபொராத ஓர் மதத்தை மதமெனச் சொல்வது தகாது. மேலும் நமது மதத்தை மதமெனச் சொல்லலாமென நீங்கள் கருதுகிறீர்களோ? அவை அறவே மதமாகாது. ஆனல் நமது மதம்தீண்டாமையே யாகும். என்னைத் தீண்டாதே என் முன்வராதே என்பதே நமது மதமாகும்" என்பனபோல், தீண்டாமை மதமாகவும், "என்னைத் தீண்டாதே, என்முன் வராதே என்பது தர்மமாகவும் கொண்டுள்ளவர்களிடம் தீண்டாமை விலக்கை எதிர்பார்ப்பது முடியுமா? ஒருபோதும் முடியாது.

தீண்டாமை இயக்கத்தின் பிரதான தலைவரான பண்டித மதன்மோகன மாளவியா என்பார் "நான் எந்த ஆங்கிலரோடும் கை குலுக்கி சந்திக்க நேருமேயானுல், அதன்பின் உடனே ஜலங்கொண்டு எமது கரங்களைக் கழுவி விடுகிறேன்" (சனதனதர்ம பிரசாரக பத்திரிகா அமிர்தஸரஸ் 18-10-22) எனக் கூறியிருக்கும் போது, தீண்டாதோரைத் தன்னினத்தாராக ஆக்கப் போகிராரு, அல்லது தீண்டாதாரரின் கூட்டங்களில் பிரசங்கமாற்றிய பின் தமது துணி மணிகளையும் சேர்த்து கசக்கிக் குளித்துவிடப்போகிராரு? இவ்வாறு விலக்கப்படும் தீண்டாமை இயக்கமானது, நல்லெண்ணங்கொண்டு, கலப்பறுதலாக ஆரம்பிக்கப்பட்டதென எண்ண இடமுண்டா?

"என் கூட ஒரே அறையில் உட்கார்ந்து உணவருந்தக் கூடாதென ஹிந்து சமாஜத்தாரும், பண்டித மாளவியா முதல் இவ்வித போலிக் கொள்கையைப் பூண்டிருக்கும்வரை தீண்டாமை விலக்கின் வேலை நடை பெறுவது அசாத்தியமாகும்" என்னும் ஸ்ரீயுத தேச பந்து தாசின் சொற்பிரகாரம், அசாத்திய மட்டுமன்று ஆகாத கருமமுமாகும். இதில் பண்டித மதன்மோகன மாளவியாவின்மீது குறையொன்றுமில்லை. ஆனல் அவரின் மதத்தின்குறையேயாகும். அதில் "தாழ்ந்தோர்களை தீண்டிவிட்டால் ஸ்நானம் செய்துகொள்வது கடமை" என போதிக்கப்பட்டிருக்கிறது.

'வினு'

தீண்டாதார்களை மிருகங்களைக்காண கேவலமாக நடத்தவேண்டுமென கற்பிக்கும் மதத்தையுடையாரும், "என்னைத் தீண்டாதே, என்முன் வராதே" என்னுங் கொள்கையை யுள்ளவரும், தேசபந்துதாஸ் போன்ற மிகப்பெரிய மனிதருடன் சேர்ந்திருந்து ஒரே அறையில் போஜனமருந்த ஆகுமாக்கப்படாத குழாத்தினரும், தீண்டாதாருக்கு உபதேசஞ்செய்தபின்பு குளிக்காதவரை பவித்திரவானுக ஆகமாட்டான் என கருதக்கூடிய வகுப்பார்களும் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பின்னுல் இன்று எந்த காரணத்தைக்கொண்டு "தீண்டாமை விலக்கல்" என்னும் சுமையைசுமந்தார்களென, ளேகவி பிறக்குமாகில் அதற்கு,

"விடை"

"தங்கள் அரசியல் சக்தியை விஸ்தரித்து முஸ்லிம்களை கவிழ்க்கும் நோக்கந்தான் காரணமாகும்" என வெகு சுருக்கமாக விடை கூறி விடலாம்.

ஹிந்துக்கள், தங்கள் சகோதரர்கள், தங்கள் மதவாதிகள் என இன்று பறைசாற்றிவரும் தாழ்த்தப்பட்டோர்கள், உண்மையில் எந்த மதத்தைச் சேர்ந்தோர்களுமல்லவென்பதை, தீண்டாத வகுப்பார்களின் நிலைமையை யறிந்த ஒவ்வொருவரும் நன்கு தெரிந்துகொள்வார்கள். மேலும் அத்தாழ்த்தப்பட்டோர்கள் ஹிந்துக்களுமல்ல, முஸ்லிம்களுமல்ல, அவர்கள் ஓர் தனிக் கொள்கையுடையவர்களாவர். "ஹிந்துக்களைப்போல், இதர வகுப்பாரின் கரங்களால் சமைக்கப்பெற்ற ஆகாரங்களை புசிப்பதில் அவர்களுக்கு எவ்வித பத்தியமுமில்லை. அவர்களில் சிலர் செத்த விலங்குகளையும் புசிக்கின்றனர். எனவே, ஆங்கில ஆட்சியின் ஆரம்பகாலத்தில், பிரிட்டிஷ் ஆபீஸர்களின் அறியாத்தனத்தினாலோ அல்லது அக்கால ஹிந்துக்களின் சாமர்த்தியத்தினாலோ இந்த தாழ்த்தப்பட்ட ஏழு கோடி ஆதித்திராவிடர்களுக்கும் ஹிந்துக்களென நாமங் கொடுக்கப்பட்டுளது. அதனால் இன்றுவரை சர்க்கார் பத்திரங்களிலும் ஜனக்கணித ரிப்போர்ட்டுகளிலும் இவர்களை ஹிந்துக்களெனவே எண்ணப்பட்டு வந்தாலும், அவர்களுக்கு ஹிந்து மதத்துடன் தூரமான சம்பந்தமுமில்லை என்பது திண்ணம்.

"தீண்டாதார்" மதந்தேடல்

"பிரகாசு" பத்திரிக்கையின் எடிட்டர் கூறுமாப்போல் "தற்காலை, தீண்டாதார்கள் ஹிந்துக்களின் கேவலம் பொருந்திய அடிமைத்தனத்தால் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு, மானுஷீகத் தன்மையின் மேட்டின்மீது கொண்டுவிடத்தக்க ஓர் மதத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் விருப்பத்தை இஸ்லாமிய மதமே பூர்த்தி செய்யலாம்" (பிரகாசம் 13-9-25) என இவர்கள், மோட்சமும் உயர் அந்தஸ்துமளிக்கும் ஓர்மதத்தைத் தேடித் தவிப்பதைக்கண்ட உயர்ஜாதி ஹிந்துக்களின் உள்ளத்தில்,

ஹிந்துக்களின் அமைதியின்மையும்
தீண்டாமை விலக்கின் ஆரம்பமும்

நமக்கு அரசியல் ஆதிக்கம் அதிகமாக ஏற்படுவதற்கு மூலகாரணமான இந்த ஆயிரக்கணக்கான வருடத்து அடிமை மக்கள், நமது ஆதிக்கத்தைவிட்டு மெய்யாகவே முஸ்லிம்கள் கூடப்போய் சேரக்கூடாதெனவும், அவ்வாறு அவர்கள் சேர்ந்துவிடுவார்களாகில் நாம் மெஜாரிட்டி பாத்தியத்திலிருந்து மைனாரிட்டியாக மாற்றப்படுவோமெனவும், மேலும் நாம் கனவு காணும், ராமராஜ்யமானது நூற்றுக்கணக்கான வருடங்களானாலும் அவை என்றும் பூர்த்தியாகப் போகிறதில்லை எனவும், பீதி கொண்டு, "சாவுவோன் எதையும் செய்யத் துணிவான்" என்னும் பழமொழிக்கொப்ப தங்கள் மதத்தையும், தங்கள் கொள்கையையும், தங்கள் உள்ளத்தையும், தங்கள் விசுவாசத்தையும் லட்சியமுறாது தீண்டாமை விலக்கு இயக்கத்தை ஆரம்பித்தனர். இத்திடும் பிரவேசப் பீதியால் பிறமையானது தலைவெறி கொண்டு,

"தீண்டாதார் ஹிந்துக்களென அறிக்கை"

"தீண்டாமை விலக்கினால் முஸ்லிம்களையோ, கிறிஸ்தவர்களையோ எவ்வித தீங்கிழைக்கும் நோக்கமும் எங்களுக்குக் கிடையாதென்பதை இவர்கள் அறியவேண்டும்; நாங்கள் எங்களுக்குரிய வேலையையே செய்துவருகிறோம்; தீண்டாதார், ஹிந்துக்களேயாவர்; அவர்களைசீர்திருத்தும் வேலையைக் கைக்கொள்ளுதல்ஹிந்துக்களுக்கே உரியதாகும்" மீலாப், லாஹூர் 22-1-27) என, தலைவெறியுடன் கூறி அறிக்கை வெளியிட்டனராயினும் இத்தீண்டாதார், நாய், பூனைகளை விட மிகக் கேவலமாகக் கருதப்பட்டவர்களேயாவர். ஆனால் தங்களின் ஆதிக்கத்தின் வலுவானது கைவிட்டுப் போவதைக் கண்டே அவர்களை ஹிந்துக்களென கூற நேர்ந்தது.

இவர்களின் இயக்கம் முஸ்லிம்களை க்ஷீணிக்கச் செய்யும் நோக்கங்கொண்டு ஆரம்பிக்கப்படவில்லையானால், தாங்களாகவே இவ்வித மறுப்பறிக்கை வெளியிட்டதின் அருத்தந்தானென்னே!

தீண்டாமை விலக்கியக்கம், சுயநலங்கருதியே
ஆரம்பிக்கப்பட்டது.

தீண்டாதார்கள் மறுபுறஞ் சாய்வதைக் கண்டு கலங்கிய ஹிந்துக்கள், தாங்கள் எந்த காரணத்தைக்கொண்டு தீண்டாமை விலக்கின் அஸ்திவாரத்தை நட்டார்களோ அந்த ரகசியத்தை மறைத்து வைக்கவும் ஏலாது போய் விட்டது.

இந்த வேலை நற்கருத்தைக் கொண்டன்று, சுயநலங்கருதியே ஆரம்பிக்கப் பட்டதென்னும் கலக்கம் பிடித்திருந்த சமயம், இவர்கள் மனத்திலிருந்த ரகசியம் வெளியே வந்து விட்டது. இதற்கு உதாரணமாக மிஸ்டர் "கேல்கரின்" வார்த்தைகளை கவனிப்போம்:—

கேல்கர் கூறுவது.

"சுயநலங் கருதியேனும், நாம் தீண்டாமை விலக்கின் வேலையை மேற்கோண்டு, அவர்களை நம்முள் சீக்கிரமாகச் சேர்த்துக் கோள்வது நமது கடமையாகும். தற்கால அரசியல் முறையில், அரசாங்கத்தில் ஸ்தானம் பெருவதற்கு ஜனக் கணிதமே பிரதானமாக இருக்கின்றது" (மிலாப் 22-I-27)

உண்மையை லக்ஷந்தரம் மறைத்தாலும் அவை இறுதியாய் வெளியாகியே நிற்கும். ஆதலால், தீண்டாமை விலக்கு இயக்கமானது எத னிமித்தம் ஆரம்பிக்கப்பட்டதென அவர்களின் வாயாலே ஆண்டவன் வெளியாக்கிவிட்டான்.

'கேல்கர்' மட்டினும் இவ்வாறு சொல்லியிருக்கிறுறென்பதில்லை இதரர்களும் இவ்வாறே சொல்ல ஏற்பட்டு விட்டது. உதாரணமாக,

"மிஸ்டர் கரம் சந்து வித்தியார்த்தியின்கூற்று"

"ஹிந்துக்களுக்கு, தீண்டாமை விலக்கென்னும் பிரச்சினைபானது இருப்பதா, இறப்பதா என்னுங் கேள்விபோலாகும். ஜனக்கணித ரிப்போர்ட்டில் முஸ்லிம்களும் இதர வகுப்பார்களும் முன்னேற்ற மடைந்து வருகையில் ஹிந்துக்களின் எண்ணிக்கை மட்டினும் குறைந்து கொண்டே வருகிறது. எனவே இன்று ஹிந்துக்களான நாம், நமது நேரங்களினும், தனங்களினும் ஒரு பகுதியை தீண்டாமை விலக்கலுக்காக செலவு செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகக் கொள்ளல் வேண்டும். (மிலாப் 22-1-27)

தீண்டாமை விலக்கின் நோக்கமானது முஸ்லிம்களை க்ஷீணிக்கச் செய்வதேயாகும்.

தீண்டாமை விலக்கின் இயக்கமானது, தாழ்ந்த வகுப்பார்களை ஹிந்துக்களாகச்செய்து, தங்கள் அரசியல் சக்தியை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற கருத்துக் கொண்டு மட்டுமன்று. தீண்டாதார்கள் முஸ்லிம்களின் பக்கல் முகநோக்காவண்ணம் அவர்களுக்கு வெறுப்பையும், அதிருப்தியையும் உண்டாக்கி விடவேண்டுமென்ற நோக்கத்துடன் முஸ்லிம்களை தோற்கடிப்பதற்கு, அவர்களை ஹிந்துக்களின் ஆயுதங்களாக ஆக்கிவைத்திருக்கவேண்டுமென்ற நோக்கமுமாகும். (தீண்டாமை விலக்கானது வெளிரங்கத்தில் நிரபராத வேலையாகத் தோன்றினுலும் அதனுல் தீண்டாவகுப்பாரை சேமித்து, முஸ்லிம்கள் கூட எதிர்ப்பதற்காக அவர்களை உபயோகப் படுத்துவதென்ற கொடிய கருத்து அதிலமைந்திருக்கின்றது "அல்ஜமீஆ" 18-1-26)

ஹிந்துக்கள் எங்கெங்கு தீண்டாமை விலக்கு சபைகள் நியமித்திருக்கிறுர்களோ ஆங்கெல்லாம் உபதேசிகள், பத்திரிகைகள் மூலமாகப்பிரசாரஞ்செய்தும் அவர்களுக்காக சந்தாக்களின் புக்குகள் வெளியிட்டுமிருக்கிறுர்கள். அவர்களின் மீது அநுதாபங்காட்டு நிமித்தம் கான்பரன்ஸ் களுங் கூடி தீர்மானங்களும் நிறவேற்றியிருக்கின்றனர். சில ஊர்களில் அவர்களுக்காக கிணறுகளும், கோயில்களும் கட்டிக் கொடுத்தும், இன்னுஞ்சில ஊர்களில் அவர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்த்துமிருக்கின்றனர். மேலும் அவர்களை தட்டிக் கொடுத்து, நீங்கள் பூர்வீகத்தில் ஹிந்துக்களேயாவீர்களென அவர்களை ஒப்புக்கொள்ளவும் செய்தனர். இன்னும் தங்களின் மதிப்பையும் விழ்த்தி, நீங்கள் பூர்வீகத்தில் பிராம்மணர்களாக இருந்தீர்கள், இப்போதும் நீங்கள் சுத்தியாகிவிடுவீர்களாகில், நாங்கள் உங்களை உயரிய வகுப்பிலே சேர்த்துக் கொள்வோமென்றும் கூறினுர்கள். இதுமட்டுமன்று, அவர்களை தங்கள் சகோதரர்களெனச்சொல்லி, தங்கள் சுயநலமற்ற அன்பைப்போலும் கலப்பற்ற தன்மை மாதிரியும் வெளிக்காட்டிக்கொண்டார்கள். ஆனுல் இவ்வாறு அவர்களை தட்டிக் கொடுத்துக் கொண்டுவரும்போது இடை இடையே, அவர்களின் இதங்கள் இனி இஸ்லாத்தின் பக்கல் நோக்காவண்ணம் முஸ்லிம்களின்மீது அவர்களுக்கு குரோதத்தையும் புகட்டி வந்தார்கள்.

முஸ்லிம்களுக்கு விரோதமாகப் பிரசாரம்

அவர்களை முஸ்லிம்களுக்கு விரோதமாய் தூண்டுவதற்காக பலவித அபாண்டங்களை உற்பத்தி செய்தும், தீய கட்டுக்கதைகளை எழுதியும், தலைகாலற்ற முழுப்பொய் கதைகளையும் ஜோடித்தார்கள். இங்கு அவைகள் யாவற்றையும் கூறுவதென்றுல், சங்கடமாகுமான

தால் என்பிணைக்காக, தீண்டாமை விலக்கில் முழுபொறுப்புடன் வேலை செய்த ஸ்வாமி சிரத்தானந்தரின் ஓர் பிரசங்கத்தின் சில குறிப்பை, நமதுநாட்டு சகோதரர்கள் முஸ்லிம்களை வீழ்க்கடிப்பதற்காக பொய், அபாண்டஞ் சொல்வதையுங் கவனிப்பதில்லை என வியாசகர்கள் அறிவதற்காக கீழே வரையப் படுகிறது :—

ஸ்வாமி சிரத்தானந்தரின் பிரசாரத்தின் போக்கு

பொம்பாயின் "மார்வாடி வித்தியாலையா" ஹாலில் பிரசங்கமாற்றியபோது காலஞ்சென்ற ஸ்வாமியார் கூறியதாவது :— "பூர்வத்தில் தீண்டாதா ரென்பதே கிடையாது. (வேதங்களிலும், மனு மஹராஜின் ஸ்மிருதியிலும், சூத்திரகிரந்தத்திலும், ராமாயணத்திலும், மஹாபாரதத்திலும், இதர சகல கிரந்தங்களிலும், தீண்டார்கள், சண்டாளர்களெனக் கூறப்படும்போது இவ்வித அபாண்டம் ஏனோ தெரியவில்லை). முஸ்லிம்கள் இந்த நாட்டில் காலெடுத்து வைத்தபின்பே தீண்டாதார்கள் ஏற்பட்டார்கள். மேலும் முஸ்லிம்கள் 'பர்தா' வழக்கமுடையோரானதால் அவர்ளின் அசூசைகளை சுத்தஞ் செய்வதற்காக, இதர மனிதர்கள் அவர்களுக்கு தேவைப் பட்டதால், அவர்கள் பஞ்சமர்களை ஆக்கினார்கள். வட இந்திய தீண்டாதார்களில் ஒவ்வொரு வர்ண மனிதர்களும் சேர்ந்திருக்கிறார்களென்பது எமக்கு முக்கிய ஆதாரங்களால் தெரியும். அவர்களில் அநேகர், பூர்வத்தில் பிராமணர்களாகவும் சிலர் ரஜபுத்திரராகவும், வேறு வர்ணத்தை யுடையவர்களாகவும் இருந்தார்கள். அவர்களை முஸ்லிம்கள் இவ்வேலையைச் செய்யும்படி கட்டாயப் படுத்தினார்களென்பது வெளிப்படை.எனவே,அவர்கள் பூர்வீக வர்ணத்தில் சேரத்தக்கதாய்அவர்களை விடுதலை செய்துவிடுவது ஹிந்துக்களின் கடமையாகும்" (தேஜ், திஹிலி 5-5-24) இதனால் நீண்ட குறிப்புகள் நமக்குத்தேவயில்லை இதனை வாசிக்கும்கனவான்கள், இவ்வொரு குறிப்பைக் கொண்டே சத்திய மதவாதிகளெனவும்மெய்யர்களெனவும்தங்களை பறைசாற்றித் திரிவோர், தீண்டாதார்களுக்கு முஸ்லிம்களின்மீது வெறுப்பூட்டுவதற்காக எத்தகைய பொய்ப் பிரசாரஞ் செய்கிறார்களென்பதை யூகித்தறிந்து கொள்ளலாம். மேலும் இவ்வார்த்தைகளில் எத்துணை தவறான, அசுத்த வெறுப்பும், ஆவேசமும் உண்டாகும் வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதென்பதையும், 'சந்நியாசி' யென தம்மைச் சொல்லிக்கொள்ளும் ஒருவர் பொய்சொல்வதை தவிழ்ந்தாரில்லை என்பதையும் கவனித்தல் வேண்டும். இறுதியாய் இவ்வாறெல்லாம் இவர்கள் செய்வது எதற்காகவெனின், தங்கள் நெத்தியிருக்கும் கரிய முத்திரையை கழுவிக்கொண்டு தீண்டாதோர் முன் வெற்றிபெறுவதற்காகவும், தாங்களிழைத்த தீங்கின் சகல குற்றங்களையும் முஸ்லிம்களின் மீது சுமத்தி, தங்களுக்குப் பகரமாய் தீண்டாதார் முஸ்லிம்களைவிட்டு தூரமாகவும், வெறுப்பாகவு மிருக்க வேண்டுமென்பதற்காகவுமேயாகும்.

ஆனால்இத்தீண்டாமை விலக்கர்களின் மனோபாவத்தையும், அரசியல் சூட்சியையும் அறிந்த தீண்டாதார்கள், "தீண்டாமை விலக்கை" ஏமாற்றமென எண்ணி ஒதுங்கி நின்றுகொண்டார்கள்.

முஸ்லிம்களிடம் சேராவண்ணம் தீண்டாதார்களிடம் உறுதி வாங்கல்

ஆனால் ஆரம்பத்திலே, அவர்களின் ஆதிக்கத்திலிருக்கும் தீண்டாதார்களிடமும் பின்னர் தங்கள் ஆதிக்கத்தில் சேர்த்துக்கொண்டு போவோரிடமும் எத்தகைய உறுதி வாக்கு வாங்கப்படுகின்றன என்னும் அவர்களின் நிலையை கீழே கவனித்தல் வேண்டும்.

"டாக்லா" பஞ்சாயத்தின் தீர்மானம்

"பர்தாப்" பத்திரிகையால் வெளியானதாவது, "றஹ்தக்" ஜில்லா 'டாக்லா" என்ற கிராமத்தில் 700 கிராமத்தார்கள் சேர்ந்து ஓர் பஞ்சாயத்து நடத்தினார்கள். அதில், ஏகோபமாய் தீர்மானிக்கப்பட்டதாவது :—

(1) பஞ்சமர்களை சுத்தி செய்யவேண்டும்.

(2) எந்த தோட்டியும், மாமிசமும் மதுவும் உபயோகிக்கலாகாது.

(3) முஸ்லிம்கள் வீட்டில் சமைத்த ஆகாரத்தை புசிக்கலாகாது. எவரும், பஞ்சாயத்தாரின் இத்தீர்மானத்திற்கு மாறாக நடந்துகொள்வார்களாகில், அவரை 10 வருடங்கள் வரை சகோதரபந்தத்தினின்றும் நீக்கப்படுவதோடு 25 ரூபாயும் அவர்கள் அபராதம் கொடுக்கநேரிடும்" (பர்தாப். 22—1—34)

திஹ்லியின் "தேஜ்" பத்திரிகையில் மற்றொரு பஞ்சாயத்தின் தீர்மானம் பதிக்கப்பட்டிருந்தது. அஃதாவன :—

‘ ககோரா ’ வின் பஞ்சாயத்து தீர்மானம்

கோர்க்காபூர் ஜில்லாவில் “ **ககோரா** ” என்ற ஸ்தலத்தில் தீண்டாமை விலக்குகளின் ஏற்பாட்டின் பேரில் 1927-ம் வருடம் எப்ரல் 15 தேதி யன்று ஓர் பஞ்சாயத்து நடைபெற்றது. அதில் ஏற்பட்ட வாக்குறுதியின் விபரம் வருமாறு :—

(1) நமது ஜாதியாருக்கு கோரட்சணை தர்மமாகும். ஆதலால் நமது சகல வகுப்பு சகோதரர்களும், கோரட்சணைக்காக ஒவ்வொரு நேரமும் கச்சைகட்டி இருக்கவேண்டியது. இதற்குமாறாக நடப்போர் சமூக சிட்சைக்குரியோராவார். (2) நாம் கோ ஹத்தி செய்து, கோ புசிக்கக்கூடிய முஸ்லிம், கிருஸ்தவர்கள் கூட எவ்வித சம்பந்தமும் வைக்கக்கூடாது. அவர்கள் கை ஜலமும் அருந்தக்கூடாது. நாம், இஸ்லாமிய வழமையான, பிரேதத்தை புதைத்தல், விர்த்தசேதனஞ் செய்வித்தல் ஆகியவைகளை நிறுத்தி விடவேண்டும். (3) நாம் யாதொரு இதர ஜாதியர்களோடும் கொள்வினை கொடுப்பினை சம்பந்தம் வைக்கலாகாது. (தேஜ், திஹ்லி 18—11—27.)

காங்கிரசியரின், ஓர் கூட்டத்தின் நடவடிக்கை.

தீண்டாதவரை எந்தந்தவகையில் ஏமாற்ற நாடுகிறார்களென்பதையும், அவர்களை எத்தோரணையில் தங்களின் உபகாரிகளாகவும், முஸ்லிம்களின் விரோதிகளாகவும் செய்துகொள்ள விரும்புகிறார்களென்பதையும் தெரிந்துகொள்வதற்காக மேற்கூறிய இருகுறிப்புகளை போதும். ஆனால் அதிக விளப்பத்திற்காக காங்கிரஸின் பெரிய பிரக்யாதிபெற்ற லீடர்களெல்லாம் கூடியிருந்த ஓர் மகாநாட்டின் நிலைமையை இங்கு கூறவிரும்புகிறேன். (தொடரும்)

மிர்ஸாயீ பித்னா

(அபுல்ஹஸன் சா்ஹிப் மத்ராஸீ வரைவது)

நமது “ஹிபாஜத்துல் இஸ்லாம்” சங்கப் பிரதிநிதியான ஆலீஜனாப் மௌலானா மௌலவீ ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள், சிலோன் பகுதிகளில் பிரசாரம் செய்துவருகிறார்கள் என்பது வாசகர்கள் அறிந்த விஷயமே. வழிகெட்ட காதியானிக் கொள்கைகள் மக்களிடையே பறவாமல் தடுக்க வேண்டு மென்பது நம் சங்கத்தின் முக்கிய நோக்கமாதலால், மௌலவீ சாஹிப் அவர்கள் அதனைக்குறித்து சாங்கோபாங்கமாய் பிரசங்க மாரி பொழிந்து வந்தார்கள். அதோடு அவண் சுற்றுப்பிரயாணம் செய்த ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ அப்துல் அலீம் சாஹிப் சித்தீக்கி அவர்களும் காதியானிக் கொள்கைகளை மறுத்து மற்றொரு பக்கத்தில் பிரசாரம் செய்யத் துடங்கினார்கள். இதனால் காதியானிகளுக்கு ஏற்பட்ட சீற்றத்திற்கோர் அளவில்லை. எனவே அங்குள்ள காதியானிகள் மௌலானாக்களைத் தூற்றியும், மிர்ஸாவின் கொள்கைகளைப் போற்றியும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டு வந்தனர்.

காதியானி சம்ஹாரியான கனம் மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள், அப்பிரசுரங்களுக்கெல்லாம் தக்க வாயாப்பு கொடுத்ததோடு, அவர்களை பஹிரங்க விவாதத்திற்கும் அழைத்திருந்தார்கள். இது சமமந்தமாக இருதரப்பிலும் பற்பல பிரசுரங்கள்வெளியிடப் பட்டது. அதில், காதியானிகள் விவாதத்திற்காக 13 ஷரத்துகளை குறிப்பிட்டிருந்தனர். மௌலவீ சாஹிபவர்கள் அந்த ஷர்த்துக்களில் 5-வது 7-வது ஷர்த்துக்கள் பிரயோசனமற்றதாக இருப்பதால் அவைகளைத் திருத்திக் கொள்ளுமாறு அறிவித்துவிட்டார்கள்

அந்த ஷர்த்துகளாவன :—

(5) சபையை நடத்துவதற்கு மாத்திரம் அக்கிராசனர், அவர் தீர்ப்பளிக்கக்கூடாது.

(7) சபையில் போலீஸ் பாதுகாப்பு வைக்க வேண்டும்.

மௌலவீ சாஹிபின் திருத்தம் :—

5-வது அக்கிராசனர் தீர்ப்பளிக்கவேண்டும். அம்முடிவுக்கு இருதரத்தாரும் கட்டுப்பட வேண்டும் எனத் திருத்தப்படல் வேண்டும்.

மேலும் 7-வது நிபந்தனையாகிய போலிஸ் பாதுகாப்பு எங்களுக்குத் தேவையில்லை, நாங்கள் ஆண்டவன் ஒருவனையே நம்பினவர்கள்; உங்களுக்குத் தேவையானால் உங்கள் சொந்த ஹோதாவில் வைத்துக்கொள்ள வேண்டும் என வற்புறுத்தி, காதியானிகளுக்கு பதில் அறிவித்து விட்டார்கள்.

காதியானிகளோ வெனில், அக்கிராசனர் சபையை ஒழுங்குபட நடத்திவைத்தல் போதுமானது, தீர்ப்புக்கூறவேண்டிய அவசியமில்லையென்று எழுதிவருகின்றனர். தீர்ப்பளிப்பதானது, அவர்களுடைய நொண்டிப் பிரசாரத்துக்கு சாவுமணி அடிக்கப்படுவது போலாயிருக்கும் என்பது திண்ணம். இதனாலேயே அவர்கள் அதனை வற்புறுத்தி வருகின்றனர். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லையானால், காதியானிகள் ஈண்டும் மீண்டும் பழைய பல்லவிகளையேதான்பாடி முஸ்லிம்களிடையே வீண் குழப்பங்களைச் செய்து வருவார்களென்பதில் ஐயமில்லை. ஆகவே, "அக்கிராசனரின் தீர்ப்புக்கு இருதரப்பாரும் கட்டுபடவேண்டும்" என்னும் விஷயத்தை மௌலவிசாஹிப் வற்புறுத்தி, காதியானிகளுக்கு இறுதி யறிவிப்பு விடுத்துவிட்டார்கள். அதற்கவர்கள், நாளிதுவரை வாளாவிருந்து வருகின்றனர்.

தக்ரீர்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஒரு (ஹகம்) மத்தியஸ்தர் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை மிர்ஸாயிகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். உதாரணமாக:—

1. மிர்ஸாகுலாம் அஹ்மது காதியானி (அலைஹி மா அலைஹி) தமது பராஹீன அஹ்மதிய்யாவுக்கு யாராவது பதியெழுதினால் மத்தியஸ்த்தரின் தீர்ப்புக்குப்பின் ரூபா 1000 கொடுப்பதாக பறைசாற்றியிருந்தார்.

2. முன்ஷிகாஸிம் அலீமிர்ஸாயி என்பவர் ஒரு ஹிந்துவை மத்தியஸ்த்தராக நியமித்து, லூத்யானாவில் தர்க்கம் செய்து தோல்வியுற்று 300 ரூபாய் நஷ்டயீடுகொடுத்தார்.

இதே காதியானிகள், முன்னொரு சமயம் முஸல்மான் ஆசிரியருடன் தர்க்கம் புரியும் விஷயமாய் 500 ரூபா வெகுமதி யளிப்பதாய் அறிக்கையிட்டிருந்தனர். விபரம்கேட்டபோது கோர்ட்டாரை மத்தியஸ்த்தமாக வைத்து தொகை பெறவேண்டுமென்று அறிவித்தனர். விஷயம் இவ்வாறிருக்க, இது பொழுது விவாதத்திற்கு மத்தியஸ்த்தர் அவசியமில்லையென்று கூறுவது விதண்டாவாதம் என்பதை யார்தான் ஒப்புக்கொள்ளார்?

மேலும் விவாதத்திற்குறிய விஷயத்தை குறிப்பிடுவதிலும் அபிப்பிராயபேதமேற்பட்டது. கொளும்பு அஹ்மதிகள், மிர்ஜா ஸாஹிபை நபி, றசூல் என்று எழுதிவருகின்றன ராதலின் அதனை நிரூபிப்பது அவர்களின் கடமையாகும். மௌலவீ முஹம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் காதியானிகளின் தஅவாவை மறுக்கவேண்டியவர்களாகும். ஆனால் காதியானிகளோ வெனின், அதனைவிட்டு ஈஸா (அலை.) அவர்களின் விஷயத்தை விவாதத்தில் சேர்க்கவேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனால், மிர்ஸா சாஹிபின் கூற்றுக்களைக் கொண்டு, ஈஸா (அலை.) விஷயம் விவாதத்தில் சேர்க்கப்படவேண்டிய அவசியமில்லாது போய்விடுகிறதென்பதை மௌலவிசாஹிப் அவர்கள் தக்க ஆதாரங்களைக் கொண்டு தங்களுடைய விளம்பரங்களில் நிரூபித்துவிட்டார்கள்.

கொளும்பு அஹ்மதிகள் மிர்ஜா ஸாஹிபை நபியென்னே —றசூலென்றுங்கூட செப்பிவருகின்றனர். றசூலென்றால் அவருக்கு வேதமும் நபிமார்களுக்குள்ள சகல ஷர்த்துக்களுமிருக்கவேண்டுமாதலின், அவைகளையெல்லாம் நிரூபிக்கவேண்டியது அஹ்மதிகளின் கடமையாகும். கைர், ஈதென்ன? இவைபோன்று எத்தனையோ முறை எதிர்பார்த்தாய்விட்டது. காதியானிகள் ஏதாவதுதப்பு சால்ஜாப்புக்களைகூறி காலம் கடத்துவது அவர்களின் தொழிலாக இருப்பதைக் காணுகின்றோம். வட இந்தியாவிலும் இவர்களின் நிலைமை இவ்வாறேதான் இருந்துவருகிறதென்பது நம் நேயர்கள் அறிந்த விஷயமே. சமீபத்தில் ஷிம்லாவில் கூடிய மகா நாட்டில், காதியானிகள் தர்க்கம் செய்ய முன் வந்து கடைசியில் தோல்வியுற்று ஓடிய காட்சி இந்தைக் குறியதாக இருக்கிறது. இவ்வாறே வட நாட்டில் பற்பல மகாநாடுகள் ஏற்பாடு செய்து, அதில் சிலவற்றிர்க்கு காதியானிகள் வந்து தோல்வியுற்றும், சிலதில் தப்பானவும் அனுஷ்டிக்க முடியாதவுமான நிபந்தனைகளைக் கூறியும், வேறு சிலதிற்கு வராமல் ஓடியுமிருக்கிறார்கள். இவ்வாறு செய்வதுதான் அவர்களின் வேலையாக இருக்கிறது. எனவே நம் முஸ்லிம் சகோதரர்கள் இவ்வழிகெட்ட கொள்கைகளை விட்டகன்று ஈமானை காப்பாற்றிக்கொள்வார்களாக.

காதியானிகள் காபிர்களல்லவா ?

வைஸ்ராய் நிர்வாக சபையில், சமீபத்தில் ஸர் பஸ்லி ஹுஸைன் உடைய ஸ்தானம் காலியாகப் போவதால், அவருக்குப் பகரமாய் ஜபருல்லா காதியானியை நயமிக்கக்கூடும் என்னும் வதந்தி கிளம்பியவுடன், வடகோடி முதல் தென்கோடி வரையிலுள்ள இந்திய முஸ்லிம்கள் கிளர்ச்சிசெய்து வருகின்றார்கள். ஆனால் இக்கிளர்ச்சியானது, காதியானிகளுக்கு அதிகப் பீதியை யுண்டுபண்ணிவிட்டது. அதிலும், தென்னாட்டு காதியானி பத்திரிகை வியாக்கியானம் செய்யத் துவங்கி காதியானிகள் காபிர், 'முர்தத்' அல்லவென்று கூறி, அதற்கு ஹைகோர்ட் தீர்ப்பு அத்தாக்ஷியாக இருக்கிறதென்றும் பினத்துகிறது.

காதியானிகள் காபிர்கள்தாம் என்பதற்கு அகில உலகஉலமாக்களின் பத்வாவும், முஸ்லிம்களின் ஒற்றுமையான முடிவும் போதிய அத்தாக்ஷியாக நிற்கின்றது. அத்துடன், இது சமயம் காதியானிகளிடம் வக்காலத்துப்பெற்று, அவர்கள் சார்பாய் விவாதிக்க முன்வந்திருக்கும் தா. இ. பத்திரிகையே முன்னொரு சமயம் காதியானிகள், 'காபிர்களாகுமெ'னப் பிரகடனபடுத்தியிருப்பதால் அதன் எழுத்துக்களை அப்படியே நேயர்களின் பார்வைக்குத் தருகின்றோம். 2-8-29-ல் தா. இ. வரைவதாவது:—

"இவ்வுலக முழுதும் காபிரெனப் பறையறையப்படும் அந்த காதியானிகளை யாம் என்னென்றழைப்பது.........காதியானிகள் காபிர்களென்று இவ்வுலக முஸ்லிம்களால் ஒதுக்கி தள்ளப்படுகின்றனர். மேலும், இந்த காதியானிகளும் ஏனை முஸ்லிம்களையெல்லாம் காபிர்களென்றழைக்கின்றனர். இன்னமும் இவர்கள் நபிகள் பெருமானின் (ஸல்.) இறுதி நபியென்னும் தத்துவத்தை நிராகரிக்கின்றனர். அந்த இறுதி நபி அவர்களின் புர்கானுல்மஜீத் என்னும் இறுதி மறையையும் அடியோடு புறட்டுகின்றனர். இஸ்லாத்தின் ஏக சகோதரத்துவத்தையும் குலைக்கின்றனர்........... இறுதி முஹம்மதை (ஸல்.) ஒத்துக்கொள்ளாத காதியானிகளுக்கு அந்த இறுதி நபியின் இறுதி மறையில் யாது சம்பந்தம் இருத்தல்கூடுமென்பது இவ்வடியேனுக்கு விளங்கவில்லை'' என்பதே.

நம்முடைய இந்த தஅவாவுக்கு தா. இ-வின் இச்சொற்களே போதுமான ஆதாரமாக இருக்கின்றது. மேலும் நம்மைவிட ஒருபடிகூடுதலாகவே தா. இ., காதியானிகள் விஷயத்தில் எழுதிவிட்டது. இவ்வாறெல்லாம் எழுதிய இப்பத்திரிகை இன்றைக்கு ஜபருல்லாஹ் காதியானி விஷயத்தில் வக்காலத்து வாங்கிக்கொண்டு, அவர் காதியானியாயிருந்தபோதிலும் பாதகமில்லை அவருடைய நியமனத்தை யாரும் ஆக்ஷேபிக்கக்கூடாது என பறை சாற்றத் துவங்கியுளது. ஜபருல்லாவோ வெனின், குலாம் அஹ்மது காதியானியைப் பின்பற்றக் கூட்டியவர். அவருடைய நுபுவ்வத்தையும், மிர்ஜாயிய்யத்தையும் பிரகடனப்படுத்த வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாக்கொண்டவர். இவருடைய நியமனத்தை முஸ்லிம்கள் அவசியம் ஆக்ஷேபித்தே தீரவேண்டும். எனவே தா. இ. வின் முரண்பாடானவும் சமயோசிதமானவுமாகிய கூற்றுக்களைக்கண்டு முஸ்லிம்கள் ஏமார்ந்துவிடலாகாது. அந்த ஸ்தானம் மாறவேண்டிய காலமும் 1935 எப்ரல் மாதமாகும். இதற்கிடையே போதியகாலம் மத்தியிலிருப்பதால் எல்லா அஞ்சுமன்களும் சங்கங்களும் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றி வைஸ்ராயிக்கும், இந்தியா மந்திரிக்கும் அனுப்பிவைக்க வேண்டும். ஆகவே முஸ்லிம் நேயர்கள் ஏமார்ந்து போகாமல் விளித்து வேலை செய்வீர்களாக.

வடஇந்திய சபைகளில் பிரதானமான "ஜம்யித்துல் அஹ்றார்'' இது சம்மந்தமாய் தக்கநடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஜம்இய்யத்து எடுத்த காரியத்தில் ஜெயக்கொடி நாட்டக்கூடியதென்பது நீங்களறிந்ததே. எனவே, இது விஷயத்தில் தென்னாட்டு முஸ்லிம்களும் ஒத்துழைக்க வேண்டும். இது சம்மந்தமாய் வைஸ்ராயிக்கும், இந்தியா மந்திரிக்கும் அனுப்பவேண்டிய பெட்டிஷன் பாரம் தயாராய் வருகிறது. ஆதலால் உங்கள் ஹி. இ. சங்கத்திற்கு எழுதி அவைகளைத் தருவித்து, அஞ்சுமன்கள் முதலியவைகளின் கையெழுத்திட்டு குறிப்பிட்டவர்களுக்கு அனுப்பிவைப்பீர்களாக.

பாதிரியார் நூல் பறிமுதல்

ரெவரெண்ட் எம். ஜே. மைக்கேல் என்பவரால் வரையப்பட்டுள்ள "திருச்சபை சரித்திர சங்க்ஷேபம்" என்னும் நூலை காருண்ய கவர்ன்மெண்டார் பறிமுதல்செய்து அடியிற்கண்ட உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள் :—

NOTIFICATION

Fort St. George September 17, 1934
G. O. No. 977, Public (General)

No. 36.—In exercise of the powers conferred by Section 99-A of the Code of Criminal Procedure 1898, the Governor-in-Council hereby declares to be forfeited to His Mejesty every copy, wherever found, of the book in Tamil entitled "**Tiruchchabai Charitra Sankshepam**" also known as "A Short History of the Catholic Church" written by Rev. M. J. M. and printed at the "Good Pastor" Press, Broadway, Madras, containing an account of the alleged origin of the Muhammadan religion on pages 32 and 33 in Chapter V and all other documents containing copies, reprints, or translations of or extracts from the said pages 32 and 33 concerning the alleged origin of the Muhammadan religion, on the ground that the said portions of the book contain matter the publication of which is punishable under Section 153-A of the Indian Penal Code.

(Sd.) G. T. H BRACKEN,
CHIEF SECRETARY.

எம். ஜே. எம். புத்தகம் பறிமுதல்

மாகாண கவர்ன்மெண்டு அறிக்கை

ஜி. ஓ. நெம்பர் 977.

சென்னை மாகாண கவர்ன்மெண்டு, பப்ளிக் டிபார்டுமெண்டு ஜெனரல் அறிக்கை, செயின்டு ஜார்ஜ் கோட்டை, செப்டம்பர் 17, 1934.

ஜி. ஓ. நெம்பர் 977, பப்ளிக் (ஜெனரல்)

நெம்பர் 36 :—1898-ம் வருஷத்திய கிரிமினல் புரொசிஜர் கோடு 99-ஏ. பிரிவின்படி தமக்குள்ள அதிகாரத்தின்கீழ் சபையோடுகூடிய கவர்னரவர்கள் பின்வரும் உத்தரவு பிறப்பிக்கின்றனர் :—

"திருச்சபை சரித்திர சங்க்ஷேபம்" என்னும், "கத்தோலிக் மதத்தின் சரிதை சுருக்க"மென்று கூறப்படுகிற தமிழ் நூல், ரெவரெண்ட் எம். ஜே. எம். என்பவரால் எழுதப்பட்டு, சென்னை பிராட்வே "நல்லாயன்" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்ட புத்தகத்தின் 5-வது அத்தியாயத்தில் 32, 33-வது பக்கங்களில் "மஹம்மதிய மார்க்க வரலாறு" என்று எழுதப்பட்டுள்ள பகுதியும், அப்பகுதியின் மொழிபெயர்ப்பும், அப்பகுதிகளை பூராவாகவோ அல்லது குறைவாகவோ பிரசுரித்துள்ள துண்டுப் பிரசுரங்களும், இதரப் பிரசுரங்களும் இ.பி.கோ. 153 ஏ. பிரிவின்கீழ் தண்டிக்கப்படக் கூடியதான விஷயங்களைக் கொண்டிருத்தலால், அப்புத்தகமும், அப்புத்தகத்தில் ஆட்சேபிக்கப்படும் பகுதியின் எவ்விதப் பிரசுரங்களும், பறிமுதல் செய்யப்படுகிறதென்று அரசர் பெருமான் கவர்ன்மெண்டாருக்காக சபையோடுகூடிய கவர்னர் வர்கள் இவ்வறிக்கை மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

"போர்டு ஸெயிண்டு ஜார்ஜ் கெஜட்டு"
18—9—34, (பக்கம் 1681)

காருண்ய கவர்ன்மெண்டாருக்கு நன்றி

பிரசித்திபெற்ற பாரான் பாலவனத்தில் அவதரித்த தீர்க்கதரிசியும், மக்கள் சகல துறைகளிலும் முன்னேற்றமடைய வழிகோலிய பெருமானுமாகிய நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு, இவ் உலகு முழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. எம்பிரான் அவர்களையும், அவர்களின் சேவையையும் பக்தகோடிகள் என்ன? அந்நிய மதத்தினரும் புகழ்ந்துவருகின்றனர். ஆனால், அறியாமாக்களிற் சிலர், பெருமான் (ஸல்.) அவர்களை தூஷித்து வருகின்றனர். முஸ்லிம்கள் இயற்கையாகவே நபிபெருமான் (ஸல்.) அவர்கள்மீது அன்பு பூண்டவர்களாதலின் அவர்கள் அத்தூஷண மொழிகளைகேட்டு சகித்திருக்க மாட்டார்களென்பது உலகறிந்த விஷயமாகும்.

இத்தோரணையில்தான் ரெவரண்டு எம்.ஜே.எம். என்பவர் எழுதிய "திருச்சபை சரித்திர சங்க்ஷேபம்" என்னும் நூலுமிருந்துவந்தது. இதனைக் கண்டு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட ஆக்ரோஷத்திற்கோரளவுகூற முடியாது. ஆதலின் இத்துக்ககரமான விஷயத்தை முஸ்லிம்கள் கவர்ன்மெண்டாரின் பார்வைக்கு சமர்ப்பித்தனர். நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் இது விஷயமாய்த் தொடர்ந்து எடுத்துக்கொண்ட பிரயாசை அளவிடப்பாலதன்று. மேலும் நம் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி தென்னிந்தியாவிலுள்ள எல்லா சங்கங்களும், ஜமாஅத்துகளும் ஏகோபித்து ஒத்துழைத்தனர். இவைகளின் பயனாய், காருண்ய கவர்ன்மெண்டார் முஸ்லிம்களின் மத உணர்ச்சியை மதித்து ஷை ஆபாச நூலை பறிமுதல் செய்துவிட்டனர். அதோடு இனி யாரேனும் அந்த வியாசத்தையோ, அல்லது அதன் சுருக்கத்தையோ, எந்த பாஷையில் எழுதினாலும் அஃது கி. பி. கோ. 153-A செக்ஷன்படி குற்றமாகும் எனவும் அறிவித்து விட்டனர். எனவே, நபிபெருமான் அவர்களுடைய மஹாத்மியத்தை புண்ணியும், முஸ்லிம்களின் மனதை சாந்திசெய்வான் வேண்டியும், பொதுஜனங்களிடை சமாதானம் நிலவ வேண்டுமெனக் கருதியும் கவர்ன்மெண்டார் செய்த இவ்வரிய உத்திரவுக்காக நாம் அவர்களுக்கு மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக்கொள்கிறோம். இது விஷயத்தில் எங்களுடன் ஒத்துழைத்த அஞ்சுமன்கள், சங்கங்கள், கனவான்கள் யாவருக்கும் எங்களின் நன்றி உரித்தாகுக. இந்நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காக, சென்ற 21-9-24 வெள்ளிக்கிழமை ஜும் ஆத்தொழுகைக்குப் பின் சென்னை முத்தியால் பேட்டை ஜாமிஆ மஸ்ஜிதில் நம் சங்க சார்பில் சென்னை முஸ்லிம்களின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்று அடியில் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது, "முஸ்லிம்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்தும் முறையில் ரெவரெண்டு எம். ஜே. எம். என்பவரால் எழுதப்பட்டு 'நல்ல ஆயன்' பிரஸில் பதிப்பிக்கப்பட்ட "திருச் சபை சரித்திர சங்க்ஷேபம்" என்ற புத்தகத்தில் இஸ்லாத்தைப் பற்றியும், திரு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பற்றியும் தூஷணையாக எழுதப்பட்டிருப்பதைக் கண்டித்து முஸ்லிம்கள் வேண்டுகோள் செய்துகொண்டதற்கிணங்க, சென்னை சர்க்கார் மேற்படி புத்தகம் இ. பி. கோ. 153-A வது செக்ஷன்படி தண்டிக்கப்படத் தகுந்ததாக இருக்கிறதென்று முடிவுசெய்து அதைப் பறிமுதல் செய்திருப்பதை சென்னை முஸ்லிம்களைக்கொண்ட இப் பொதுச்கூட்டம் பாராட்டுகிறது.

இத் தீர்மானத்தை சென்னை சர்க்காருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைக்கும்படி ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தை இக்கூட்டம் கேட்டுக்கொள்வதுடன் இப் புத்தகத்தைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்தும், பத்திரிகைகளில் எழுதியும், மகாநாடுகள் கூட்டியும் தங்களது மத உணர்ச்சியை அறிவித்துக்கொண்ட எல்லா சங்கங்களையும் பத்திரிகைகளையும் இம்மகாநாடு பாராட்டுகிறது." பாதிரியாரின் தூஷணநூல் பறிமுதல் செய்யப்பட்ட வகையில் குற்றவாளிக்கு அளவுகடந்தநஷ்டம் ஏற்பட்டுள்ளதாகையால் இனியேனும் அன்னிய மதத்தினர் இவ்வாறான தூஷண வேலையில் ஈடுபடாமலிருப்பார்களாக.

மேலும் இத்தூஷண நூல் தமிழ்நாட்டில் எங்கேனும் விற்கப்படுமாயின் உங்கள் ஹி. இ. சங்கத்துக்கு தெரியப்படுத்திவிடுங்கள். இன்ஷாஅல்லாஹ் அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள தயாராயிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

பயானுல் குர்ஆன்

திருமறைத்தமிழுரை

இத்தரணிவாழ் மாந்தருக்கு, இணையில்லா வழிகாட்டியாய் விளங்குவது திருகுர்ஆன் என்னும் திவ்விய திருமறையேயாகும். இவ்வேதத்தைப் பின்பற்றும் முஸ்லிம்கள் யாவரும் அதிலுள்ள சட்ட திட்டங்களையும் ஏவல் விலக்கல்களையும் கடைபிடித்தொழுகக் கடமைப்பட்டுள்ளனர். எனவே, ஒவ்வொருவரும் அம்மறையில் அறிவிக்கப்பட்டுள்ள சகல சட்டதிட்டங்களையும் தெரிந்தொழுகவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாயிருக்கின்றனர்.

இவ்வளவுதூரம் அத்தியா அவசியமான திருவேதத்தின் கருத்துக்களை இதுவரை நம் தமிழ் முஸ்லிம்களிலனேகர் நேரில் தெரிந்து கொள்வதற்கேதுவாய் தமிழ் பாஷையில் மொழி பெயர்க்கப்படாதிருந்தது மிகவும் விசனிக்கத்தக்க விஷயமேயாகும். ஆனால் ஆங்காங்கு சிற்சிலர் இவ்வரிய முயற்சியி லீடுபட்டனராயினும் அம்முயற்சி பற்பலக் காரணங்களால் முடிவுபெறாதுபோனது மிகவும் வருந்தத்தக்கதே. ஆனால் ஈராண்டுகளுக்குமுன் தஞ்சை ஜில்லா கூத்தானல்லூர் "சாந்திபிரகடன சபை"யார் இவ் உத்தம சேவையிலீடுபட்டு விடாமுயற்சியுடன் உழைத்து வருகின்றனர். இறைவன் கிருபையாலும், அச்சங்கத்தினரின் பேருக்கத்தினாலும் இதுபொழுது குர்ஆன் ஷரீபின் 30 ஜுஸ்உக்களின் மொழிபெயர்ப்புக்களும் முற்றுபெற்று முந்திய 10 ஜுஸ்உக்களும் அச்சாகி, நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதற்கு மகுடத்தில் கண்ட திருநாமமான 'பயானுல் குர்ஆன்' (திருமறைத் தமிழுரை) என்னும் நாமம் சூட்டப்பட்டிருக்கிறது. நல்ல உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் ஒரு பக்கம் தமிழும், அதற்கு எதிர் பக்கத்தில் தமிழ்மொழி பெயர்ப்புக்குள்ள அசல் அறபி வாக்கியங்களும் அவைகளுக்குக் கீழில் குறிப்புகளுமாக அச்சிடப்பட்டு, நேர்த்தியான பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. இது சமயம் அது நம் பார்வையிலிருந்து வருகிறது.

இது ஜனாப் மௌலானா மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவீ அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு தக்க தேர்ச்சி பெற்ற உலமாக்களின் பரிசீலனையின்மீது அச்சிடப்பட்டிருக்கிறது. சாந்தி பிரகடன சபையார் அதிக பிரயாசையுடன் இதிலீடுபட்டு தக்கமுறையில் சேவை புரிந்திருப்பதற்காக நாம் அவர்களை மிகவே பாராட்டுகின்றோம். இவ்வரும் நூல் நம் தமிழ் முஸ்லிம்களுக்கு மிகமிகப் பிரயோசனமளிக்குமென்றும் எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே, நஞ்சோதிரர்கள் இதனை வாங்கிப்படித்துப் பிரயோசனமடைவதோடு இனி எஞ்சிய 20 ஜுஸ்உக்களையும் கூடியசீக்கிரம் அச்சிட்டுப் பிரசுரஞ்செய்வதற்கான உதவி புரியுமாறும் வேண்டுகின்றோம்.

10 ஜுஸ்உக்களைக்கொண்ட பிரதி 1-க்கு விலை ரூ. 4—0—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம். ஒவ்வொரு நண்பர்களும் தஞ்சை ஜில்லா, கூத்தாநல்லூர், இஷா அத்துல் இஸ்லாம், சாந்திப்பிரகடன சபையாருக்கு எழுதி பெற்றுக்கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

சத்தியப் பிரசாரம்

காதியானிக் கண்டனம்

இதில், தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணஞ்செய்து வந்த "ஹிஸ்புல்லா"க்களின் அருஞ் சேவைகளும், அந்த ஜில்லாவின் பல பாகங்களிலும் மகாநாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும், ஆங்கு நடைபெற்ற பிரசங்கங்களின் சுருக்கங்களும், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளும், அது தென்னாட்டில் பரவியவரலாறும், அதன் பிரசாரத்தை ஏற்றி நடத்திவரும் தென்னாட்டு மிஷனரியின் விபரமும் விவரிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின், தக்க பிரயோசன மேற்படுமென்பது திண்ணம். இவ்வளவு அவசிய மான புத்தகத்தை அச்சிட்டு இனமாய் வினியோகிப்பதற்காக முஹம்மது பந்தர்வாசியும் சிங்கை ஜொஹர்பார் பிரபல்ய வியாபாரியுமாகிய ஜனப் உ. றஹ்மான் சாஹிப் அவர்கள் [.] கேற்பட்ட முழு செலவுகளையும் கொடுத்துதவி யிருக்கின்றார்கள். இப்புத்தகம் நண்பர்களுக[்கு] இனமாக வினியோகிக்கப்படுமாகையால் கீழ்காணும் விலாசங்களுக்கு அதற்கேற்படும் தபா[ல்] செலவுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்வார்களாக.

கிடைக்கு மிடங்கள்:—

(1) **ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்**
43-A. போஸ்டாபீஸ் தெருவு, சென்னை.

(2) **O. றஹ்மான் சாஹிப்**
2-3. ப்ரேச்சர் ரோடு, சிங்கப்பூர்.

தமிழ்நாடு ... ... சங்கம்
20K392
சென்னை-600 003

சித்தீகி மலர்

இஃது ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஷாஹ் முஹம்மது அப்துல் அலீம் சாஹிப் சித்தீகி காதிரீ மீரட்டீ அவர்கள், சென்னையிலும் நம் தமிழ்நாட்டின் பல ஜில் லாக்களிலும் ஆற்றிய பொன்னேபோல் போற்றத்தக்க 15 பிரசங்கங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அரும் நூலாகும். இஃது ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டுமென்பதையும், இதனை நண்பர்கள் சதா மடக்கி மடக்கிப் பார்ப்பது கொண்டு பெரும் பிரயோசன மடைவார்களென் பதையும் நாம் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை. நண்பர்காள்! இதுபொழுதே முன்வந்து இப்புத்தகத்தின் பிரதியைப் பெற்று பயன் பெறுவீர்களாக.

பிரதி 1-க்கு 0—8—0. தபால் சார்ஜ் வேறு
தனிப்பிரதி வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

மானேஜர்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்
43A, போஸ்டாபீஸ் தெருவு சென்னை

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim S
Manager, Hifazath-ul-Islam, 43 A, Post Office St., G.T., Madras.